# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.02.21 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# குற்றச் செயல்களின் வரும்படிகள்

குற்றச் செயல்களின் வரும்படிகளை அறவிடுவதற்காக ஏற்பாடு செய்வதற்கும், குற்றச் செயல்களின் வரும்படிகள் பற்றிப் புலனாய்வு செய்வதற்காகவும், அவற்றைத் தடை செய்வதற்காகவும், இழப்பிப்பதற்காகவும், கையுதிர்ப்பதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும், குற்றச் செயல்களின் தடை செய்யப்பட்ட வரும்படிகளைப் பாதுகாப்பதற்காகவும், பேணிக்காப்பதற்காகவும், முகாமை செய்வதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும், குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையைத் தாபிப்பதற்கும், குற்றச் செயல்களின் வரும்படிகளை அறவிடுதல் தொடர்பாக முகவராண்மைகளுக்கிடையேயான ஒத்துழைப்புக்காகவும் சர்வதேச உடனுழைப்புக்காகவும் ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்ட மூலம்.

---

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 511.00 தபாற் செலவு : ரூபா 200.00



*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்*

குற்றச் செயல்களின் வரும்படிகள்

ச.வ.-ஒ. 78/2024

**குற்றச்செயல்களின் வரும்படிகளை அறவிடுவதற்காக ஏற்பாடுசெய்வதற்கும், குற்றச்செயல்களின் வரும்படிகள் பற்றிப் புலனாய்வுசெய்வதற்காகவும், அவற்றைத் தடை செய்வதற்காகவும், இழப்பிப்பதற்காகவும், கையுதிர்ப் பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும், குற்றச் செயல்களின் தடைசெய்யப்பட்டவரும்படிகளைப்பாதுகாப்பதற்காகவும், பேணிக்காப்பதற்காகவும், முகாமை செய்வதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையைத் தாபிப்பதற்கும்; குற்றச் செயல்களின் வரும்படிகளை அறவிடுதல் தொடர்பாக முகவராண்மைகளுக்கிடையேயான ஒத்துழைப்புக்காகவும் சர்வதேச உடனுழைப்புக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்கு மானதொரு சட்டம்.**

சட்டமுறையற்ற செயற்பாடுகளைப் புரிதலானது, பாரதூரமான விளைவுகளை விளைவிக்கின்றதாதலாலும் குறித்தசில சூழ்நிலைகளில் அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடுகள், பலியாக்கப்பட்டோருக்கும், பெரும் எண்ணிக்கையினரான பொதுமக்களுக்கும், அரசுக்கும் பணவகையான மற்றும் வேறு இழப்புக்களையும் அவர்களினால் ஆதனவுரிமைகள் துய்க்கப்படுதலின் இழக்கச்செய்தலையும் ஏற்படுத்துகின்றதாதலாலும்: முன்னுரை

அத்துடன் சட்டமுறையற்ற செயற்பாடுகளைப் புரிவோர் அத்தகையசட்டமுறையற்றசெயற்பாடுகளின்வரும்படிகளைத் துய்ப்பதற்கும்பயனுகர்வதற்கும்ஏதேனும்சட்டவுரிமையையோ அல்லது வேறு உரித்துடைமையையோ உடையோரல்லர், மற்றும் அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடுகளுக்கான உரிமையாண்மை உரிமைகளைப் பெறுவோர் அல்லது அவற்றுக்கு வழிவோர் அத்தகைய ஆதனத்துக்கான ஏதேனும் சட்டவுரிமையை உடையோருமல்லாராதலாலும்:

அத்துடன் தவறிழைப்போர் அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடுகளின் வரும்படிகளிலிருந்து பயனுகர்கின்றமையை இழக்கச்செய்வதற்கும் மற்றும் அத்தகைய வரும்படிகளிலிருந்து பயனுகர்வதற்கான உரித்துடைமையை வேறுவகையில் பெற்றிருக்கவேண்டியவர்களுக்கு அத்தகைய வரும்படிகளைத் திருப்பிக்கொடுப்பதற்கும் அவசியமான வழிமுறைகளை எடுப்பது அரசின் பொறுப்பாகவுள்ளதாதலாலும்:

அத்துடன் தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம், பொது ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டம், பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டம், பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம், நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டம் என்பனவுட்பட ஏலவேயுள்ள சட்டவாக்கங்கள் அத்தகைய ஆதனத்துக்குச் சட்டமுறையாக உரித்துடையோருக்குக் குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பயனுற அடையாளங் காணுதல், கண்டறிதல், கண்டுபிடித்தல், புலனாய்வுசெய்தல், தடைசெய்தல், கைப்பற்றுதல், பேணிக்காத்தல், பாதுகாத்தல் மற்றும் முகாமை செய்தல், நீதிமுறையாக முடக்குதல், இழப்பித்தல் மற்றும் திருப்பிக்கொடுத்தல் என்பவற்றுக்காகப் பயனுள்ள சட்டவாக்கக் கட்டுக்கோப்பொன்றை வழங்கும் நோக்கத்துக்காகப் புதிய சட்டவாக்கங்களின்மூலம் குறை நிரப்பப்படுதல் தேவையாகவுள்ளதாதலாலும்:

அத்துடன் இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துகின்ற நோக்கத்துக்காகக் குறித்தசில சட்ட வலுவுறுத்தல் அலுவலர்களுக்குக் கடமைகளையும் பொறுப்புக்களையும் உரித்தாக்குவதும், அத்தகைய கடமைகளையும் பொறுப்புக்களையும் புரிவதற்கு அவர்களுக்குப் பொருத்தமானமுறையில் தத்துவமளிப்பதும், மற்றும் குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையுட்பட, குறித்தசில நியதிச்சட்டமுறையான குழுக்களையும் தாபிப்பதும் அவசியமாகவுள்ளதாதலாலும்:

அத்துடன் இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் அமைந்துள்ள குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பாக வேறு நாடுகளின் சட்ட வலுவுறுத்தல், நிருவாக மற்றும் நீதிமுறை அதிகாரிகளுடன் ஒத்துழைப்பதற்கு இலங்கையின் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளை இயலச்செய்வதற்குச் சட்டவாக்கப் பொறிமுறைக்காக ஏற்பாடுசெய்வதும், அத்தகைய ஆதனத்துக்குச் சட்ட முறையாக உரித்துடையோருக்குக் குற்றச்செயல்களின் அத்தகைய வரும்படிகளை அல்லது அவற்றின் பெறுமதியை இலங்கைக்குத் திருப்பியனுப்புவதனை அல்லது இலங்கையிலிருந்து மீளவொப்படைப்பதனைச் செய்விப்பது அவசியமாகவுள்ளதாதலாலும்:

அத்துடன் சட்டமுறையற்ற செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக் கப்பட்டுள்ளோருக்கும் சமுதாயத்துக்கும் அல்லது பொதுமக்களுக்கும் மீட்டளிப்பு மற்றும் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்புகை வழங்குதல் அவசியமாகவுள்ளதாதலாலும், அத்தகைய நோக்கத்துக்காகக் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் இழப்பீட்டு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தை உருவாக்குவதற்காகவும் தாபிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதும் அவசியமாகவுள்ளதாதலாலும்:

அத்துடன் ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம், தேசம் கடந்த நாடுகளுக்கிடையே ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றச்செயல்களுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் மற்றும் போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்துக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் என்பவற்றின்கீழ் இலங்கையின் கடப்பாடுகளுக்கு முழுப்பயன் கொடுப்பதும், ஒரே காலச் சர்வதேச நெறிகளுக்கும் மிகச்சிறந்த செயல்முறைகளுக்கும் ஒத்திருக்கின்றவையும் குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பானவையுமான சட்டவாக்கங்களை இயற்றுவதும் அவசியமாகவுமுள்ளதாதலாலும்:

ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

1. (1) இச்சட்டம் 2025 ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடை முறைக்கு வருதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் ஒவ்வோர் ஏற்பாடும் இப்பிரிவு நடைமுறைக்குவரும் எந்த தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிந்தாமல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் சட்டமூலமானது பாராளுமன்றச் சட்டமாக வரும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

சட்டத்தின் குறிக்கோள்கள்

2. இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) சட்டமுறையற்ற செயற்பாடுகளின் வரும்படி களிலிருந்து பயனுகர்கின்ற நோக்கத்துக்காக அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடுகள் புரியப்படுவதற்கு ஊக்குவிப்பளிக்காதிருத்தல்;

(ஆ) எவரேனும் ஆளினால் அல்லது வேறெவரேனு மாளினால் புரியப்பட்ட சட்டமுறையற்ற செயற்பாடுகளின் வரும்படிகளிலிருந்து அத்தகைய ஆள் பயனுகர்வதிலிருந்து அவரைத் தடுத்தல் மற்றும் பயனுகர்வதனை இழக்கச்செய்தல்;

(இ) இலஞ்சமும் ஊழலும், போதைப்பொருளில் வியாபாரஞ்செய்தல், பயங்கரவாத நிதியளிப்பு மற்றும் வேறு ஒழுங்குபடுத்தப்பட்ட அத்துடன் நிதிசார் குற்றச்செயல்களுட்பட, சட்டமுறையற்ற செயற்பாடுகளைப் புரிதல் பற்றிய புலனாய்வை வசதிப்படுத்துதல்;

(ஈ) குற்றச்செயல்களின் வரும்படிகள்பற்றிய புலனாய்வு தொடர்பில் உள்நாட்டுச் சட்ட வலுவுறுத்தல் மற்றும் நிருவாக அதிகாரிகளுக் கிடையே முன்னேற்றமடைந்த புலனாய்வுத் தொழில்னுட்பங்கள் மற்றும் ஒத்துழைப்பின் ஏற்றங்கீகாரம், கடைப்பிடிப்பு அத்துடன் வலுவுறுத்துகை என்பவற்றுக்காக ஏற்பாடு செய்தல்;

(உ) குற்றச்செயல்களின் வரும்படிகளைக் கண்டறிதல், அடையாளங்காணுதல் மற்றும் அறவிடுதல் என்பவற்றுக்காக வசதிசெய்தல் அத்துடன் ஏற்பாடுசெய்தல்;

(ஊ) குற்றச்செயல்களின் வரும்படிகளினது பாவனை மற்றும் கைப்பற்றுகையைத் தடைசெய்வதற்காக ஏற்பாடுசெய்தல்;

(எ) குற்றச்செயல்களின் வரும்படிகளினது நீதிமுறை முடக்குதலுக்கான நீதிமுறைக் கட்டளைகளின் வழங்குகைக்காக ஏற்பாடுசெய்தல்;

(ஏ) இழப்பித்தல் வழக்குநடவடிக்கைகள் நடாத்தப் பட்டு பூர்த்திசெய்யப்படும்வரை குறித்தசில சூழ்நிலைகளின்கீழ் குற்றச்செயல்களின் வரும்படிகளைக் கையுதிர்த்தல் உட்பட, குற்றச் செயல்களின் வரும்படிகளினது பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை என்பவற்றுக்காக ஏற்பாடுசெய்தல்;

(ஐ) குற்றச்செயல்களின் வரும்படிகளை ஈட்டுகின்ற சட்டமுறையற்ற செயற்பாடுகள் புரியப்படுவதனைத் தடுத்தல்;

(ஒ) (i) (இதனகத்துப்பின்னர் “குற்றத் தீர்ப்புக்குப் பின்னரான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) குற்றச் செயல்களின் அத்தகைய வரும்படிகளை ஈட்டிய சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்துள்ளமைக்காக ஆளொருவரின் குற்றத்தீர்ப்பளிப்பையடுத்து; அத்துடன்

(ii) (இதனகத்துப்பின்னர் “குற்றத்தீர்ப்பு அடிப்படையில்லாத இழப்பித்தல் வழக்குநடவடிக்கைகள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) குற்றச் செயல்களின் அத்தகைய வரும்படிகளை ஈட்டிய சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்துள்ளமைக்காக ஆளொருவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்குச் சுயாதீனமாக;

குற்றச்செயல்களின் வரும்படிகளை இழப்பிப்பதற்காக நீதிமுறை வழக்குநடவடிக்கைகளை நடாத்துவதற்காகவும் நீதிமுறைக் கட்டளைகளை வழங்குவதற்காகவும் சட்டவாக்கப் பொறிமுறைகளை ஏற்பாடுசெய்தல்;

(ஓ) குடியியல் வழக்காடலினூடாக இழப்பை அல்லது சேதவீட்டை அறவிடுவதற்குக் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரை இயலச்செய்வதற்குக் குடியியற் சட்டத்தில் ஒரு வழக்குக்காரணத்தை ஏற்றங்கீகரித்தல் மற்றும் வழங்குதல்;

(ஔ) தடைசெய்யப்பட்ட, கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகளைப் பாதுகாப்பதற்காகவும், பேணிக் காப்பதற்காகவும், முகாமை செய்வதற்காகவும், கையுதிர்ப்பதற்காகவும் நியதிச்சட்டமுறையான அதிகாரசபையொன்றைத் தாபித்தல்;

(க) குற்றச்செயல்களின் இழப்பிக்கப்பட்ட வரும்படி களின் கையுதிர்ப்பின் தேறிப்பெறப்பட்ட பெறுமதியின் முகாமைக்காகவும் பாவனைக் காகவும் பொறிமுறையொன்றை ஏற்பாடுசெய்தல்;

(ங) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கு மீட்டளிப்பு மற்றும் இழப்பீடு வழங்குவதற்கு ஒரு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தைத் தாபித்தல்;

(ச) கடல்கடந்த நாடுகளில் உள்ள குற்றச் செயல்களின் வரும்படிகளை அல்லது பெறுமதியை அறவிடுதல் தொடர்பில் ஏனைய நாடுகளின் நீதிமுறை, சட்ட வலுவுறுத்தல் மற்றும் நிருவாக அதிகாரிகளுடன் ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி மற்றும் இருவகையினொத்ததன்மை என்பவற்றுக்காகவும் இலங்கையில் உள்ள குற்றச்செயல்களின் வரும்படிகளினது பெறுமதியைத் திருப்பியனுப்புவதற்காகவும் பொறிமுறையொன்றை ஏற்பாடுசெய்தல்; அத்துடன்

(ஞ) ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம், தேசம் கடந்த நாடுகளுக்கிடையே ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றச்செயல்களுக் கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் மற்றும் தூய்தாக்கலுக்கெதிரான அத்துடன் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கான நிதியளிப்பை எதிர்த்தல் தொடர்பில் சர்வதேச நியமங்களும் மிகச்சிறந்த செயல்முறைகளும் என்பவற்றின்கீழ் இலங்கை யின் கடப்பாடுகளுக்குப் பயன்கொடுத்தல்.

3. (1) இச்சட்டம் பின்வருவோருக்கும் பின்வருவன வற்றுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்:- சட்டத்தின் ஏற்புடைமை

(அ) இச்சட்டம் நடைமுறைக்குவருமுன்னர் புரியப் பட்ட ஏதேனும் சட்டமுறையற்ற செயற் பாடுட்பட, இலங்கையில் அதன் ஆள்புல நீர்ப்பரப்புகளில், வான்வெளியில், இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது இலங்கையிலுள்ள எவரேனுமாளினால் வாடகைக்கமர்த்தப்பட்ட ஒரு வானூர்தியில் அல்லது ஒரு கலத்தில் உட்பட, ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைப் புரிகின்ற எவரேனுமாள்; ஆயின், அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடு புரியப்பட்ட நேரத்தில் அது ஒரு தவறாக இருந்திருத்தல் வேண்டும்;

(ஆ) இலங்கைக்கு வெளியே ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டை அல்லது அதன் பாகத்தைப் புரிகின்றவரும் ஓர் இலங்கைப் பிரசையாக உள்ளவரும் அல்லது இலங்கையில் வதிகின்றவருமான எவரேனுமாள்;

(இ) 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகளும் ஏதேனும் வெளிநாட்டரசினால் அத்தகைய அலுவலர்மீது அளிக்கப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் விடுபாட்டுரிமையும் எவ்வாறிருப்பினும், இலங்கையின் எவரேனும் இராஜதந்திர அல்லது காவற்றூதலுவலர்;

(ஈ) ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே காணப்படினுஞ்சரி, இலங்கையின் பொது ஆதனம் தொடர்பாக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே ஒரு சட்டமுறையற்ற

செயற்பாட்டை அல்லது அதன் பாகத்தைப் புரிகின்ற எவரேனுமாள்;

(உ) ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே காணப்படினுஞ்சரி, இலங்கைப் பிரசையொருவர் தொடர்பாக அல்லது அவர் தொடர்பில் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டை அல்லது அதன் பாகத்தைப் புரிகின்ற எவரேனுமாள்;

(ஊ) ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே காணப்படினுஞ்சரி, இலங்கையின் சட்டமுறையான அக்கறைகளின் மீது அல்லது அதன் பிரசைகளின்மீது பாதகமான தாக்கமொன்றை அல்லது அத்தகைய தாக்கத்தின் ஏதேனும் இயல்திறனைக் கொண்டுள்ள அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டை அல்லது அதன் பாகத்தைப் புரிகின்ற எவரேனுமாள்;

(எ) இலங்கையின் ஏதேனும் இராஜதந்திர அல்லது காவற்றூது அலுவலகத்தின் வளவுகளினுள்ளிருந்து அல்லது இலங்கையின் ஓர் இராஜதந்திர அல்லது காவற்றூது அலுவலரின் வதிவிடத்தினுள்ளிருந்து, அத்தகைய வதிவிடம் இலங்கையின் பொதுநிதிகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமைக்குச் சுயாதீன மாகவாயினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி, ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டை அல்லது அதன் பாகத்தைப் புரிகின்ற எவரேனுமாள்;

(ஏ) இலங்கை அரசாங்கத்தின் அல்லது இலங்கையின் ஏதேனும் சட்டத்தினால் தாபிக்கப்பட்டவொரு

நியதிச்சட்டமுறையான குழுவின் சார்பில் இருப்பாட்சிகொள்ளப்பட்ட அல்லது கட்டுப் பாட்டின்கீழுள்ள வளவுகளினுள், அல்லது இலங்கைக்குவெளியே அமைந்துள்ளதும் அத்தகைய நியதிச்சட்டமுறையான குழுவின் ஊழியரொருவரினதுமான வதிவிடத்தினுள் ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டை அல்லது அதன் பாகத்தைப் புரிகின்ற எவரேனுமாள்;

(ஐ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே, அதன் ஆள்புல நீர்ப்பரப்புக்கள், வான்வெளி, இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது இலங்கையிலுள்ள எவரேனுமாளினால் வாடகைக்கமர்த்தப்பட்ட அல்லது வேறு வகையாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு வானூர்தியில் அல்லது கலத்தில் உட்பட, இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள்;

(ஒ) இலங்கையில் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு வானூர்தியில் அல்லது ஒரு கலத்தில் அல்லது இலங்கைப் பிரசையொருவரினால் அல்லது இலங்கையில் வதிபவரொருவரினால் வாடகைக்கமர்த்தப்பட்ட ஒரு வானூர்தியில் அல்லது ஒரு கலத்தில் காணப்பட்ட குற்றச்செயல்களின் எவையேனும் வரும்படிகள்;

(ஓ) இலங்கையில் புரியப்பட்டவொரு சட்டமுறை யற்ற செயற்பாட்டினை, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே காணப்பட்டவையுமான குற்றச்செயல்களின் எவையேனும் வரும்படிகள்;

(ஔ) இலங்கைப் பிரசையொருவரினால் அல்லது இலங்கையில் வதிபவரொருவரினால்

இலங்கைக்கு வெளியே புரியப்பட்டவொரு சட்டமுறையற்ற செயற்பாட்டினவையும், இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே காணப்பட்டவையுமான குற்றச்செயல்களின் எவையேனும் வரும்படிகள்;

(க) இலங்கையினுட் கொண்டுவரப்பட்ட, இடைப் பெயர்விலுள்ள, இலங்கையை வந்தடையவுள்ள இலங்கையினூடாகச் செல்கின்ற அல்லது இலங்கையிலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட, குற்றச்செயல்களின் எவையேனும் வரும்படிகள்.

(2) இச்சட்டம் நடைமுறைக்குவருவதற்குமுன்னர் ஏற்புடையற்பாலதான சட்டத்தின் நியதிகளின்படி சட்டமுறையற்ற செயற்பாடொன்றின் வரும்படிகள் இழப்பிக்கப்பட்டுள்ளவிடத்து, அல்லது அத்தகைய இழப்பித்தலுக்கு மாற்றாக, ஏற்புடையற்பாலதான சட்டத்தின் நியதிகளின்படி தண்டமொன்று அல்லது வேறு தடைவிதிப்பு விதிக்கப்பட்டு இணங்கியொழுகப்பட்டுள்ளவிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

சட்டத்தின் தற்காலிக ஏற்புடைமை

4. (1) மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் குற்றச்செயல்களின் வரும்படிகளை ஈட்டிய நேரொத்த சட்ட முறையற்ற செயற்பாடு புரியப்பட்டுள்ளமை எவ்வாறிருப்பினும், இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள அத்தகைய வரும்படிகளுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஏதேனும் தவறு இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன்பின்னர் புரியப்பட்டிருந்தாலொழிய, ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய தவறைப் புரிந்தமைக்காகத் தண்டிக்கப்படுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழான தவறொன்றாக அமைகின்ற செயலொன்று இச்சட்டம்

நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் தொடர்ந்து இழைக்கப்பட்டிருப்பின், இச்சட்டத்தின்கீழ் இயைபான தவறைப் புரிந்துள்ளார் என்றவாறு அத்தகைய தவறிழைத்தவருக்கெதிராக நடவடிக்கையெடுத்தல் இயன்றதாகவிருத்தல் வேண்டும்.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்திலுள்ள தவறுகளைப் புரிவதிலிருந்து வழிவந்த குற்றச் செயல்களின் வரும்படிகள் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்புடைமை

5. (1) ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதன்மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற, அதிலிருந்து வழிவந்த அல்லது தேறிப்பெறப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளிலும்; மேலோங்கிநிற்றல் வேண்டுமென்பதுடன் குற்றச்செயல்களின் வரும்படிகளைப் புலனாய்வுசெய்தல், கண்டறிதல், அடையாளங்காணுதல், கண்டுபிடித்தல், தடைசெய்தல், கைப்பற்றுதல், நீதிமுறையாக முடக்குதல், தண்டனைத்தீர்ப்பளித்தல் பாதுகாத்தல், பேணிக்காத்தல், முகாமைசெய்தல், இழப்பித்தல் அல்லது விடுவித்தல் முடிவுறும்வரை கையுதிர்த்தல், இழப்பித்தல், விடுவித்தல் மற்றும் செலுத்தீடுசெய்தல் என்பன இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி நடாத்தப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்திலுள்ளதெதுவும், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்கீழான தவறுகளின் புலனாய்வு, அச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் நடாத்தப்படுவதனை எம்முறையிலும் தடுத்தலோ அல்லது தடைசெய்தலோ ஆகாது.

## பாகம் I
## பொது ஏற்பாடுகளும் தவறுகளும்

குற்றச்செயல்களின் வரும்படிகளை மறைத்து வைத்தல் அல்லது மறைத்தொழுகுதல் முதலியன தவறொன்றாதல்

6. ஏதேனும் ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகள் என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருந்து, பின்வருவனவற்றை மாற்றுகின்ற, கைமாற்றுகின்ற, மறைத்துவைக்கின்ற அல்லது மறைத்தொழுகுகின்ற நோக்கத்துக்காக ஏதேனும் கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றுதல் அல்லது ஏதேனும்

செயல்தொடர்பாக மதியுரையளித்தல் உட்பட, நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, தானாகவோ அல்லது ஏனையோரின் பங்குபற்றுகையுடனோ ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்:-

(அ) அத்தகைய ஆதனத்தின் அல்லது அதன் பாகத்தின் தோற்றுவாய், உண்மையான தன்மை, மூலம், அமைவிடம், கையுதிர்ப்பு, நகர்வு, சொத்தாண்மை, கொள்ளுகை, உடைமை, பாவனை அல்லது பெறுமதி;

(ஆ) அத்தகைய ஆதனத்தை உருவாக்கிய சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்திருக்கக் கூடிய ஆட்களின் ஆளடையாளங்கள்; அல்லது

(இ) அத்தகைய ஆதனம் தொடர்பாகப் பயனுகர் அக்கறைகளை உடைய ஆட்களின் ஆளடையாளங்கள்.

**குற்றச்செயல் களின் வரும்படி களைக் கொள்ளுதல், உடைமையில் வைத்திருத்தல் முதலியன தவறொன்றாதல்**

7. ஆதனமொன்று குற்றச்செயல்களின் வரும்படிகள் என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருந்து, அத்தகைய ஆதனத்தைக் கொள்ளுகின்ற, உடைமைகொள்கின்ற, பயன்படுத்துகின்ற, அதன் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள, அதன்மீது ஆதிக்கம் பிரயோகிக்கின்ற, அதனைக் கட்டுப்படுத்துகின்ற அல்லது வைத்திருக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

**குற்றச்செயல் களின் வரும் படிகள் பற்றிய சான்றை அழித்தல் தவறொன்றாதல்**

8. குற்றச்செயல்களின் வரும்படிகளாகவுள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பான ஏதேனும் சான்றை அறிந்துகொண்டு அழிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

**கட்டளைகளின் வலுவுறுத்து கையின் அல்லது நடைமுறைப் படுத்துகையின் மீறுகை அல்லது முட்டுக்கட்டை தவறொன்றாதல்**

9. (அ) ஏதேனும் தடைக்கட்டளை, கைப்பற்றுகை, நீதிமுறை முடக்கற் கட்டளை ஒன்றின்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஒரு சட்ட வலுவுறுத்தல் அலுவலரினால் வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் அல்லது கட்டளையின்;

(இ) குற்றச்செயல்களின் வருமபடிகள் பற்றிய புலனாய்வொன்று தொடர்பில் வழங்கப்பட்ட நீதிமுறைக் கட்டளையின்; அல்லது

(ஈ) குற்றச்செயல்களின் வருமபடிகள் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட நீதிமுறைக் கட்டளையின்,

வலுவுறுத்துகையை அல்லது நடைமுறைப்படுத்துகையை மீறுகின்ற அல்லது அதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

ஓர்அறிவித்தலை ஏற்றுக்கொள்ளத் தவறுதல் அல்லது ஓர் அறிவித் தலுக்குப் பொய்யான பதிலை வழங்குதல் தவறொன்றாதல்

10. இச்சட்டத்தின் 68 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்டவரும்,-

(அ) அத்தகைய அறிவித்தலை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றவரும்;

(ஆ) அத்தகைய அறிவித்தலுக்கு உண்மையான முறையில் பதிலிறுக்கத் தவறுகின்றவரும்; அல்லது

(இ) அத்தகைய அறிவித்தலுக்கு அறிந்து கொண்டு பொய்யான அல்லது தவறான பதிலை வழங்குகின்றவரும் அல்லது வேண்டுமென்று பிழைவழியுய்க்கும் அல்லது ஏமாற்றுந்தன்மையினதுமான செயலை செய்கின்றவரும்,

ஆன எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

ஓர் அறிவித்தலுக்கான பொய்யான பதிலை வழங்குவதற்கு உதவுதல் தவறொன்றாதல்

11. அறுபத்தெட்டாம் பிரிவின்கீழான அறிவித்தல் ஒன்று எந்த வேறு ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த வேறு ஆளுக்கு அத்தகைய அறிவித்தலுக்கான ஒரு பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் அல்லது ஏமாற்றுத்தன்மையினதான பதிலை வழங்கும்படி வேண்டு

மென்று உதவுகின்ற, மதியுரையளிக்கின்ற தூண்டுகின்ற, செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது அச்சுறுத்துகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

நீதிமுறை முடக்கலைத் தடுப்பதற்கு ஒரு பொய்யான அல்லது பிழை வழியுய்க்கும் உரிமைக் கோரிக்கையை முன்வைத்தல் தவறொன்றாதல்

12. ஏதேனும் ஆதனத்தின் நீதிமுறை முடக்கலை, ஏதேனும் ஆதனத்தின் பொறுப்புவிடுவிப்பைத் தடுக்கும் நோக்கத்துக்காக, அல்லது நீதிமுறை முடக்கற் கட்டளையொன்றை வேறுபடுத்தும் அல்லது வறிதாக்கும் நோக்கத்துக்காக மேல் நீதிமன்றத்துக்கு ஒரு பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் உரிமைக்கோரிக்கையை, விவரணத்தை அல்லது பிரதிநிதித்துவத்தை முன்வைக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

இழப்பித்தலைத் தடுப்பதற்கு ஒரு பொய்யான அல்லது பிழை வழியுய்க்கும் உரிமைக் கோரிக்கையை முன்வைத்தல் தவறொன்றாதல்

13. ஏதேனும் ஆதனத்தின் இழப்பித்தலை அல்லது விடுவிப்பைத் தடுக்கும் நோக்கத்துக்காக மேல் நீதிமன்றத்துக்கு ஒரு பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் உரிமைக்கோரிக்கையை, விவரணத்தை, பிரதிநிதித்துவத்தை அல்லது ஒரு பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் விவரணத்தை அல்லது ஒரு பொய்யான ஆவணத்தைக் கொண்டுள்ள சத்தியக்கடதாசியொன்றை முன்வைக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

6, 7, 8, 9, 10, 11, 12 அல்லது 13ஆம் பிரிவுகளின்கீழ் தவறொன்றுக்கு உதவுதல் மற்றும் உடந்தையளித்தல் தவறொன்றாதல்

14. (1) பிரிவுகள், 6, 7, 8, 9, 10, 11, 12, அல்லது 13 றின்கீழ் ஏதேனும் தவறைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற அல்லது சதிசெய்கின்ற அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையளிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) இப்பிரிவில் “உடந்தையளித்தல்”, “உதவுதல்” மற்றும் “சதிசெய்தல்” என்பன, தண்டனைச் சட்டக்கோவையின் 100 ஆம், 111 ஆம் மற்றும் 113 ஆம் பிரிவுகளில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேல் நீதிமன்றம் 6, 7, 8, 9, 10, 11, 12, 13 அல்லது

15. (1) பிரிவுகள் 6, 7, 8, 9, 10, 11, 12, 13 அல்லது 14 இன்கீழ் ஏதேனும் தவறைப் புரிந்தமைக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் குற்றப்பத்திரத்தின்மீது ஆளொருவரை

விளங்குவதற்கும் தண்டிப்பதற்கும் மேல் நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்:

14 ஆம் பிரிவுகளின்கீழ் தவறுகளை விளங்குதலும் அத்தகைய தவறுகளுக்கான தண்டமும்

ஆயின், எவ்வாறாயினும், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் அடங்கியுள்ள தவறொன்றைப் புரிவதிலிருந்து பெறப்பட்டிருந்த குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பில் அத்தகைய தவறு புரியப்பட்டிருப்பின், இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்பின்மீது செயலாற்றி, குற்றப்பத்திரத்தை முன்வைத்து குற்றஞ் சட்டப்பட்டவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கு அதிகாரமுடையவராதல் வேண்டும்.

(2) பிரிவுகள் 6, 7, 8, 9, 10, 11, 12, 13 அல்லது 14 என்பவற்றிற் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள் மேல் நீதிமன்றத்தினாலான விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் பதினைந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும். குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 ஆம், மற்றும் 306 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய மறியற்றண்டனைத் தீர்ப்புத் தொடர்பாக ஏற்புடையற்பாலனவாதலாகாது.

அறியத்தருதலை அல்லது தகவல்களை வெளிவிடுவதற்குத் தவறுதல் தவறொன்றாதல்

16. (1) (அ) குற்றச்செயல்களின் வரும்படிகளினது அமைவிடமும் தன்மையும் உட்பட, அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகள்;

(ஆ) குற்றச்செயல்களின் வரும்படிகளை மறைத்து வைத்தல் அல்லது மறைத்தொழுகுதல்;

(இ) குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பான எவையேனும் கொடுக்கல்வாங்கல்கள்; அல்லது

(ஈ) இச்சட்டத்தில் அடங்கியுள்ள ஏதேனும் தவறு புரியப்படுதல்,

என்பன தொடர்பாக உண்மையென எவரேனுமாள் நம்புகின்ற அறியத்தருதலை அல்லது தகவல்களைக் கொண்டுள்ளவரும் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கு அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு அத்தகைய தகவல்களை வெளிவிடத் தவறுகின்றவருமான அவ்வாள் தவறொன்றைப் புரிகின்றார்:

ஆயின், எவ்வாறாயினும், சட்டத்தரணியொருவர் அவரது உயர்தொழில்சார் கடமைகளைப் புரிகையில், குற்றச்செயல்களின் வரும்படிகள் உள்ளமை பற்றிய தகவல்களை அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பான எவையேனும் தகவல்களைப் பெற்றால், உயர்தொழில்சார் ஒழுக்கவியலின் நியதிகளின்படி அத்தகைய தகவல்கள் தொடர்பாக அந்தரங்கத்தன்மையைப் பேணுவதற்கு அவர் தேவைப்படுத்தப்படின் அவர், அத்தகைய தகவல்களைப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது;

ஆயின், மேலும், எவரேனுமாள் அவரின் தொழிலின்போது அல்லது உயர்தொழில்சார் சேவைகளை அளிக்கும்போது குற்றச்செயல்களின் எவையேனும் வரும்படிகள் தொடர்பில் எவையேனும் தகவல்களைப் பெற்றால் அல்லது அறியவந்தால், மற்றும் நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதற் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட இணங்கியொழுகுகை அலுவலருக்கு அத்தகைய தகவல்களை வழங்கினால் அல்லது இணங்கியொழுகுகை அலுவலரொருவர் இல்லாதவிடத்து நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட மேற்பார்வை அதிகாரிக்கு மற்றும் அத்தகைய மேற்பார்வை அதிகாரி இல்லாதவிடத்து, அவரது தொழில்தருநரின் பிரதான நிறைவேற்றலுவலருக்கு வழங்கினால், அவ்வாள் அத்தகைய வெளிவிடுதலுக்கு இணங்கியொழுகுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது:

ஆயின், மேலும், எவரேனுமாள் இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய தகவல்களை வெளிவிடுவதற்குத் தவறுமிடத்து, அத்தகைய ஆளினால் தகவல்கள் வெளிவிடப்படத்தவறியமைக்கான நோக்கம் நல்லெண்ணத்துடனானதாகவிருந்ததென்றும், இச்சட்டத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்வதனை வசதிப்படுத்தும் நோக்கத்துக்கானதாகவிருந்ததென்றும் தோன்றினால், அத்தகைய தகவல்களை வெளிவிடத்தவறிய அத்தகைய ஆள் தவறொன்றைப் புரியவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் அறியவருதல் அல்லது தகவல்கள் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் அடங்கியுள்ளவொரு தவறு தொடர்பில் குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பாக இருக்குமிடத்து, அத்தகைய தகவல்கள், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வெளியிடப்படுதல் வேண்டும். குற்றச்செயல்களின் அத்தகைய வேறெல்லா வரும்படிகளும் தொடர்பிலான அத்தகைய அறியவருதல் அல்லது தகவல்கள், பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கு வெளிவிடப்படுதல் வேண்டும்.

வரும்படிகள் தொடர்பிலான தகவல்களை வெளிவிடுவது தொடர்பில் மனதை மாற்றுதல், அதனைத் தடுத்தல் முதலியன தவறொன்றாதல்

17. குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பிலான தகவல்களை பெயர்குறிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு அல்லது புலனாய்வு அலுவலரொருவருக்கு வெளியிடுவது தொடர்பில் வேறு எவரேனும் ஆளின் மனதை மாற்றுகின்ற, தடுக்கின்ற, முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது மதியுரையளிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்:

ஆயின், எவ்வாறாயினும், உயர்தொழில்சார் ஒழுக்க விதிகளுக்கிணங்க, உயர்தொழில்சார் சேவையை வழங்குகின்ற சட்டத்தரணியொருவர் இத்தவறைப் புரிந்துள்ளாரெனக் குற்றஞ்சாட்டப்படுதலாகாது.

இச்சட்டத்தின் கீழ் தத்துவமளிக்கப்பட்ட ஆட்களுக்கு முட்டுக்கட்டையிடுதல் தவறொன்றாதல்

18. ஏதேனும் பணியைப் புரிவதற்கு மற்றும் அத்தகைய பணியை புரிவதிலிருந்து இச்சட்டத்தின்கீழ் தத்துவமளிக்கப்படுகின்ற எவரேனுமாளுடன் வேண்டுமென்று தலையிடுகின்ற, அவரை அறிவுறுத்துகின்ற, அவருக்கு மதியுரையளிக்கின்ற, முட்டுக்கட்டையிடுகின்ற, அவரைத் தடுக்கின்ற, அவரின் மனதை மாற்றுகின்ற அல்லது அவரைத்

தடுப்பதற்கு, அவரின் மனதை மாற்றுவதற்கு அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுவதற்கு வேறேதேனும் வழிமுறையை எடுக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் குறிக்கோள் களுடன் ஒத்திசையாத நோக்கத்துக்காக நல்லெண்ணத்தில் இச்சட்டத்தின்கீழ் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தத்துவமளிக்கப்பட்ட ஆளொருவர் இச்சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அறிவுறுத்தல்களை வழங்குவது அல்லது மதியுரையளிப்பது தவறொன்றாதலாகாது.

இச்சட்டத்தின்கீழ் அதிகார மளிக்கப்பட்ட ஆளொருவருக்கு ஏதேனும் தீங்கான பயனை விளைவிக்கும் குறிக்கோளுடன் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படாத நடத்தை தவறொன்றாதல்

19. எவரேனுமாள், அவரது அலுவலகமுறையான தன்மையில் அல்லது வேறுவகையாக, ஏதேனும் நடவடிக்கையைப் புரிவதற்கு இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டிருந்த வேறெவரேனுமாளினால் நல்லெண்ணத்துடனும் சட்டமுறையானவொரு முறையிலும் எடுக்கப்பட்ட அத்தகைய நடவடிக்கை தொடர்பாக அத்தகைய வேறு ஆளுக்கு ஏதேனும் தீங்கான பயனை அல்லது மனக்கிலேசத்தை விளைவிக்கும் குறிக்கோளுடன், பின்வருவனவாக அமைகின்றதும் சட்டத்தினால், நிருவாக ஒழுங்குவிதிகளினால் அல்லது விதிகளினால் ஏற்பாடுசெய்யப்படாததுமான ஏதேனும் முடிபை எடுக்கின்ற அல்லது ஏதேனும் செயலில் ஈடுபடுகின்ற அவ்வாள் தவறொன்றைப் புரிகின்றார்:-

(அ) தொழில் நிபந்தனை, உரித்துடைமை அல்லது சிறப்புரிமை ஒன்றில் பாதகமான மாற்றம்;

(ஆ) பழிவாங்குதல், நடவடிக்கை;

(இ) வலுக்கட்டாயம்;

(ஈ) அச்சுறுத்தல்;

(உ) பழிவாங்குதல்;

(ஊ) அலைக்கழித்தல்; அல்லது

(எ) ஏதேனும் உரித்துடைமையை இழக்கச்செய்தல்.

இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிப்ப தற்கான நோக்குடன் பணிப்பு முதலியனவற்றின் அதிகாரமளிக்கப் படாத வழங்குகை தவறொன்றாதல்

**20**. இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் பணியைப் புரிவதற்கு அல்லது ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்குப் பெயர்குறிக்கப்பட்டவோர் அலுவலருக்கு அல்லது புலனாய்வு அலுவலரொருவருக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அல்லது மதியுரையளிப்பதற்கு இச்சட்டத்தினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படாத அல்லது தத்துவமளிக்கப்படாத எவரேனுமாள், இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிக்கும் நோக்குடன், ஏதேனும் பணிப்பை வழங்கினால், மதியுரையளித்தால், ஏதேனும் பணியின் புரிகையின்மீது அல்லது ஏதேனும் தத்துவத்தின் பிரயோகத்தின்மீது செல்வாக்குச் செலுத்தினால் அல்லது எவையேனும் தகவல்களை அல்லது விடயங்களைப் பரிந்துகேட்டால் அல்லது பெற்றுக்கொண்டால் தவறொன்றைப் புரிகின்றார்.

தகவல்களின் அதிகார மளிக்கப் படாத வெளிவிடுகை தவறான்றாதல்

**21.** (அ) எந்த ஆளிடமிருந்து தகவல்கள், ஆவணங்கள் அல்லது வேறு விடயங்கள் ஒரு பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் அல்லது புலனாய்வு அலுவலரினால் கோரப் பட்டுள்ளனவோ அந்த எவரேனுமாள்;

(ஆ) எந்த ஆள் ஏதேனும் பணியைப் புரிவதற்கு அல்லது எவையேனும் தகவல்களை அல்லது விடயங்களை வழங்குவதற்கு இச் சட்டத்தின்கீழ் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளாரோ அந்த எவரேனுமாள்; அல்லது

(இ) எந்த ஆள் எவையேனும் தகவல்களை, ஆவணத்தை அல்லது வேறெவையேனும் விடயங்களை வழங்குவதற்கு, அல்லது ஏதேனும் சேவையை அளிப்பதற்கு அல்லது ஏதேனும்

செயற்பாட்டை நடாத்துவதற்கு ஏதேனும் நீதிமன்றத்தின் கட்டளையொன்றின்மூலம் பணிக்கப்பட்டுள்ளாரோ அந்த எவரேனுமாள்,

இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அவசியமாகவிருந்தாலொழிய, அத்தகைய விடயம் தொடர்பிலான தகவல்களை அத்தகைய தகவல்களைப் பெறுவதற்கு இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்படாத வேறெவரேனுமாளுக்கு வழங்கினால் தவறொன்றைப் புரிகின்றார்.

விளக்கம்

குறிப்பிட்ட வங்கிக் கணக்கொன்றின் விபரங்களை வழங்கும்படியும் அத்தகைய கணக்குத் தொடர்பாகக் குறித்தசில ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படியும் ஏதேனும் வங்கியைத் தேவைப்படுத்தி ஒன்றில் நேரடியாக அல்லது நீதிவானொருவரினால் வழங்கப் பட்ட கட்டளையொன்றினூடாக அத்தகைய வங்கிக்கு அறிவித்தலொன்றைப் புலனாய்வு அலுவலர் வழங்கியுள்ளவிடத்து, வங்கியின்மீது விதிக்கப்பட்ட தேவைப்பாட்டைக் கணக்குவைத்திருப்பவருக்கு அல்லது எவரேனும் மூன்றாந் திறத்தவருக்கு வெளியிடுகின்ற அத்தகைய வங்கியின் ஊழியரொருவர் இப்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

அதிகாரமளிக்கப் படாத ஆளொருவரினால் தகவல்களை வெளிவிடும் படியான பணிப்பு தவறொன்றாதல்

**22.** ஒரு பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் அல்லது புலனாய்வு அலுவலர் தொடர்பில் முகாமைசார், மேற்பார்வைசார் அல்லது நிருவாகஞ்சார் அதிகாரத்தைக் கொண்டிருக்கக்கூடிய எவரேனுமாளுட்பட ஒரு பெயர்குறிக்கப்பட்ட அலுவலராக, புலனாய்வு அலுவலராக அல்லது ஒரு பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு அல்லது புலனாய்வு அலுவலருக்கு மேல்நிலையிலுள்ள, சமாந்தரமாகவுள்ள அல்லது கீழ்நிலையிலுள்ள வேறெவரேனும் ஆளாகவுள்ள எவரேனுமாள் பின்வரும் தகவல்களை வெளிவிட்டால் அவற்றின் வெளிவிடுகையைச் செய்வித்தால் அல்லது

வெளிப்படுத்தலை அல்லது வெளிவிடுகையைப் பணித்தால் தவறொன்றைப் புரிகின்றார்:-

(அ) எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் புலனாய்வு செய்யப்படுகின்றாரென்று;

(ஆ) ஏதேனும் ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படியாகவுள்ளதென்ற சந்தேகத்தின்மீது புலனாய்வு செய்யப்படுகின்றதென்று;

(இ) பெயர்குறிப்பிடப்பட்ட அல்லது வேறுவகையாக விவரிக்கப்பட்ட ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் புலனாய்வொன்றை நடாத்துகின்றாரென்று அல்லது இச்சட்டத்தின்கீழான புலனாய்வின் நடாத்துகையில் மதியுரையளிக்கின்றாரென்று அல்லது ஒரு புலனாய்வின் நடாத்துகையில் வேறுவகையில் உதவுகின்றாரென்று;

(ஈ) விண்ணப்பமொன்று இச்சட்டத்தின்கீழ் ஒரு சட்ட நீதிமன்றத்துக்குச் செய்யப்படுகின்றதென்று; அல்லது

(உ) தடை, கைப்பற்றுகை, நீதிமுறை முடக்குதல் அல்லது இழப்பித்தற் கட்டளையொன்று ஏதேனும் ஆதனம் தொடர்பில் ஆக்கப்படவுள்ளதென்று:

ஆயின், எவ்வாறாயினும், பின்வருவன காரணமாக அத்தகைய தகவல்கள் வழங்கப்படின், அது தவறொன்றாதலாகாது:-

(அ) இச்சட்டத்தினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் அவர் தேவைப்படுத்தப்படின் அல்லது அதிகாரமளிக்கப்படின்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன் கொடுக்கும் நோக்கத்துக்காக அவர் செயலாற்றின்; அல்லது

(இ) ஒரு சட்ட நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கான பதிலிறுப்பாக அவர் அவ்வாறு செய்திருப்பின்.

ஒரு கடமையைப் புரியத் தவறுதல் தவறொன்றாதல்

23. இச்சட்டத்தினால் எவரேனுமாளுக்கு அளிக்கப்பட்ட ஒரு கடமைக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அவ்வாள் தவறொன்றைப் புரிகின்றார்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள் இயைபான கடமையை நிறைவேற்றுவதற்கு நல்லெண்ணத்துடன் எத்தனித்துள்ளாரென்றும் அத்தகைய கடமையைப் புரியத்தவறியமை அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்கானதென்றும் நிலைநாட்டமுடியுமான வராகவிருப்பின், அவர் குற்றவழக்குக்கோ அல்லது குற்றத்தீர்ப்புக்கோ ஆளாதலாகாது.

பிரிவுகள்16, 17, 18, 19,20, 21, 22 அல்லது 23 என்பவற்றின் கீழான தவறொன்றுக்கு உதவுதலும் உடந்தையாக விருத்தலும் தவறொன்றாதல்

**24**. (1) பிரிவுகள் 16, 17, 18, 19, 20, 21, 22 அல்லது 23 என்பவற்றின்கீழான ஏதேனும் தவறைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற அல்லது சதிசெய்கின்ற அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதற்கு உதவுகின்ற அல்லது உடந்தையாகவிருக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) இப்பிரிவில் "உடந்தையளித்தல்", "உதவுதல்" மற்றும் "சதிசெய்தல்" என்பன, தண்டனைச் சட்டக்கோவையின் 100 ஆம், 111 ஆம் மற்றும் 113 ஆம் பிரிவுகளிலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பிரிவுகள் 16, 17, 18, 19, 20, 21, 22, 23 அல்லது 24 இன்கீழான தவறுகளை நீதிவான் நீதிமன்றம் விளங்குதலும் அத்தகைய தவறுகளுக்கான தண்டமும்

**25.** (1) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், நீதிவான் நீதிமன்றம் சட்டத்துறைத் தலைமையதிபதியின் வலுவளிப்புடன் பிரிவுகள் 16, 17, 18, 19, 20, 21, 22, 23 அல்லது 24 என்பவற்றில் அடங்கியுள்ள தவறுகளைப் புரிந்தமைக்காக அத்தகைய நீதிமன்றத்தில் எந்த ஆளுக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆளை விளங்குவதற்கான நியாயாதிக்கத்தைக்

கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய ஆளைத் தண்டித்தலும் வேண்டும்.

(2) ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட, வழிவந்த அல்லது தேறிப்பெறப்பட்ட ஏதேனும் ஆதனம் தொடர்பில் பிரிவுகள் 16, 17, 18, 19, 20, 21, 22, 23 அல்லது 24 என்பவற்றில் அடங்கியுள்ள தவறு அடங்கியிருப்பின், ஆணைக்குழுவின் பணிப்பின்மீது செயலாற்றுகின்ற இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய தவறு புரிந்தமையை புலனாய்வு செய்வதற்கும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கும் குற்றம் சாட்டப்பட்டவருக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) பிரிவுகள் 16, 17, 18, 19, 20, 21, 22, 23 அல்லது 24 என்பவற்றின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளமைக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாள் ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனையினாலும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும். குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 306 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய மறியற்றண்டனைத்தீர்ப்புத் தொடர்பாக ஏற்புடையன வாதலாகாது.

கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் புரியப்பட்ட தவறுகள்

**26.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்று கூட்டிணைக் கப்பட்ட ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அத்தகைய தவறு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய குழுவின் எல்லாப் பணிப்பாளர்களும், கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழுவுடன்சேர்த்து மேலதிகமாக, அத்தகைய ஒவ்வொரு பணிப்பாளரும் இயைபான தவறாக அமைகின்ற செயலைப் புரிந்தமைக்காகப் பொறுப்பாகவிராதிருப்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய தவறைப் புரிந்தமைக்காகத் தனித்தனியாக ஆளாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பதவி தாங்குநர் எவரும், அத்தவறானது அவர் அறியாமல் புரியப்பட்டதென்று அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் அவர் பிரயோகித்தாரென்று-

(அ) புலனாய்வை நடாத்திய புலனாய்வு அலுவலரை அவர் திருப்திப்படுத்தினால் அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுதலாகாது; அல்லது

(ஆ) அவர் நிகழ்தகவு சமநிலையின்மீது நீதி மன்றத்தின் முன்னர் எண்பித்தால் தவறொன்றைப் புரிந்தமைக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

(2) கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழுவொன்றின் பணிப்பாளர்களுக்கெதிராக, குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்துக்காக, நேரொத்த கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழுவுக்கெதிராக முதலில் குற்றவழக்குத் தொடுத்து குற்றத்தீர்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வது அவசியமாதலாகாது.

கூட்டிணைக்கப்படாத குழுவொன்றினால் புரியப்பட்ட தவறுகள்

**27.**(1) இச்சட்டத்தின் கீழான தவறொன்று கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அத்தகைய தவறு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய குழுவின் எல்லாப் பதவிதாங்குநர்களும், கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவுடன்சேர்த்து மேலதிகமாக, இயைபான தவறாக அமைகின்ற செயலைப் புரிகின்றமைக்காக அத்தகைய ஒவ்வொரு பதவிதாங்குநரும் பொறுப்பாகவிராதிருப்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய தவறைப் புரிந்தமைக்காகத் தனித்தனியாகப் பொறுப்பாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பதவிதாங்குநர் எவரும், அத்தவறானது அவர் அறியாமல் புரியப்பட்டதென்று அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் அவர் பிரயோகித்தாரென்று-

(அ) புலனாய்வை நடாத்திய புலனாய்வு அலுவலரை அவர் திருப்திப்படுத்தினால் அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுதலாகாது; அல்லது

(ஆ) அவர் நிகழ்தகவு சமநிலையின்மீது நீதிமன்றத்தின் முன்னர் எண்பித்தால் தவறொன்றைப் புரிந்தமைக்குக் குற்றவாளியாகக் கருதப்படு தலாகாது.

(2) கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்றின் பதவிதாங்குநருக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்துக்காக, நேரொத்த கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவுக்கெதிராக முதலில் குற்றவழக்குத் தொடுத்து குற்றத்தீர்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வது அவசியமாதலாகாது.

ஒரு பங்காண்மையினால் புரியப்பட்ட தவறுகள்

**28.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஒரு பங்காண்மையினால் அதன் பெயரிலும் மகுடத்திலும் புரியப்படுமிடத்து, அத்தகைய தவறு புரியப்பட்ட நேரத்தில் அதன் பங்காளர்கள், அத்தகைய ஒவ்வொரு பங்காளரும் இயைபான தவறாக அமைகின்ற செயலைப் புரிந்தமைக்காகப் பொறுப்பாகவிராதிருப்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய தவறு புரியப்பட்டமைக்காகத் தனித்தனியாக ஆளாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பங்காளர் எவரும், அத்தவறானது அவர் அறியாமல் புரியப்பட்டதென்று அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் அவர் பிரயோகித்தாரென்று-

(அ) புலனாய்வை நடாத்திய புலனாய்வு அலுவலரை அவர் திருப்திப்படுத்தினால் அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுதலாகாது; அல்லது

(ஆ) அவர் நிகழ்தகவு சமநிலையின்மீது நீதிமன்றத்தின் முன்னர் எண்பித்தால் தவறொன்றைப்

புரிந்தமைக்குக் குற்றவாளியாகக் கருதப் படுதலாகாது.

இச்சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளும் பிடியாணை யின்றிக் கைதுசெய்தகு தவறுகளாக விருத்தல்

**29.** இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாகவிருத்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகள், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் புலனாய்வு செய்யப்படுதல்

**30.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிதல் பற்றியவொரு புலனாய்வு குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையிலும் ஏற்புடையதானவிடத்து வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படியும் நடாத்தப்படுதல் வேண்டும்.

தகவல்களை வெளிவிடு வதற்கான கடமை

**31.** (அ) குற்றச்செயல்களின் வரும்படிகளினது அமைவிடம், தன்மை, பெறுமதி, உடைமை கொண்டுள்ள ஆளின் ஆளடையாளம், கட்டுக்காப்பு, அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளினது ஆதிக்கம் என்பனவுட்பட அத்தகைய குற்றச்செயல்களின் வரும் படிகளை அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பான எவையேனும் கொடுக்கல்வாங்கல்களை மறைத்துவைத்தல் அல்லது அவை தொடர்பில் மறைத்தொழுகுதல்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிதல்,

என்பன தொடர்பிலான அறியத்தருதலை அல்லது தகவல்களை அவரது ஊழியம், உயர்தொழில், வியாபாரம், தொழில், தான்புரிதொழில்

என்பவற்றின்போது அல்லது ஒப்பந்தஞ்சார் கடமைகளை நிறைவேற்றுகையில் அறியவரும் அல்லது அறிவை அல்லது தகவல்களைக் கொண்டிருக்கும் எவரேனுமாள் அத்தகைய தகவல்களைஅத்தகையதகவல்வழங்குகின்றவரான ஆளுக்கு அத்தகைய தகவல்களைப் பற்றிய ஒப்புறுதிப்படுத்தலொன்றை வழங்குகின்றவரான பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கு அல்லது இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு வெளிவிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், சட்டத்தரணியொருவர் அவரது உயர்தொழில்சார் கடமைகளின்போது அத்தகைய அறிவை அல்லது தகவல்களைப் பெற்றால், அவர் பெற்ற தகவல்களின் அந்தரங்கத்தன்மையைப் பேணுவதற்கு உயர்தொழில்சார் ஒழுக்கவியலின் நியதிகளின்படி அவர் தேவைப்படுத்தப்படின், அத்தகைய தகவல்களை வழங்குகின்ற ஆள் இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அத்தகைய தகவல்களின் வெளிவிடுதலுக்குச் சம்மதித்தாலொழிய, இந்நியதிச்சட்டமுறையான கடமையை நிறைவேற்றுவதற்குக் கடப்பாடுடையவராதலாகாது:

ஆயின், மேலும், எவரேனுமாள் அவரின் தொழிலின்போது அல்லது உயர்தொழில்சார் சேவைகளை வழங்கும்போது அல்லது குற்றச்செயல்களின் எவையேனும் வரும்படிகள் தொடர்பிலான ஏதேனும் தகவலைப் பெற்றால் அல்லது அறியவந்தால், அத்தகைய தகவலை நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட இணங்கியொழுகுகை அலுவலருக்கு அல்லது ஓர் இணங்கியொழுகுகை அலுவலர் இராதிருக்கையில் நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட மேற்பார்வை அதிகாரிக்கு மற்றும் அத்தகைய மேற்பார்வை அதிகாரியில்லாதவிடத்து, தொழில்தருநரின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு வழங்கினால், அவ்வாள் அத்தகைய வெளிவிடுகைக்கு இணங்கியொழுகுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது:

ஆயின், மேலும், இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அத்தகைய தகவலை எவரேனுமாள் வெளிவிடத் தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆளினால் தகவல்கள் வெளிவிடப்படத்தவறியமைக்கான நோக்கம் நல்லெண்ணத்துடனானதாகவிருந்ததென்றும் இச்சட்டத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்வதனை வசதிப்படுத்துகின்ற நோக்கத்துக்கானதாகவிருந்ததென்றும் தோன்றினால், அத்தகைய தகவலை வெளிவிடத் தவறுகின்ற அத்தகைய ஆள் தவறொன்றைப் புரியவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

தகவலளிப் போரையும் இடித்துரைப் பாளர் களையும் பாதுகாத்தல்

32. (1) முப்பத்தோராம் பிரிவின்கீழும் அதன் நியதிகளின் படியும் ஆளொருவர் அவரது நியதிச்சட்டமுறையான கடமையை நிறைவேற்றியுள்ள அல்லது இடித்துரைப்பாளர் ஒருவர் தகவல்கள் எந்தப் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கு அல்லது இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக் குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு வழங்கினாரோ அந்த அலுவலரிடமிருந்து அவரது ஆளடையாளம் வெளிவிடப்படுதலாகாதென உரிமைகோருவதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) எந்த ஆள், 31 ஆம் பிரிவின் நியதிகளின்படி அவரது நியதிச் சட்டமுறையான கடமையை நிறைவேற்றியுள்ளாரோ அந்த ஆள் ஒருவர், இடித்துரைப்பாளரொருவர் அவருக்கு, அவரது குடும்பத்துக்கு அல்லது ஆதனத்துக்கு ஏதேனும் அச்சுறுத்தலை அல்லது தீங்கை, அல்லது அவரது நற்பெயருக்கான களங்கத்தைப் புலனுணர்ந்தால் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின்கீழும் அதன் நியதிகளின்படியும் பாதுகாப்பைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) எந்த ஆள் 31 ஆம் பிரிவின் நியதிகளின்படி அவரது கடமையை நிறைவேற்றியுள்ளாரோ அந்த ஆளெவரும், இடித்துரைப்பாளரொருவர் அத்தகைய நியதிச்சட்டமுறையான கடமையை நிறைவேற்றுதன்

பயனைக்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கைக்கோ அல்லது அவரது தொழில் நியதிநிபந்தனைகளில் ஒரு பாதகமான மாற்றத்துக்கோ அமைந்தவராதலாகாது.

(4) வேறேதேனும் சட்டம், ஒப்பந்தம், சத்தியம் அல்லது செயல்முறையின்கீழ் தகவல்களை வெளிவிடுதல்மீதான ஏதேனும் தடை அல்லது மட்டுப்பாடு எவ்வாறிருப்பினும், 31 ஆம் பிரிவின்கீழ் தகவல்களை வழங்கியுள்ள ஆளொருவர், அல்லது இடித்துரைப்பாளரொருவர் அத்தகைய தகவல்களை வழங்கியமைக்காகத் தீங்குவிளைவிக்கும் நடவடிக்கைக்கு அமைந்தவராதலாகாது.

(5) ஆளெவரும், 31 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய தகவல்களை வழங்குவதன் விளைவாக அல்லது இடித்துரைப்பாளரொருவராக ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்புக்கு அமைந்தவராதலாகாது.

(6) புலனாய்வு அலுவலரொருவர் அல்லது எவையேனும் நீதிமுறை வழக்குநடவடிக்கைகளில் சான்றுரைப் பதற்கு அழைக்கப்படக்கூடிய வேறெவரேனுமாள், 31 ஆம் பிரிவின் நியதிகளின்படி அவரது நியதிச்சட்டமுறையான கடமையை நிறைவேற்றியுள்ள எவரேனுமாளின் அல்லது இடித்துரைப்பாளரொருவரின் ஆளடையாளத்தை வெளி விடுவதற்குக் கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

(7) ஊழியருக்கு வழங்கப்பட்ட நியமனக்கடித மொன்றிலான ஏதேனும் ஏற்பாடு அல்லது ஓர் ஊழியருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பு மற்றும் சேவைகளின் அல்லது சேவைகளுக்கான ஓர் ஒப்பந்தத்திலான ஏதேனும் வாசகம் அல்லது ஒரு தொழில்தருநர், ஓர் ஊழியர், சுயாதீனமான ஒப்பந்தக்காரர், அல்லது வேறெவரேனும் சேவை வழங்குநர் என்போருக்கிடையேயான வேறேதேனும் உடன்படிக்கை, அது பின்வருமாறு இருக்குமளவுக்கு வறிதாகவுள்ளது:-

(அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை தவிர்க்கும் அல்லது தவிர்ப்பதாகக் கருதப்படும் அளவுக்கு;

(ஆ) இச்சட்டத்தில் அடங்கியுள்ள ஏதேனும் கடமையைத் தடைசெய்யும், தடுக்கும், அல்லது அதன் நிறைவேற்றுகைக்கு முட்டுக்கட்டையிடும் அளவுக்கு;

(இ) இச்சட்டத்தினால் தேவைப்பட்ட அளவுவரை ஏதேனும் செயல் புரியப்படுவதனைத் தடைசெய்வதாக அல்லது அதனை ஊக்கமிழக்கச் செய்வதாகக் கருதப்படும் அளவுக்கு.

(8) முப்பத்திரெண்டாம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை வேண்டுமென்று மீறிச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காக மறியற்றண்டனையினால் மற்றும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும். குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய மறியற்றண்டனைத் தீர்ப்புத் தொடர்பாக ஏற்புடையற்பாலவாதலாகாது.

குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பிலான தகவல்களை வழங்குவதற்குக் குறித்தசில அலுவலர்களுக்குள்ள நியதிச்சட்ட முறையான கடமை

**33.** (1) குறித்தசில தகவல்களின் அந்தரங்கத்தன்மையைப் பேணுவதற்கு ஆளொருவரை அல்லது நிறுவனமொன்றைத் தேவைப்படுத்துகின்ற ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்கள், பின்வருவனவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை தொடர்பிலான தகவல்களை அவர் அறியவருவதன்மேல், எந்தப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் நோக்கெல்லையின்கீழ் இயைபான குற்றச்செயல்களின் வரும்படிகளினது அல்லது தவறினது புலனாய்வு இச்சட்டத்தினால் உரித்தாக்கப்பட்டுள்ளதோ அந்தப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு அத்தகைய தகவல்களை எழுத்தில் வழங்குதல் வேண்டும்:-

(அ) குற்றச்செயல்களின் வரும்படிகள் நிகழ்தகவாக உள்ளமை;

(ஆ) குற்றச்செயல்களின் வரும்படிகளை உடைய வர்களாகவிருக்கக்கூடிய, அவற்றின் கட்டுக் காப்பைக் கொண்டிருக்கக்கூடிய, அவற்றின்மீது ஆதிக்கத்தை அல்லது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கக்கூடிய ஆட்களின் ஆளடையாளம்;

(இ) ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டின் நிகழ் தகவான புரிகை மற்றும் அத்தகைய தவறில் இணைந்திருந்த ஆள்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிதல்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காகத் தகவல்களை வழங்குவதற்கு இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அலுவலர்கள் பின்வருவோராதல் வேண்டும்:-

(அ) நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறின் பணிப்பாளர்;

(ஆ) அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி;

(இ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி;

(ஈ) அத்தகைய தகவல்கள் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற ஒரு தவறுடன் அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகளுடன்

தொடர்புபடக்கூடிய அளவுக்கு ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(உ) அத்தகைய தகவல்கள் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் நோக் கெல்லையினுள் அடங்குகின்ற ஒரு தவறுடன் அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகளுடன் தொடர்புபடக்கூடிய அளவுக்குப் பெயர் குறிக்கப் பட்ட பொலிசு அலுவலர்;

(ஊ) (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி;

(எ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஏ) (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத் தின்கீழ் திரட்டப்பட்டுப் பேணப்பட்ட இலங்கைத் தரைப்படையின் ஏவுநர்;

(ஐ) (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத் தின் 2 ஆம் பிரிவின்கீழ் திரட்டப்பட்டுப் பேணப்பட்ட இலங்கைக் கடற்படையின் ஏவுநர்;

(ஒ) (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் திரட்டப்பட்டுப் பேணப்பட்ட இலங்கை வான்படையின் ஏவுநர்;

(ஓ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் தலைவர்;

(ஔ) 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(க) ஏதேனும் நியதிச்சட்டமுறையான அதிகார சபையின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலர்;

(ங) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 204 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி;

(ச) (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட காணிகள் பதிவாளர் தலைமையதிபதி;

(ஞ) 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உரித்துப் பதிவாளர் தலைமை யதிபதியும் உரித்துப் பதிவாளர்களும்;

(ட) ஒரு மாநகரசபையின், நகரசபையின் அல்லது பிரதேசசபையின் முதல்வர் அல்லது தவிசாளர்;

(ண) ஓர் உள்ளூரதிகாரசபையின் செயலாளர், விசேட ஆணையாளர் அல்லது ஒரு பிரதான நிருவாகி;

(த) ஒரு மாவட்டச் செயலாளர், ஒரு பிரதேச செயலாளர் அல்லது ஒரு கிராம அலுவலர்;

(ந) அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட ஓர் அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ப) மாகாணசபையொன்றின் அமைச்சுச் செயலாளர் ஒருவர்;

(ம) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 47 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி;

(ய) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அச்சட்டத்தின் 3 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவரும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவராகப் பெயர்குறிக்கப்பட்டவருமான அலுவலர்;

(ர) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவும் சமூக சேவை ஒழுங்கமைப்புகளைப் (பதிவுசெய்தலும் மேற்பார்வைசெய்தலும்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசியச் செயலகம்;

(ல) 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளர் தலைமையதிபதி;

(வ) தேர்தல் ஆணைக்குழு;

(அஅ) ஏதேனும் வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பொது முகாமையாளர்; அதன் பெரும்பான்மை பங்குவைத்திருக்கை, ஒன்றில் நேரடியாக அல்லது வேறுவகையாகத் திறைசேரிச் செயலாளரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்;

(ஆஆ) ஒன்றில் ஒரு நிதித்தொழிலாக அல்லது பெயர் குறிக்கப்பட்ட நிதிசாராத் தொழிலொன்றாக நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கை

யிடுதல் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏற்றங்கீ கரிக்கப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பொது முகாமையாளர்;

(இஇ) அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கைப் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்;

(ஈஈ) 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கைக் கடன் தகவற் பணியகச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கடன் தகவற் பணியகத்தின் தவிசாளர்;

(உஉ) (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர்;

(ஊஊ) 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர்;

(எஎ) (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட காணி ஆணையாளர்;

(ஏஏ) கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பிரதான நிறைவேற்று அலுவலர்;

(ஐஐ) 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் சபை;

(ஒஒ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட முதலீட்டுச் சபையின் தவிசாளர்;

(ஓஓ) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைசார் சொத்துச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை புலமைசார் சொத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஔஔ) கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தவிசாளர்;

(கக) பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரினதும் இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக் குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினதும் கலந்தாலோசனையுடன், அமைச்சரினால் பெயர்குறிக்கப்படக்கூடியவரும் பகிரங்கப் பதவி வகிக்கின்றவருமான வேறெவரேனுமாள்.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றினுள், அவர் எந்த நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவுள்ளாரோ அந்த நிறுவனம் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவையேனும் தகவல்களைப் பெற்றால், அத்தகைய தகவல்கள் உடனடியாக அவரது கவனத்துக்குக் கொண்டு வரப்படவேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கான உள்ளக நிருவாகப் பொறிமுறைகளை நிலைப்படுத்துவது (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட எல்லா அலுவலர்களினதும் கடமையாதல் வேண்டும்.

(4) ஒரு பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் இப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தகவல்கள் பெறப்பட்டதன்மேல் எழுத்திலானவோர் ஒப்புக்கொள்ளுதல் வழங்கப்படுதல்

வேண்டுமென்பதுடன் தகவல்களானவை இச்சட்டத்தின் நியதிகளின்படியான நடவடிக்கைக்காக இயைபான அலுவலர் களுக்கு உடனடியாக முன்வைக்கப்படுதலும் வேண்டும்.

34. (1) இரண்டாம் உட்பிரிவிற்றரப்பட்டுள்ள ஊகம் நோக்கங்களுக்காக, ஏதேனும் ஆதனம் அல்லது அதன் பாகம்-

(அ) பணமாகவிருப்பின்,-

(i) ஆளொருவரின் அறியப்பட்ட சட்ட முறையான வருமானத்தின், பெறுகைகளின் அல்லது ஒப்படைப்புகளின் பாகமாக; அல்லது

(ii) அவரது அறியப்பட்ட சட்டமுறையான வருமானம், பெறுகைள் அல்லது மாற்றப் பட்டிருந்தனவாக இருக்கமுடியாதிருப்பின் அல்லது இருந்திருக்கமுடியாதிருப்பின்; அல்லது

(ஆ) பணமாகவிராதிருப்பின்,-

(i) அவரது அறியப்பட்ட சட்டமுறையான வருமானம், பெறுகைகள் அல்லது ஒப்படைப்புகளின் ஏதேனும் பாகத்துடன் சட்டமுறையாகக் கொள்ளுதல் செய்யப்பட்ட ஆதனமாக;

(ii) அவரது அறியப்பட்ட சட்டமுறையான வருமானம், பெறுகைகள் அல்லது ஒப்படைப்புகளின் பாகமாகவுள்ள அல்லது பாகமாகவிருந்த ஆதனமாக; அல்லது

(iii) அவரது அறியப்பட்ட வருமானம், பெறுகைகள் அல்லது ஒப்படைப்புகளின் ஏதேனும் பாகம் அதற்கு மாற்றப்பட்ட

அல்லது மாற்றப்பட்டிருந்த ஆதனமாக, இருக்கமுடியாதிருப்பின் அல்லது இருந்திருக்கமுடியாதிருப்பின்,

அத்தகைய ஆளினால் கொள்ளுதல்செய்யப்பட்ட, பெறப்பட்ட, உடைமைகொள்ளப்பட்ட, ஆதிக்கஞ் செலுத்தப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட அத்தகைய ஆதனம், ஏதேனும் சட்டமுறையற்ற நடவடிக்கையின் வரும்படிகள், ஏதேனும் சட்ட முரணான செயற்பாட்டின் வரும்படிகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதனம், அல்லது சட்டமுறையற்ற நடவடிக்கையொன்றைப் புரிந்ததிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வழிவந்தது அல்லது தேறிப்பெறப்பட்டது என முரணாக எண்பிக்கப்படும்வரை ஊகித்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படி களைப் பயன்படுத்துவதனைத் தடைசெய்கின்ற கட்டளையொன்றை ஆக்குதல்;

(ஆ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பேணிக்காப்பதற்கான கட்டளையொன்றை ஆக்குதல்;

(இ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகளை கைப்பற்றுதல்;

(ஈ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகளை நீதிமுறையாக முடக்குதல்; அத்துடன்

(உ) குற்றச்செயல்களின் வரும்படிகளை இழப்பித்தல்.

(3) குறிப்பிட்டவோர் ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகளின் வரும்படிகளல்ல, ஏதேனும் சட்டமுறையற்ற

செயற்பாட்டின் வரும்படிகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதனமல்ல, அல்லது ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்ததிலிருந்து வழிவந்துள்ளதல்ல அல்லது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தேறிப் பெறப்பட்டுள்ளதல்லதென்றும் அத்தகைய ஆதனம் ஆளொருவரின் சட்டமுறையான வருமானம், பெறுகைகள் அல்லது ஆதனத்திலிருந்து வழிவந்ததென்றும் நிகழ்தகவுச் சமநிலையின்மீது எண்பிப்பதற்கான பொறுப்பு, உரிமைகோருகின்ற ஆளின் மீதாதல் வேண்டும்.

(4) சூழ்நிலைகளின்கீழ் ஊகமானது ஏற்புடையதாக்கப்படக்கூடியவிடத்தும், பிரச்சினையிலுள்ள ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகளல்லவென்றும் ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதனமல்லதென்றும் ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமையிலிருந்து வழிவந்ததல்லதென்றும் அல்லது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தேறிப்பெறப்பட்டதல்லதென்றும் ஆளெவரும் நிகழ்தகவுச் சமநிலைமீது எண்பிக்காதவிடத்தும், பிரச்சினையிலுள்ள ஆதனம் ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகளென்றும், குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதனமென்றும், அல்லது ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமையிலிருந்து வழிவந்துள்ளதென அல்லது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தேறிப்பெறப்பட்டுள்ளதென முதற்றோற்றவளவிலான சான்றுள்ளதென முடிபுசெய்வதற்கு இவ்வூகம் மேல் நீதிமன்றத்தினால் பயன்படுத்தப்படலாம்.

விளக்கமொன்றைக் கோருகின்ற அறிவித்தலொன்றுக்கான பதிலிறுப்பின் ஏல்தகவுடைமை

**35.** (1) சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 25 ஆம் பிரிவில் அடங்கியுள்ள தடைக்கமையவும், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் 68 ஆம் பிரிவின்கீழான அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலொன்றுக்கான பதிலிறுப்பாகப் புலனாய்வு

அலுவலரொருவருக்கு ஒரு சத்தியக்கடுதாசி அல்லது ஓர் எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான கூற்று என்ற வடிவத்தில் அளிக்கப்பட்டவொரு கூற்று அல்லது கொடுக்கப்பட்ட பதிலிறுப்பு, பின்வரும் சந்தர்ப்பங்களில் அத்தகைய சத்தியக்கடுதாசியை அல்லது கூற்றை அளிப்பவருக்கெதிராக அல்லது எவரேனும் மூன்றாந் திறத்தவருக்கெதிராக ஏல்தகவுடையதாதல் வேண்டும்:-

(அ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளைத் தடைசெய்வதா அல்லது கைப்பற்றுவதா அல்லது இல்லையா என்பதை முடிபுசெய்யும்போது;

(ஆ) நீதிமுறைமுடக்கலுக்காகவும் குற்றச் செயல்களின் வரும்படிகளை இழப்பிப்பதற்காகவும் தொடுக்கப்பட்ட நீதிமுறை வழக்குநடவடிக்கைகளில்; அல்லது

(இ) தடைசெய்யப்பட்ட, கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை விடுவிப்பதற்கான விண்ணப்பங்கள் தொடர்பில்.

(2) அத்தகைய சத்தியக்கடுதாசியின் அல்லது கூற்றின் உள்ளீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது எண்பிப்பதன்மூலம் எந்தத் திறத்தவரின் நலன்கள் பாதிக்கப்படக்கூடுமோ அந்த எவரேனும் திறத்தவர், முரணானதை நிலைநாட்டுவதற்கான சான்றை முன்வைப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 68 ஆம் பிரிவின்கீழ் ஆளொருவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலொன்றுக்குப் பதிலிறுப்பாக அத்தகைய ஆள் சத்தியக்கடுதாசியொன்று அல்லது எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமானவொரு கூற்று

என்ற வடிவத்தில் ஒரு கூற்றை அளிக்கின்றவிடத்து அல்லது பதிலிறுப்பொன்றைக் கொடுக்குமிடத்து மற்றும் சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்துள்ளமைக்காக அத்தகைய ஆளுக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுக்கப் படுமிடத்து, அத்தகைய சத்தியக்கடுதாசியின் அல்லது கூற்றின் உள்ளீடுகள், நிலையான சான்றாக அத்தகைய ஆளுக்கெதிராக ஏல்தகவுடையனவாதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள் அவரது எதிர்வாதத்தில் அவரது சார்பில் சான்றளிப்பதற்கு அல்லது சமர்ப்பிப்பதற்கு விரும்பின், அத்தகைய கூற்றின் அல்லது பதிலிறுப்பின் உள்ளீடுகள் பின்வருவனவற்றுக்கு ஏல்தகவுடையனவாதல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆளின் நம்பகத்தன்மையை மதிப்பீடுசெய்யும் நோக்கத்துக்காக வெவ்வேறு நேரத்தில் வெவ்வேறு கூற்றை அளித்தாரென்று எண்பிப்பதற்கும்; அத்துடன்

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் இடப்பட்ட சான்றை மறுதலிப்பதற்கும்.

இச்சட்டத்தின் கீழ் பொலிசு அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்ட கூற்றொன்றின் ஏல்தகவுடைமை

36. எவரேனுமாளை நேர்காணல்செய்து அவரின் கூற்றொன்றைப் பதிவதற்கு இச்சட்டத்தின்கீழான பணியொன்றைப் பிரயோகித்துள்ள ஒரு பொலிசு அலுவலருக்கு அத்தகைய ஆளினால் அளிக்கப்பட்ட கூற்றொன்று, சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவுக்கமைய அத்தகைய கூற்றின் உள்ளீடு, அவர் வெவ்வேறு நேரத்தில் வெவ்வேறு கூற்றை அளித்தார் என்பதை எண்பிக்கும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டாலொழிய, அத்தகைய ஆளுக்கெதிரான எவையேனும் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளில் அத்தகைய கூற்றை அளிப்பவருக்கெதிராகப் பயன்படுத்தப் படுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகையவொரு கூற்று, குற்றச்செயல்களின் வரும்படிகளினது அறவிடுகையை விளைவித்த ஒரு கூற்றின் உள்ளீடுகளை

எண்பிப்பதற்கும் நீதிமுறை முடக்கல் மற்றும் இழப்பித்தல் வழக்குநடவடிக்கைகளில் எந்த ஆதனம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள்நடாத்தப்படுகின்றனவோ அந்த ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படியென நிலைநாட்டுவதற்கும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் பொலிசு அலுவலரொருவராக விராத ஆளொருவருக்கு அளிக்கப்பட்ட கூற்றொன்றின் ஏல்தகவுடைமை

**37.** இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் பணியைப் புரிவதற்கு உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்டவரும் பொலிசு அலுவலரொருவரல்லாதவருமான ஆளொருவருக்கு எவரேனு மாளினால் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்று, சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 17, 18, 19, 20, 21, 22, 23 மற்றும் 24 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய கூற்றை அளிப்பவருக்கெதிராக ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

இலத்திரனியற் பதிவேடுகள் அல்லது வேறு இலத்திரனியல் ஆவணங் களினது சான்றின் ஏல்தகவுடைமை

**38.** இச்சட்டத்தின்கீழான குற்றவழக்குகளிலும், வழக்குகளிலும் 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், இலத்திரனியற் பதிவேடுகள் அல்லது வேறு இலத்திரனியல் ஆவணங்களினது சான்றின் ஏல்தகவுடைமைக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

வெளிநாட்டுத் தகுதி வாய்ந்த அதிகாரியொருவரிடமிருந்தான சான்றித ழொன்றின் ஏல்தகவுடைமை

**39.** சான்றுக் கட்டளைச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரியின் நாட்டில் அமைந்துள்ள ஆதனமொன்று தொடர்பாக அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்தான சான்றிதழொன்றாக அமைகின்றவாறானதும் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்டதும் அத்தகைய ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகள் எனச் சான்றுப்படுத்துகின்றதும் அத்தகைய உரிமைக் கோரிக்கையை ஆதரித்து ஆதாரப்படுத்துகின்ற ஆவணச் சான்றுடனானதுமான வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த

அதிகாரியொருவரிடமிருந்தான சான்றிதழொன்று, சான்றுரைப்பதற்குச் சான்றுப்படுத்துகின்ற வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரி அழைக்கப்படாமல், இயைபான ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகளாகவுள்ளமைக்கு முதற்றோற்றவளவிலான சான்றாதல் வேண்டும்.

ஐயத்தைத் தவிர்த்தல்

**40.** (1) எவரேனுமாளினால் குறிப்பிட்ட ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாடு புரியப்பட்டமைக்கான குற்றத் தீர்ப்பொன்று, அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து குற்றச்செயல்களின் வரும்படிகள் வழிவந்துள்ளன அல்லது தேறிப்பெறப்பட்டுள்ளன என்பதற்கான எண்பிப்பாகத் தேவைப்படுத்தப்படுதலா காதென ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது.

(2) 'குற்றச்செயல்களின் வரும்படிகளை மறைத்துவைத்தல் அல்லது அவை தொடர்பில் மறைத்தொழுகுதல் முதலியன' பற்றிய குற்றச்சாட்டொன்றை எண்பிக்கும் நோக்கத்துக்காக, பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை தொடர்பாக எண்பித்தல் அல்லது சான்றை முன்வைத்தல் அவசியமாதலாகாது:-

(அ) குற்றவழக்குத் தொடுக்கப்படும் ஆள் நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தாரென்று;

(ஆ) குற்றவழக்குத் தொடுக்கப்படும் ஆள் ஒன்றில் இயைபான குற்றச்செயல்களின் வரும்படிகளிலிருந்து அல்லது நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து பயனுகர்ந்தாரென்றும்;

(இ) நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்த தேதி அல்லது இடம்; அல்லது

(ஈ) நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாடு இலங்கையினுள் புரியப்பட்டதென்று.

நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கமும் தத்துவங்களும் மேல் நீதி மன்றத்தின் நியாயதிக் கமும் தத்து வங்களும்

**41.** (1) நீதிவான் நீதிமன்றம், நீதித்துறைச் சட்டத்தினாலும் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினாலும் அதற்குரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்துக்கும் தத்துவங்களுக்கும் மேலதிகமாகப் பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) புலனாய்வுகளை நடாத்துவதற்கும், தகவல் களையும், ஆவணங்களையும், புலனாய்வு நோக்கங்களுக்கான விடயங்களையும் சேகரிப் பதற்கும், வளவுகள், வேறு அமைவிடங்கள் மற்றும் உபாயங்களைத் தேடுவதற்கும் புலனாய்வு அலுவலர்களை இயலச்செய்வதற்கு இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகக் கட்டளைகளை ஆக்குதல்;

(ஆ) முன்னேற்றமடைந்த புலனாய்வுத் தொழில் நுட்பங்களின் நடாத்துகையை அதிகாரமளித்து இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகக் கட்டளைகளை ஆக்குதல்;

(இ) புலனாய்வு அலுவலர்களினால் வழங்கப்பட்ட தடைக்கட்டளைகளைக் கவனத்துக்கெடுத்தல் மற்றும் ஆதனத்தைக் கைப்பற்றுதல்;

(ஈ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகள் மேல் நீதிமன்றத்தினால் நீதிமுறையாக முடக்கப்படுதலைக் கவனத்துக்கெடுத்தல்;

(உ) ஒரு புலனாய்வு அலுவலரின் விண்ணப் பத்தின்மீது எவரேனுமாளின் கூற்றைப் பதிதல். சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின்

வரும்படிகள் பற்றிய புலனாய்வொன்றின்போதும் புலனாய்வு அலுவலரொருவரினால் அத்தகைய ஆளின் கூற்றொன்று முதலில் பதியப்பட்ட பின்னரும் அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுதல் வேண்டும்;

(ஊ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக வேறேதேனும் அவசியமான கட்டளையை ஆக்குதல்; அத்துடன்

(எ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இச் சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக, வழக்குநடவடிக்கைகளை நடாத்துவதற்காக நியாயமான தனித்தன்மை வாய்ந்த நடவடிக்கைமுறையைக் கடைப்பிடித்தல்.

(2) இச்சட்டத்தில் ஒரு நீதிவானுக்கான ஏதேனும் குறிப்பீடு, குற்றச்செயல்களின் வரும்படிகள் என நம்பப்படும் ஆதனம் எந்த நீதிவானின் நியாயாதிக்கத்தில் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் என்று பொருளாதல் வேண்டும்; அத்துடன் -

(அ) ஆதனத்தின் அமைவிடத்தைக் கண்டறிய முடியாமலிருக்குமிடத்து;

(ஆ) ஆதனம், பாகங்களில், ஒருவருக்கு மேற்பட்ட நீதிவான்களின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளவிடத்து;

(இ) ஆதனம் ஓர் எண்ணிமச் சமுகமளித்தலைக் கொண்டுள்ளவிடத்து அல்லது இணைய வெளியில் உள்ளவிடத்து;

(ஈ) ஆதனம் அருவமாகவுள்ளவிடத்து; அல்லது

(உ) ஆதனம் கடல்கடந்த நாட்டில் அமைந்துள்ள விடத்து,

மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கமும் தத்துவங்களும்

42. மேல் நீதிமன்றம், நீதித்துறைச் சட்டத்தினாலும் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத் தினாலும் அதற்குரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்துக்கும் தத்துவங்களுக்கும் மேலதிகமாகப் பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) நீதிமுறை முடக்கற் கட்டளைகளை வழங்குதலும், நீடித்தலும், வேறுபடுத்துதலும், வறிதாக்குதலும் அதுதொடர்பாக அவசியமான வழக்குநடவடிக்கைகளை ஏற்றுக்கவனித்தலும் நிறைவேற்றுதலும்;

(ஆ) குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமைசெய்தலுக்கான கட்டளைகளை ஆக்குதல்;

(இ) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு, குற்றச் செயல்களின் வரும்படிகளை இழப்பித்தல் கட்டளை, பதிலீடுசெய்யப்பட்ட ஆதன இழப்பித்தற் கட்டளை மற்றும் பதிலீடு செய்யப்பட்ட பண இழப்பித்தற் கட்டளை என்பவற்றை ஆக்குதலுட்பட, குற்றச்செயல்களின் வரும்படிகளை இழப்பிப்பதற்காக வழக்கு நடவடிக்கைகளை நடாத்துதலும் கட்டளை ஆக்குதலும்;

(ஈ) குற்றச்செயல்களின் வரும்படிகளைக் கையுதிர்ப் பதற்கும் விடுவிப்பதற்குமான கட்டளைகள்;

(உ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகவிருக்கும் வேறேதேனும் கட்டளை; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இச் சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக் காக, வழக்குநடவடிக்கைகளை நடாத்துவதற்காக நியாயமானவொரு தனித்தன்மைவாய்ந்த நடவடிக்கை முறையைக் கடைப்பிடித்தல்.

இச்சட்டத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்காகன ஆணைக் குழுவுக்குள்ள தத்துவங்கள்

**43.** (1) இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு, ஒன்றில் பொதுவாக அல்லது விடயம் விடயமாக என்ற அடிப்படையில், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரென்ற முறையில் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட கடமைகளைப் புரிவதனையும் தத்துவங்களைப் பிரயோகிப்பதனையும் அதிகாரமளிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) குற்றச்செயல்களின் வரும்படிகளை நீதி முறையாக முடக்குதலுக்கான கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மேல்நீதிமன்றத்துக்கு விண்ணப்பங்களைச் செய்வதற்கு அதிகார மளித்தல்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறுகளுக்காகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுக் கும்படி பணித்தல்;

(இ) குற்றச்செயல்களின் வரும்படிகளை இழப்பிப் பதற்கான விண்ணப்பங்களைச் செய்வதற்கு அதிகாரமளித்தல்;

(ஈ) சட்டத்தின் நியதிகளின்படி எவையேனும் விண்ணப்பங்களையும் ஏதேனும் நீதிமன்றத்தில் அதற்குத் துணைநிலையான எவையேனும் விண்ணப்பங்களையும் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்;

(உ) பணிப்பாளர் தலைமையதிபதியின் சார்பில் தோன்றுவதற்கும் இவ்வுட்பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளிற் குறிப்பிடப்பட்ட கருமங்கள் தொடர்பாக ஆணைக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் ஆணைக் குழுவின் சட்டத்தரணியொருவரை அறிவுறுத்தல், சட்டத்துறைத் தலைமையதிபதித் திணைக் களத்தின் சட்டத்தரணியொருவரை நியமிக்கும்படி சட்டத்துறைத் தலைமையதிபதியைக் கோருதல் அல்லது சட்டத்தரணியொருவரின் சேவைகளைத் தக்கவைத்தல்; அத்துடன்

(ஊ) சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் பணிகளைப் புரிதல் தொடர்பாகவும் ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினதும் புலனாய்வு அலுவலர்களினதும் பணிகள் தொடர்பாகவும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் சட்ட மதியுரையைப் பெற்றுக்கொள்ளுதலும் அதன்மீது செயலாற்றுதலும்.

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆணைக்குழு, புலனாய்வு அலுவலரொருவராக எவரேனும் அலுவலரைப் பெயர்குறிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்; அவர், அதன்பின்னர், புலனாய்வு அலுவலர்களுக்குரித்தாக்கப்பட்ட இச்சட்டத்தின்கீழான பணிகளைப் புரிதலும் தத்துவங்களைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(4) இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப் பட்ட அலுவலரினதும் ஆணைக்குழுவின் புலனாய்வு

அலுவலர்களினதும் பணிகளை உரிய முறையில் புரிதல் உட்பட, ஆணைக்குழு, பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் கலந்தாலோசனையுடன், பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் மற்றும் புலனாய்வு அலுவலர்களுக்கும் மதியுரையளித்து உதவுவதற்கு ஆணைக்குழுவின் அத்தகைய வேறு அலுவலர்களை நியமித்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் புலனாய்வு அலுவலரொருவராக ஆணைக்குழுவின் அலுவலரொருவரைப் பெயர்குறித்தலானது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தினால் அவருக்குப் பொறுப்பிக்கப்பட்ட அல்லது ஆணைக்குழுவினால் அவருக்கு நிருவாகமுறையில் உரித்தாக்கப்பட்ட எவையேனும் பணிகளையும் தத்துவங்களையும் அத்தகைய அலுவலர் புரிவதிலிருந்து அவரைத் தடைசெய்தலாகாது.

(6) ஏதேனும் கருமத்தைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துவதற்கு ஆணைக்குழு தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நிலைமைகளில் சட்டத்துறைத் தலைமையதிபதி, இச்சட்டத்தினாலும் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினாலும் அவருக்களிக்கப்பட்ட தத்துவங்களை, ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பொதுவான அல்லது குறிப்பிட்ட விடய அறிவுறுத்தல்களுக்கமைய, பிரயோகித்தல் வேண்டும்.

(7) குற்றச்செயல்களின் வரும்படிகள் பற்றிய புலனாய்வொன்றை நடாத்துகையில் அல்லது அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் நடவடிக்கையை எடுக்கையில், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் அடங்கியிராத தவறொன்றைப் புரிதலானது வெளிவிடப்படின், ஆணைக்குழு, சட்டத்தின் நியதிகளின்படி நடவடிக்கை எடுப்பதற்கு அத்தகைய தவறின் சார்த்தப்பட்ட புரிகையைப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றின் புரிதல் வெளிவிடப்படின், ஆணைக்குழுவானது இச்சட்டத்தின் நியதிகளின்படி அதுதொடர்பாக அவசியமான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(8) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அதன் கூட்டநடப்பெண் இரு உறுப்பினர்களாதல் வேண்டுமென்பதுடன் அவர்களுள் ஒருவர், சட்டத் தரணியாகவுள்ள ஆணையாளரொருவராக இருத்தலும் வேண்டும்.

(9) இச்சட்டத்தில் சட்டத்துறைத் தலைமையதிபதியின் பணிகளும் தத்துவங்களும்பற்றிய குறிப்பீடு இருக்கு மிடங்களில் எல்லாம், இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் புலனாய்வுசார் மற்றும் குற்றவழக்குச்சார் தகுதிக்குள் வருகின்றவையும் சட்டமுறையற்ற செயற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றவையுமான குற்றச்செயல்களின் வரும்படிகளுடன் அத்தகைய தத்துவங்களும் பணிகளும் தொடர்புபடுமிடத்து, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கான குறிப்பீடொன்றாக அத்தகைய குறிப்பீடு வாசிக்கப்படுதல் வேண்டும். இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் பொதுவான அல்லது குறிப்பிட்ட விடயப் பணிப்புக்கமைய அத்தகைய பணிகளை நிறைவேற்றுதலும் தத்துவங்களைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(10) இச்சட்டத்தில் ஒரு பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் பணிகளுக்கும் தத்துவங்களுக்கும் குறிப்பீடொன்று இருக்குமிடத்து, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் புலனாய்வுசார் மற்றும் குற்றவழக்குச்சார் தகுதிக்குள்

வருகின்றவையும் சட்டமுறையற்ற செயற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றவையுமான குற்றச்செயல்களின் வரும்படிகளுடன் அத்தகைய தத்துவங்களும் பணிகளும் தொடர்புபடுமிடத்து இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக் குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கான குறிப்பீடொன்றாக அத்தகைய குறிப்பீடு வாசிக்கப்படுதல் வேண்டும்.

(11) இச்சட்டத்தில் ஒரு புலனாய்வு அலுவலரின் பணிகளுக்கும் தத்துவங்களுக்கும் குறிப்பீடொன்று இருக்குமிடத்து, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் புலனாய்வுசார் மற்றும் குற்றவழக்குச்சார் தகுதிக்குள் வருகின்றவையும் சட்டமுறையற்ற செயற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றவையுமான குற்றச்செயல்களின் வரும்படிகளுடன் அத்தகைய தத்துவங்களும் பணிகளும் தொடர்புபடுமிடத்து, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக் குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கான குறிப்பீடொன்றாக அத்தகைய குறிப்பீடு வாசிக்கப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் சட்டத் துறைத் தலைமை யதிபதியின் தத்துவங்கள்

**44.** (1) சட்டத்துறைத் தலைமையதிபதி-

(அ) மதியுரை நாடப்படும்போது, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்காள ஆணைக்குழுக்கும் அதன் அலுவலர்களுக்கும்;

(ஆ) ஒன்றில் தன்னியக்கத்தால் அல்லது நாடப் படும்போது, புலனாய்வுகளை நடாத்துதலும் இச்சட்டத்தினால் அத்தகைய அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட கடமைகளையும் தத்துவங் களையும் பிரயோகித்தலும் தொடர்பாகப் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கும்

பொலிசுப் புலனாய்வு அலுவலர்களுக்கும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் அதன் கடமைகளும் பணிகளும் தொடர்பாக அதிகாரசபைக்கும்,

மதியுரையளிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் தவறுகளைப் புரிதல் தொடர்பாக மேல் நீதிமன்றத்துக்குக் குற்றப் பத்திரங்களை முன்வைத்தலும் குற்றவழக்குகளை நடாத்துதலும்;

(ஆ) இச்சட்டத்தில் அடங்கியுள்ள தவறுகளைப் புரிதல் தொடர்பில் நீதிவான் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படுவதற்கு வலுவளித்தலும், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றலும், நடாத்துதலும், கொண்டுநடாத்துதலும்;

(இ) பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரின் அல்லது பொலிசுப் புலனாய்வு அலுவலரின் சார்பில் நீதிவான் நீதிமன்றத்துக்கு ஏதேனும் விண்ணப்பத்தைச் செய்தல்;

(ஈ) குற்றச்செயல்களின் வரும்படிகளினது நீதிமுறை முடக்கலுக்கானவையும் குற்றச்செயல்களின் வரும்படிகளை இழப்பித்தலுக்கானவையுமான விண்ணப்பங்களுட்பட, குற்றச்செயல்களின் வரும்படிகளும் அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களும் தொடர்பில் இச்சட்டத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பங்களை மேல் நீதிமன்றத்துக்குச் செய்தல்; அத்துடன்

(உ) பொலிசாரின் அல்லது அதிகாரசபையின் ஏதேனும் பதிவேட்டை, கோப்பை அல்லது ஆவணத்தைக் கோருதலும் பதிசோதனைசெய்தலும்.

(3) சட்டத்துறைத் தலைமையதிபதி பின்வருவன தொடர்பில் மேல் நீதிமன்றத்துக்கு விதப்புரைகளைச் செய்வதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்:-

(அ) எந்தக் குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பில் மேல் நீதிமன்றத்துக்கு நீதிமுறை முடக்கலுக்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளதோ அல்லது நீதி முறை முடக்கற் கட்டளையொன்று மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டுள்ளதோ அந்தக் குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல், முகாமைசெய்தல் மற்றும் பேணிக்காத்தல்;

(ஆ) ஒரு புலனாய்வு அலுவலரினால் ஆக்கப்பட்ட தடைக்கட்டளை அல்லது பேணிக்காத்தற் கட்டளை; அல்லது

(இ) புலனாய்வு அலுவலரொருவரினால் கைப்பற்றப் பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளெனச் சந்தேகிக்கப்பட்ட ஆதனம்.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதி, தானாகவோ அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியின் அலுவலரொருவரின் மூலமாகவோ இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் அரசின் சார்பில் இடையீடுசெய்வதற்கும், தோன்றுவதற்கும், பிரதிநிதித்துவங்களைச் செய்வதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தினால் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களும் பணிகளும் சட்டத்துறைத் தலைமையதிபதியினாலேயே அல்லது சட்டத்துறைத்

தலைமையதிபதியினால் அதுதொடர்பாகப் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் புரியப்படுதல் வேண்டும்.

இலங்கைப் பொலிசாரின் குற்றச் செயல்களின் வரும்படிகள் புலனாய்வுப் பிரிவு

**45.** (1) இலங்கைப் பொலிசாரின் (இதனகத்துப்பின்னர் "குவபுபி" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) குற்றச்செயல் வரும்படிகள் புலனாய்வுப் பிரிவு எனவழைக்கப்பட வேண்டியதுமான இலங்கைப் பொலிசாரின் பிரிவொன்று இருத்தல் வேண்டும்; இச்சட்டத்தின் நோக்கத்துக்காக அது குவபு பிரிவின் தலைவராகவிருக்கவேண்டிய பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரையும், பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரையும், அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலர், குவபு பிரிவின் பணிப்பாளர் தலைமையதிபதியாகவிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலர், குவபு பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதியாகவிருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட பொலிசுப் புலனாய்வு அலுவலர்கள், குவபு பிரிவைச் சேர்ந்த அலுவலர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள், குவபு பிரிவின் பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்புக்களின்கீழ் இச்சட்டத்தின் நியதிகளின்படி தமது பணிகளைப் புரிதல் வேண்டும். இச்சட்டத்தின்கீழ் அவர்களின் கடமைகளையும் பணிகளையும் பயனுற நிறைவேற்றும் நோக்கங்களுக்காக அவர்கள் வேறொரு பிரிவுக்கு, பணியகத்துக்கு அல்லது அலகுக்கு அல்லது ஒரு பொலிசு நிலையத்துக்குக் குறித்தளிக்கப்படலாம்.

(5) தேசியப் பொலிசு ஆணைக்குழு, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் விதப்புரையின்மீது, பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரையும் பொலிசுப் புலனாய்வு அலுவலர்களையும் உதவுவதற்குப் பொருத்தமான எண்ணிக்கையினரான பொலிசு அலுவலர்களைக் குவபு பிரிவுக்கு நியமிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டதாதல் வேண்டும்.

(6) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினாலும் குவபு பிரிவின் பணிப்பாளர் தலைமையதிபதியினாலும் வழங்கப்பட்ட நிருவாகப் பணிப்புக்களுக்கமைய, குவபு பிரிவைச் சேர்ந்த எவரேனும் பொலிசு அலுவலர், அத்தகைய அலுவலரினால் புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்ற குற்றச்செயல்களின் வரும்படிகளுடன் தொடர்புபட்ட ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாடு பற்றிய புலனாய்வை நடாத்துவதற்குத் தத்துவமளிக்கப்பட்டவராதல் வேண்டும்; ஆயின், அவர், பொலிசுக் கட்டளைச்சட்டம், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் மற்றும் வேறேதேனும் ஏற்புடையற்பாலதான சட்டத்தின் நியதிகளின்படி அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும்.

(7) பொலிசுப் பரிசோதகர் ஒருவர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலர், குவபு பிரிவின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட விடய அங்கீகாரத்துக்கமைய, குற்றச்செயல்களின் எவையேனும் வரும்படிகள் தொடர்பாக இச்சட்டத்தினால் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புலனாய்வுகளை கொண்டுநடாத்துவதற்கும், இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக நடவடிக்கையெடுப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(8) இச்சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதனையும் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரினதும் பொலிசுப் புலனாய்வு அலுவலர்களினதும் கடமைகளையும்

பணிகளையும் உரியமுறையில் புரிவதனையும் இயலச் செய்வதற்கு அவசியமான நிபுணத்துவத்தை வசதிப்படுத்தும் மற்றும் வழங்கும் நோக்கத்துக்காகத் தேசியப் பொலிசு ஆணைக்குழு, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் ஒரு விதப்புரையின்மீது, அவசியமான அறிவு, தகைமைகள், அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தைக்கொண்ட நிபுணர்களை ஒன்றில் முழுநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் அல்லது ஒரு குறித்தளிப்பு அடிப்படையில் குவபு பிரிவுக்கு நியமிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டதாதல் வேண்டும்.

(9) இயைபான நிபுணர்களின் தகைமைகள், அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தையும் அத்தகைய நிபுணர்களுக்குப் பொறுப்பிக்கப்படவேண்டிய குறித்தளிப்புக்களையும் கவனத்துட்கொண்டதன்மேல், தேசியப் பொலிசு ஆணைக்குழு, தனிப்பட்ட அடிப்படையொன்றின்மீது அத்தகைய நிபுணர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தல் வேண்டும்.

(10) குவிபு பிரிவின் பணிப்பாளர் தலைமையதிபதியின் நோக்கில், சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள்பற்றிய புலனாய்வொன்று சிக்கலானதாக, வழமைக்குமாறானதாக, நீண்டகாலத்தினதாக அல்லது பன்நியாயாதிக்கஞ்சார்ந்ததாக உள்ளவிடத்தும், குவிபு பிரிவுக்குக் குறித்தளிக்கப்பட்ட நிதிகள், புலனாய்வை உரியமுறையில் நிறைவேற்றுவதற்குப் போதாதனவாக உள்ளவிடத்தும், குவிபு பிரிவின் பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய புலனாய்வை வினைத்திறனாக நடாத்துவதற்காகத் தேவைப்பட்ட அவசியமான நிதிசார் வளங்களைக் குறித்தளிக்கும்படி அதிகாரசபைக்கு, அதற்கான காரணங்களுடன், கோரிக்கையொன்றை விடுக்கலாம்.

பெயர்குறிக்கப் பட்ட பொலிசு அலுவலரும் பெயர்குறிக்கப் பட்ட பிரதிப் பொலிசு அலுவலரும்

46. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரொருவரும் பெயர் குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலரொருவரும் இருத்தல் வேண்டும்.

(2) பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலர், பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற

பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையொன்றை வகிக்கின்றவொரு பொலிசு அலுவலராகவிருத்தல் வேண்டு மென்பதுடன் ஒரு சிரேட்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாகவும் இருக்கலாம். பெயர்குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலர், சிரேட்ட பொலிசு அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையொன்றை வகிக்கின்றவொரு பொலிசு அலுவலராகவிருத்தல் வேண்டும்.

(3) பெயர் குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலர், பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கு இச்சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட அத்தகைய எல்லாக் கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் புரிவதற்கு, அத்தகைய கடமைகளும், பணிகளும், தத்துவங்களும் ஒன்றில் பொதுவாக அல்லது ஒரு புலனாய்வு குறித்த அடிப்படையின்மீது பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரினால் அவருக்குக் கையளிக்கப்பட்டதற்கமைய, உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகளுக் கமைய, பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலர், சுகவீனம், உடற்றகுதியீனம் என்பன காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் புரிவதற்கு இயலாதவராகவுள்ள நிலைமைகளில் பெயர்குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலர், பொதுவான அல்லது குறிப்பிட்ட கையளிப்பு இல்லாமை எவ்வாறிருப்பினும், ஏழுநாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்காகப் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரின் கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் புரிவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரும் பெயர் குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலரும், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அது தொடர்பாகச் செய்யப்பட்ட ஒவ்வொன்றும் மூன்று பெயர்நியமனங்கள் என்ற அடிப்படையின்மீது தேசியப் பொலிசு ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரும் பெயர்குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலரும், மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இன்னுமொரு மூன்றாண்டுக் காலத்துக்கு மட்டும் மீளநியமிக்கவும்படலாம்:

ஆயின், எவ்வாறாயினும், முதலாவது பெயர்குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலர் நான்காண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குப் பதவிவகிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(6) பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலர் பதவியில் வெற்றிடமொன்று எழுகின்றதனையடுத்து எழுபத்திரெண்டு மணித்தியாலங்களினுள் தேசியப் பொலிசு ஆணைக்குழு பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரொருவரை நியமிப்பதற்கு இயலாதிருக்குமிடத்து, பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, தேசியப் பொலிசு ஆணைக்குழு, மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குப் பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்காக செயலாற்றுவதற்குப் பெயர்குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலரை நியமித்தல் வேண்டும். பெயர்குறிக்கப்பட்ட பதில் பொலிசு அலுவலரின் காலப்பகுதி நீடிக்கப்படுதலாகாது.

(7) சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது வேறெவை யேனும் சூழ்நிலைகள் காரணமாகப் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலர் ஏழுநாட்களை விஞ்சுகின்றவொரு

காலப்பகுதிக்கு அவரது கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, தேசியப் பொலிசு ஆணைக்குழு, மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குப் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்காக செயலாற்றுவதற்குப் பெயர்குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலரை நியமித்தல் வேண்டும். பெயர் குறிக்கப்பட்ட பதில் பொலிசு அலுவலரின் காலப்பகுதி நீடிக்கப்படுதலாகாது.

(8) பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலர், இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளையும், பணிகளையும் புரிதல் மற்றும் தத்துவங்களைப் பிரயோகித்தல் தொடர்பாகப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினதும் தேசியப் பொலிசு ஆணைக்குழுவிதும் கண்காணிப்புக்கு அமைந்தவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கும் தேசியப் பொலிசு ஆணைக்குழுவுக்கும் பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்குக் குறிப்பிட்ட புலனாய்வுப் பணிப்புக்களை வழங்குவதற்குத் தத்துவமளிக்கப்படுலாகாது.

(9) பெயர் குறிக்க்பபட்ட பொலிசு அலுவலரும் பெயர்குறிக்கப்பட்ட பிரதிப் பொலிசு அலுவலரும் பின்வரும் ஏதுக்களின்மீது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் தேசியப் பொலிசு ஆணைக்குழுவினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்:-

(அ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுதல்;

(ஆ) இச்சட்டத்தின் நியதிகளின்படி அவருக்குப் பொறுப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆதனம்

அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில் தவறொன்றைப் புரிதல்;

(இ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு நீதிமன்றக் கட்டளையொன்றுக்கு முரணாகச் செயலாற்றுதல்;

(ஈ) அதிகாரத் துஷ்ப்பிரயோகமாக அமைகின்ற ஒருமுறையில் செயலாற்றுதல்;

(உ) தீய எண்ணத்துடன் செயலாற்றுதல் அல்லது இழிவான, ஊழலான அல்லது கேள்விக்குட் படத்தக்க நேர்மையை அல்லது துர்நடத்தையை உருவாக்குகின்ற வேறேதேனும் முறையில் வேறுவகையாக அவர் நடந்துகொள்ளுதல்; அல்லது

(ஊ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிக்கும் ஒருமுறையில் செயலாற்றுதல் அல்லது குறிக்கோள்களை வினைத்திறனான முறையில் எய்துவதற்குத் தவறுதல்.

இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் பெயர்குறிக்கப் பட்ட அலுவலரும் பெயர்குறிக்கப் பட்ட பிரதி அலுவலரும்

47. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் ஒருவரும் மற்றும் பெயர்குறிக்கப்பட்ட பிரதி அலுவலர் ஒருவரும் இருத்தல் வேண்டும்; அவர், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இச்சட்டத்தினால் அவருக்களிக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் புரிதல் வேண்டுமென்பதுடன் தத்துவங்களைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(2) இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்

குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலராகவிருத்தல் வேண்டும்.

(3) இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் புலனாய்வுகளை நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் சிரேட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுளிருந்து இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட பிரதி அலுவலராகப் பணியாற்றுவதற்கு நியமித்தல் வேண்டும்.

(4) இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரும் பெயர்குறிக்கப்பட்ட பிரதி அலுவலரும், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கான அவரது கடமைகள் மற்றும் பணிகளைப் புரிதலும் தத்துவங்களைப் பிரயோகித்தலும் தொடர்பாக ஆணைக்குழுவுக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(5) இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர் குறிக்கப்பட்ட பிரதி அலுவலர், இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு இச்சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட அத்தகைய எல்லாக் கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் புரிவதற்கு, அத்தகைய கடமைகளும், பணிகளும், தத்துவங்களும், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் ஒன்றில் பொதுவாக அல்லது குறிப்பிட்ட புலனாய்வொன்றின் அடிப்படையின்மீது இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் அவருக்குக் கையளிக்கப்பட்டதற்கமைய, உரித்துடையவராதல் வேண்டும்.

(6) சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது வேறு ஏதேனும் காரணத்தின் காரணமாக இச்சட்டத்தின் கீழ் கடமைகளை மற்றும் தத்துவங்களை நிறைவேற்றுவதற்கு இயலாதவராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் இயலாதவராகவுள்ளவிடத்து, அத்தகைய ஆணைக் குழுவின் பிரதி பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் பொது அல்லது குறித்த கையளிப்பு இல்லாமை எவ்வாறிருப்பினும், ஏழு நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு பெயர் குறிக்கப்பட்ட அலுவலர்களின் கடமைகள், பணிகள் மற்றும் தத்துவங்களை நிறைவேற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(7) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளவிடத்து, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி செயலாற்றுகின்ற தலைவர் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஆணைக்குழுவின் வேறு எவரேனும் அலுவலருக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளவிடத்தும் அத்தகைய வேறு அலுவலர், அத்தகைய தத்துவமளித்தல் முடிவுறாதுள்ளபோது, இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் ஆணைக்குழுவின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் பணிகளை நிறைவேற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

பணிகளானவை கூட்டாகப் பெயர்குறிக்கப் பட்ட அலுவலர் களினால் நிறைவேற்ற ப்படுதல்

**48.** பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரும்-

(அ) இச்சட்டத்தின் குறிக்கோள்களைப் பயனுற எய்துவதற்காக அவர்களின் முறையான நிறுவனங்களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பு

நீடிக்ககூடிய முறைபற்றிக் கிரமமாகக் கலந்துரையாடுதலும் உடன்படுதலும் வேண்டும்;

(ஆ) குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருதடவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுற வலுவுறுத்துதலும் மற்றும் இச்சட்டத்தின் குறிக்கோள்கள் எய்தப்படக்கூடிய முறையும் பற்றித் கலந்துரையாடுவதற்கும் உடன்படுவதற்கும் புலனாய்வு அலுவலர்களின் கூட்டமொன்றுக்குக் கூட்டாகத் தலைமை தாங்குதல் வேண்டும்;

(இ) குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒருதடவை, இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தகவல்கள் பெறப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு, சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பிலான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு இச்சட்டத்தின் நியதிகளின்படி தேவைப்படுத்தப்படுகின்ற பகிரங்க மற்றும் நியதிச்சட்டமுறையான நிறுவனங்களின்பிரதான நிறைவேற்றலுவலர்களின் கூட்டமொன்றுக்குக் கூட்டாகத் தலைமைதாங்குதல் வேண்டும்;

(ஈ) (i) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளைத் தடைசெய்வதற்கும் கைப்பற்றுவதற்கும் முன்னர் புலனாய்வு அலுவலர்களினால் பயன்படுத்தப்பட வேண்டிய ‘தடைக்கு முன்னரான’ மற்றும் ‘கைப்பற்றுகைக்குமுன்னரான’ திட்டமிடுதல் வரைவாவணங்களையும்; அத்துடன்

(ii) பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைத்துவத்துக்கான கட்டளை யொன்று மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்படும்வரை, சந்தேகிக்கப்பட்ட

குற்றச்செயல்களின் வரும்படிகளினது கைப்பற்றுகையையடுத்து பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைத்துவ வரைவாவணங்களை,

*அபிவிருத்திசெய்தும் வலுவுறுத்துதலும் வேண்டும்;*

(உ) குறைந்தபட்சம் ஆறுமாதங்களுக்கொரு தடவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுற வலுவுறுத்துதல் தொடர்பாக அதிகார சபையுடனான கூட்டமொன்றை நடாத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) இரு நிறுவனங்களும் எம்முறையில் இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுத்து இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தி யுள்ளனவோ அம்முறையை எடுத்துக்கூறி வருடாந்த அறிக்கையொன்றைத் தயாரித்து பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒரு பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் கடமைகளும், பணிகளும், தத்துவங்களும்

**49.** (1) இச்சட்டத்தின்கீழ் ஒரு பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் கடமைகளும், பணிகளும், தத்துவங்களும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகள் பற்றிய புலனாய்வுகளை நடாத்துவதனை மேற்பார்வைசெய்தல்;

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறுகளைப் புரிதல் பற்றிய புலனாய்வுகளை நடாத்துவதனை மேற்பார்வை செய்தல்;

(இ) அத்தகைய புலனாய்வுகளை நடாத்துகின்ற புலனாய்வு அலுவலருக்கு அவசியமான பணிப்பை வழங்குதலும் அத்தகைய

புலனாய்வுகளுக்கு அவசியமான வளங்களைக் குறித்தளித்தலும்;

(ஈ) இச்சட்டத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங் களினால் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பிலான தகவல்களைப் பெறுதல்;

(உ) கைப்பற்றுதற் கட்டளைகள் வழங்கப்படுவதற்கு அதிகாரமளித்தல்;

(ஊ) நீதிமுறை முடக்கற் கட்டளைகளைப் பெற்று க்கொள்வதற்கு மேல் நீதிமன்றத்தில் வழக்குக் கோப்பிடப்படுவதற்கு அதிகாரமளித்தல்;

(எ) இச்சட்டத்தின் குறிக்கோள்கள் தொடர்பாகப் புலனாய்வு அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்குதலும், புலனாய்வு அலுவலர்களின் கடமைகளும், பணிகளும், தத்துவங்களும், முன்னேற்றமடைந்த புலனாய்வுத் தொழில் நுட்பங்களுட்பட புலனாய்வுகளை நடாத்துவதில் கடைப்பிடிக்கப்படவேண்டிய முறைமையியல்களும்;

(ஏ) இச்சட்டத்தின்கீழான கடமைகளையும் பணிகளையும் புரிதலும், தத்துவங்களைப் பிரயோகித்தலும் வேறேதேனும் கருமமும் தொடர்பில் சட்டத்துறைத் தலைமையதி பதியிடமிருந்து மதியுரை பெற்றுக்கொள்ளுதல்;

(ஐ) நீதிமுறை முடக்கலுக்கும் குற்றச்செயல்களின் வரும்படிகளை இழப்பித்தலுக்குமான விண்ணப் பங்களைச் செய்தலுட்பட இச்சட்டத்தின்கீழ் நீதிமன்ற வழக்குநடவடிக்கைகள் தொடர்பாகச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் உதவியைப் பெற்றுக்கொள்ளுதல்;

(ஒ) வேறு நியாயாதிக்கங்களின் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து குற்றச்செயல்களின் வரும்படிகள் பற்றிய புலனாய்வுகள் தொடர்பில் பரஸ்பர உதவிக்கான கோரிக்கைகளை முன் வைப்பதற்காகவும் வெளிநாட்டு நீதிமுறை, நிருவாக மற்றும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுக்கு முன்னர் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் உதவியைப் பெற்றுக்கொள்ளுதல்;

(ஓ) குற்றச்செயல்களின் வரும்படிகளாக உள்ளதென அல்லது அவற்றைக் கொண்டுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்ட ஆதனத்தின் பணஓட்டப் புலனாய்வுகள், நிதிசார் பகுப்பாய்வு, சட்டமருத்துவக் கணக்கீடு, சட்டமருத்துவக் கணக்காய்வு, வர்த்தகத் தரவுத்தளங்களை அணுகுதல், கண்டறிதல், அடையாளங்காணுதல், தேடுதல் மற்றும் பரிசோதனைசெய்தல் என்பனதொடர்பில் எவரேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த ஆளின் உயர்தொழில்சார் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது பெறுதல்;

(ஔ) இலங்கையில் அமைந்துள்ள சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பில் வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து கோரிக்கைகளைப் பெறுதலும் செய்முறைப்படுத்துதலும்;

(க) கடல்கடந்த நாடுகளில் அமைந்துள்ளனவென நம்பப்படுகின்றவையும் இலங்கையில் புரியப்பட்டவையுமான சட்டமுறையற்ற செயற்பாடுகளின் வரும்படிகள் தொடர்பிலான கோரிக்கைகளை வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்குப் பரப்புதல்:

(ங) தனிப்பட்டமுறையில் அல்லது மற்றைய பெயர் குறிக்கப்பட்ட அலுவலருடனான உடனுழைப்புடன், இச்சட்டத்தின் குறிக் கோள்களை எய்துவதற்கு இச்சட்டத்தின் நியதிகளின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான தகவல்களையும் புள்ளி விபரங்களையும் கொண்ட தரவுத்தளமொன்றைப் பேணுதல்; அத்துடன் அத்தகைய தகவல்கள், புலனாய்வின் கீழுள்ள ஆதனங்கள், வளவுகளைத் தேடுதல், சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளைக் கண்டறிதலும் கண்டுபிடித்தலும், பேணிக்காத்தற் கட்டளைகளை விதித்தல், கைப்பற்றுகைகள், சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளினது நீதிமுறை முடக்கல், குற்றத்தீர்ப்புக்குப்பின்னரான மற்றும் குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல், மற்றும் அவற்றின் விளைவு, தவறாளர்களைக் கைதுசெய்தல், விளக் கமறியலில் இடுதல், அவர்களுக்குப் பிணையளித்தல் மற்றும் அவர்களுக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுத்தல்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பெயர் குறிக்கப்பட்டவோர் அலுவலரின் கடமைகளும், பணிகளும், தத்துவங்களும், இச்சட்டத்தின்கீழ் ஒரு பெயர் குறிக்கப்பட்ட அலுவலரென்ற அவரது தன்மையில் பொலிசு அலுவலரொருவருக்கும் பொலிசுக் கட்டளைச் சட்டத்தினாலும் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினாலும் அளிக்கப்பட்டவாறான கடமைகள், தத்துவங்கள் மற்றும் பணிகளிலிருந்து அவரை மதிப்புக்குறைத்தலாகாது.

(3) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பெயர் குறிக்கப்பட்டவோர் அலுவலரின் கடமைகளும், பணிகளும், தத்துவங்களும், இச்சட்டத்தின்கீழ் ஒரு பெயர் குறிக்கப்பட்ட

அலுவலரென்ற அவரது தன்மையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்கீழான அவரது கடமைகள், தத்துவங்கள் மற்றும் பணிகளை மதிப்புக்குறைத்தலாகாது.

புலனாய்வு அலுவலர்கள்

**50.** (1) ஒரு பொலிசுப் புலனாய்வு அலுவலர், பொலிசுப் பரிசோதகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத ஒரு பதவிவரிசையை வகிக்கின்ற ஒரு பொலிசு அலுவலராக விருத்தல் வேண்டும்; அவர், பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரின் பொதுவான மேற்பார்வையின்கீழ் இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அவரது கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் புரிதல் வேண்டும்.

(2) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் அத்தகைய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அவ்வாணைக்குழுவின் அலுவலரொருவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு புலனாய்வு அலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அவர், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் அங்கீகாரத்துடன் புரிதல் வேண்டும்.

புலனாய்வு அலுவலரின் கடமைகளும் தத்துவங்களும்

**51.** (1) புலனாய்வு அலுவலரொருவர், பின்வருவன பற்றிய புலனாய்வுகளை நடாத்துவதற்கான கடமையையும் தத்துவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகள்;

(ஆ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகள் பற்றிய புலனாய்வொன்றின்போது, குற்றச்செயல்களின் வரும்படிகளை ஈட்டிய

சட்டமுறையற்ற செயற்பாடு தொடர்பான தகவல்கள் வெளிக்காட்டப்படின், அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடு பற்றிய புலனாய்வை நடாத்துதல்;

(இ) இச்சட்டத்தில் அடங்கியுள்ள தவறுகளைப் புரிதல்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிலுள்ளதெதுவும், ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிதல்பற்றிய புலனாய்வொன்றை நடாத்துவதற்குச் சட்டத்தினால் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட சட்ட வலுவுறுத்தல் அலுவலரொருவரைத் தடுத்தலாகாது.

(3) ஊழல் எதிர்ப்புச்சட்டத்தின்கீழ் தவறுகளாக அமைகின்ற சட்டமுறையற்ற செயற்பாடுகள் பற்றிய ஏதேனும் புலனாய்வு, அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடு பொலிசாரினதும் புலனாய்வுசார் நோக்கெல்லையினுள் வந்தாலொழிய, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் மட்டுமே நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் பற்றிப் பொலிசுப் புலனாய்வு அலுவலரொருவரினால் நடாத்தப்பட்ட புலனாய்வொன்றின்போது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்டமை தொடர்பான தகவல்கள் வெளிக்காட்டப்படின், அத்தகைய தகவல்களைப் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரினூடாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அனுப்புதல் அத்தகைய பொலிசுப் புலனாய்வு அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(5) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் பற்றி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு அலுவலரொருவரினால் நடாத்தப்பட்ட

புலனாய்வொன்றின்போது, பொலிசாரின் புலனாய்வு சார் நோக்கெல்லையினுள் வருகின்ற தவறொன்று புரியப்பட்டமை தொடர்பான தகவல்கள் வெளிக்காட்டப்படின், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலர்களினூடாக பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கு அத்தகைய தகவல்களை உடனடியாக அனுப்புதல், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அத்தகைய புலனாய்வு அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(6) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரொருவருக்குக் கருமமொன்று ஆற்றுப்படுத்தப்படும்போது, அத்தகைய சார்த்தப்பட்ட தவறு பற்றிய புலனாய்வுகளை நடாத்துவிப்பதும் இச்சட்டத்தின் நியதிகளின்படி அவசியமான மேலதிக நடவடிக்கையை எடுப்பதும் அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(7) பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரினால் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கருமம் ஒன்று குறிப்பீடு செய்யப்படும்போது, அது குற்றம்சாட்டப்பட்ட தவறை புலனாய்வு செய்வதற்கான நடத்தையை செய்வித்தலும் மற்றும் இச்சட்டத்தின் நியதிகளின்படி மேலதிக அவசியமான நடவடிக்கையை எடுத்தலும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(8) சட்டமுறையற்ற செயற்பாடுகளைப் புரிதல் பற்றிய புலனாய்வுகளை நடாத்தும் நோக்கத்துக்காக, விடயத்துக்கேற்ப, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்திலும் பொலிசுக்

கட்டளைச்சட்டத்திலும் அல்லது ஊழல் எதிர்ப்புச் சட்டத்திலும் அடங்கியுள்ளவையும் அத்தகைய புலனாய்வு அலுவல ருக்குரித்தாக்கப்பட்டவையுமான புலனாய்வுகள்பற்றிய தத்துவங்களின் பொதுமையுடன்சேர்த்து மேலதிகமாக, இச்சட்டத்தில் அடங்கியுள்ள புலனாய்வுகள் பற்றிய தத்துவங்களைப் பயன்படுத்துவது புலனாய்வு அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(9) இப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட புலனாய்வு அலுவலரொருவரின் கடமைகளும், பணிகளும், தத்துவங்களும், பொலிசுக் கட்டளைச்சட்டத்தினாலும் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினாலும் ஒரு பொலிசுப் புலனாய்வு அலுவலருக்கு அளிக்கப்பட்ட கடமைகளையும், தத்துவங்களையும், பணிகளையும் மதிப்புக் குறைத்தலாகாது.

(10) இப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட புலனாய்வு அலுவலரொருவரின் கடமைகளும், பணிகளும், தத்துவங்களும், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்கீழான அவரது கடமைகள், தத்துவங்கள் மற்றும் பணிகளிலிருந்து, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு அலுவலரொருவரின் கடமைகளையும், பணிகளையும் தத்துவங்களையும், மதிப்புக்குறைத்தலாகாது.

## பாகம் II

## குற்றச்செயல்களின் வரும்படிகள், தடை மற்றும் கைப்பற்றுகை பற்றிய புலனாய்வுகள்

சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகள் பற்றிய புலனாய்வை எம்முறையில் தொடங்கலா மென்பது

**52.** ஒரு பெயர் குறிக்கப்பட்ட அலுவலரினால் விடுக்கப்படக் கூடிய எவையேனும் நிருவாகப் பணிப்புக்களுக்கமைய, புலனாய்வு அலுவலரொருவர், பின்வரும் வழிகளுள் ஒன்றில், சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள்பற்றி இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றைத் தொடங்கலாம்:-

(அ) அவரினாலேயே அல்லது சட்டமுறையற்ற செயற் பாடொன்றைப் புரிதல் பற்றிய புலனாய் வொன்றை நடாத்துவதற்குச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாளின் மூலமாக நடாத்தப்பட்ட புலனாய்வொன்றின் போது, ஏதேனும் ஆதனம் அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டினது குற்றச் செயல்களின் வரும்படியொன்றெனச் சந்தேகம் எழுமிடத்து;

(ஆ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகள் தொடர்பாக உளவறிதல் முகவராண்மை யொன்றிலிருந்தான அறிக்கையொன்று பெறப் படுவதன்மேல்;

(இ) குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பிலான தகவல்களை வழங்குவதற்கு இச்சட்டத்தின் நியதிகளின்படி அவரது நியதிச்சட்டமுறையான கடமையை நிறைவேற்றியுள்ள ஆளொரு வரினால் வழங்கப்பட்ட தகவல்கள் பெறப் பட்டதன்மேல்;

(ஈ) குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பாக எவரேனுமாளிடமிருந்து ஒரு முறைப்பாடு அல்லது மனு பெறப்படுவதன்மேல்;

(உ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகள் பற்றிய புலனாய்வொன்றை நடாத்து வதற்குச் சட்ட நீதிமன்றமொன்றின் கட்டளை பெறப்படுவதன்மேல்;

(ஊ) இச்சட்டத்தின் நியதிகளின்படி புலனாய்வொன்று நடாத்தப்படவேண்டுமென்ற சட்டத்துறைத் தலைமையதிபதியின் மதியுரையின்மீது;

(எ) புலனாய்வு அலுவலரொருவர் அல்லது பெயர் குறிக்கப்பட்ட அலுவலரொருவர், கிடைக்கக்

கூடிய தகவல்களின் அல்லது விடயங்களின் அடிப்படையின்மீது அடையாளங் காணப்பட்ட ஆதனமொன்று குற்றச்செயல்களின் வரும்படிகள் என்ற அபிப்பிராயத்தை அவர் கொண்டிருப்பதற்கான சந்தேகம் உள்ளதென்ற கருத்தைக் கொள்ளுமிடத்து;

(ஏ) ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் நியதிகளின்படி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் புலனாய்வு நோக்கெல்லையினுள் வராத சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்தமையினால் வழிவந்துள்ளதென நம்பப்படும் சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றின் அடிப்படையின்மீது;

(ஐ) ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் நியதிகளின்படி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் புலனாய்வு நோக்கெல்லையினுள் வருகின்ற சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்தமையினால் வழிவந்துள்ளதென நம்பப்படும் சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகள் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதிக்குப் பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றின் அடிப்படையின்மீது;

(ஒ) விடயத்துக்கேற்ப, பொலிசாரின் அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்

களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அல்லது வேறேதேனும் சட்ட வலுவுறுத்துகை முகவராண்மையின் புலனாய்வு நோக்கெல்லையினுள் வருகின்ற ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிவதிலிருந்து வழிவந்த சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பில் அத்தகைய சட்ட வலுவுறுத்தல் முகவராண்மையினால் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கு அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்குச் சமர்ப்பிக் கப்பட்ட அறிக்கையொன்றின்மீது;

(ஓ) ஒன்றில் பெயர்குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கு அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையின்மீது அல்லது தகவல்களின் மீது பின்வருபவரினால் மற்றும் பின்வருவன வற்றினால்:-

(i) ஒரு வெளிநாட்டின் சட்டவாக்க, நிறை வேற்று, நீதிமுறை, ஒழுங்குபடுத்தும், மேற்பார்வைசார் அல்லது நிருவாக அதிகாரியொருவரினால்;

(ii) ஒரு வெளிநாட்டின் சட்ட வலுவுறுத்தல் அல்லது உளவறிதல் முகவராண்மையினால்;

(iii) சர்வதேச, பிராந்திய அல்லது பல்புடை ஒழுங்கமைப்பு அல்லது முகவராண்மை ஒன்றினால்;

(iv) இலங்கை அதற்கான திறத்தவ ரொருவராகவுள்ள ஒரு சர்வதேச அல்லது பிராந்திய ஒழுங்கேற்பாட்டின்கீழ் தாபிக்கப்பட்ட பொறிமுறை அல்லது ஒழுங்கமைப்பொன்றினால்;

(ஔ) குற்றவியல் கருமங்களிலான பரஸ்பர உதவிச் சட்டத்தின் கீழானவொரு கோரிக்கையுட்பட ஒரு வெளிநாட்டுச் சட்ட வலுவுறுத்துகை முகவராண்மையிடமிருந்து கோரிக்கை யொன்றைப் பெற்றதனையடுத்து;

(க) சர்வதேசக் குற்றவியல் பொலிசு ஒழுங் கமைப்பிடமிருந்து (இன்டர்பொல்) பெறப்பட்ட அறிக்கையொன்றின் அடிப்படையின்மீது;

(ங) நிதிசார் உளவறிதற் கூறிடமிருந்து சந்தேகிக் கப்பட்ட கொடுக்கல்வாங்கல் அறிக்கை யொன்று அல்லது வேறு அறிக்கை அல்லது தொடர்பாடல் பெறப்பட்டதனையடுத்து;

(ச) (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்றிடமிருந்தான அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப் பட்ட ஆணைக்குழுவொன்றிடமிருந்தான இடைக்கால அறிக்கையொன்றுட்பட அறிக்கை யொன்றின்மீது;

(ஞ) தகவல்களை வழங்குவதற்கான கடமை உரித்தாக்கப்பட்டுள்ள ஆளொருவரினால் இச்சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட தகவல்களின்மீது;

(ட) குறிப்பிட்டவோர் ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகள் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை வெளிக்காட்டுகின்ற ஓர் அறிக்கை அல்லது ஒரு தொடர்பாடல் பாராளுமன்றத்தினால் அல்லது அதன் ஒரு குழுவினால் பெறப்படுவதன்மீது;

(ண) பகிரங்க சேவை ஆணைக்குழுவிடமிருந்தான அறிக்கையொன்றின்மேல்;

(த) தேசிய பொலிசு ஆணைக்குழுவிடமிருந்தான அறிக்கையொன்றின்மீது;

(ந) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையொன்றின் அல்லது அவரிடமிருந்தான தொடர்பாடலொன்றின் அடிப்படையின்மீது;

(ப) சட்டமுறையாகத் தாபிக்கப்பட்டவோர் ஒழுக்காற்றுக் குழுவிடமிருந்தான அறிக்கை யொன்றின்மீது;

(ம) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் பணிப்பாளரின் (வங்கி மேற்பார்வை) அறிக்கையொன்றின்மீது;

(ய) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளரின் (இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில்சாரா நிதிசார் மேற்பார்வை) அறிக்கையொன்றின்மீது;

(ர) 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் அறிக்கையொன்றின்மீது;

(ல) குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பிலான தகவல்களை வழங்குவதற்கு இச் சட்டத்தின் கீழான கடமை அளிக்கப்பட்ட வேறெவரேனுமாளினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றின் மீது அல்லது தகவல்களின் மீது;

(வ) 2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் தொடர்பான தவறுகளைத் தடுத்தல் சட்டத்தின் கீழான தவறொன்று பற்றி ஒன்றில் முழுமையாக அல்லது பகுதியளவில் புலனாய்வொன்றை நடாத்தியுள்ள பிரதான புலனாய்வு அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையின்மீது அல்லது தகவல்களின்மீது;

(அஅ) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் நியதிகளின் படி தேசிய விளையாட்டுக்கள் கழகமாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையின்மீது அல்லது தகவல்களின்மீது;

(ஆஆ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உள்ளூரதிகார சபையினாலான, நகர அபிவிருத்தி அதிகார சபையினாலான அல்லது 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் கீழ் தாபிக்கப்பட்ட நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினாலான மற்றும் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அடுக்குமாடி சொத்தாண்மைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபையினாலான அறிக்கையொன்றின்மீது ; அத்துடன்

(இஇ) குற்றச்செயல்களின் வரும்படிகள் உள்ளமை தொடர்பாக ஒரு பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் அல்லது ஒரு புலனாய்வு அலுவலரின் ஏதேனும் அவதானிப்பின்மேல், அல்லது எவரேனும் சமாதான அலுவலரினால் ஒரு பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு அல்லது ஒரு புலனாய்வு அலுவலருக்கு அறிவிக்கப்படுகின்ற அத்தகைய சமாதான அலுவலரினாலான அத்தகைய அவதானிப்பின்மேல்.

இச்சட்டத்தின் கீழ் புலனாய் வொன்றை நடாத்தும்முறை

**53.** (1) ஐம்பத்திரெண்டாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வழிகளுள் ஏதேனுமொன்றில் ஒரு தகவலைப் பெற்றதன்மேல், புலனாய்வு அலுவலர், அவசியமானவிடத்து, நிகழ்வு கண்டறிதலொன்றை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்வேண்டும். நிகழ்வுக் கண்டறிதலொன்றை நடாத்துவதற்கான குறிக்கோள் 52 அம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட வழிகளுள் ஏதேனுமொன்றின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் உண்மைத்தன்மையைத் தீர்மானித்தலாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும் 52 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட வழிகளுள் ஒன்றின்மூலம் பெறப்பட்ட தகவல்களின் குற்றச்செயல்களின் வரும்படி உள்ளமைதொடர்பாக ஒரு பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் அல்லது புலனாய்வு அலுவலரின் ஏதேனும் அவதானிப்பின்மீது புலனாய்வலுவலரொருவர் நம்பத்தக்க தெனக் கருதவேண்டிய ஒரு பெயர்குறிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு அல்லது புலனாய்வாளருக்குச் சமாதான அலுவலரினால் அறிவிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படி உள்ளமை தொடர்பான ஏதேனும் அவதானிப்பின் பெறுகையின்மீது அவற்றின்கண் அடங்கியுள்ள தகவல்களின் உண்மையை நம்புவதற்கான காரணங்களைப் புலனாய்வு அலுவலர் கொண்டிருப்பின், அவர் நிகழ்வு கண்டறிதலொன்றை நடாத்தாமல், பதியப்பட வேண்டிய அத்தகைய காரணங்களுக்காக, இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக ஒரு புலனாய்வின் நடாத்துகையைத் தொடங்கலாம்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய புலனாய்வைத் தொடங்குதல், இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவிற்கமையவிருத்தல் வேண்டும்:

ஆயின், மேலும் 52 ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வழிகளுள் பெறப்பட்ட தகவல், குற்றச்செயல்களின் வரும்படிகளினது அடையாளம் மற்றும் அமைவிடம் என்பவற்றைப் புலனாய்வு அலுவலர் நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை வெளிக்காட்டினால், நிகழ்வுகளைச் செல்லுபடியாக்குவதற்கு ஆதனத்தைக் கண்டறிவதற்கும் அடையாளங்காண்பதற்கும் அல்லது புலனாய்வுகளை நடாத்துவதற்கும், இப்பிரிவின்கீழ் புலனாய்வுகளை நடாத்துவது அவசியமாகாது என்பதுடன் பின்வருவனவற்றுக்குஅவசியமானநடவடிக்கையெடுப்பதற்கு இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக உரித்துடையவராதலும் வேண்டும்:-

(அ) விளக்கமொன்றைக் கோருகின்ற அறிவித்த லொன்றைச் சேர்ப்பித்தல்;

(ஆ) ஆதனத்தின் பாவனையைத் தடைசெய்தல், ஆதனத்தைப் பேணிக்காப்பதற்கான பணிப் பொன்றை வழங்குதல்; அல்லது

(இ) அத்தகைய ஆதனத்தைக் கைப்பற்றுதல்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, 'நிகழ்வுக் கண்டறிதல்' ஒன்று 52 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட வழிகளில் பெறப்பட்ட தகவல்கள் நம்பத்தக்கனவா மற்றும் குற்றச் செயல்களின் வரும்படிகள் தொடர்பானவையா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக எவரேனுமாளின் எவையேனும் உரிமைகளை மீறும் பயனைக் கொண்டிருக்கும் ஏதேனும் செயற்பாட்டை நடாத்தாமல் கிடைக்கக்கூடிய தகவல்களினதும் விடயங்களினதும் பூர்வாங்கப் பரிசோதனை மற்றும் அவற்றின்கண் அடங்கியுள்ள தகவல்களை சரிபார்க்கும் செயன்முறையொன்றில் ஈடுபடுதல் என்று பொருளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் நிகழ்வுக் கண்டறிதலை நடாத்துகின்ற புலனாய்வு அலுவலரொருவர், 52 ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வழிகளில் கிடைக்கப்பெற்ற தகவலைச் சரிபார்க்கும் நோக்கத்துக்காக, எழுத்திலான சட்டத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட எவரேனுமாளின் ஏதேனும் உரிமையை அல்லது சிறப்புரிமையை மீறாதவொரு முறையில் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் புலனாய்வுத் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், நிகழ்வு கண்டறிதல் நெறி முறையான வியாபாரம், வர்த்தகம், நிதிச் செயற்பாடு அல்லது உயர்தொழிலாண்மை அல்லது தான்புரித் தொழிலின் நடத்தையை பாதகமான முறையில் பாதிக்கக்கூடியதாக நடாத்தப்படுதலாகாது.

(4) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நிகழ்வுக் கண்டறிதல் பூர்த்தி செய்யப்பட்டதன் மேல், புலனாய்வு அலுவலர், -

(அ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகள் பற்றிய புலனாய்வொன்றை நடாத்த தொடங்குவது அவசியமாகவிருக்குமா என்பதனையும்; அத்துடன்

(ஆ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயலின் வரும்படியின் பணவகையான பெறுமதி, இச்சட்டத்தின்கீழ் சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயலின் வரும்படிகள் பற்றிய புலனாய்வொன்றை நடாத்துவதனை நியாயப்படுத்தும் அத்துடன் அவசியமாக்கும் வகையில் போதியளவு உயர்வானதாக இருக்குமா என்பதனையும்,

தீர்மானிக்கும் நோக்கத்துக்காகப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரைக் கலந்தாலோசித்தல் வேண்டும்; அத்துடன் எய்தப்பட்ட தீர்மானம் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய

தீர்மானங்களுக்கான காரணங்கள் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் புலனாய்வு அலுவலர் மற்றும் நேரொத்த பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் ஆகிய இருவரினாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(5) சரிபார்த்தலின்மேல், 52 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட வழிகளில் ஏதேனுமொன்றில் பெறப்பட்ட தகவல்கள் அல்லது அவற்றின் பாகம் நம்பத்தகுந்தவையாகவும் குற்றச்செயல்களின் வரும்படிகளுடன் தொடர்புபட்டனவென்றும் ஆதலால் இச் சட்டத்தின்கீழான புலனாய்வொன்றைத் தொடங்குதல் அவசியமாகவுள்ளதென்றும் காணப்படுமிடத்து, அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட அலுவலரினால் அங்கீகாரத்துக்கும் அவரினால் வழங்கப்பட்ட பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்களுக்கமைய புலனாய்வு அலுவலர் இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றைத் தொடங்குதலும் நடாத்துதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளின், பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல் செயல்முறைக்குகந்ததாகவிராதவிடத்து அல்லது இச்சட்டத்தின் குறிக்கோளை முறியடிக்குமிடத்து, புலனாய்வு அலுவலரொருவர் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, அவரது சொந்தப் பிரேரணையின்மீது புலனாய்வைத் தொடங்கலாமென்பதுடன் அதன்பின்னர் இயன்றளவு விரைவாகப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

(6) இப்பிரிவின்கீழ் புலனாய்வு அலுவலரொருவரினால் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு அறிக்கையொன்று முன்வைக்கப்படுவதன்மேல், புலனாய்வொன்று தொடங்கப்படுவதனை அவர் அங்கீகரிக்கலாம் அல்லது அங்கீகரிக்க மறுக்கலாம். பெயர் குறிக்கப்பட்ட அலுவலர் புலனாய்வொன்று தொடங்கப்படுவதனை அங்கீகரிக்க மறுக்குமிடத்து, அவர் அதற்கான காரணங்களைப் பதிதல்வேண்டுமென்பதுடன் அவர் பெயர் குறிக்கப்பட்ட

பொலிசு அலுவலராகவிருப்பின், புலனாய்வொன்று நடாத்தப்படுவதனை அங்கீகரிக்காதிருப்பதற்கான அத்தகைய முடிபுத்தொடர்பிலான அறிக்கையொன்றைப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும். பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாகவிருக்குமிடத்து, அவர் அத்தகைய அறிக்கையை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(7) அவசியமானவிடத்து, புலனாய்வு அலுவலர், குற்றச்செயல்களின் வரும்படியொன்றென நம்பப்படும் ஆதனத்தை கண்டறிவதற்கும் அடையாளங் காணுவதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

ஒரு புலனாய்வு அலுவலரின் புலனாய்வுத் தத்துவங்கள்

**54.** இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்று தொடங்குவதனையடுத்து, புலனாய்வு அலுவலரொருவர், பின்வரும் புலனாய்வுத் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிதலுட்பட, சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகள் தொடர்பிலான தகவல்களை அல்லது சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பான ஏதேனும் நிகழ்வை அறிந்துள்ளவரென நம்பப்படும் எவரேனுமாளை, அத்தகைய புலனாய்வு அலுவலரினால் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மறுமொழியிறுக்கும்படியும், அத்தகைய புலனாய்வு அலுவலரினால் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் மீது ஓர் எழுத்திலான கூற்றை வழங்கும்படியும் தேவைப்படுத்துதல்;

(ஆ) எவரேனுமாளுடனான நேர்காணலின் நடாத்துகையையும் அவரது கூற்றை அளிப்பதனையும் காணொளிமூலம் பதிதல்;

(இ) இச்சட்டத்தின் 68 ஆம் பிரிவின் நியதிகளின்படி அறிவித்தல் வழங்குதலும் சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள்பற்றி ஒரு புலனாய்வை நடாத்துவதனை வசதிப்படுத்து வதற்கு எவையேனும் தகவல்களைக் கோருதலும்;

(ஈ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகளை அடையாளங்காணுதல், கண்டறிதல், அறவிடுதல் மற்றும் பரிசோதனைசெய்தல் என்பவற்றுக்கு அவசியமாகக்கூடிய நடவடிக்கைகளை எடுத்தல்;

(உ) தடைசெய்யப்பட்ட, கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளுக்கு அவசியமான பாதுகாப்பையும் பேணிக்காப்பையும் வழங்குதல்;

(ஊ) விசேடித்த எண்ணிம மற்றும் வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் பாவனையை உட்படுத்தக்கூடிய பகுப்பாய்வுட்பட நிதிசார் பகுப்பாய்வை நடாத்துதல்;

(எ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படி களினது பெறுமானமதிப்பீடொன்றைப் பெற்றுக் கொள்ளுதல்;

(ஏ) ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துகை யொன்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி யொன்றைப் பெற்றுக்கொள்ளுதல்;

(ஐ) புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்ற குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பிலான விடயங்களை, தரவுகளை மற்றும் தகவல்களைக் கொண்டுள்ளனவென நம்பப்படுகின்றவையும்

எவையேனும் கோப்புக்களில், பதிவேடுகளில், ஒரு எண்ணிமத் தேக்க உபகரணத்தில் அல்லது வேறேதேனும் அமைவிடத்தில் உள்ளவையுமான ஆவணங்கள், விடயங்கள் மற்றும் தகவல்களைப் பரிசோதனைசெய்து கட்டுக்காப்பினுள் எடுத்தலும்.

பெயர்குறிக்கப் பட்ட அலுவலரின் வலுவளிப்புடன் புலனாய்வு அலுவலரொருவரின் புலனாய்வுத் தத்துவங்கள்

**55.** (1) இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்று தொடங்கப் படுவதனையடுத்து, புலனாய்வு அலுவலரொருவர், பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் வலுவளிப்புடன் பின்வருவனவற்றுக்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இச்சட்டத்தின் அடுத்துப்பின்னரான ஏற்பாடு களில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக, எழுத்திலான தடைசெய்தற் கட்டளையொன்றில் புலனாய்வு அலுவலரினால் குறித்துரைக் கப்பட்டவொரு முறையில், குற்றச்செயல்களின் வரும்படிகளெனச் சந்தேகிக்கப்படுவதற்கு அவர் நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள ஆதனமொன்றைப் பயன்படுத்துவதிலிருந்து அல்லது அதனைக் கொடுக்கல்வாங்கல் செய்வதிலிருந்து எவரேனுமாளைத் தடை செய்தலும் அத்தகைய ஆதனத்தைப் பேணிக்காக்கும்படி எவரேனுமாளைத் தேவைப்படுத்துதலும்;

(ஆ) குற்றச்செயல்களின் வரும்படிகளினது உடைமை, அவற்றின்மீதான ஆதிக்கம், அவற்றின் கட்டுக்காப்பு அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள எவரேனுமாளுக்குத் தடை செய்கின்ற மற்றும் பேணிக்காப்புக் கட்டளையொன்றை வழங்குதல்; அத்தகைய ஆதனம் தொடர்பில் என்ன நடவடிக்கை தடைசெய்யப்பட்டுள்ளதென்ற பணிப்பொன்றை அது கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) இச்சட்டத்தின் அடுத்துப்பின்னரான ஏற்பாடுகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு, குற்றச்செயல்களின் வரும்படிகளெனச் சந்தேகிப்பதற்குப் புலனாய்வு அலுவலர் நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள ஏதேனும் ஆதனத்தைக் கைப்பற்றுதல்:

ஆயின், எவ்வாறாயினும், சந்தேகிக்கப்பட்ட எவையேனும் குற்றச்செயல்களின் வரும்படியைக் கைப்பற்றுவதற்கு முன்னர், புலனாய்வு அலுவலர் பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்:-

(i) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படியின் அண்ணளவிலான பணப் பெறுமதி;

(ii) கைப்பற்றப்படக்கூடிய ஆதனத்தின் குறைந்தபட்சப் பெறுமதியாகவுள்ளதாக அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்ட பெறுமதியை அப்பெறுமதி விஞ்சுகின்றதா வென்பது; அத்துடன்

(iii) பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்கான கட்டளையொன்று மேல் நீதிமன்றத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும்வரை, கைப்பற்றப்பட்ட ஆதனத்தைப் பாதுகாப்பது, பேணிக் காப்பது மற்றும் முகாமைசெய்வது பொருளாதாரரீதியில் ஒப்பேறக்கூடியதாக விருக்குமாவென்பது:

ஆயின், மேலும், கைப்பற்றப்படவுள்ள ஆதனத்தின் பெறுமதி மிகக் குறைவாகவிருத்தல் அல்லது அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்ட தொகையிலும் பார்க்கக் குறைவாகவிருத்தல் எவ்வாறிருப்பினும், பொதுமக்கள்

நலன்கருதி சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படியைக் கைப்பற்றுதல் தேவையாகவுள்ளதெனப் புலனாய்வு அலுவலர் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் கலந்தாலோசனையுடன் அபிப்பிராயம் கொண்டால், புலனாய்வு அலுவலர், அது தொடர்பாகப் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, இச்சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய ஆதனத்தைக் கைப்பற்றுதல் வேண்டும்;

(ஈ) கைப்பற்றப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளை உடைமையில் எடுத்தல்;

(உ) தடைசெய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பாக நீதிமுறை முடக்கற் கட்டளையொன்றுக்காக விண்ணப்பித்தல், அதனைப் பெற்றுக் கொள்ளுதல், சேர்ப்பித்தல் மற்றும் வலுவுறுத்துதல்;

(ஊ) ஒன்றில் கூட்டாக அல்லது ஓர் உள்நாட்டு அல்லது வெளிநாட்டுச் சட்ட வலுவுறுத்தல் முகவராண்மையின் உதவியுடன் குற்றச் செயல்களின் வரும்படிகள் பற்றிய புலனாய்வொன்றை நடாத்துதல்;

(எ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளின் நீதிமுறை முடக்கலுக்காக அல்லது இழப்பித்தலுக்காக வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தலைக் கவனத்துட்கொள்ளும்படி சட்டத்துறை தலைமையதிபதியைக் கோருதல்;

(ஏ) இலங்கைப் பொலிசாரின் உளவறிதல் சேகரிக்கும் முகவராண்மைகளினூடாகக் கண்காணிப்பை நடாத்துதலும் அல்லது நடாத்துவித்தலும் பின்வருவன தொடர்பிலான தகவல்களைச் சேகரித்தலும்:-

(i) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள்;

(ii) சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிதல்;

(iii) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்கள்; அத்துடன்

(iv) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளின் உடைமை, ஆதிக்கம், கட்டுக்காப்பு, கட்டுப்பாடு மற்றும் பாவனை.

(2) ஓராம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியின்கீழான கண்காணிப்பு-

(அ) பதிவுசெய்தலுடன் அல்லது பதிவுசெய்தலின்றி தனிப்பட்ட தொடர்பாடலின் இடைமறிப்பை;

(ஆ) கண்காணிப்பின்கீழுள்ள ஆளொருவரின் தனிப்பட்ட வளவுகளினுள் எண்ணிமக் கண்காணிப்பை; அல்லது

(இ) பகிரங்கமாகவிராததும், எவரேனுமாளின் தனிப்பட்ட வாழ்க்கையுடன் தொடர்புபடுவதுமான வேறேதேனும் கண்காணிப்பை,

உட்படுத்துமிடத்து, அத்தகைய கண்காணிப்பானது, அத்தகைய புலனாய்வின் தொடக்கம் அல்லது நடாத்துகை எந்த நீதிவானுக்கு ஏலவே அறிக்கையிடப்பட்டுள்ளதோ அந்த நீதிவானிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னதிகாரவளிப்புடன் மட்டுமே நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிக்கையெதுவும் முன்வைக்கப்பட்டிராதிருப்பின், கண்காணிப்பு இடத்தின்

ஆள்புல நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவானிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னங்கீகாரத்துடன் மட்டுமே நடாத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அவசரமான ஏதுக்களின் அடிப்படையின்மீது அல்லது புலனாய்வு அலுவலரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதுக்களுக்காக, நீதிவானிடமிருந்து முன்னதிகாரவளிப்பை பெறுதல் இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிக்குமாயின், அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கான காரணங்கள் ஒரே காலத்தில் புலனாய்வு அலுவலரினால் பதியப்பட்டு, அத்தகைய முன்னதிகாரமளிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் கண்காணிப்பு நிறைவேற்றப்படலாம்:

ஆயின், மேலும், அத்தகைய புலனாய்வு அலுவலர், அத்தகைய கண்காணிப்பு நடாத்தப்பட்டதிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுள் ஓர் அந்தரங்கமான தொடர்பாடல்மூலம் இயைபான நீதிவானுக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் கண்காணிப்புக்காக நீதிவானின் அதிகாரமளிப்புக்காக விண்ணப்பமொன்று அது தொடர்பான அந்தரங்கமான விண்ணப்பமொன்றின்மூலம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அது, இரகசியமான வழக்குநடவடிக்கைகளில் மறுதிறத்தவரில்லாமல் நீதிவானினால் கவனத்துட்கொள்ளப்படுதலும் வேண்டும். அத்தகைய விண்ணப்பத்தையும் அது தொடர்பாக ஆக்கப்பட்ட கட்டளையையும் அந்தரங்கமாக வைத்திருப்பதற்கு நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் நீதிவான் எடுத்தல் வேண்டும்.

(4) நீதிவான், (2) ஆம் உட்பிரிவின்கீழ் கண்காணிப்புக்கான அதிகாரவளிப்பை அளிக்குமுன்னர், அத்தகைய புலனாய்வுசார் வழிமுறை நிறைவேற்றப்படுவதற்காக விகிதாசாரத்தன்மை நெறியின் அடிப்படையின்மீது சட்டத்தன்மை, அவசியத்தன்மை மற்றும் நியாயப்படுத்துகை என்பவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

புலனாய்வு களை நடாத்து வதற்கு நீதிமுறை அதிகாரவளிப்பு

**56.** (1) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்று தொடங்கப்பட்டதையடுத்து, புலனாய்வு அலுவலரொருவர், நிருவாகப் பணிப்புக்களுக்கு இணங்கியொழுகுவதற்கமைய, சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் அமைந்துள்ளனவென நம்பப்படும் இயைபான அமைவிடத்தின்மீது ஆள்புல நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு அல்லது அத்தகைய அமைவிடம் இலங்கைக்கு வெளியே இருக்குமிடத்து அல்லது புலனாய்வு அலுவலர் அதனை அறியாதுள்ளவிடத்து, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு அந்தரங்கமான விண்ணப்பமொன்றைச் செய்துகொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன் இரகசியமான மறுதிறத்தவரில்லாக் கேட்பொன்றையடுத்து, புலனாய்வு களை நடாத்துவதனை வசதிப்படுத்துவதற்கு ஒரு நீதிவானின் அதிகாரவளிப்பை அல்லது கட்டளையைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராலும் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் புலனாய்வு அலுவலரொருவரிடமிருந்து விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், நீதிவானால், இரகசியமாகவும் மறுதிறத்தவரில்லா வழக்கு நடவடிக்கைகளிலும் விண்ணப்பத்தை உடனடியாகக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அதிகாரவளிப்பை அளித்தல் அவசியமாகவிருக்குமெனத் திருப்திப்படுவதன்மேல், அவசியமானவிடத்து, நீதிவான் அவசியமெனக் கருதவேண்டிய எவையேனும் நிபந்தனைகளுக்கமைய அத்தகைய அதிகாரவளிப்பை அளித்தல் வேண்டும் அல்லது கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும்.

உட்பிரவேசமும், தேடுகையும், பரிசோதனையும்

**57.** (1) ஐம்பத்தாறாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, புலனாய்வு அலுவலரொருவர், சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளைக் கண்டறிதல், அவற்றின் அமைவிடம், தன்மையையும் அவை உள்ளமையையும் அடையாளங்காணல் அல்லது அவற்றின் ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிதலுடன் அவற்றின் தொடர்பை நிச்சயித்தலுக்காவும், எவையேனும் வளவினுள்,

அமைவிடத்தினுள், வசதியினுள், வலையமைப்பிலுள்ள எண்ணிமத் தரவுத் தேக்க உபாயத்தினுள், வேறேதேனும் ஆதனத்தினுள் அல்லது வஸ்துவினுள் பிரவேசித்து அதனைத் தேடவும் பரிசோதனை செய்யவும் அவசியமானவிடத்து அதனை உடைமைக் கொள்ளவும் அல்லது ஆளைத் தேடவும் விசாரணை செய்யவும் தத்துவமுடையராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அவசர ஏதுக்களின் அடிப்படையின்மீது அல்லது புலனாய்வு அலுவலரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதுக்களுக்காக, அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கான காரணங்கள் புலனாய்வு அலுவலரினால் அதே நேரத்தில் பதியப்படுகின்றமையினால் நீதிவானிடமிருந்து முன் அதிகாரவளிப்பைப் பெற்றுக்கொள்ளுதல் இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிக்கக் கூடுமானதாகவிருப்பின், தேடுலானது அத்தகைய முன் அதிகாரவளிப்பைப் பெற்றுக்கொள்ளாமல் நிறைவேற்றப்படலாம். அத்தகைய புலனாய்வு அலுவலர், அத்தகைய தேடுதலின் நடாத்துகைபற்றி இருபத்திநான்கு மணித்தியாலங்களினுள், அத்தகைய தேடுதலின் நடாத்துகைபற்றி இயைபான நீதிவானுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நியதிகளின்படி தேடுதல் தத்துவத்தைப் பிரயோகிக்கின்ற புலனாய்வு அலுவலரை அனுமதித்தல் எவையேனும் வளவுகளின், ஏதேனும் அமைவிடத்தின், வசதியின் வலையமைப்பின், எண்ணிமத் தரவுக்தேக்க உபகரணத்தின், வேறேதேனும் ஆதனத்தின், அல்லது வஸ்துவின் அல்லது ஆளின் கட்டுப்பாடு, உடைமை அல்லது ஆதிக்கத்தைக் கொண்டுள்ள எவரேனுமாளின் கடமையாதல் வேண்டும்.

(3) எவையேனும் வளவுகளினுள், அமைவிடத்தினுள், வசதியினுள், வலையமைப்பினுள், எண்ணிமத் தரவுத்தேக்க உபகரணத்தினுள், வேறேதேனும் ஆதனத்தினுள் அல்லது வஸ்துவினுள் உட்பிரவேசம் அல்லது அணுகுகை அல்லது ஆளை அணுகுதல் இயலாதிருப்பின் அல்லது அதற்கு

முட்டுக்கட்டை இடப்பட்டிருப்பின், தேடுதல் தத்துவத்தைப் பிரயோகிக்கின்ற புலனாய்வு அலுவலரொருவர் அத்தகைய வளவுகளை அல்லது அமைவிடத்தைத் தேடும் நோக்கத்துக்காக அத்தகைய வளவுகளினுள், வசதியினுள், வலையமைப்பினுள், எண்ணிமத் தரவுத்தேக்க உபாயத்தினுள், வேறேதேனும் ஆதனத்தினுள் அல்லது வஸ்துவினுள் உட்பிரவேசித்தல் அல்லது அணுகுதல் அல்லது ஆளை அணுகுதல் என்பவற்றுக்கு அவசியமான வலோத்காரத்தினைப் பயன்படுத்துவதனை உள்ளடக்கக்கூடிய அவசியமான வழிமுறைகளை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான தத்துவம்

**58.** ஐம்பத்தாறாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, புலனாய்வு அலுவலரொருவர், பின்வருவனவற்றுக்காக தத்துவமுடையவராதல் வேண்டும்.:-

(அ) வங்கிக் கணக்குகள், வைப்புக்கள், கடன்கள், ஏனைய வசதிகள் மற்றும் வேறு ஒத்த வங்கித்தொழில் தொடர்புமுறைகள் தொடர்பிலான விபரங்களையும், நிகழ் நிலை வங்கித்தொழில் வசதிகளைப் பயன்படுத்துதல் தொடர்பான தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஆ) வேறேதேனும் நிதி நிறுவனத்திலிருந்து அல்லது பெயர்குறிக்கப்பட்ட நிதிசாராத் தொழில்களிலிருந்தும் உயர்தொழில்களிலிருந்தும் அல்லது எண்ணிமச் சொத்து சேவை வழங்குநரிடமிருந்து நிதிசார் சாதனங்கள் அல்லது திட்டங்களும் சேவைகளும் தொடர்பிலான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) அணுகுகை தொடர்பான விபரங்களும் உள்மறைவான நாணயம், நுண்காசு, தொகுதிச் சங்கிலிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் எண்ணிம ஊடகத்தைப் பயன்படுத்தி வேறு ஒத்த கொடுக்கல்வாங்கல்கள்

தொடர்பிலான அல்லது அவற்றைப் பயன்படுத்தி கொடுக்கல்வாங்கல்களின் பாவனையையும் நிறைவேற்றுகுகையையும் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஈ) பதிவுசெய்யப்படாததும் ஒழுங்குபடுத்தப் படாததுமான ஏதேனும் நிதிநிறுவனத்திடமிருந்து நிதிசார் சாதனங்கள் அல்லது திட்டங்களும் சேவைகளும் தொடர்பிலான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(உ) அந்நியச்செலாவணி, வருங்காலக் கொடுக்கல் வாங்கல்கள், மற்றும் பண்டங்களின் வியாபாரம் போன்ற எண்ணிம வியாபரம் தொடர்பிலான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஊ) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதி பதிக்குச் செய்யப்பட்ட வெளிப்படுத்துகைகளின் பிரதிகளையும் அவற்றில் அடங்கியுள்ள தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கும்;

(எ) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்பட்ட வெளிப்படுத்துகைகளின் பிரதிகளும் அவற்றில் அடங்கியுள்ளவையும் அவைத் தொடர்பானவையுமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஏ) பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது உரித்துப்பதிவாளர் தலைமையதிபதிக்கு வழங்கப்பட்ட வெளிப்படுத்துகைகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஐ) காணிப் பதிவகங்களில் அல்லது உரித்துப் பதிவகங்களில் கோப்பிடப்பட்ட உறுதிகளினதும் வேறு உரித்துமாற்றங்களினதும் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஒ) வெளிநாட்டு செலாவணித் திணைக்களத் தலைவரிடம் கிடைக்கக்கூடிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஓ) தொலைபேசி மற்றும் செல்லிடத் தொலைபேசி அழைப்புப் பதிவேடுகள், கடத்துகை விபரங்கள், அழைப்பு முடிவுறுத்தல் விபரங்கள், எண்ணிமத் தரவுச் சேவைகளின் பாவனை, மின்தொடர்பாளர் தரவுகள், இணையத்தள வாயில்கள் மற்றும் நுழைவாயில்கள் முதலியனவற்றுக்கான அணுகுகையைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஔ) ஒப்புரவுச் சொத்தாண்மை, பங்கு மற்றும் வேறு ஒப்புரவுக் கொடுக்கல்வாங்கல்கள் முதலியன தொடர்பிலான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(க) எண்ணிமத் தரவுத் தேக்க உபாயங்களுட்பட ஏதேனும் எண்ணிம தரவுகள் மற்றும் தகவல்களின் பிரித்தெடுப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய உபாயத்தைக் கட்டுக்காப்பினுள் எடுத்தலும் நீதிவானின் கட்டளை பெற்றுக் கொள்ளப்படும்வரை அதனை வைத்திருத்தலும் புலனாய்வு அலுவலருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்;

(ங) ஓர் எண்ணிம உபாயத்தை, எண்ணிம மய மாக்கப்பட்ட செயலியை, வலைத்தளத்தை, வழங்கி அல்லது வேறேதேனும் இணைய அல்லது வலையமைப்புச்செய்யப்பட்ட சூழலை அணுகுவதற்கு பாவனையாளர் பெயரையும் கடவுச்சொல்லையும் அல்லது வேறெவையேனும் தகவல்களையும் கொண்டுள்ளவரென நம்பப்படும் எவரேனுமாளுக்கானவொரு பணிப்புரை வழங்குவதற்கும்;

(ச) ஏதேனும் எண்ணிம உபாயத்தை அல்லது எண்ணிமத் தேக்கத்தை உள்மறைவற்ற தாக்குவதற்கு அல்லது அதன் அணுகுகைக் குறியீடுகளைத் தகர்ப்பதற்கு அல்லது கடந்துசெல்வதற்கு அவசியமான நடவடிக்கை களை எடுப்பதற்கும்;

(ஞ) ஏதேனும் நிறுவனத்தின் எவரேனும் முதன்மை அல்லது பிரதான நிறைவேற்றலுவலரை அல்லது அத்தகைய நிறுவனத்தின் வேறெவரேனுமாளை, அவர்களின் உடைமையில் இருக்கக்கூடிய அல்லது அவற்றுக்கான அணுக்கத்தை அவர்கள் கொண்டுள்ள தரவுகள் மற்றும் தகவல்கள் தொடர்பான அந்தரங்கத்தன்மையைப் பேணு வதற்கு அத்தகைய நிறுவனத்தை அல்லது வேறு ஆளைக் கோருகின்ற ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு, ஒப்பந்தஞ்சார் அல்லது வேறு கடப்பாடு எவ்வாறிருப்பினும், புலனாய்வு அலுவலருக்கு -

(i) அத்தகைய தகவல்களை வழங்கும்படி;

(ii) ஆவணங்கள், கோப்புகள் மற்றும் இடாப்புக்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்கும்படி;

(iii) ஏதேனும் எண்ணிம உபாயத்தை வழங்கும்படி,

*தேவைப்படுத்துவதற்கும்;*

(ட) ஒரு புலனாய்வு அலுவலரினால் நேரடியாக நாடப்படுபவையும் எவையேனும் தகவல்களை அல்லது விடயங்களைக் கொண்டுள்ள ஆளினால் அவருக்கு கிடைக்கக்கூடியனவாக்கப் படாதவையுமான அத்தகைய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(ண) புலனாய்வுகளை நடாத்துவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியதுமான மேலே குறிப்பீடு செய்யப்படாததுமான உளதாயுள்ள ஏதேனும் ஆவணத்தின் அல்லது வேறேதேனும் தகவலின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுட்பட அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் எவையேனும் தரவுகளை அல்லது தகவல்களை வழங்கும்படி மேலே குறிப்பீடுசெய்யப்படாத எவரேனுமாளுக்கானவொரு கட்டளையை வழங்குவதற்கும்;

(த) ஏதேனும் ஆதனம் தொடர்பான தரவுகளினதும் தகவல்களினதும் ஏதேனும் பகிரங்க அல்லது தனியாள் வைப்பகத்தையும் அணுகுவதற்கும் அத்தகைய ஆதனத்தின்மீது சொத்தாண்மையை, உடைமையை, கோருகின்ற, அதன் கட்டுக்காப்பை, அதன்மீதான ஆதிக்கத்தை அல்லது கட்டுப்பாட்டை கொண்டுள்ள ஆட்கள் தொடர்பான தகவல்களையும் அணுகுவதற்கும் பெற்றுக்கொள்வதற்கும்.

**தகவல்களைப் பேணிக்காத்தல்**

**59.** (1) (அ) ஏதேனும் இலத்திரனியல் உபாயத்தில் தேக்கிவைக்கப்பட்ட எவையேனும் தகவல்கள் அல்லது தரவுகள் இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றின் நோக்கங்களுக்காக நியாயமான முறையில் தேவைப்படுகின்றனவென்றும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தகவல்கள் அல்லது தரவுகள் காணாமற்போகலாம், அழிந்துபோகலாம், திரிபுபடுத்தப் படலாம் அல்லது அணுகக்கூடிய தல்லாதனவாக்கப்படலாம் என்ற ஆபத்தொன்று உள்ளதென்றும்,

புலனாய்வு அலுவலரொருவர் திருப்திப்படுமிடத்து, அத்தகைய புலனாய்வு அலுவலர், எழுத்திலான அறிவித்தல்மூலம் அத்தகைய இலத்திரனியல் உபாயத்தின் கட்டுப்பாட்டையுடைய ஆளை அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறானாலும் முப்பது நாட்களை விஞ்ஞாததுமான அத்தகைய காலப்பகுதிக்காகத் தகவல்கள் அல்லது தரவுகள் பேணிக்காக்கப்படவேண்டுமென்பதை உறுதிப்படுத்துமாறு தேவைப்படுத்தலாம்.

(2) எக்காலப்பகுதிக்கு தகவல்கள் அல்லது தரவு பேணிக்காக்கப்பட வேண்டுமோ அக்காலப்பகுதியானது நீதிவானுக்கு செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது அத்தகைய மேலுமொரு காலப்பகுதிக்கு நீடிக்கப்படலாம்.

முன்னேற்றமடைந்த புலனாய்வுசார் தொழில்னுட்பங் களுக்கான நீதிமுறை அதிகாரவளிப்பு

**60.** (1) புலனாய்வு அலுவலரொருவர், 56 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு ஒரு நீதவானிடமிருந்தான நீதிமுறை அதிகாரவளிப்புக்கமைய, பின்வரும் முன்னேற்றமடைந்த புலனாய்வுசார் தொழில்நுட்பத்தை நீதிமுறை அதிகாரவமைப்புக்கமைய நடாத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கட்டுப்படுத்தப்பட்ட ஒப்படைப்பு;

(ஆ) எண்ணிம, குரல், காணொளித் தொடர்பாடலின் இடைமறிப்பையும் பதிவையும் உள்ளடக்குகின்ற எண்ணிமக் கண்காணிப்பு;

(இ) மருட்டுக்கருவிகளின் பாவனையை உட்படுத்து கின்றவையுட்பட மறைவான நடவடிக்கைகள்;

(ஈ) மொழிகளை இடுதல்; அத்துடன்

(உ) கணினிகள், செல்லிடத்தொலைபேசிகள், எண்ணிமத் தரவுத் தேக்க உபாயங்கள் மற்றும் வேறு எண்ணிமச் சாதனங்களிலிருந்து தரவுகளினதும், தகவல்களினதும் மற்றும்

உருவாக்கங்களினதும் சட்டமருத்துவப் பிரித்தெடுப்பு.

(2) மேற்குறிப்பிடப்பட்டவாறு புலனாய்வு அலுவலரொரு வரிடமிருந்து விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், நீதிவான் தாமதமின்றி சொல்லப்பட்ட விண்ணப்பத்தைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் திருப்திப் படுவதன்மேல் அவசியமான முன்னேற்றமடைந்த புலனாய்வுகளை நடாத்துவதற்கான அதிகாரவளிப்பை வழங்குதலும் வேண்டும். அவசியமானவிடத்து, நீதவான், நீதி நலன்கருதி, இணங்கியொழுகப்படவேண்டிய நிபந்தனைகளை விதிக்கலாம்.

(3) நீதிவான், முன்னேற்றமடைந்த புலனாய்வுசார் தொழில்னுட்பமொன்றை நடாத்துவதற்கான அதிகார வளிப்பை வழங்குமுன்னர், அத்தகைய புலனாய்வுசார் தொழில்னுட்பம் நிறைவேற்றப்படுவதற்காக விகிதாசாரத் தன்மை நெறியின் அடிப்படையின்மீது அதனை நடாத்துவதற்கான அவசியத்தையும் நியாப்படுத்துகையையும் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(4) மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறாக அதிகாரவளிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டதனையடுத்து, புலனாய்வு அலுவலர், பதினான்கு நாட்களுக்கு ஒரு தடவை, எந்த முன்னேற்ற மடைந்த புலனாய்வுசார் தொழில்னுட்பத்துக்காக அதிகாரவளிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோ அந்த முன்னேற்றமடைந்த புலனாய்வுசார் தொழில்னுட்பத்தைப் பயன்படுத்தி அத்தகைய புலனாய்வின் முன்னேற்றத்தை இயைபான நீதிவானுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

புலனாய்வுக்கு அவசியமான ஏதேனும் செயற்பாட்டை நடாத்துவதற்கு எவரேனுமாளுக் கான நீதிமுறைக் கட்டளை

**61.** பின்வருவனவற்றின் நடாத்துகையுட்பட, சந்தேகிக்கப் பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள்பற்றி புலனாய்வுகளை நடாத்துவதற்கு அவசியமாகவிருக்கக் கூடியவாறான ஏதேனும் செயற்பாட்டை நடாத்துவதற்கு தேவைப்படுகின்ற எவரேனும் ஆளுக்கு நீதிமுறைக் கட்டளையொன்றைப் பெற்றுக்கொள்வதற்குப் புலனாய்வு அலுவலரொருவர் தத்துவமுடையவராதல் வேண்டும் -

(அ) சட்டமருத்துவக் கணக்காய்வு;

(ஆ) தரவுகளினதும் தகவல்களினதும் எண்ணிம சட்டமருத்துவப் பிரித்தெடுத்தல்;

(இ) ஆதனத்தின் பெறுமான மதிப்பீடு;

(ஈ) எண்ணிமத் தேக்க உபாயங்களில் தரவுகளையும் தகவல்களையும் பிரதியெடுத்தலும் தேக்கிவைத்தலும்; அத்துடன்

(உ) ஆதனம் தொடர்பான ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களின் சட்டமருத்துவப் பகுப்பாய்வு; அத்துடன்

(ஊ) சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வேறேதேனும் செயற்பாடு:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய செயற்பாடு ஒரு தனிப்பட்ட திறத்தவரினால் நடாத்தப்படுவதற்கு பணிக்கப்படுமிடத்து, நீதிவான், இயைபான சேவை வழங்குநரின் கலந்தாலோசனையுடன் செலுத்தப்படற்பாலவையான கட்டணங்களைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கட்டணங்களைச் செலுத்தும்படி இயைபான சட்ட வலுவுறுத்தல் முகவராண்மையைத் தேவைப்படுத்தலும் வேண்டும்.

புலனாய்வுகளுக்காக உயர்தொழில்சார் சேவைகள் பயன்படுத்தப்படலாம்

**62.** குற்றச்செயல்களின் வரும்படிகளாகவுள்ள அல்லது வரும்படிகளைக் கொண்டுள்ள ஆதனத்தின் பரிசோதனை செய்தல் என்பன தொடர்பில் பண ஓட்டப் புலனாய்வுகள், நிதிசார் பகுப்பாய்வு, சட்டமருத்துவக் கணக்கீடு, சட்டமருத்துவக் கணக்காய்வு, வர்த்தகத் தரவுத்தளங்களைக் கண்டறிதல், அடையாளங்காணல், தேடுதல், பரிசோதனைசெய்தல் என்பன தொடர்பில் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரொருவர் ஓர் உள்நாட்டு அல்லது

வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த ஆளொருவர் அல்லது ஒரு நிறுவனத்தின் அல்லது ஒழுங்கமைப்பின் உயர்தொழில்சார் சேவைகளைப் பெற்றுக்கொண்டுள்ளவிடத்து அல்லது பெற்றுள்ளவிடத்து, பின்வரும் நோக்கங்களுக்காக அத்தகைய செய்முறையினூடாகச் சேகரிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் தகவல்களின்மேல் செயலாற்றுதல் ஒரு புலனாய்வு அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளை நிறைவேற்றுதல்;

(ஆ) புலனாய்வின்கீழுள்ள ஆதனம் தொடர்பாக அபிப்பிராயமொன்றைக் கொள்ளுதல்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் நடவடிக்கையை எடுத்தல்.

மேற்கொண்ட புலனாய்வுகள்

63. (1) புலனாய்வு அலுவலரொருவர், இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்திற்காக, மேற்கொண்ட புலனாய்வுகளை நடாத்துதல்வேண்டும் என்பதுடன் குறிப்பாக பின்வருவனவற்றைச் செய்தலும் வேண்டும்:-

(அ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படியை அடையாளங்காண்பதற்கும், தேடுவதற்கும், கண்டறிவதற்கும், அறவிடுவதற்கும், பரிசோதனை செய்வதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்;

(ஆ) அடையாளங்காணப்பட்ட ஆதனம் அல்லது அதன் பாகம், ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டின் புரிகையினது வரும்படியென்றாகவுள்ளதா அல்லது அதிலிருந்து வழிந்துவந்துள்ளதா என்பதைத் தீர்மானித்தல் வேண்டும்;

(இ) அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டை புரிந்த ஆளின், அடையாளமுட்பட, அத்தகைய

சட்டமுறையற்ற செயற்பாட்டின் புரிகைத் தொடர்பான சான்றை சேகரித்தல் வேண்டும்;

(ஈ) ஆதனத்தின் கடந்தகால மற்றும் தற்போதைய உடமை, கட்டுக்காப்பு, கட்டுப்பாடு, பாவனை மற்றும் ஆதிக்கம் தொடர்பான சான்றைச் சேகரித்தல் வேண்டும்;

(உ) அத்தகைய ஆதனத்தின் பயனுகர் அக்கறையைக் கொண்டிருக்கக்கூடிய ஆளை அடையாளங்காணல் வேண்டும்;

(ஊ) அடையாளங்காணப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படியை ஈட்டிய சட்டமுறையற்ற செயற்பாட்டை தீர்மானித்தல் வேண்டும்;

(எ) அத்தகைய ஆதனத்தின் தன்மை மற்றும் அண்ணளவான பெறுமதியையும் தீர்மானித்தல் வேண்டும்;

(ஏ) அத்தகைய ஆதனத்தின் தடையை, கைப் பற்றுகையை மற்றும் நீதிமுறை முடக்கலைச் செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான எவை யேனும் தகவலை நிச்சயித்தல் வேண்டும்;

(ஐ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு மற்றும் மேற்கொண்ட தகவல்களைச் சேகரித்தல் வேண்டும்; அத்துடன்

(ஒ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமேற்படக்கூடியவாறான அத்தகைய மேற்கொண்ட நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற்றரப்பட்டுள்ள குறிக்கோள்களை எய்தும் நோக்கங்களுக்காக புலனாய்வு அலுவலரொருவர்,

இச்சட்டத்தின்கீழ் அவருக்குரித்தாக்கப்பட்ட புலனாய்வுத் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு உரித்துடைய வராதல்வேண்டும்.

(3) புலனாய்வு செய்கின்ற ஆதனமொன்று குற்றச் செயல்களின் வரும்படிகளாக உள்ளனவென்பதற்கான நியாயமான ஏதுக்கள் சந்தேக நேரத்திலும் உள்ளவிடத்து, இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறாக அத்தகைய ஆதனத்தின் தடை, பேணிக்காப்பு அல்லது கைப்பற்றுகை தொடர்பான நடவடிக்கைகள் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக மேற்கொண்ட புலனாய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டிராமை எவ்வாறிருப்பினும், புலனாய்வு அலுவலரொருவரினால் நிறைவேற்றப்படலாம்.

புலனாய்வையும் மேற்கொண்ட புலனாய்வையும் நடாத்துவதற் கான குறிக்கோள்

**64.** இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக ஏதேனும் புலனாய்வை அல்லது மேற்கொண்ட புலனாய்வை நடாத்துவதற்கான குறிக்கோள்கள், மற்றவற்றிற்கிடையே பின்வருவனவற்றுக்காதல் வேண்டும்:-

(அ) புலனாய்வு செய்கின்ற ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகளா என்பதனை தீர்மானித்தல்;

(ஆ) அத்தகைய ஆதனம் தொடர்பில் இச்சட்டத்தில் அடங்கியுள்ளவாறான ஏதேனும் தவறு புரியப்பட்டுள்ளதாவென்றும், அவ்வாறாயின் அத்தகையத் தவறைப் புரிந்த ஆளை அடையாளங் காணுதலும் அத்தகைய தவறுக்கு எதிராக குற்றவழக்குத் தொடுப்பதற்காகச் சான்றைச் சேகரித்தலும்; அத்துடன்

(இ) அத்தகைய ஆதனத்தை ஈட்டிய சட்டமுறையற்ற செயற்பாட்டை அடையாளங் காணும் நோக்கத்துக்காகவும் அத்தகைய குற்றச் செயல்களின் வரும்படிகளை இழப்பிப்பதற்காக நீதிமுறை வழக்கு நடவடிக்கைகளை

வெற்றிகரமாக தொடுப்பதனை இயலச்செய்யும் அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடு தொடர்பான சான்றைச் சேகரித்தலும்.

புலனாய்வு தொடர்பான பொது ஏற்பாடுகள்

**65.** (1) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்கள் பற்றிய புலனாய்வொன்று, அத்தகைய சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளினது கைப்பற்றுகை அல்லது நீதிமுறை முடக்குதல் எவ்வாறிருப்பினும், தொடர்ந்து நடாத்தப்படலாம்.

(2) இச்சட்டத்தின் நியதிகளின்படி புலனாய்வொன்றை நடாத்துகின்ற புலனாய்வு அலுவலரொருவர், ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிதல் தொடர்பாக நடாத்தப்பட்டவொரு புலனாய்வு தொடர்பிலான புலனாய்வுகள்பற்றிய குறிப்புக்களில் அடங்கியுள்ள விடயங்களையும் தகவல்களையும் கவனத்துட்கொள்வதற்கும் அவற்றின்மீது செயலாற்றுவதற்கும் உரித்துடைய வராதல்வேண்டும்.

(3) ஒரு பொலிசு புலனாய்வு அலுவலர், ஊழல் எதிர்ப்புச்சட்டத்தில் அடங்கியுள்ள தவறொன்று தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நடாத்தப்பட்ட புலனாய்வொன்று தொடர்பிலான புலனாய்வு குறிப்புக்களில் அடங்கியுள்ள விடயங்களையும் தகவல்களையும் கவனத்துட்கொள்வதற்கும் அவற்றின்மேல் செயலாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய புலனாய்வு குறிப்புகளுக்காக அவர் பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரின் ஊடாக விண்ணப்பமொன்றைச் செய்தல்வேண்டும்; அவர், அத்தகைய கோரிக்கையை, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும். பெயர்

குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரிடமிருந்து கோரிக்கையை பெற்றதன்மேல், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலர், பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கு தேவைப்பட்ட விடயங்களைக் கிடைக்கக்கூடியனவாக்குதல் வேண்டும்.

(4) பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலர் மற்றும் பொலிசு புலனாய்வு அலுவலரும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக ஒழிய, அவ்வாறு பெறப்பட்ட விடயங்களில் அடங்கியுள்ள தகவல்கள் தொடர்பாக அந்தரங்கத்தன்மையை பேணுவதற்கு கடப்பாடுடையவராதல் வேண்டும்.

(5) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவும் இச்சட்டத்தின் நியதிகளின்படி செயலாற்றுவதற்கு தத்துவமளிக்கப்படுகின்ற அதன் அலுவலர்களும், ஒரு பொலிசு புலனாய்வு அலுவலரினால் இச்சட்டத்தின் நியதிகளின்படி நடாத்தப்பட்ட புலனாய்வுகள் தொடர்பான புலனாய்வுகள் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கப்படக்கூடியனவாக்கப்படின் அல்லது சட்டமுறையான வழிகளின் ஊடாக பெறப்படின், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு அலுவலரொருவரினால் எவையேனும் மேற்கொண்ட புலனாய்வுகள் நடாத்தப்பட்டோ அல்லது நடாத்தப்படாமலோ சொல்லப்பட்ட புலனாய்வுகள் பற்றிய சொல்லப்பட்ட குறிப்புக்களில் அடங்கியுள்ள தகவல்கள் மற்றும் விடயங்களைக் கவனத்துட்கொள்ளுதலும் அவற்றின்மேல் செயலாற்றுதலும் வேண்டும்.

(6) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரும்,

இச்சட்டத்தின் நியதிகளின்படி செயலாற்றுதலும் சொல்லப்பட்ட விடயங்களை கவனத்துட்கொள்வதன் அடிப்படைகளின்மீதும், அவசியமானவிடத்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட எவையேனும் மேற்கொண்ட புலனாய்வுகளின்போது சேகரிக்கப்படக்கூடிய எவையேனும் மேலதிக விடயங்களின் அடிப்படையின்மீதும் குற்றச்செயல்களின் வரும்படிகளை இழப்பிப்பதற்கான விண்ணப்பங்களைச் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(7) இச்சட்டத்தில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், வேறேதேனும் சட்டத்தின் நியதிகளின்படி நடாத்தப்படுகின்ற ஏதேனும் தவறு பற்றிய புலனாய்வின்போது, அத்தகைய புலனாய்வை நடாத்துகின்ற பொலிசு அலுவலரொருவர் அல்லது புலனாய்வை நடாத்துகின்ற அத்தகைய அலுவலரின் அறிவுறுத்தல்களின்மீது செயலாற்றுகின்ற வேறெவரேனும் பொலிசு அலுவலர், அத்தகைய புலனாய்வுகளின்போது அத்தகைய தவறின் வரும்படிகளை கண்டுபிடிக்குமிடத்து, அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளைக் கைப்பற்றி இச்சட்டத்தின் நியதிகளின்படி நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது அத்தகைய புலனாய்வு அத்தகைய எந்தவேறு சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டதோ அத்தகைய அந்த வேறு சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய ஆதனம் தொடர்பில் நடவடிக்கையெடுப்பதற்கு தத்துவமுடையவராதல்வேண்டும்.

*உதாரணம் -*

திருட்டுப் பற்றிய சந்தர்ப்பம் ஒன்று தொடர்பான தகவல்களைப் பெறுகின்ற பொலிசு அலுவலரொருவர், குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவை சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய திருட்டுப்பற்றிய புலனாய்வொன்றைத் தொடங்குகின்றார். ஒரு தேடுதலை நடாத்தும்போது திருட்டுப் புரிவதனாலான வரும்படிகளென நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ள ஆதனத்தை அவர் கண்டறிகின்றார். இச்சட்டத்தில் முரணாக

எது எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆதனத்தை அல்லது உடைமையினுள் எடுப்பதற்கும் சட்டத்தின் நியதிகளின்படி மேற்கொண்டு நடவடிக்கையெடுப்பதற்கும் குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டத்தின் நியதிகளின்படி நடவடிக்கையெடுப்பதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

(8) ஆயிரத்துத்தொள்ளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு வொன்றினால் அல்லது (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்றினால் நடாத்தப்பட்ட விசாரணை வழக்கு நடவடிக்கைகளிலும் புலனாய்வுகளிலும் அடங்கியுள்ள எவையேனும் தகவல்கள் மற்றும் விடயங்களைக் கவனத்துட்கொண்டு அவற்றின்மீது செயலாற்றுவதற்கு, அத்தகைய தகவல்கள் அல்லது விடயங்கள் சட்டமுறையற்ற செயற்பாடு தொடர்பானவையாக இருக்குமளவுக்கு, சட்டத்துறை தலைமையதிபதிக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவுக்கு ஒரு பெயர் குறிக்கப்பட்ட அலுவலருக்கு மற்றும் புலனாய்வு அலுவலருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(9) ஒரு வெளிநாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரி களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய அவசியமான அதிகாரவளிப்பு மற்றும் நிருவாக அங்கீகாரம் என்பவற்றுக்கமையவும், புலனாய்வு அலுவலரொருவர் ஒரு வெளிநாட்டில் இச்சட்டத்தின்கீழானவொரு புலனாய்வு முழுவதையும் அல்லது அதன் பாகத்தை நிறைவேற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய நோக்கத்துக்காக, புலனாய்வு அலுவலரொருவர், அத்தகைய வெளிநாட்டின் சட்ட வலுவுறுத்தல் அலுவலரின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

(10) ஒரு வெளிநாட்டின் சட்ட வலுவுறுத்தல் அலுவலரொருவர் ஒரு புலனாய்வு அலுவலருக்கு

உதவிவழங்கினார் என சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பில் ஏதேனும் புலனாய்வை நடாத்துமிடத்து, அத்தகைய புலனாய்வு அல்லது அதன் பாகம் புலனாய்வு அலுவலரினால் நடாத்தப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிநாட்டு சட்ட வலுவுறுத்தல் அலுவலரினால் சேகரிக்கப்பட்ட விடயங்களின் கண்டுபிடிக்கப்பட்ட நீதிமுறை வழக்கு நடவடிக்கைகளில் சான்று முன்வைக்கவும்படலாம்.

*தெளிவுபடுத்துகை:*

ஒரு வெளிநாட்டில் புலனாய்வொன்றை நடாத்துவதில் ஒரு வெளிநாட்டுச் சட்ட வலுவுறுத்தல் அலுவலரின் உதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, ஒரு புலனாய்வு அலுவலர், புலனாய்வின் இயைபான பாகம் நடாத்தப்பட்டபோது அத்தகைய வெளிநாட்டில் சமூகமளித்திருக்கத் தேவையில்லை.

(11) இலங்கை பொலிசின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் புலனாய்வு அலுவலர்கள் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழலுக்கெதிரான சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு இச்சட்டத்தின்கீழ் அத்தகைய அலுவலர்களினால் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் வேறு விடயங்களையும் பாதுகாப்பதற்கும் பேணிக்காப்பதற்கும் தோதான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். புலனாய்வின் போது சேகரிக்கப்பட்டவற்றையும் அத்தகைய தகவல்கள் மற்றும் விடயங்கள் சட்டத்தில் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காக இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மட்டும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

பெயர்குறிக்கப்பட்ட அலுலர் அல்லது புலனாய்வு அலுவலர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத நடவடிக்கைகளை எடுக்கலாம்

**66.** ஒரு பெயர் குறிக்கப்பட்ட அலுவலர் அல்லது புலனாய்வு அலுவலர், இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கும் இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அத்தகைய அலுவலர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதனை வசதிப்படுத்துவதற்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவையாகவிராத வேறெவையேனும் தோதான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

வேறேதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள்.

**67.** இச்சட்டத்தினால் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தினால் அவற்றுக்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத நடவடிக்கைமுறைபற்றிய கருமங்கள் தொடர்பாக, விடயத்தின் நீதி தேவைப்படுத்தக்கூடியனவாறான இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாகவிருக்கின்றதுமான அத்தகைய நடவடிக்கைமுறை பின்பற்றப்படலாம்.

விளக்கத்தைக் கோருகின்ற அறிவித்தல்

**68.** (1) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் தகவல்களின் மேலும், அவசியமானவிடத்தும், ஒரு நிகழ்வு கண்டறிதலை அல்லது ஒரு புலனாய்வை அடுத்து அடையாளங்காணப்பட்ட ஆதனமொன்று குற்றச்செயல்களின் வரும்படிகளௌன நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருப்பின், ஒரு புலனாய்வு அலுவலர், ஒரே சமகாலக் காரணங்ளைப் பதிதலையடுத்தும் நேரொத்த பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் அங்கீகாரத்துடனும், இச்சட்டத்துக்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலுள்ள அறிவித்தலொன்றைப் பின்வருவோருக்குச் சேர்ப்பிக்கலாம்:-

(அ) அத்தகைய ஆதனத்தின் உடைமை, கட்டுக்காப்பு, கட்டுப்பாடு அல்லது ஆதிக்கத்தைக் கொண்டுள்ள ஆள்;

(ஆ) அத்தகைய ஆதனத்தின் சொத்தாண்மை பதிவுசெய்யப்பட்ட அல்லது அதன் உரிமை கோருபவராக அறியப்பட்ட ஆள்;

(இ) அத்தகைய ஆதனத்தில் பயனுகர் அக்கறைகளைக் கொண்டுள்ள எவரேனுமாள்;

(ஈ) இவ்வுட்பிரிவின் (அ), (ஆ) அல்லது (இ) எனும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களின் முகவர், நியமத்தர், பிரதிநிதி, முகாமையாளர், பிரதான அலுவலர் அல்லது அற்றோணி; அல்லது

(உ) இவ்வுட்பிரிவின் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்திகளில் தரப்பட்டுள்ள ஆட்களுள் எவரேனுமொருவர்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அறிவித்தலானது, பின்வருவன தொடர்பாக செம்மையான தகவல்களை வழங்கும்படி அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட ஆளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆதனத்தை அவர் கொள்ளுதல் செய்த, உடைமைப் பெற்ற, சொந்தமாக வைத்திருக்கின்ற, கட்டுப்படுத்துகின்ற, அதன்மீது ஆதிக்கம் கொண்டுள்ள அல்லது அதனைப் பயன்படுத்துகின்ற முறை;

(ஆ) அத்தகைய கொள்ளுதல், உடைமை, சொந்தம், கட்டுப்பாடு, ஆதிக்கம் அல்லது பாவனைக்காக வழங்கப்பட்ட பிரதிபயனின் மூலங்களுட்பட, அத்தகைய ஆதனத்தின் அவரது கொள்ளுதலின், உடைமையின், சொந்தமாகவைத்திருத்தலின், கட்டுப்படுத்தலின், ஆதிக்கம் கொண்டுள்ளமையின், அல்லது பாவனையின் சட்டமுறையான தன்மை;

(இ) அவர் எந்த ஆளிடமிருந்து ஆதனத்தைப் பெற்றாரோ அந்த ஆளின் அடையாளமும் அத்தகைய பெறுகைதொடர்பிலான சூழ்நிலைகளும்; அத்துடன்

(ஈ) அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறாக அத்தகைய ஆதனம் தொடர்பிலான வேறெவையேனும் தகவல்கள்.

(3) அத்தகைய அறிவித்தலில் விபரிக்கப்பட்ட ஆதனம் தொடர்பிலான விளக்கத்தையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காகவும், குறிப்பாக மற்றவற்றுக்கிடையே பின்வருனவற்றை நிச்சயிக்கும்

நோக்கத்துக்காகவும் அத்தகைய அறிவித்தல் சேர்ப்பிக் கப்படுதல் வேண்டும்:-

(அ) அடையாளங்காணப்பட்ட ஆதனம் குற்றச் செயல்களின் வரும்படியொன்றாகவுள்ளதா;

(ஆ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சட்டமுறையற்ற செயற்பாடுகளைப் புரிவதிலிருந்து ஆதனமானது வழிவந்துள்ளதா, அத்துடன் அவ்வாறாயின் குற்றச்செயல்களின் அத்தகைய வரும்படிகளை ஈட்டிய அத்தகை சட்டமுறையற்ற செயற்பாட்டின் அடையாளம் மற்றும் அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடுகள் தொடர்பான சான்று;

(இ) அத்தகைய ஆதனம் தொடர்பில் எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந் துள்ளாராவென்பது;

(ஈ) நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாட்டை புரிந்திருந்த ஆளின் ஆளடையாளம்; அத்துடன்

(உ) அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடும் குற்றச்செயல்களின் வரும்படிகளும் தொடர்பான சான்று.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக “சேர்ப்பித்தல்” என்பது, கையினால், பதிவஞ்சலினூடாக அல்லது இலத்திரனியல் ரீதியில் அனுப்பப்பட்டது என்று பொருளாகும் என்பதுடன் ஏற்றுக்கொள்கையானது பெறுநரினால் நிராகரிக்கப்பட்ட விடத்தான நிலைமைகளையும் உள்ளடக்கும்.

(5) இச்சட்டத்திலுள்ள எதுவும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான விளக்கத்துக்கு அறிவித்தல் கோரப்படும் நேரத்தில் அல்லது அறிவித்தல் அனுப்பப்பட்ட பின்னர் விரைவாக அல்லது 69 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விளக்கக் கூற்றொன்று கிடைக்கப்பெற்றதன்மேல் 71

ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கட்டளையொன்று அனுப்பப்பட்டதிலிருந்து புலனாய்வு அலுவலர் ஒருவரை தடுத்தலாகாது.

விளக்கமுறையான கூற்று

**69.** (1) அறுபத்தெட்டாம் பிரிவின்கீழான ஓர் அறிவித்தலைப் பெற்றதன்மேல், அத்தகைய அறிவித்தலைப் பெற்றதிலிருந்து மூன்று வேலைநாட்களுக்குப் பிந்தாமல், சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட ஒரு கூற்றின் படிவத்தில் (இச்சட்டத்தில் 'விளக்கமுறையான கூற்று' எனக்குறிப்பீடு செய்யப்படும்) அதற்கான உண்மையானதும் விவரணரீதியானதுமான பிரதிபலிப்பை எழுத்தில் வழங்குவது அத்தகைய அறிவித்தலைப் பெறுகின்ற ஆளின் கடமையாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அறிவித்தல் எவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அவ்வாள், புலனாய்வு அலுவலருக்கு கொடுக்கப்படவேண்டிய போதிய காரணங்களுக்காக, விளக்கமுறையான கூற்றின் சமர்ப்பணத்தை எழுத்தில் நாடலாம் என்பதுடன் அத்தகைய காரணங்கள் நல்லெண்ணத்துடனானவை எனக் கண்டுபிடிக்குமிடத்து, பதினான்கு நாட்கள் எனும் காலப்பகுதியொன்றை விஞ்சாதிருக்கவேண்டிய மேலதிக நீடிக்கப்படற்பாலனதான காலப்பகுதியொன்றையும் பெற்றுக்கொள்ளலாம்:

ஆயின், மேலும், புலனாய்வு அலுவலர், அத்தகைய சூழ்நிலைகளில், இச்சட்டத்தின் குறிக்கோள்கள் முறியடிக்கப்படாதிருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக இச்சட்டத்தின்கீழான தடைசெய்தற் கட்டளையொன்று எச்சூழ்நிலைகளில் வழங்கப்படலாமோ அச்சூழ்நிலைகளுடன் சேர்த்து மேலதிகமாக தடைசெய்தற் கட்டளையொன்றை ஆக்கலாம்; விளக்கமுறையான கூற்று அவரினாற் பெறப்பட்ட நேரத்திலிருந்து எழுபத்திரெண்டு மணித்தியால காலப்பகுதியொன்றுக்காக மட்டுமே இது செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(2) விளக்கமுறையான கூற்று பெறப்பட்டதன்மேல், புலனாய்வு அலுவலர், புலனாய்வு செய்கின்ற ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படியாகவுள்ளதாவென்பதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவாவென்பதைக் கவனத்துட்கொண்டு தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய நோக்கத்துக்காக, அவசியமானவிடத்து, அவர் மேலதிகப் புலனாய்வுகளை நடாத்தலாம்; இது, விளக்கமுறையான கூற்றை சமர்ப்பித்த ஆளின் நேர்க்காணலையும் அவரின் கூற்றொன்றையும் அத்தகைய வேறு மற்றும் மேலதிக ஆட்களின் கூற்றுக்களையும் பதிதலையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(3) தனியுரிமையாண்மையொன்றுக்கு 68 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்படுமிடத்து, அறிவித்தலானது தனியுரிமையாண்மைக்கு சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அத்தகைய அறிவித்தலுக்கு பதிலிறுத்தல் அத்தகைய தனியுரிமையாண்மையின் கடமையாதலும் வேண்டும்.

(4) அறுபத்தெட்டாம் பிரிவின் கீழான அறிவித்தலொன்று ஒரு பங்காண்மைக்கு சேர்ப்பிக்கப்படவுள்ளவிடத்து, அறிவித்தலானது அதன் எவரேனும் பங்காளருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இதனகத்துமுன்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அத்தகைய அறிவித்தலுக்கு பதிலிறுத்தல் அத்தகைய பங்காளரின் கடமையாதலும் வேண்டும். அத்தகைய அறிவித்தலுக்கான இணங்கியொழுகையைப் பின்பற்றி அத்தகைய பங்காளர் வழங்கப்பட்ட விளக்கத்தின் உள்ளீடுகளை ஏற்புறுதி செய்து பங்காண்மையின் எல்லா பங்காளர்களினாலும் தனிப்பட்ட விளக்கத்தை எடுத்துக்கூறி அவர்களினால் கையொப்பமிடப்பட்ட குறிப்பறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அதனை மூன்று கிழமைகளினுள் புலனாய்வு அலுவலருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும். ஒன்றில் மேற்கூறப்பட்ட குறிப்பறிக்கையை ஏற்புறுதிசெய்தல் அல்லது அவரது சொந்த விளக்கத்தை இயைபான புலனாய்வு அலுவலருக்கு வழங்குதல், ஒரு

பங்காண்மையின் எல்லாப் பங்காளர்களினதும் கடமையாதல் வேண்டும்.

(5) அறுபத்தெட்டாம் பிரிவின்கீழான அறிவித்தல் ஒரு கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவுக்குச் சேர்ப்பிக்கப்படவுள்ளவிடத்து அவ்வறிவித்தலானது ஒரு முதன்மைப் பதவிதாங்குநரொருவருக்கு அல்லது அத்தகைய அலுவலர் இல்லாதவிடத்து அதன் வேறெவரேனும் பதவி தாங்குநருக்குச் சேர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இதனகத்து முன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அத்தகைய அறிவித்தலுக்குப் பதிலிறுத்தல் அத்தகைய பதவிதாங்குநரின் கடமையாதலும் வேண்டும். அத்தகைய அறிவித்தலுக்கான இணங்கியொழுகுகையைப் பின்பற்றி அத்தகைய பதவிதாங்குநர், வழங்கப்பட்ட விளக்கத்தின் உள்ளீடுகளை ஏற்புறுதிசெய்து அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் எல்லாப் பதவிதாங்குநர்களினாலும் தனிப்பட்ட விளக்கத்தை எடுத்துக்கூறி அவர்களினால் கையொப்பமிடப்பட்ட குறிப்பறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டு மென்பதுடன் அதனை மூன்று கிழமைகளினுள் புலனாய்வு அலுவலருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும். ஒன்றில் மேற்கூறப்பட்ட குறிப்பறிக்கையை ஏற்புறுதிசெய்தல் அல்லது அவரது சொந்த விளக்கத்தை இயைபான புலனாய்வு அலுவலருக்கு வழங்குதல், எல்லா பதவிதாங்குநர்களினதும் கடமையாதல் வேண்டும்.

(6) அறுபத்தெட்டாம் பிரிவின் கீழான அறிவித்தல் கூட்டிணைக்கப்பட்ட ஓர் ஆட்கள் குழுவுக்குச் சேர்ப்பிக்கப்படவுள்ளவிடத்து, அறிவித்தலானது முகாமைப் பணிப்பாளருக்கு அல்லது அவர் இல்லாதிருப்பின் அதன் எவரேனும் பணிப்பாளருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அத்தகைய அறிவித்தலுக்குப் பதிலிறுப்பது அத்தகைய பணிப்பாளரின் கடமையாதலும் வேண்டும். அத்தகைய அறிவித்தலுக்கான இணங்கி

யொழுகுகையைப் பின்பற்றி அத்தகைய பணிப்பாளர், வழங்கப்பட்ட விளக்கத்தின் உள்ளீடுகளை ஏற்புறுதிசெய்து அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழுவின் எல்லாப் பணிப்பாளர்களினதும் தனிப்பட்ட விளக்கத்தை எடுத்துக்கூறி அவர்களினால் கையொப்பமிடப்பட்ட குறிப்பறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டு மென்பதுடன் அதனை மூன்று கிழமைகளினுள் புலனாய்வு அலுவலருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும். ஒன்றில் மேற்கூறப்பட்ட குறிப்பறிக்கையை ஏற்புறுதிசெய்தல் அல்லது அவரது சொந்த விளக்கத்தை இயைபான புலனாய்வு அலுவலருக்கு வழங்குதல், எல்லா பணிப்பாளர்களினதும் கடமையாதல் வேண்டும்.

புலனாய்வை முடிவுறுத்தல்

**70.** (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு அல்லது புலனாய்வு அலுவலருக்கு முறைப்பாட்டைச் செய்த, தகவலை வழங்கிய அல்லது அறிக்கையொன்றை சமர்ப்பித்த எவரேனும் ஆளுக்கு அத்தகைய முறைப்பாட்டை, தகவலை அல்லது அறிக்கையை பெற்றுக்கொண்ட ஒப்புறுதிப்படுத்தலொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய புலனாய்வு தொடங்கப்பட்டமை அல்லது முன்னேறியமை தொடர்பான தகவலுக்காக, இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் ஒரு பெயர் குறிக்கப்பட்ட அலுவலருக்கு அல்லது ஒரு புலனாய்வு அலுவலருக்கு முறைப்பாடொன்றைச் செய்துள்ள, தகவல் வழங்கியுள்ள, அல்லது அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ள எவரேனுமாளினால் செய்யப்பட்ட கோரிக்கையொன்றின் மேல், நாடப்பட்ட தகவலை வழங்குவது நேரொத்த பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் கடமையாதல் வேண்டும்; ஆயின், அத்தகைய தகவலை வெளிவிடுதல் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கும் புலனாய்வுகளை பங்கப்படுத்துதல் ஆகாது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் (5) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏதேனும் முறைப்பாட்டிற்கு, தகவலுக்கு, அறிக்கைக்கு, அல்லது நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கும் புலனாய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகப் புலனாய்வுகளும் அவசியமான மேற்கொண்ட புலனாய்வுகளும் நடாத்தப்பட்டதனையடுத்து, பெயர் குறிக்கப்பட்ட அலுவலர், புலனாய்வு அலுவலரினாலான அறிக்கையொன்றின்மீதும் அத்தகைய புலனாய்வுகளின் குறிப்புக்களாக கவனத்துட்கொண்டதன்மேலும், புலனாய்வு செய்யப்பட்ட ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகள் என்பதற்கான நியாயமான ஏதுக்கள் இல்லையென முடிவுசெய்தால், அவர் அதற்காக புரியப்படவேண்டிய காரணங்களுக்காக, புலனாய்வின் நடத்துகையை முடிவுறுத்தும்படி பணித்தல் வேண்டும். இயைபான தகவலை, முறைப்பாட்டை, மனுவை அல்லது அறிக்கையை சமர்ப்பிக்கும் ஆளின் அடையாளம் அறியப்பட்டிருக்குமிடத்து புலனாய்வுகளை முடிவுறுத்துவதற்குமான முடிபையும் அதற்கான காரணங்களையும் அத்தகைய ஆளுக்கு அறிவித்தல் வேண்டும்.

தடைசெய்தற் கட்டளையை அல்லது பேணிக்காப்புக் கட்டளையை வழங்கும் முறையும் சூழ்நிலைகளும்

**71.** (1) ஏதேனும் நேர கட்டத்தில், புலனாய்வு அலுவலரொருவர்,-

(அ) குற்றச் செயலின் வரும்படிகள் என அல்லது அத்தகைய குற்றச்செயலின் வரும்படிகளில் நேரொத்த பெறுமதிக்கான ஆதனமொன்றின் வரும்படிகள் என நியாயமான முறையில் நம்பப்படுகின்ற அத்தகைய ஆதனத்தைக் கைப்பற்றாமல் இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்த முடியுமென்றும்; அத்துடன்

(ஆ) பதியப்படவேண்டிய காரணங்களுக்காக ஆதனத்தை உடமை கொண்டுள்ள, கட்டுக்காப்பில், கட்டுப்பாட்டில், அல்லது ஆதிக்கத்தில் வைத்திருக்கின்ற ஆளை, அத்தகைய ஆதனம் தொடர்பான ஏதேனும் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கலில்

ஈடுபடாதிருப்பதற்கும் அவ்வாதனத்தைப் பேணிக்காப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பணிப்பது அவசியமாகவிருக்குமென்றும்,

புலனாய்வு அலுவலர், அவ்வாதனத்தின்மீது உடமையை, கட்டுப்பாட்டை, கட்டுக்காப்பை அல்லது ஆதிக்கத்தை வைத்திருக்கின்ற ஆளை, (இச்சட்டத்தில் “தடைசெய்தற் கட்டளை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அலுவலரினால் குறித்துரைக்கப்படும் ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுவதிலிருந்து தவிர்ப்பதற்கு அல்லது (இச்சட்டத்தில் “பேணிக்காத்தல் கட்டளை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆதனத்தை பேணிக்காப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுப்பதற்கான கட்டளையொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஒரு தடைசெய்தற் கட்டளையும் ஒரு பேணிக்காப்புக் கட்டளையும் முறையே இச்சட்டத்துக்கான அட்டவணை II மற்றும் அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(3) ஒரு தடைசெய்தற் கட்டளை அல்லது ஒரு பேணிக்காப்புக் கட்டளை, ஆதனத்தின் பெறுமதியின் குறிப்பிடத்தக்கவொரு தேய்மானத்தை விளைவிக்காதவொரு முறையில் அத்தகைய ஆதனத்தின் கிரமமான நல்லெண்ணத்துடனான பாவனையின்மீதான அல்லது இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிக்கும் ஒருமுறையில் அத்தகைய ஆதனத்தை வேறுவகையில் கையாளுவதன்மீதான தடையொன்றை உள்ளடக்குதலாகாது.

(4) ஒரு தடைசெய்தற் கட்டளையும் ஒரு பேணிக்காப்புக் கட்டளையும் முன்னரே வறிதாக்கப்பட்டாலொழிய, அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டதும் முப்பது நாட்களை விஞ்ஞாததுமானவொரு காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

(5) புலனாய்வு அலுவலரொருவர், பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, ஒரு தடைசெய்தற் கட்டளை அல்லது பேணிக்காப்புக் கட்டளை தொண்ணூறு நாட்களுக்கான

மொத்தக் காலப்பகுதியொன்றை விஞ்சாதவகையில், ஒரு தடவையில் இன்னுமொரு முப்பதுநாட் காலப்பகுதி யொன்றுக்கு இரு மேலதிகத் தடவைகளில் அத்தகையவொரு கட்டளையின் தொழிற்பாட்டுக் காலப்பகுதியை நீடிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(6) ஏதேனும் தடைசெய்தற் கட்டளை, அத்தகைய கட்டளை எவ்வாளுக்கு விதிக்கப்படுகின்றதோ அவ்வாளை, இயைபான புலனாய்வு அலுவலரின் அங்கீகாரமின்றி நிறைவேற்றப்படுகின்றதும் அத்தகைய தடைசெய்தற் கட்டளையினால் தடைசெய்யப்பட்டதுமான ஏதேனும் செயற்பாட்டில் அல்லது இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிக்கும் வேறு செயற்பாட்டில் அது முன்னரே வறிதாக்கப்பட்டாலொழிய அல்லது அத்தகைய தடைசெய்தற் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்காலப்பகுதி கழிந்தாலொழிய, ஈடுபடாதிருக்கும்படி தேவைப்படுத்துதல் வேண்டும்.

(7) ஏதேனும் பேணிக்காப்புக் கட்டளையானது, அத்தகைய கட்டளை எவ்வாளுக்கு விதிக்கப்படுகின்றதோ அவ்வாளை, இயைபான ஆதனம் எம்முறையில் உள்ளதோ அம்முறையில் அதன் பெறுமதியையும் தற்போதைய நிலையையும் பேணிக்காக்கும் வகையில் அவசியமான வழிமுறைகளை எடுப்பதற்கும், ஆதனமானது அழுகிப்போவதனை, அழிந்துப்போவதனை அல்லது அதன் பெறுமதி வேறுவகையில் தீர்மானிக்கப்படுவதனையும் விளைவிக்கக்கூடிய ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடாதிருப்பதற்கும், அல்லது இயைபான புலனாய்வு அலுவலரின் அங்கீகாரமின்றி இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிக்கும் வேறேதேனும் செயற்பாடு நிறைவேற்றப்படுவதில் ஈடுபடாதிருப்பதற்கும், அது முன்னரே வறிதாக்கப்பட்டாலொழிய அல்லது அத்தகைய பேணிக்காப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து முப்பதுநாட் காலப்பகுதியொன்று கழிந்திருந்தாலொழிய, தேவைப்படுத்துதல் வேண்டும்.

(8) அவசியமானவிடத்து, ஒரு தடைசெய்தற் கட்டளையொன்று அல்லது ஒரு பேணிக்காப்புக் கட்டளையொன்று, குற்றச்செயல்களின் வரும்படியொன்று

எனச் சந்தேகிக்கப்பட்ட ஆதனம் தொடர்பில் ஏதேனும் கொடுக்கல்வாங்கலைத் தடைசெய்வதற்கு இயன்றதாகவுள்ள அல்லது அதன் பெறுமதியைப் பேணிக்காக்கின்ற எவரேனும் ஆளுக்கு அல்லது நிறுவனத்துக்கு புலனாய்வு அலுவலரொருவரினால் வழங்கப்படலாம்; அப்பட்சத்தில், இயைபான கட்டளையின் நியதிகளின்படி செயலாற்றுவது அத்தகைய ஆளின் அல்லது நிறுவனத்தின் கடமையாதல் வேண்டும்.

*தெளிவுபடுத்துகை:*

குற்றச்செயல்களின் வரும்படிகளினது குறித்துரைக்கப்பட்வொரு தொகையைக் கொண்டுள்ளதெனப் புலனாய்வு அலுவலர் நியாயமான முறையில் நம்புகின்ற, ஒரு மூன்றாந்திறத்தவரினால் பேணப்படுகின்ற வங்கிக் கணக்கொன்றை உடைய புலனாய்வு அலுவலரொருவர் இப்பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி ஒரு பேணிக்காப்புக் கட்டளையை வழங்கலாம். அத்தகைய கட்டளை பெறப்படும் போது, குற்றச்செயல்களின் வரும்படிகளெனன நம்பப்படும் அத்தகைய கட்டளையில் விதிக்கப்பட்ட பணத்தொகையைக் கணக்கில் பேணிக்காப்பது அத்தகைய வங்கியின் கடமையாதல் வேண்டுமென்பதுடன் அதற்கமைய கணக்கை நடைமுறைப்படுத்துவதற்கு கணக்குவைத்திருப்பவரை அனுமதித்தலும் வேண்டும்.

(9) புலனாய்வு அலுவலர், பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக, தடைசெய்தற் கட்டளை அத்துடன் அல்லது ஒரு பேணிக்காப்புக் கட்டளை எந்த ஆதனம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆதனத்தைக் கைப்பற்றுவது அவசியமாதலாகாது, எனத் திருப்திப்படின், சொல்லப்பட்ட ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்காக 72 ஆம் பிரிவின் நியதிகளின்படி அவர் மேல் நீதிமன்றத்துக்கு நேரடியாக விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளைக் கைப்பற்றுதல்

**72.** (1) புலனாய்வு அலுவலரொருவர், குற்றச் செயல்களின் வரும்படிகள் என நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள ஆதனமொன்றை அல்லது குற்றச்செயல்களின் வரும்படியை

அடையாளங்காண முடியாதவிடத்து அல்லது அது கிடைக்கக்கூடியதாகவிராதவிடத்து, அத்தகைய குற்றச் செயல்களின் வரும்படிகளின் தேதியிலிருந்த பெறுமதிக்கான ஓர் ஆதனத்தை, ஒரு தடைசெய்தற் கட்டளைக்கு அத்துடன் அல்லது ஒரு பேணிக்காப்புக் கட்டளைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் ஆதனமுட்பட கைப்பற்றலாம்.

(2) விளக்கத்தைக் கோருகின்ற அறிவித்தலொன்று ஏதேனும் ஆதனம் தொடர்பில் 68 ஆம் பிரிவின்கீழ் எவரேனுமாளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆதனம், பின்வருமாறு இருந்தாலொழிய, கைப்பற்றப்படலாகாது:-

(அ) அத்தகைய ஆள் விதிக்கப்பட்ட காலவெல்லையினுள் ஓர் உண்மையான விளக்கத்தை வழங்கியிருந்தாலொழியவும்;

(ஆ) வழங்கப்பட்ட விளக்கம், பொய்யானதென, செம்மையற்றதென, போதாததென அல்லது பிழையுய்க்கின்றதெனக் காணப்பட்டாலொழியவும்; அல்லது

(இ) பிரச்சினையிலுள்ள ஆதனம் கொடையாகப் பெறப்பட்டிருந்ததென, மோசடியானவொரு முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டதென அல்லது வழிவந்ததென வெளிக்காட்டப்பட்டாலொழியவும்

(3) ஒரு சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளை அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகளினது நேரொத்த பெறுமதியைக் கொண்ட ஓர் ஆதனம் கைப்பற்றப்படுவதன்மேல், புலனாய்வு அலுவலர், இச் சட்டத்துக்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலுள்ள கைப்பற்றுகை பற்றிய அறிவித்தலொன்றை அத்தகைய ஆதனத்தின் உடைமையை, கட்டுப்பாட்டை, கட்டுக்காப்பை அல்லது ஆதிக்கத்தைக் கொண்டுள்ள ஆளுக்குச் சேர்ப்பிப்பதன்மூலம், அத்தகைய ஆதனத்தின் உடைமை, கட்டுப்பாடு, கட்டுக்காப்பு அல்லது ஆதிக்கத்தை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அதன்மூலம் அத்தகைய ஆதனத்தின் பயனுள்ள உடைமை, கட்டுப்பாடு, கட்டுக்காப்பு அல்லது ஆதிக்கத்தை எடுத்தலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆதனத்தின் உடைமை, கட்டுப்பாடு, கட்டுக்காப்பு அல்லது ஆதிக்கத்தை கொண்டுள்ள ஆள், கூறுகின்ற அறிவித்தல், எத்தேதியன்று சேர்ப்பிக்கப்பட்டதோ அந்தத் தேதிக்கு குறைந்தபட்சம் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் பிரச்சனையிலுள்ள ஆதனம் அவரினால் மரபுவழியாக பெறப்பட்டிருந்ததெனப் புலனாய்வு அலுவலரை திருப்திப்படுத்துவதற்கு நம்பகத்தகு விடயங்களை முன்வைத்தால், இச்சட்டத்தின் கீழ் புலனாய்வு அலுவலரினால் மேற்கொண்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதலாகாது:

ஆயின், மேலும், மேலேயுள்ள காப்புவாசகத்தில் முரணாக எது எவ்வாறு இருப்பினும், பொது ஆதனத்துக்கு எதிரான தவறுகள் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு பகிரங்க நிதி அல்லது பொது ஆதனத்தின் மீது பாதகமான தாக்கம் ஒன்றை கொண்டிருந்த சட்ட முறையற்ற செயற்பாடு ஒன்றை புரிவதன் மூலம் பிரச்சினையில் உள்ள ஆதனம் தொடக்கத்தில் பெறப்பட்டுள்ளது என முதற்றோற்ற அளவிலான விடயங்கள் இருப்பின், அத்தகைய ஆதனத்தின் மரபுரிமை வழிப் பெறுகையிலிருந்து முப்பது ஆண்டுகள் கழிந்துள்ளமை எவ்வாறு இருப்பினும், அத்தகைய ஆதனத்தை கைப்பற்றுதல் புலனாய்வு அலுவலர் ஒருவருக்கு சட்ட முறையானதாதல் வேண்டும்.

(4) கிடைக்கக்கூடிய விடயங்களின் அடிப்படையின் மீது ஆதனம் ஒன்று குற்றச்செயல்களின் வரும்படியாக அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகளினது நேரொத்த பெறுமதிக்கான ஆதனம் ஒன்றாக உளதென்றும் அத்தகைய ஆதனத்தை கைப்பற்றுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலொழிய, சட்டத்தின் குறிக்கோள்கள் முறியடிக்கப்படுமென்றும் புலனாய்வு அலுவலருக்கு நியாயமான ஏதுக்கள் இருப்பின், பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் ஏற்றங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர், 68 ஆம் பிரிவின் கீழ் விளக்கத்தைக் கோருகின்ற அறிவித்தல் ஒன்று சேர்ப்பிக்கப்படும் நேரத்தில் ஆதனத்தை தற்காலிகமாக கைப்பற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், விளக்கத்தைக் கோருகின்ற அறிவித்தல் ஒன்று சேர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் சந்தேகிக்கப்

பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகள் அல்லது குற்றச் செயல்களின் வரும்படிகளினது நேரொத்த பெறுமதிக்கான ஆதனம் ஒன்று கைப்பற்றப்படின், அத்தகைய கைப்பற்றுதலானது, விளக்கத்தைக் கோருகின்ற அறிவித்தலுக்கான விளக்க முறையான கூற்று புலனாய்வு அலுவலரினால் பெறப்படும் வரை மட்டுமே, மற்றும் விளக்க முறையான கூற்றில் வழங்கப்பட்ட விளக்கத்தை அவர் கவனத்துட்கொள்வதற்கு நியாயமான காலத்தை கொண்டிருந்து ஒன்றில் அத்தகைய விளக்கத்தை ஏற்று அல்லது நிராகரித்து, அதன் மீதான முடிபொன்றை எடுக்கும் வரை, செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

(5) புலனாய்வு அலுவலர் விளக்கமுறையான கூற்றை கவனத்துட்கொண்டதன் மேல், விளக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு முடிபு செய்யின், தற்காலிக கைப்பற்றுகை கட்டளையை அவர் வறிதாக்குதல் வேண்டுமென்பதுடன் அதன் உடைமை எந்த திறத்தவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதோ அந்தத் திறத்தவருக்கு ஆதனத்தின் உடைமையை திருப்பிக் கொடுத்தலும் வேண்டும். புலனாய்வு அலுவலர், விளக்க முறையான கூற்றில் வழங்கப்பட்ட விளக்கத்தை நிராகரிப்பதற்கு முடிபு செய்யின், ஆதனத்தை கைப்பற்றுவதற்கும் அதன் மூலம் ஆதனத்தின் உடைமையை வைத்திருப்பதற்கும் இச்சட்டத்தின் நியதிகளின்படி ஒரு மேலதிக கட்டளையை ஆக்குவதற்கு அவர் உரித்து உடையவராதல் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக ஒழிய, ஆதனமொன்று, அத்தகைய ஆதனம் குற்றச் செயல்களின் வரும்படியொன்றல்லவென்றும், விளக்க முறையான கூற்றில் வழங்கப்பட்ட விளக்கம், அதற்காக பதியப்படவேண்டிய காரணங்களுக்காக புலனாய்வு அலுவலரினால் நிராகரிக்கப்பட்டிருந்ததென்றும் விளக்கு வதற்கு அத்தகைய ஆதனத்தின் சொத்தாண்மையை, உடைமையை உரிமை கோருகின்ற, அல்லது அதன் கட்டுக்காப்பை, கட்டுப்பாட்டை அல்லது ஆதிக்கத்தை கொண்டிருக்கின்ற ஆளுக்கு வாய்ப்பொன்று வழங்கப் பட்டிருந்தாலொழிய, கைப்பற்றப்படுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், பின்வரும் சூழ்நிலைகளில், -

(அ) மேற்கூறப்பட்டவாறு வாய்ப்பொன்றை வழங்குவது செயல்முறைக்குகந்ததாக இராதிருப்பின்; அல்லது;

(ஆ) அத்தகைய வாய்ப்பை அளிப்பதிலான அல்லது விளக்க முறையான கூற்றில் அடங்கியுள்ள தகவல்களை சரி பார்ப்பதற்கு எடுக்கப்படக்கூடிய காலத்திலான ஏதேனும் தாமதம் இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிப்பின்; அத்துடன்

(இ) ஆதனமானது குற்றச் செயல்களின் வரும்படிகளௌன அல்லது குற்றச் செயல்களின் வரும்படிகளினது நேரொத்த பெறுமதியின் ஆதனம் ஒன்றாக உள்ளதென நம்புவதற்கு புலனாய்வு அலுவலருக்கு நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

அவர், உடைமையாக, பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் அங்கீகாரத்துடன் உடனடியாக அத்தகைய ஆதனத்தை கைப்பற்றுதல் வேண்டும்.

(7) சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படியாக உள்ள ஆதனத்தின் அல்லது அத்தகைய குற்ற செயல்களின் வரும்படிகளினது நேரொத்த பெறுமதியைக் கொண்ட ஆதனத்தின் தடைக்கான அல்லது கைப்பற்றுவதற்கான கட்டளை ஒன்றைப் பின்பற்றி, புலனாய்வு அலுவலர், ஒன்றில் அத்தகைய ஆதனத்தின் முழுமையும் அல்லது அதன் ஏதேனும் பாகம் அல்லது தடை செய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட ஆதனத்திலுள்ளதான அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட வேறேதேனும் ஆதனம், விடயத்துகேற்ப, கைப்பற்றுகையிலிருந்து அல்லது ஒரு நீதிமுறை முடக்கற்கட்டளையிலிருந்து தவிர்க்கப்படுதல் வேண்டுமாவென்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய ஆதனத்தையும் அத்தகைய ஆதனம் தொடர்பான ஆவணங்களையும், பதிவேடுகளையும் அல்லது தகவல்களையும் பரிசோதனை செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(8) கைப்பற்றுகை அறிவித்தலை சேர்ப்பிக்கும் போது, இயைபான புலனாய்வு அலுவலர் உடனடியாக இயைபான ஆவணத்தை உடைமை கொள்ளுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், புலனாய்வு அலுவலரொருவர் ஆதனத்தின் பின்வரும் இனங்களுள் எவற்றையும் கைப்பற்றுகின்ற போதிலும், உடைமை கொண்டவர் அல்லது அவரது கட்டளையின்பேரில் வேறெவரேனும் திறத்தவர், இச்சட்டத்தின் குறிக்கோள்களை தேறி பெறுதலை தடுப்பதற்கான அல்லது முறியடிப்பதற்கானவொரு முறையில் செயலாற்றுகின்றாரென முடிபுசெய்வதற்கான காரணங்கள் இருந்தாலொழிய, அவர் அத்தகைய ஆதனத்தின் உடைமையையும் கட்டுப்பாட்டையும் எடுத்தலாகாது:-

(அ) அத்தகைய ஆதனத்தில் உடைமைகொண்டுள்ள ஆளின் உண்மையான தனி வதிவிடம்;

(ஆ) அத்தியாவசியமான அணியும் ஆடைகளும்;

(இ) அத்தகைய வதிவிடத்திலுள்ள அத்தியாவசிய மான தளபாடங்களும், பொருத்திகளும் பொருத் துக்களும் மற்றும் சமையல் பாத்திரங்களும்;

(ஈ) சம்பந்தப்பட்ட ஆளின் நாளாந்தப் போக்குவரத்து காகவும் அவரது தான்புரித்தொழிலுக்காக அவர் கிரமமாக பயன்படுத்தும் பாத்திரங்களையும் சாதனங்களையும் இடம்பெயர்ப்பதற்காகவும் பயன்படுத்தப்படும் வாகனமொன்று மற்றும் அவரது தான்புரிதொழிலின் வரும்படிகளும்; அத்துடன்

(உ) அவரது வாழ்க்கைக்கும் தான்புரித்தொழிலுக்கும் அத்தியாவசியமான வேறெவையேனும் இனங்கள்:

ஆயின், மேலும், பணம் தூய்தாக்கல் சட்டத்தினதும் (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும்

அபாயகரமான ஔடதங்கள் கட்டளைசட்டத்தினதும் ஏற்பாடுகளின் கீழான கைப்பற்றுகைகளுக்கு இவ்வேற்பாடு ஏற்புடையதாதலாகாது.

(9) எவரேனும் புலனாய்வு அலுவலர், (8) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆதனத்துள் எதையும் கைப்பற்றி, அதன் உடைமையானது அதன் உடைமை கொண்ட ஆள் இருப்பதனை அனுமதிக்குமிடத்து, அத்தகைய ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்கான கட்டளை ஒன்றை மேல் நீதிமன்றம் ஆக்கும் பட்சத்தில் அத்தகைய ஆதனத்தை மேல் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கும்படி அத்தகைய ஆளை தேவைப்படுகின்ற முறியொன்றைச் செய்து கொள்ளும்படி அவர் அத்தகைய ஆளை தேவைப்படுத்துதல் வேண்டும்.

*தெளிவுபடுத்துகை:*

புலனாய்வு அலுவலரொருவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, (8) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆதனத்தின் இனங்களில் எவைத் தொடர்பிலும் தடைசெய்தற் கட்டளை ஒன்றை அல்லது பேணிக்காப்புக் கட்டளை ஒன்றை ஆக்கலாம்.

(10) கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காக மேல் நீதிமன்றத்திடமிருந்தான கட்டளை ஒன்று பெறப்படும் வரை, கைப்பற்றப்பட்ட ஆதனத்துக்கு அவசியமான பாதுகாப்பை வழங்குதலும் அதன் பாதுகாப்புக்கும் பேணிக்காப்புக்கும் அவசியமான வழிமுறைகளை எடுத்தலும் இயைபான புலனாய்வு அலுவலரின் கடமையாதல் வேண்டும். அத்தகைய நோக்கத்துக்காக, புலனாய்வு அலுவலரொருவர், ஏதேனும் அரச முகவராண்மையின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்து உடையவராதல் வேண்டும்.

(11) எவையேனும் சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளின் அல்லது அத்தகைய குற்றச் செயல்களின்

வரும்படிகளினது நேரொத்த பெறுமதியை கொண்ட ஆதனமொன்று கைப்பற்றப்பட்டதிலிருந்து எழுபத்திரெண்டு மணித்தியாலங்களினுள், இயைபான புலனாய்வு அலுவலர், அக்கைப்பற்றுகை எந்த நீதவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் இடம்பெற்றதோ அந்த நீதிவான் நீதிமன்றத்திற்கு அத்தகைய கைப்பற்றுகையை அறிக்கை இடுதல் வேண்டும். அத்தகைய அறிவிப்பின் நோக்கமானது, இச்சட்டத்தின் நியதிகளின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி நீதிவானுக்கு அறியத் தருவதற்கானதுமென்பதுடன் இந்த புலனாய்வுகளை நடத்துவதனை வசதிபடுத்துவதற்கான கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்கும் புலனாய்வு அலுவலரை இயலச்செய்வதற்கானதுமாதல் வேண்டும்.

(12) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகளினது அல்லது அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளின் நேரொத்த பெறுமதியைக் கொண்ட ஆதனமொன்றினது மேற்கூறப்பட்ட கைப்பற்றுகை, முப்பது நாட்காலப்பகுதியொன்றுக்காக வலுவிலிருத்தல் வேண்டும் என்பதுடன் புலனாய்வு அலுவலரினால் முன்னர் வறிதாக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய காலப்பகுதியினுள் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் இச்சட்டத்தின் கீழும் அதன் நியதிகளின்படியும் நீதிமுறை முடக்கலுக்கான கட்டளை ஒன்றை வழங்கினாலொழிய அல்லது நீதிமுறை முடக்கற் கட்டளையொன்றை வழங்குவதற்கு மறுத்தாலொழிய, காலங்கடந்ததாதலும் வேண்டும்.

(13) புலனாய்வு அலுவலரொருவர், ஆதனத்தையும் அல்லது எவையேனும் விடயங்களையும், அவருக்கு செய்யப்பட்டிருக்கக்கூடிய முறையீடுகளையும் பரிசோதனை செய்ததன் மேல், வழங்கப்பட்ட தடை செய்தற் கட்டளை அல்லது நிறைவேற்றப்பட்ட கைப்பற்றுகை வேறுபடுத்தப்படுதல் வேண்டும் அல்லது வெறிதாக்கப்படுதல் வேண்டும் என்ற கருத்தைக்கொள்ளுமிடத்து, அவர், பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் அங்கீகாரத்துடன் அத்தகைய வேறுபாட்டை அல்லது வறிதாக்குகையைச் செய்தல்

வேண்டும் என்பதுடன் அவசியமானவிடத்து, அத்தகைய ஆதனத்தை முன்னர் உடமை கொண்ட, கட்டுப்படுத்திய, கட்டுக்காப்பில் வைத்திருந்த, அல்லது அதன் மீது ஆதிக்கம் கொண்டிருந்த திறத்தவருக்கு மீளாய்வு செய்யப்பட்ட தடைசெய்தற் கட்டளையை அல்லது கைப்பற்றுகை அறிவித்தலை சேர்ப்பித்தலும் வேண்டும்; அத்துடன் அவசியமானவிடத்து, இயைபான ஆதனத்தை விடுவித்தலும் வேண்டும். அவர், உடனடியாக, அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி அறிவித்து இயைபான நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கையொன்றை கோப்பிடுதல் வேண்டும்.

(14) சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளில், பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் செயல்முறைக்குகந்ததாகவிராதவிடத்து, அல்லது இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிக்குமிடத்து, புலனாய்வு அலுவலரொருவர், அதன் கீழ் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, அவரது சொந்தப் பிரேரணையின் மீது, விடயத்துக்கேற்ப, அத்தகைய தடைசெய்தற் கட்டளையை சேர்ப்பிக்கலாம் அல்லது அத்தகைய குற்றச் செயல்களின் வரும்படியினது கைப்பற்றுகையை நிறைவேற்றலாம் என்பதுடன் அதன் பின்னர், இயன்றளவு விரைவாக, பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு புலனாய்வு பூர்த்தி செய்யப்பட்டதன் மேல்

**73.** (1) சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகள் பற்றிய புலனாய்வொன்று பூர்த்தி செய்யப்பட்டதன்மேல், புலனாய்வு அலுவலர், அத்தகைய புலனாய்வு பற்றிய குறிப்புக்களை, சேகரிக்கப்பட்ட ஆவணங்களினதும் பதிவேடுகளினதும் பிரதிகளுடனும் அத்தகைய புலனாய்வின்போது சேகரிக்கப்பட்ட விடயங்களின் விவரணமொன்றைக் கொண்டுள்ளவொரு நிரலுடனும் சேர்த்து பெயர் குறிக்கப்பட்ட அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவரது கண்டறிதல்களை கொண்டுள்ள அறிக்கையொன்றையும் அவர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் விடயங்களையும் புலனாய்வு அலுவலரின் அறிக்கையையும் கவனத்திற்கொண்டதையடுத்து, பெயர் குறிக்கப்பட்ட அலுவலர், ஆதனமானது, அத்தகைய ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்காகவும் அடுத்துப் பின்னரான இழப்பித்தலுக்காகவும் மேல் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதனை அதனால் அவசியமாக்குகின்ற குற்றச் செயல்களின் வரும்படிகளென அவர் அபிப்பிராயப்படின் ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்காகவும் இழப்பித்தலுக்காகவும் மேல் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை தொடுப்பதற்கும் குற்ற வழக்கு தொடுப்பதற்குமென இச்சட்டத்தின் நியதிகளின்படி நடவடிக்கை எடுப்பதனை கவனத்திற்கொள்ளும்படி சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) கிடைக்கக்கூடிய விடயங்களை கவனத்துட் கொண்டதனையடுத்து, பிரச்சினையிலுள்ள ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகள் அல்லவென பெயர் குறிக்கப்பட்ட அலுவலர் கவனத்துட்கொண்டால், அவர், அத்தகைய ஆதனம் முடக்கப்பட்டிராதிருப்பின், பிரச்சினையிலுள்ள ஆதனம் தொடர்பாக ஏதேனும் மேற்கொண்ட நடவடிக்கையை எடுக்காதிருப்பதற்கு செய்யப்பட்ட முடிபு பற்றி நீதிவானுக்கு அறிவித்து இயைபான நீதிவான் நீதிமன்றத்திற்கு இயைபான புலனாய்வு அலுவலரின் ஊடாக விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மேலே விதிக்கப்பட்டவாறு நடவடிக்கை ஒன்றை எடுக்கும் முன்னர், பெயர் குறிக்கப்பட்ட அலுவலர் சட்டத்துறைத் தலைமையதிபதியின் மதியுரையை நாடிப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) புலனாய்வின் போது, சேகரிக்கப்பட்ட விடயங்களை கவனத்துட்கொண்டதனையடுத்து, பெயர் குறிக்கப்பட்ட

அலுவலர் அவரது சொந்த பிரேரணையின் மீது அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியின் மதியுரையைப் பெற்றுக் கொண்ட பின்னர், எந்த ஆதனம் தொடர்பில் தடைசெய்தற் கட்டளையொன்று வழங்கப்பட்டுள்ளதோ அல்லது கைப்பற்றுகை ஒன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த ஓர் ஆதனம், அத்தகைய ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படியாகவுள்ளது அல்லது அவ்வாதனம் அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளின் நேரொத்த பெறுமதியைக் கொண்டது என்பதற்கும் போதிய ஏதுக்கள் எவையும் இல்லாமையினால் விடுவிக்கப்படுதல் வேண்டுமென அபிப்பிராயம் கொண்டால், அவர், பதியப்படவேண்டியவையும், புலனாய்வு அலுவலருக்கு அறிவிக்கப்பட வேண்டியவையுமான காரணங்களுக்காகவும் அத்தகைய கட்டளையை வறிதாக்குவதற்கு உடனடியாக அவசியமான நடவடிக்கையை எடுக்கும்படி புலனாய்வு அலுவலருக்கு பணித்தல் வேண்டும்.

(5) புலனாய்வு அலுவலர், சொல்லப்பட்ட பணிப்புரைக்கு இணங்கியொழுகுவதையடுத்து, அத்தகைய நிகழ்வை இயைபான நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிக்கை இடுதல் வேண்டுமென்பதுடன் விடயத்துகேற்ப, பெயர் குறிக்கப்பட்ட அலுவலரிடமிருந்து அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியிடமிருந்து பெறப்பட்ட காரணங்களை அறிவித்தலும், தடை செய்தற் கட்டளை அல்லது கைப்பற்றுகை கட்டளை சேர்ப்பிக்கப்பட்ட திறத்தவருக்கு அறிவித்தலும், இயைபானவிடத்து, ஆதனத்தின் கட்டுக்காப்பை திருப்பிக் கொடுத்தலும் வேண்டும்.

(6) இப்பிரிவிலுள்ளதெதுவும், குற்றத்துக்குப் பின்னரான இழப்பித்திலின் கீழ் அல்லது குற்றத் தீர்ப்பு சாரா அடிப்படையிலான இழப்பித்தலின் கீழ் குற்றச் செயல்களின் வரும்படிகளை இழப்பிப்பதற்காக இயைபான ஆதனத்தின் இழப்பித்தலுக்காக இச்சட்டத்தின் நியதிகளின் படி சட்ட வழக்கு தொடுப்பதிலிருந்து சட்டத்துறைத் தலைமையதிபதியை தடை செய்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், பெயர் குறிக்கப்பட்ட அலுவலர், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாக இருப்பின், சட்டத்துறைத்

தலைமையதிபதி ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் மீது செயலாற்றுதல் வேண்டும்.

(7) புலனாய்வு அலுவலரொருவர், மேற்கொண்ட புலனாய்வுகளை நடத்துவதன் மேல், விடுவிக்கப்பட்ட ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகள் என அபிப்பிராயங்கள் கொண்ட ஆதனத்தின் முன்னைய விடுவிப்பிலிருந்து ஓராண்டினுள், பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் முன்னங்கீகாரத்துடன், புதிய தடைசெய்ததல் மற்றும் கைப்பற்றுகை ஒன்றினால் பாதிக்கப்படக்கூடிய திறத்தவருக்கு முன்னறிவித்தல் சேர்ப்பித்து மேல் நீதி மன்றத்துக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம் என்பதுடன் முன்னர் விடுவிக்கப்பட்ட ஆதனத்தை தடை செய்வதற்காகவும் கைப்பற்றுவதற்காகவும் மேல் நீதிமன்றத்திடம் இருந்து கட்டளை ஒன்றை நாடலாம்.

(8) இவ்வேற்பாட்டின் நியதிகளின்படி ஆதனத்தை தடை செய்வதனையும் கைப்பற்றுவதனையும் வழங்கு வதற்கான கட்டளை ஒன்று, விசாரணையையடுத்து அல்லது பாதிக்கப்பட்ட திறத்தவருக்கான அறிவித்தல் உரிய முறையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதென அது திருப்திப்படின் மறுத்திறத்தவரில்லாமல், மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(9) ஆதனத்தை தடைசெய்வதற்கான அல்லது கைப்பற்றுவதற்கான கட்டளையெதுவும், சம்பந்தப்பட்ட ஆதனம் குற்றச் செயல்களின் வரும்படிகளென நம்புதற்கான நியாயமான ஏதுக்கள் உள்ளது என நீதிமன்றம் நோக்கினா லொழிய, மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்படுதலாகாது.

குறித்த சில ஏனைய சட்டங்களுக்கு ஏற்புடைமை யாகாத கைப்பற்றுகை தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள்.

**74.** இச்சட்டத்திலுள்ளதெதுவும், பின்வருவன உட்பட, ஆதனத்தின் கைப்பற்றுகையை அதிகாரமளிக்கின்ற ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஆதனத்தின் கைப்பற்றுகையை தடுத்தல் ஆகாது:-

(அ) பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் ;

(ஆ) (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டம்;

(இ) (451 ஆம் அத்தியாயமான) காடுபேணற் கட்டளைச்சட்டம் ;

(ஈ) (235 ஆம் அத்தியாயமான) சுங்க கட்டளைச் சட்டம் ;

(உ) (52 ஆம் அத்தியாயமான) மது வரி கட்டளைச் சட்டம்; அத்துடன்

(ஊ) (133 அத்தியாயமான) புராதன பொருட்கள் கட்டளைச் சட்டம்:

ஆயின், எவ்வாறாயினும், ஆதனமொன்று அத்தகைய சட்டத்தின் நியதிகளின்படி, அத்தகைய ஆதனம் அச்சட்டத்தின் நியதிகளின்படியான கைப்பற்றுகையையடுத்து கையாளப் படுதலும் வேண்டும்.

## பாகம் III

## குற்றச்செயல்களின் வரும்படிகளினது நீதிமுறை முடக்குதல்

மேல் நீதிமன்றத்தினால் நீதி முறை முடக்கற் கட்டளையொன்று வழங்கப்படுதல்

**75.** (1) கைப்பற்றுகை ஆதனத்தை முடக்குவது அவசியமாகவிருக்குமென புலனாய்வு அலுவலர் ஒருவர் கருத்துக்கொண்டால், அத்தகைய ஆதனம் கைப்பற்றப்பட்டதிலிருந்து ஏழு வேலை நாட்களினுள் அவர், பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்துக்கான அட்டவணை V என்னும் படிவத்தில் எவரேனுமாளுக்கு -

(அ) எவரிடமிருந்து ஆதனம் கைப்பற்றப்பட்டதோ அவராகவுள்ள;

(ஆ) எவருக்குத் தடைசெய்தற் கட்டளை சேர்ப்பிக்கப் பட்டதோ அவராகவுள்ள;

(இ) ஆதனத்தின் கைப்பற்றுகையினால் அல்லது தடைசெய்கையினால் பாதிக்கப்படும் ஆளொருவராகவிருப்பாரென எவரின் அடையாளம் அவருக்கு வெளிக்காட்டப்பட்டுள்ளதோ அவராகவுள்ள; அத்துடன்

(ஈ) முன்னர் வழங்கப்பட்டிருப்பின், தடை செய்தற் கட்டளையினால் அல்லது கைப்பற்றுதற் கட்டளையினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கக்கூடியவறான அவர் நம்புகின்றவராகவுள்ள,

ஒன்றில் தானாகவோ அல்லது வேறெவரேனும் பொலிசு அலுவலரின் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியின் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்டவொரு சட்டத்தரணியின் உதவியுடன், குற்றச்செயல்களின் வரும்படியொன்றென அல்லது அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளினது நேரொத்த பெறுமதியைக் கொண்டதென அவரால் நம்பப்படும் அத்தகைய ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்கான கட்டளையொன்றை நாடி, கைப்பற்றப்பட்ட ஆதனம் அல்லது அதன் பாகம் எந்த நீதிமுறை வலயத்தில் அமைந்துள்ளதோ அந்த நீதிமுறை வலயத்தினுள்ளான மேல் நீதிமன்றத்துக்கு அல்லது ஆதனத்தின் அமைவிடத்தைக் கண்டு பிடிக்கமுடியாவிடின் கொழும்பு நீதிமுறை வலயத்தின் மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு அலுவலரொருவரினால் அவ்வாதனத்தின் கைப்பற்றுகை அல்லது தடைசெய்தல் செய்யப்பட்டிருப்பின், மேல் நீதிமன்றத்துக்கான மேற் கூறப்பட்ட விண்ணப்பம், அத்தகைய ஆணைக்குழுவின் அலுவலரொருவரினால், ஆணைக்குழுவின் கோரிக்கை யொன்றின்மீது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட அலுவலரொருவரினால், அல்லது ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட சட்டத் தரணியொருவரினால் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒரு புலனாய்வு அலுவலரினால் அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுவதன்மீது, மேல் நீதிமன்றம் பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) புலனாய்வு அலுவலரினால் நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட விடயங்கள்;

(ஆ) நீதிநலன்கருதி நீதிமன்றம் அனுமதிக்கக்கூடிய அத்தகைய வேறு இயைபான விடயங்கள்;

(இ) கைப்பற்றப்பட்ட அல்லது தடைசெய்யப்பட்ட ஆதனத்தில் அக்கறை அல்லது உரிமைக் கோரிக்கை கொண்டுள்ள எவரேனும் திறத்தவர்;

(ஈ) நீதிமன்றம் நீதிநலன்கருதி கோரிய மற்றும் பரிசோதனை செய்யப்படக்கூடிய அத்தகைய மேலதிக எவையேனும் விடயங்கள்; அத்துடன்

(உ) திறத்தவர்களின் சார்பில் நீதிமன்றத்தின் முன்னர் செய்யப்பட்ட முறையீடுகள்,

அத்துடன் பின்வருவன பற்றி நீதிமன்றம் திருப்திப்படின் ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்கான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்:-

(i) இதனகத்துமுன்னர் நிரற்படுத்தப்பட்ட திறத்தவர்களுக்கு, ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்காக மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்குப் புலனாய்வு அலுவலர் அவரது உட்கருத்துப் பற்றிய அறிவித்தலைச் சேர்ப்பித்துள்ளது என்றும்;

(ii) ஆதனமானது குற்றச்செயல்களின் வரும்படிகள், அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகள் கிடைக்கப்பெறக் கூடியதாகவிராதவிடத்து, அதன் பெறுமதி குற்றச்செயல்களின் வரும்படிகளுக்கு நேரொத்ததாகவுள்ள பெறுமதியைக் கொண்ட ஆதனம் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவென்றும்; அத்துடன்

(iii) சட்டத்தின் அக்கறையில் அத்தகைய கட்டளையொன்றை ஆக்கியுள்ளது என்றும்.

(3) அத்தகைய நீதிமுறை முடக்கற் கட்டளை இச்சட்டத்தின் அட்டவணை VI இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) நீதிமுறை முடக்கற் கட்டளையொன்றுக்கான விண்ணப்பம் செய்யப்படும் நேரத்தில், பிரச்சினையுள்ள ஆதனம் ஒரு கைப்பற்றுகைக்கு அமையாததாக இருப்பின், மேல் நீதிமன்றம், சட்டத்துறைத் தலைமையதிபதியின் பிரேரணையின்மீது, ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்கான விண்ணப்பம் தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்படும் வரை, ஆதனத்தின் தற்காலிகப் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காகப் பொருத்தமான கட்டளைகளை ஆக்குதல் வேண்டும்.

(5) மேல் நீதிமன்றம், கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் தன்மை மற்றும் நீதிமுறை முடக்கற் கட்டளை ஆக்கியமைபற்றி அறியாதிருக்கும் ஆட்கள் முடக்கப்பட்ட ஆதனம் தொடர்பான ஏதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்ற அல்லது ஈடுபடுவதற்கு எத்தனிக்கின்ற சாத்தியக்கூறு என்பனவற்றை முறையாகக் கருத்திற்கொண்டு, நீதிமன்றக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட முறையில் நீதிமுறை முடக்கற் கட்டளையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை வெளியிடும்படி புலனாய்வு அலுவலரைப் பணித்தல் வேண்டும். முடக்கப்பட்ட ஆதனம் தொடர்பாக ஒரு மேற்கொண்ட கட்டளையிற் குறித்துரைக்கப் படக்கூடியவாறான நடவடிக்கைகளை எடுக்கும்படி எவரேனும் பகிரங்க அலுவலரையும் நீதிமன்றம் பணிக்கலாம்.

(6) கைப்பற்றப்பட்ட ஆதனத்தை முடக்குவதற்கு மேல் நீதிமன்றத்திடமிருந்தான கட்டளையொன்றுக்கான ஒரு விண்ணப்பத்தைச் செய்யும் நோக்கத்துக்காக மேற்கொண்ட புலனாய்வுகளை நிறைவேற்றுவதற்கு ஏழு வேலைநாட்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்று அவசியமாகவுள்ளதெனப் புலனாய்வு அலுவலரொருவர் கருத்துக்கொண்டால்,

அவர், பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் அங்கீகாரத்துடன், ஆதனம் கைப்பற்றப்பட்டதிலிருந்து ஏழு வேலை நாட்களினுள், கைப்பற்றப்பட்ட ஆதனத்தை முடக்குவதற்கான விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு கைப்பற்றப்பட்டதிலிருந்து ஏழு வேலை நாட்களுக்குள் முடிவுறுவதிலிருந்து இன்னுமோர் ஏழு வேலை நாட்களுக்கப்பால் நீடிக்காதிருக்கப்படவேண்டிய வொரு நீட்டிக்கப்பட்ட காலத்தினை நாடி அத்தகைய விண்ணப்பத்துக்கான காரணங்களை எடுத்துக்கூறி மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல்வேண்டும்:

(7) ஆறாம் உட்பிரிவின்கீழ் புலனாய்வு அலுவலரொருவரினால் ஒரு விண்ணப்பம் செய்யப்படின், ஆதனத்தைத் தடைசெய்தலும் கைப்பற்றுகையும், அதன்மீதான கட்டளையொன்றை மேல் நீதிமன்றம் ஆக்கும்வரை வலுவிலிருத்தல் வேண்டும்.

(8) ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்காக கட்டளையொன்றை ஆக்கும்போது, நீதிமன்றம், அவசியமானவிடத்து, முடக்கப்பட்ட ஆதனம் தொடர்பிலான பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காக இச்சட்டத்தின் நியதியின்படி கட்டளைகளையும் ஆக்குதலும் வேண்டும்.

(9) ஓர் ஆதனத்தின் தடைசெய்தலை அல்லது கைப்பற்றுதலையடுத்து மேல் நீதிமன்றம், புலனாய்வு அலுவலரொருவரினாலான விண்ணப்பமொன்றின்மீது, நீதிமுறை முடக்கலுக்கான கட்டளையொன்றை ஆக்காதிருப்பின் கைப்பற்றப்பட்ட அல்லது தடை செய்யப்பட்ட ஆதனம், ஆதனத்தின் கைப்பற்றுகை மற்றும் கைப்பற்றப்பட்ட ஆதனம் தொடர்பில் ஆக்கப்பட்ட தடைசெய்தற் கட்டளை வறிதானவையாதல் வேண்டும். அவசியமானவிடத்து, மேல் நீதிமன்றம், ஆதனம் எல்லாவற்றிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அவ்வாளுக்கு அல்லது எந்த வேறெவரேனும் ஆளுக்கு அத்தகைய ஆதனம் திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டுமென நீதிமன்றத்துக்குத்

தோன்றுகின்றதோ அந்த வேறெவரேனும் ஆளுக்கு அவ்வாதனத்தை திருப்பிக்கொடுக்கும்படி கட்டளையாக்குதல் வேண்டும்.

(10) ஓர் ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்காக மேல்நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டதனையடுத்து மேல் நீதிமன்றம் அத்தகைய ஆதனத்தை விடுவிப்பதற்கு முடிபுசெய்து ஆதனமானது அவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, புலனாய்வு அலுவலரொருவர், மேற்கொண்ட புலனாய்வுகளை நடாத்துவதன்மேல், விடுவிக்கப்பட்ட ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகளென நியாயமான ஏதுக்களின்மீது அபிப்பிராயம் கொண்டால், அவர், அந்த ஆதனத்தின் விடுப்புக்கான அத்தகைய கட்டளையிலிருந்து ஓராண்டினுள், மற்றும் பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் அங்கீகாரத்துடன், ஆதனமானது மேல் நீதிமன்றத்தினால் எத்திறத்தவருக்கு முன்னர் விடுவிக்கப்பட்டதோ அத்திறத்தவருக்கு மற்றும் ஒரு நீதிமுறை முடக்கல் கட்டளையினால் பாதிக்கப்படக்கூடிய வேறெவரேனும் திறத்தவருக்கு அறிவித்தல் சேர்ப்பித்து, முன்னர் விடுவிக்கப்பட்ட ஆதனத்தின் நீதிமுறை முடக்கலை நாடி, மேல் நீதிமன்றத்துக்கு மேலுமொரு விண்ணப்பத்தைச் செய்யலாம்.

(11) பத்தாம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அத்தகைய ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்கான கட்டளையொன்று, பாதிக்கப்பட்ட திறத்தவருக்கான அறிவித்தல் உரிய முறையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும் சம்பந்தப்பட்ட அத்தகைய ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படிகளென நம்புவதற்கு நியாயமானதென ஏதுக்கள் உள்ளனவென்றும் மேல் நீதிமன்றம் திருப்திப்படின் மட்டுமே ஆக்குதல் வேண்டும்.

(12) (அ) குற்றச்செயல்களின் வரும்படிகளென நம்பப்படும் ஆதனமொன்றின் நீதிமுறை முடக்கலுக்காக மேல் நீதிமன்றத்துக்கு ஒரு புலனாய்வு அலுவலரினாலான விண்ணப்பமொன்றின் மேலும், ஆதனமானது குற்றச்செயல்களின் வரும்படிகளென நம்புவதற்கு நியாயமான

ஏதுக்கள் உள்ளவொன்றும் ஆதலால் அது முடக்கப்பட வேண்டுமென்றும் மேல் நீதிமன்றம் திருப்திப்படுவதன்மேலும், நீதிமன்றமானது, எந்தத் திறத்தவரின் உடைமையிலிருந்து, கட்டுக்காப்பிலிருந்து கட்டுப்பாட்டிலிருந்து அல்லது ஆதிக்கத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளதோ அந்தத் திறத்தவரினாலான விண்ணப்பமொன்றின்மீது விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்.

(ஆ) மேல் நீதிமன்றம், அவசியமான விசாரணையின் பின்னர், பொதுமக்களின் நலன்கருதியும் அத்தகைய ஆதனத்தின் பயனுள்ள பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காகவும், அத்தகைய ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்கான கட்டளையொன்றை ஆக்குவதற்கு மேலதிகமாக, மேற்கூறப்பட்ட விண்ணப்பத்தைச் செய்த திறத்தவருக்கு அத்தகைய ஆதனத்தை அல்லது அதன் பாகத்தை தற்காலிகமாக விடுவிப்பதற்காக அதன் பின்னர் அதே நேரத்தில் அல்லது எந்நேரத்தில் மேற்கொண்ட கட்டளையொன்றை ஆக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய தற்காலிக விடுவிப்பு நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறான படிவத்திலும் தன்மையிலும் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைத் தடைசெய்கின்ற நிபந்தனைகளுட்பட நீதிமன்றத்தினால் விதிக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கமையவும் நியாயமான பிணைப்பொறுப்பை அத்தகைய திறத்தவர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கமையவிருத்தல் வேண்டும்.

(13) ஆதனத்தின் தற்காலிக விடுவிப்புக்கான அத்தகைய கட்டளை, ஆதனத்தின் தற்காலிக விடுவிப்பு இச்சட்டத்தின் குறிக்கோள்களை முறியடிக்காதென்று மேல் நீதிமன்றம் திருப்திப்படின் மட்டுமே, மற்றும் இச்சட்டத்தின்கீழ் இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைக்கு அமையவிருப்பதற்கு, எவரேனும் திறத்தவரின் வேண்டுமென்ற நடத்தை காரணமாக

அதன் பெறுமதியைக் குறைக்காமல் ஆதனமானது கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டுமென்று நீதிமன்றம் திருப்திப்படின் மட்டுமே, செய்யப்படுதல் வேண்டும்.

(14) நீதிமுறை முடக்கலுக்கான சந்தேகிக்கப்பட்ட எவையேனும் குற்றச்செயல்களின் வரும்படிகளினது மேல் நீதிமன்றக் கட்டளையொன்று, அத்தகைய ஆதனத்தை முன்னர் உடைமைக் கொண்ட, கட்டுப்படுத்திய அல்லது அதன்மீது ஆதிக்கம் கொண்டிருந்தவர்களும் அத்தகைய நீதிமுறை முடக்கற் கட்டளையினால் நேரடியாகப் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங் கொண்டவர்களுமான திறத்தவர்களுக்கு உடனடியாகச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேல் நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்ட முறையில் அது வெளியிடப்படுதலும் வேண்டும்.

(15) நீதிமுறை முடக்கற் கட்டளையொன்று ஆரம்பத்தில் ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

(16) மேல் நீதிமன்றத்தினால் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, விடயத்துக்கேற்ப, சட்டத்துறைத் தலைமையதிபதியிலான அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியினாலான விண்ணப்பமொன்றின்மீது, இருபத்திநான்கு மாதக் காலப்பகுதியை விஞ்சாதவையும் ஒரு தடவையில் ஆறுமாதங்களுக்கானவையுமான காலப்பகுதிக்காக ஒரு நீதிமுறை முடக்கற் கட்டளை மேல் நீதிமன்றத்தினால் நீடிக்கப்படலாம்.

(17) மேல் நீதிமன்றத்தினால் ஆதனமொன்றின் நீதிமுறை முடக்கலையடுத்து மற்றும் முடக்கப்பட்ட ஆதனத்தை ஈட்டியதெனச் சார்த்தப்படுகின்ற சட்டமுறையற்ற செயற்பாடு புரியப்படுவதற்காக, விடயத்துக்கேற்ப, மேல் நீதிமன்றத்தில் அல்லது நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படின், மேல் நீதிமன்றத்தினால்

ஆக்கப்பட்ட நீதிமுறை முடக்கற் கட்டளை, நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டதனையடுத்து, மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்காக வலுவிலிருத்தல் வேண்டும்.

(18) பதினேழாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கைகளின்கீழ் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்தும், அத்தகைய குற்றத்தீர்ப்பளிப்புத் தொடர்பில் மேன்முறையீடொன்று கோப்பிடப்படுமிடத்தும், நீதிமுறை முடக்கற் கட்டளை, மேன்முறையீடு பூர்த்தி செய்யப்படும்வரையும், தீர்ப்பளிக்கப்படும் வரையும், தீர்ப்பு அளிக்கப்பட்டதனையடுத்து மூன்று மாதக்காலப்பகுதியொன்று கழியும் வரையும் வலுவிலிருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் அல்லது நீதவான் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்படின், நீதிமுறை முடக்கற் கட்டளையானது மேன்முறையீடொன்று கோப்பிடப்படின், நீதிமுறை முடக்கற் கட்டளையானது மேன்முறையீடு பூர்த்திசெய்யப்படும்வரையும் தீர்ப்பு அளிக்கப்பட்டதனையடுத்து மூன்று மாதங்கள் கழியும்வரையும் வலுவிலிருத்தல் வேண்டும்.

(19) நீதிமுறை முடக்கற் கட்டளையொன்றை ஆக்குவதனையடுத்து, அத்தகைய நீதிமுறை முடக்கற் கட்டளையை ஆக்கியமையினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட எவரேனுமாள், நீதிமுறை முடக்கற் கட்டளையை வேறுபடுத்துவதற்கு நாடி மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாமெனென்பதுடன் நாடப்பட்ட வேறுபடுத்துகை குற்றச் செயல்களின் வரும்படிகளுடன் தொடர்புபடுவதில்லையென நீதிமன்றம் திருப்திப்படின் நீதிமன்றமானது அத்தகைய வேறுபடுத்துகையை வழங்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், நீதிமன்றம் கொடுக்கல் வாங்கல்கள் குற்றச்செயல்களின் வரும்படிகளுடன் தொடர்புபடின், சட்டமுறையாக இருக்கக்

கூடியதாயிருப்பினுங்கூட அத்தகைய கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றுவதனை அனுமதித்தலாகாது.

(20) ஒரு நீதிமுறை முடக்கற் கட்டளையை வழங்குவதன்மேல், நீதிமுறை முடக்கற் கட்டளையின் தொழிற்பாட்டுக் காலப்பகுதிக்காகவும் எந்த நீட்டிக்கப்பட்ட காலப்பகுதியின்போது இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள் நடாத்தப்பட வேண்டுமோ அந்த நீட்டிக்கப்பட்ட காலப்பகுதிக்காகவும் ஏற்புடையனவானவையும் குற்றச் செயல்களின் முடக்கப்பட்ட வரும்படிகளின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்கு அவசியமானவையுமான கட்டளைகளை மேல்நீதிமன்றமானது ஆக்குதல் வேண்டும். ஆதனத்தின் நீதிமுறை முடக்குகை, பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை என்பவற்றுக்காக அத்தகைய கட்டளை இச்சட்டத்தின் பாகம் IV இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக ஆக்கப்படுதல் வேண்டும்.

(21) சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளின் மேல் நீதிமன்ற நீதிமுறை முடக்கலொன்றையடுத்து, நீதிமன்றமானது, இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளின் நடத்துகை முடிவுறாதிருக்கும்வரை அல்லது இழப்பித்தல் கட்டளையொன்று ஆக்கப்படும்வரை, அத்தகைய ஆதனத்துக்கு உரித்துடையவொரு திறத்தவரினாலான விண்ணப்பத்தின்மீது ஆதனத்தின் பெறுமான மதிப்பீட்டைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், உரிமைக்கோரிக்கையாளர் பின்வருமாறு செய்கின்றார் என நீதிமன்றம் திருப்திப்படின், எவையேனும் மேலதிக நிபந்தனைகளுக்கும் ஒரு முறியைச் சமர்ப்பிப்பதற்கு அமைந்தவராகவுமுள்ளாரென்றும் அத்தகைய ஆதனத்தை அல்லது அதன் பாகத்தை உரிமைக் கோரிக்கையாளருக்குத் தற்காலிகமாக விடுவித்தல் வேண்டும்:-

(அ) நல்லெண்ணத்துடன் செயலாற்றுகின்றாரென்றும் குற்றச்செயல்களின் வரும்படிகளெனக் காணப்படின் அத்தகைய ஆதனத்துக்கு உரித்துடையவரென்றும்; அத்துடன்

(ஆ) நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்ட முறையில் அத்தகைய ஆதனத்தின் பெறுமதிக்கான பிணைப்பொறுப்பைச் சமர்ப்பிக்க விரும்புகின்றார் என்றும்,

அத்தகைய பிணைப்பொறுப்பு மேல் நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டவாறு நீதிமன்றத்திடமே அல்லது அதிகாரியிடம் வைப்பிடப்படுதல் வேண்டும்.

(22) இருபத்தோராம் உட்பிரிவிற் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஒரு முறியின்மீது தற்காலிகமாக விடுக்கப்பட்ட ஆதனம், நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே, அத்தகைய ஆதனம் எத்திறத்தவருக்கு விடுவிக்கப்பட்டதோ அத்திறத்தவரினால் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் மீளஅழைக்கப்படும்போதெல்லாம் நீதிமன்றத்துக்கு அல்லது அதிகாரிக்கு திருப்பி கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(23) அத்தகைய ஆதனம் எந்ததிறத்தவருக்கு விடுவிக்கப்பட்டதோ அத்தகைய திறத்தவர் இச்சட்டத்தின் நியதிகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டவாறு இழப்பித்தல் வழக்குநடவடிக்கைகளுக்கு அமைந்ததாகவிருப்பதற்கு அல்லது இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளினால் குறித்துரைக்கப்பட்ட முறையில் கையுதிர்க்கப்படுவதற்காக இழப்பித்தற் கட்டளையின்மேல், அத்தகைய தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட ஆதனத்தை மேல் நீதிமன்றத்துக்கு கொடுத்துதவும்படி இச்சட்டத்தின் நியதிகளின்படி தேவைப்படுத்துதல் வேண்டும், ஆதனத்தை நீதிமன்றத்துக்கு மீண்டும் சமர்ப்பிப்பதன்மேல் உரிமைக்கோரிக்கையாளர், சமர்ப்பிக்கப்பட்ட பிணைப் பொறுப்பை உரிமைக் கோருவதற்கு உரித்துடைவராதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஆதனமானது மேல் நீதிமன்றத்துக்குத் திருப்பிக்கொடுக்கப்படும் நேரத்தில், அதன் பெறுமதி தேய்மானத்துக்குள்ளாகியிருப்பின், நீதிமன்றமானது, பிணைப்பொறுப்பின் இயைபான பெறுமதியை இழப்பித்து எஞ்சியுள்ள பெறுமதி ஏதேனும் இருப்பின் அதனை மட்டுமே உரிமைக்கோரிக்கையாளருக்குத் திருப்பிக்கொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(24) ஆதனமொன்று உரிமைக் கோரிக்கையாளர் ஒருவருக்குத் தற்காலிகமாக விடுவிக்கப்படும்போது, அதன் பயனுள்ள பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்கு அவர் பொறுப்புடையவராதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனத்தின் அழிவை அல்லது அதன் பெறுமதியிலான தேய்மானத்தை விளைவிக்கும் ஏதேனும் செயற்பாட்டில் வேண்டுமென்று ஈடுபடுதலும் ஆகாது.

(25) இச்சட்டத்திலுள்ளதெதுவும், ஆதனத்தின் நீதிமுறை முடக்கலை அதிகாரமளிக்கின்ற ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஆதனத்தின் நீதிமுறை முடக்கலை தடுத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வேறு சட்டத்தின் நியதிகளின்படி ஆதனமொன்று முடக்கப்படின், அத்தகைய ஆதனம் அத்தகைய நீதிமுறை முடக்கலையடுத்து அதே சட்டத்தின் நியதிகளின்படி கையாளப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமைசெய்தல்

கைப்பற்றப் பட்ட அல்லது முடக்கப்பட்ட குற்றச் செயல் களின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமையின் குறிக்கோள் களும் நோக்கங்களும்

**76.** (1) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படி அழிக்கப்படாதிருப்பதினை அல்லது அழுகிப்போகாதிருப்பதனை மற்றும் அதன் பெறுமதி குறைக்கப்படாதிருப்பதனை அல்லது பாதகமானமுறையில் பாதிக்கப்படாதிருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் மற்றும் குற்றச்செயல்களின் வரும்படியொன்றின் கைப்பற்றுகை அல்லது நீதிமுறை முடக்கல் பின்வருவனவற்றை குழப்பாதிருப்பதனை அல்லது பாதகமான முறையில் பாதிக்காதிருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக அதாவது –

(அ) சட்டமுறையான நிதி, வியாபாரம் மற்றும் வர்த்தகச் செயற்பாடு;

(ஆ) சட்டமுறையான நிதிசார், வியாபாரம் மற்றும் வர்த்தக செயற்பாட்டின் ஊடாகப் பொருளாதார நன்மையைப் பெறுதல்;

(இ) ஆட்களை சட்டமுறையாகத் தொழிலுக்கமர்த்தல்; அத்துடன்

(ஈ) மூன்றாம் திறத்தவர்களின் அக்கறைகள்,

என்பன, இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக, அர்த்தமுள்ள மற்றும் பயனுள்ள நடவடிக்கையானது குற்றச்செயல்களின் வரும்படிகளென நம்பப்படும் கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தைப் பாதுகாப்பதற்கு, பேணிக்காப்பதற்கு மற்றும் முகாமை செய்வதற்குப் புலனாய்வு அலுவலரினால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(2) குற்றச் செயல்களின் வரும்படிகளென சந்தேகிக்கப்பட்ட கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனம், இயைபான குற்றச்செயல்களின் வரும்படியை ஈட்டியதென நம்பப்படும் சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்தமைக்காக அல்லது வேறேதேனும் தவறைப் புரிந்தமைக்காக எவரேனுமாளுக்கெதிராக குற்ற வழக்குத் தொடுப்பதற்கு அவசியமாகவிருக்கும் சான்றைப் பேணிக்காக்கும் நோக்கத்துக்காகப் பாதுகாக்கப் படுதலும் பேணிக்காக்கப்படுதலும் வேண்டும்.

கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப் பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளைப் பாதுகாப்பதற் காகவும், பேணிக்காப்பதற் காகவும் முகாமை செய்வதற்காகவும் புலனாய்வு அலுவலர்கள் நடவடிக்கை யெடுத்தல்

**77.** (1) குற்றச்செயல்களின் வரும்படிகளென சந்தேகிக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட ஆதனம் பாதுகாக்கப்படுவது அல்லது பேணிக்காக்கப்படுவது தேவையாகவுள்ளதெனப் புலனாய்வு அலுவலரொருவர் கருத்துக்கொண்டால், அவர் ஒன்றில் தானாகவோ அல்லது இயைபான நிருவாக பணிப்புகளுக்கமைய, வேறெவரேனும் பொலிசு அலுவலரின் அல்லது வேறு பகிரங்க சேவையின் உதவியுடன், அத்தகைய ஆதனத்துக்கு அவசியமான பாதுகாப்பையும் அதனை பேணிக்காப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளையும் வழங்குதல் வேண்டும்.

(2)அவசியமானவிடத்து, தடைசெய்யப்பட்ட, கைப்பற்றப் பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தின் பயனுள்ள பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காக நீதிவான் நீதிமன்றத்தினதும் மேல் நீதிமன்றத்தினதும் அவசியமான கட்டளைகள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) குற்றச்செயல்களின் வரும்படியொன்றென சந்தேகிக்கப் பட்ட ஆதனமொன்றைக் கைப்பற்றுகின்ற ஒரு புலனாய்வு அலுவலர், மேல் நீதிமன்றத்திலிருந்து அவசியமான கட்டளைப் பெற்றுக்கொள்ளும்வரை, அத்தகைய ஆதனத்துக்கு அவசியமான பாதுகாப்பை வழங்குதலும் அத்தகைய ஆதனத்தை பேணிக்காப்பதற்கு அவசியமான வழிமுறைகளை எடுப்பதும் அவரது கடமையாதல் வேண்டும்.

(4) கைப்பற்றப்பட்ட ஆதனத்துக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு அல்லது அதனைப் பாதுகாப்பதற்கான அல்லது பேணிக்காப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏதேனும் பகிரங்க அல்லது நியதிச்சட்ட முறையாக நிறுவனத்தின் உதவியை அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகவிருக்குமெனப் புலனாய்வு அலுவலர் கருத்துக்கொள்ளுமிடத்து, அவர், சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி மேல் நீதிமன்றம் கட்டளையொன்றை ஆக்கும்வரை இயைபான நீதவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் பாதுகாப்புக்காகவும் பேணிக்காப்புக்காகவும் அவசியமாகக்கூடியவாறான நடவடிக்கைகளை எடுப்பதற்குக் குறித்துரைக்கப்பட்ட பகிரங்க அலுவலர் ஒருவரை அல்லது ஏதேனும் பகிரங்க அதிகாரியைப் பணிக்கின்ற நீதிவான் நீதிமன்றத்திடமிருந்தான கட்டளையொன்றைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

கைப்பற்றப் பட்ட அல்லது முடக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளைப் பாதுகாப்பதற் கானதும் பேணிக் காப்பதற் கானதும், முகாமை செயலாற்றுவதற் கானதுமான நீதிமன்றக் கட்டளை

**78.** (1) குற்றச்செயல்களின் வரும்படிகளாக உள்ளதெனச் சந்தேகிக்கப்பட்ட ஆதனமொன்று மேல் நீதிமன்றத்தினால் முடக்கப்படும்போது அல்லது ஆதனத்தின் நீதிமுறை முடக்கல் பற்றிய கட்டளையொன்று ஆக்கப்படும்வரை, அத்தகைய நீதிமன்றம், ஒன்றில் அதன் சொந்தப் பிரேரணையின்மீது அல்லது ஒரு புலனாய்வு அலுவலரின் விண்ணப்பத்தின்மீது, அத்தகைய முடக்கப்பட்ட ஆதனத்தின் அல்லது முடக்கபடுவதற்கு நாடப்படும் ஆதனத்தின் பாதுகாப்பு,

பேணிக்காப்பு மற்றும் இச்சட்டத்தின் நியதிகளின்படி அவசியமான கட்டளைகளை ஆக்குதல் வேண்டும்.

(2) எந்தப் பகிரங்க அலுவலருக்கு அல்லது பகிரங்க அல்லது நியதிச்சட்டமுறையான குழுவுக்கு மேல் நீதிமன்றத்தினால் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் பகிரங்க அலுவலர் அல்லது ஏதேனும் பகிரங்க அல்லது நியதிச்சட்டமுறையான குழு, கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தின் பயனுள்ள பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காக அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது அவரின் அல்லது அதன் கடமையாதல் வேண்டும்.

(3) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தை இழப்பித்தல் அல்லது அதன் விடுப்பு அல்லது சட்டமுறையாக அதனை உடைமையில் வைத்திருப்பதற்கு உரித்துள்ள திறத்தவருக்கு அது விடுவிக்கப்படுதல் அல்லது திருப்பிக்கொடுக்கப்படுதல் பற்றிய நீதிமுறைக் கட்டளையொன்று மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்படும்வரை அத்தகைய ஆதனம், விடயத்துக்கேற்ப, அரசின் அல்லது இயைபான குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது அத்தகைய ஆதனத்துக்குச் சட்டமுறையாக உரித்துள்ள திறத்தவரின் சார்பில், ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை என்பன பொறுப்பிக்கப்பட்ட திறத்தவரினால் நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக் கமைந்த கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப் பட்ட குற்றச் செயல் களின் வரும்படி களைச் சட்ட முறையான நிதிசார், வியாபார அல்லது வர்த்தகச் செயற்பாட்டுக் காகப் பயன் படுத்துதல்

**79.** (1) குற்றச்செயல்களின் வரும்படிகள் எனச் சந்தேகிக்கப் பட்ட ஏதேனும் கைப்பற்றப்பட்ட அல்லது நீதிமுறையாக முடக்கப்பட்ட நேரத்தில் ஏதேனும் சட்டமுறையான நிதிசார், வியாபார அல்லது வர்த்தகச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டிருப்பின் பின்வருவனவற்றைத் தடுப்பதற்கு ஒவ்வோர் அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் எடுக்கப்பட்டு அதே சட்டமுறையான அல்லது அண்மையில் அதேபோன்றே சட்டமுறையான முறையில், மேல் நீதிமன்றத்தினால் அத்தகைய ஆதனத்தின் முகாமை எவ்வாளுக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளதோ அவ்வாளினால் பயன்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) ஆதனத்தின் அழிவு அல்லது அழுகல்;

(ஆ) அதன் பொருளாதாரப் பெறுமதி குறைதல்;

(இ) சட்டமுறையான நிதி, வியாபாரம் அல்லது வர்த்தகம் குழப்பமடைதல்;

(ஈ) சட்டமுறையான தொழில் குழப்பமடைதல்; அத்துடன்

(உ) மூன்றாந் திறத்தவர்களின் அக்கறைகளுக்கு ஏதேனும் பாதகமான தாக்கம் விளை விக்கப்படுதல்.

(2) ஆதனமானது அரசுக்கு இழப்பிக்கப்படும்வரை, அத்தகைய ஆதனத்துக்கு சட்டமுறையான உரித்துடைமையக் கொண்டுள்ள திறத்தவருக்கு அத்தகைய ஆதனம் விடுவிக்கப்படும்வரை அல்லது திருப்பிக்கொடுக்கப்படும் வரை மேல் நீதிமன்றத்தினால் மேற்கொண்ட கட்டளை யொன்று ஆக்கப்படும்வரை அதுதொடர்பாக அவசியமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இப்பிரிவில் அடங்கியுள்ள குறிக்கோள்களை எய்துவதற்கு மேலதிக நடவடிக்கை எடுப்பது அவசியமாகவுள்ளவிடத்து, ஆதனத்தை முகாமை செய்யும் பணி பொறுப்பிக்கப்பட்ட ஆள் மேல் நீதிமன்றத்துக்கு தோதான விண்ணப்பங்களைச் செய்து அவசியமான மேற்கொண்ட அதிகாரவளிப்பை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

குற்றச் செயல்களின் வரும்படிகளி லிருந்து தோற்றுவிக்கப் பட்ட இலாபமும் அவற்றின் முகாமையினது ஆகுசெலவும்

**80.** (1) குற்றச்செயல்களின் வரும்படிகளினது முகாமை யிலிருந்து தேறிப்பெற்ற அல்லது தோற்றுவிக்கப்பட்ட ஏதேனும் இலாபம் அல்லது வேறு வரும்படிகள், மேல் நீதிமன்றத்தின் முன்னங்கீகாரத்துடன், மேல் நீதிமன்றத்தினால் எந்த திறத்தவருக்கு ஆதனத்தின் முகாமை உரித்தாக்கப்பட்டுள்ளதோ அந்த திறத்தவரினால் பின்வருவனவற்றுக்காகப் பயன்படுத்துதல் வேண்டும்:-

(i) அதே நிதிசார், தொழில் அல்லது வியாபார செயற்பாட்டின் அபிவிருத்தி;

(ii) வேறேதேனும் சட்டமுறையான நிதிசார், வியாபார அல்லது வர்த்தகச் செயற்பாடு; அல்லது

(iii) மிகத் தோதான முறையிலான முதலீடு.

(2) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படியை பாதுகாப்பதற்கும், பேணிக்காப்பதற்கும் மற்றும் முகாமை செய்வதற்கும் மேல் நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன், சொல்லப்பட்ட ஆதனத்தைப் பாதுகாப்பதற்காக, பேணிக்காப்பதற்காக மற்றும் முகாமைசெய்வதற்காக அவரினால் சட்டமுறையாகச் செலவிடப்பட்ட பணத்தொகையைக் கழிப்பதும் அல்லது அதிகார சபையிலிருந்து மீளளிக்கச் செய்வதும் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

பகிரங்க அதிகாரியினால் அல்லது ஒரு பெறுநரினால் அல்லது விசேட முகாமையா ளரினால் ஓரா தனம் பாதுகாக் கப்படுதல், பேணிக்காக்கப் படுதல் மற்றும் முகாமை செய்யப்படுதல்

**81.** மேல் நீதிமன்றத்தினால் முடக்கப்பட்ட ஒரு ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை என்பன அதிகார சபைக்கு அல்லது வேறேதேனும் பொருத்தமான பகிரங்க அதிகார சபைக்கு அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும். குற்றச்செயல்களின் முடக்கப்பட்ட வரும்படிகளொன்று பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைப் பற்றிய பணிகள் அத்தகைய அதிகாரசபைகளுள் ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்கு குறித்தளிக்கப்படலாம்:

ஆயின், எவ்வாறாயினும், முடக்கப்பட்ட ஆதனத்தின் தன்மையினதும் அது தடைசெய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட நேரத்தில் அது எந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டதோ அந்நோக்கத்தினதும் நோக்கில் அத்தகைய ஆதனம் அதிகார சபையினால் அல்லது வேறேதேனும் பகிரங்க அதிகாரியினால் பயனுள்ள முறையில் பாதுகாக்கப்பட, பேணிக்காக்கப்பட அல்லது முகாமை செய்யப்பட முடியாதென மேல் நீதிமன்றம் கருத்துக்கொண்டால், அத்தகைய நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிகளைப் புரிவதற்கு அது ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமையாளரை நியமித்தல் வேண்டும்.

அதிகார சபையை, ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமை யாளரை நியமித்தல்

**82.** (1) முடக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படி களை பயனுறப் பாதுகாக்கும், பேணிக்காக்கும் மற்றும் முகாமைசெய்யும் நோக்கத்துக்காக, மேல் நீதிமன்றம், பின்வருமாயின், அதிகார சபையை, ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமையாளரை நியமித்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்டவோர் ஆதனத்தின் பாதுகாப்புக்காக, பேணிக் காப்புக்காக மற்றும் முகாமைக்காக ஆளொருவரை நியமிப்பதற்காகப் புலனாய்வு அலுவலர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தால்; அத்துடன்

(ஆ) முடக்கப்பட்ட ஆதனத்தின் பயனுள்ள பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காக அவசியமாகவிருக்கறாவறு அதிகாரசபை அல்லது ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமையாளரை நியமிப்பதனை அவசியமாக்குவதற்குக் கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படி தொடர்பிலான சூழ்நிலைகளை நீதிமன்றம் கவனத்துட்கொண்டால் :

ஆயின், எவ்வாறாயினும் அதிகாரசபையை அல்லது ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமையாளரை நியமிப்பதற்கான விண்ணப்பமொன்றைப் புலனாய்வு அலுவலர் செய்யாத சந்தர்ப்பங்களில், மற்றும் எவ்வாறாயினும், கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனம் தொடர்பிலான தன்மை, பெறுமதி மற்றும் சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளை நீதிமன்றமானது கவனத்துட்கொள்வதன்மேல் அதிகார சபையை அல்லது ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமையாளரை நியமிப்பது அவசியமாகவுள்ளதெனக் கருத்துக்கொண்டால், நீதிமன்றம், அதன் தற்றுணிபின்பேரில், ஆதனத்தைப் பாதுகாப்பதற்கான, பேணிக்காப்பதற்கான மற்றும் முகாமை செய்வதற்கான பொறுப்பை அதிகார சபைக்கு அளித்தல் வேண்டும் அல்லது சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி ஒரு பெறுநரின் அல்லது ஒரு விசேட முகாமையாளரின் நியமனத்தைச் செய்தல்வேண்டும்.

(2) சாதாரணமாக, அதிகார சபைக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்று அல்லது ஒரு பெறுநரின் அல்லது ஒரு விசேட முகாமையாளரின் நியமனம் பதியப்படவேண்டிய சூழ்நிலைகள் காரணமாக, சந்தேகப்பட்ட குற்றச்

செயல்களின் வரும்படிகளை நீதிமுறையாக முடக்குவதற்கான கட்டளைக்குப் பின்னர் செய்யப்படுதல் வேண்டும் :

மேல் நீதிமன்றம், சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளின் நீதிமுறை முடக்கல் தொடர்பான கட்டளையொன்று ஆக்கப்படும்வரை, ஆதனத்தைப் பாதுகாப்பதற்கு, பேணிக்காப்பதற்கு மற்றும் முகாமை செய்வதற்கு அதிகார சபை அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றை ஆக்கலாம் அல்லது ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமையாளரை நியமிக்கலாம். அத்தகைய ஆதனம் தடைசெய்யப்பட்டதாக அல்லது கைப்பற்றப்பட்டதாக இருப்பின், சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகளின் நீதிமுறை முடக்கலுக்காக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(3) தடைசெய்யப்பட்ட, கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனம் தொடர்பிலான பெறுமதி, தன்மை மற்றும் வேறு இயைபான சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளைக் கவனத்துட்கொண்டதன்மேல், ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காக ஆகுசெலவு ஆதனத்தின் பெறுமதியை விஞ்சுமாவென்பதுட்பட, நீதிமன்றம், ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமையாளரை நியமிப்பதற்கு மாற்றாக, நியாயமான முறையில் இயன்றதாகவிருக்கக்கூடிய அளவுவரை அத்தகைய ஆதனத்தைப் பாதுகாப்பதற்கும், பேணிக்காப்பதற்கும் மற்றும் முகாமை செய்வதற்கும் அவசியமான வழிமுறைகளை எடுப்பதற்கு புலனாய்வு அலுவலரைப் பணிக்கலாம்.

அதிகார சபை, வேறேதேனும் பகிரங்க அதிகார சபை அல்லது ஒரு பெறுநர் அல்லது ஒரு விசேட

**83.** (1) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளாகவுள்ள ஒரு ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்கான கட்டளையொன்று கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனமொன்று தொடர்பில் ஆக்கப்படுமிடத்து, அதிகாரசபை, வேறேதேனும்

பகிரங்க அதிகாரசபை அல்லது மேல் நீதிமன்றினால் நியமிக்கப்பட்ட ஒரு பெறுநர் அல்லது ஒரு விசேட முகாமையாளர், மேல் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் அதன் பணிப்புக்களுக்கும் அமைய, அத்தகைய கட்டளையின் நடைமுறைக் காலப்பகுதியின் போது அத்தகைய ஆதனத்தின் உடைமை, கட்டுக்காப்பு, பாவனை மற்றும் கட்டுப்பாட்டுக்கு உரித்துடையதாதலும் உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

முகாமையாளர், ஆதனத்தின் உடைமை, பாவனை மற்றும் கட்டுப்பாடு முதலியவற்றை எடுத்தல்

(2) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனமொன்று தொடர்பில் அதிகாரசபை, ஒரு பெறுநர் அத்துடன் அல்லது ஒரு விசேட முகாமையாளர் மேல் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய நியமனம் முடிவுறாதிருக்கும்போது, அத்தகைய ஆதனத்தின் அத்தகைய எல்லா உரிமைகளும், விடயத்துக்கேற்ப, அதிகார சபைக்கு, பெறுநருக்கு அத்துடன் அல்லது விசேட முகாமையாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவெனக் கருதப் படுதல் வேண்டும்.

(3) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதன மொன்று தொடர்பில் அதிகார சபை அல்லது ஒரு பெறுநர் அல்லது விசேட முகாமையாளர் மேல் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, விடயத்துக்கேற்ப, அதிகாரசபை அல்லது பெறுநர் அல்லது விசேட முகாமையாளர் அத்தகைய ஆதனம் தொடர்பாக அதனை அல்லது தனது அலுவலக முறையான பெயரில் ஏதேனும் வழக்கை அல்லது வேறேதேனும் சட்டவழக்கு நடவடிக்கைகளை கொண்டு வருவதற்கு அல்லது எதிர்வாதிடுவதற்கு உரித்துடையதாதல் அல்லது உரித்துடையோராதல் வேண்டும்.

**84.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் பாகம் VII இப்பாகத்தின் நியதிகளின்படி அதிகார சபை ஒரு பெறுநராக அல்லது ஒரு விசேட முகாமையாளராகப் பணியாற்றுவதற்குத் தத்துவமளிக்கப்படுதல் வேண்டும்.

அதிகாரசபைப் பெறுநராகப் பணியாற்றுதல்

(2) அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனமொன்றை பயனுறப் பாதுகாப்பதற்கு, பேணிக்காப்பதற்கு அல்லது முகாமை செய்வதற்கு இயன்றதாகவுள்ள அரசின் வேறேதேனும் விசேடித்த அதிகார சபை, ஏலவே உள்ள விடத்து மேல் நீதிமன்றம், அத்தகைய அதிகாரசபையிடமிருந்தான அத்தகைய விசாரணையை அடுத்தும் கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தின் தன்மையைக் கவனத்துட்கொண்டதன் மேலும் அவ்வாதனத்தை அதிகார சபை அல்லது அத்தகைய வேறு அரச முகவராண்மை தகுந்தமுறையில் பாதுகாக்க முடியாது, பேணிக்காக்க முடியாது அல்லது முகாமை செய்யமுடியாதெனக் கருத்துக்கொண்டாலொழிய, ஒரு பெறுநராக அல்லது ஒரு விசேட முகாமையாளராகப் பணியாற்றுவதற்கு வேறு எவரேனும் ஆளை நியமித்தலாகாது.

(3) அதிகாரசபை தாபிக்கப்பட்டிராதவிடத்து அல்லது பணியாற்றாதவிடத்து மற்றும் கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்டுள்ள ஆதனத்தை பயனுள்ள வகையில் பாதுகாப்பதற்கு, பேணிக்காப்பதற்கு அத்துடன் அல்லது முகாமை செய்வதற்கு இயன்றதாக உள்ள அரசின் ஏதேனும் விசேடத்துவ முகவராண்மை இராதவிடத்து, மேல் நீதிமன்றம், பதியப்படவேண்டிய காரணங்களுக்காக ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமையாளரை நியமிப்பதனை நேரடியாக கவனத்திற்கு கொள்ளலாம்.

**85.** (1) பெறுநரொருவர், கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளை பாதுகாப்பதில், பேணிக்காப்பதில் மற்றும் முகாமை செய்வதில் தகுதி வாய்ந்த ஆளொருவராகவிருத்தல் வேண்டும். ஒரு விசேட முகாமையாளர், சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளை பாதுகாக்கும், பேணிக்காக்கும் மற்றும் முகாமை செய்யும் குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் குறிப்பிட்ட வகுதியினை கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளை முகாமை செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான நிபுணத்துவத்தையுடைய ஆளொருவராகவிருத்தல் வேண்டும். பெறுநர்கள்

(2) மேல் நீதிமன்றமொன்று, அவசியமேற்படின், மற்றும் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக, தனியொரு சந்தேகிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகள் தொடர்பில் பெறுநர் மற்றும் விசேட முகாமையாளர் ஆகிய இருவரையும் நியமித்தல் வேண்டும்.

(3) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விசேட முகாமையாளர்களை தொழிலுக்கமர்த்துவதற்கு பெறுந ரொருவர் உரித்துடையவராதல் வேண்டும்.

பெறுநர்களைப் பதிவு செய்தல்

**86.** (1) சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் ஒரு பெறுநரை ஒரு விசேட முகாமையாளரை நியமிக்கும் நோக்கத்திற்காக அமைச்சரின் அமைச்சர் செயலாளர், அத்தகைய பெறுநர்களும் விசேட முகாமையாளர்களும் பாதுகாப்பதில், பேணிக்காப்பதில் மற்றும் முகாமை செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களாகவுள்ள ஆதனத்தின் வகுதி மற்றும் தன்மையின் வகுப்பாக்கத்தினதும், அத்தகைய விசேட முகாமையாளர்களின் நிபுணத்துவத்தினதும் அடிப்படையின் மீது பதிவு செய்யப்பட்ட பெறுநர்களும் விசேட முகாமையாளர்களும் பற்றிய இடாப்பொன்றை பேணுதல் வேண்டும்.

(2) அமைச்சர், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின் படி காலத்துக்கு காலம், விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் ஒரு பெறுநராக அல்லது ஒரு விசேட முகாமையாளராக பதிவு செய்வதற்கு உட்கருத்துகின்ற ஆளொருவர், உடையவராக இருக்க வேண்டிய அல்லது கொண்டிருக்க வேண்டிய தகைமையீனங்களுட்பட, தகைமைகளையும், அனுபவத்தையும், வேறு இயைபான தேவைப்பாடுகளையும் குறித்துரைக்கலாம். அத்தகைய தகைமைகளும், தகைமை யீனங்களும், நிபுணத்துவமும் தன்மையில் பொதுவானவை யாகவிருக்கலாம் அல்லது ஒவ்வொரு ஆதன வகுதிக்கும் குறிப்பானதாகவிருக்கலாம்.

(3) அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட தகைமைகள், அனுபவம் மற்றும் வேறு எவையேனும் தேவைப்பாடுகளை உடைய எவரேனுமாள், ஒரு பெறுநராக அல்லது ஒரு விசேட முகாமையாளராக நியமிக்கப்படுவதற்கு அமைச்சரின் அமைச்சு செயலாளருடன் பதிவு செய்யப்படுவதற்கு எந்நேரத்திலும் நாடலாம். பதிவு செய்தலை நாடுகின்ற

விண்ணப்பத்தில் விண்ணப்பக்காரர் தனது தகைமைகளையும், அனுபவத்தையும் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை திருப்தி செய்தமை பற்றிய சான்றையும், வெவ்வேறு வகுதியினாலான ஆவணங்களை பாதுகாப்பதில், பேணிக்காப்பதில் மற்றும் முகாமை செய்வதில் விசேடித்த தகைமைகள் எவையேனுமிருப்பின் அவற்றையும், ஒரு பெறுநராக அல்லது ஒரு விசேட முகாமையாளராக பணியாற்றுவதற்கு செலுத்தப்படற்பாலனவான கட்டணங் களையும் குறிப்பிடுதல் வேண்டும். ஏதேனும் தகைமையீனம் இல்லாமை பற்றி சத்தியக்கடதாசி மூலம் அவர் உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

(4) ஒரு பெறுநராக அல்லது விசேட முகாமையாளராக நியமிக்கப்படுவதற்கு நாடுகின்ற ஆளொருவரிடமிருந்து விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அமைச்சரினால் விதித்துரைக்கப் பட்ட தகைமைகளையும், அனுபவத்தையும், வேறு தேவைப்பாடுகளையும் விண்ணப்பகாரர் உடையவராக வுள்ளாரென்றும் எவையேனும் தகைமையீனங்கள் இல்லையென்றும் திருப்திப்படுவதன்மேல், ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்தகைய ஆளைப் பதிவுசெய்தல் வேண்டும்.

(5) ஒரு பெறுநராக அல்லது விசேட முகாமையாளராகப் பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள், பின்வருவனவற்றின்மேல் அமைச்சரின் செயலாளரினால் பதிவு செய்யப்பட்ட பெறுநர்கள் மற்றும் விசேட முகாமையாளர்கள் இடாப்பிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்:-

(அ) மறியற்றண்டனைக் காலத்தினால் தண்டிக்கப் படற்பாலதானவொரு தவறைப் புரிந்தமைக்காக அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்து கின்ற வேறேதேனும் நடத்தைக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுதல்;

(ஆ) ஒரு பெறுநராக அல்லது விசேட முகாமையாளராக அவரது பணிகளை அவர் முறையாகப் புரியவில்லையெனக் குறிப்பிடுகின்ற அறிக்கையொன்றை மேல் நீதிமன்றத்திடமிருந்து பெறுதல்;

(இ) அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்டவொரு தகைமையீனத்துக்கு அவ்வாள் உட்பட்டுள்ளா ரென்ற எண்பிப்பு ; அல்லது

(ஈ) ஒரு பெறுநராக அல்லது விசேட முகாமை யாளராகப் பணியாற்றுவதிலிருந்து விடுவிக்கப் படுவதற்கான கோரிக்கையொன்றை இயைபான ஆள் செய்தல்.

(6) பதிவு செய்யப்பட்ட பெறுநர்கள் மற்றும் விசேட முகாமையாளர்கள் பற்றிய இடாப்பிலிருந்து ஆளின் பெயர் அகற்றப்படுவதன்மேல் அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அத்தகைய அகற்றுகையை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

(7) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், காலத்துக்குக் காலம் ஓராண்டில் ஒரு தடவைக்குக் குறையாமலும் பெறுநர்களாகவும் விசேட முகாமையாளர்களாகவும் பதிவுசெய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

பெறுநர்களை நியமித்தல்

**87.** சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படியாக வுள்ள கைமாற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனமொன்று தொடர்பில் ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமையாளரை நியமிப்பதற்கு இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி தேவைப்படுத்தப்பட்ட மேல் நீதிமன்றமொன்று, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதிவுசெய்யப்பட்ட பெறுநர்களும் விசேட முகாமையாளர் களும் பற்றிய நிரலிலிருந்து அத்தகைய பெறுநரை அல்லது விசேட முகாமையாளரைத் தெரிவுசெய்தல் வேண்டும். அத்தகைய நியமனத்தைச் செய்யும்போது மேல்நீதிமன்றம் பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்:-

(அ) ஆதனத்தின் தன்மையும் நிலைமையும்;

(ஆ) ஆதனத்தைப் பாதுகாப்பதற்காகவும், பேணிக் காப்பதற்காகவும், முகாமை செய்வதற்காகவும் அவசியமாகக்கூடியவாறான நிபுணத்துவம்;

(இ) அடையாளங்காணப்பட்ட ஆள், பெறுநர் அல்லது விசேட முகாமையாளர் என்ற நியமனத்தை ஏற்றுக்கொள்ள விரும்புகின்றாரா என்பது;

(ஈ) பாதுகாத்தலுக்காகவும், பேணிக்காத்தலுக் காகவும் மற்றும் முகாமைக்காகவும் அடையாளங் காணப்பட்ட பெறுநருக்கு அல்லது விசேட முகாமையாளருக்குச் செலுத்தப்படற்பாலன வான கட்டணங்கள்;

(உ) புலனாய்வு அலுவலரின் கருத்துக்கள்;

(ஊ) நீதிமுறை வழக்கு நடவடிக்கைகளின் அக்கட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட எவரேனும் திறத்தவரின் கருத்துக்கள்; அத்துடன்

(எ) இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்குப் பயன் கொடுக்கும் நோக்கத்துக்காக அவசியமான வேறேதேனும் காரணி.

பெறுநரை நியமித்தல் பற்றிய அறிவித்தல்

**88.** (1) மேல் நீதிமன்றமானது அதிகாரசபையை, வேறேதேனும் பகிரங்க அதிகாரசபையை அல்லது ஒரு பெறுநரை அல்லது ஒரு விசேட முகாமையாளரை நியமிக்கும்போது அத்தகைய நியமனம் பற்றிய அறிவித்தலொன்று வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(2) நீதிமன்றம், அதன் தற்றுணிபின்பேரில், எவ்வாளிடமிருந்து ஆதனம் கைப்பற்றப்பட்டதோ அவ்வாளும் ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது சட்ட வலுவுறுத்தல் முகவராண்மையும் உட்பட, எவரேனும் திறத்தவருக்கு அத்தகைய அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுவதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம்.

பெறுநரினா லான முதனிலை அறிக்கை

**89.** கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனமொன்று மேல் நீதிமன்றக் கட்டளையொன்றின்மூலம் ஒரு பெறுநருக்கு அல்லது ஒரு விசேட முகாமையாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படும்போது, பெறுநர் அல்லது விசேட முகாமையாளர், செயல்முறைக்குகந்தவரை விரைவாகவும் ஏழு வேலைநாட்களுக்குள் பிந்தாமலும், பின்வருவனபற்றி முதனிலை அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட மற்றும் பெறுநருக்கு அல்லது விசேட முகாமையாளருக்கு உரித்தாக்கப்பட்ட ஆதனம், விடயத்துக்கேற்ப, கைப்பற்றுகை அல்லது நீதிமுறை முடக்கற் கட்டளையில் விபரிக்கப்பட்ட ஆதனமா வென்பதை உறுதிப்படுத்துதல்;

(ஆ) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தின் தன்மை, நிலைமை, தற்போதைய அமைவிடம், பெறுமதி மற்றும் அது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட விபரங்கள்;

(இ) இச்சட்டத்தில் அடங்கியுள்ளவாறு பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக் குறிக் கோள்களை எய்தும் வகையிலும், தேசியப் பொருளாதாரம், வியாபாரம் மற்றும் வர்த்தகத்தை அதிகரிப்பதற்குப் பங்களிக்குமுகமாகவும், அதன் பெறுமதியை அதிகரிப்பதற்காகவும், ஆதனத்தைப் பயன்படுத்தக்கூடிய முறையுட்பட, கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தைப் பெறுநர் அல்லது விசேட முகாமையாளர் எம்முறையில் பாதுகாப்பதற்கு, பேணிக்காப்பதற்கு மற்றும் முகாமை செய்வதற்கு உட்கருதுகின்றாரோ அம்முறை;

(ஈ) பெறுநரொருவர் நியமிக்கப்பட்டிருப்பின், அவரின் அபிப்பிராயத்தில் விசேட முகாமையாளரை நியமித்தல் சொல்லப்பட்ட ஆதனத்தின் பயனுள்ள பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காகத் தேவையாகவுள்ளதா என்பது;

(உ) ஏற்புடையதாயின், ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காக உறப்படவேண்டிய ஏதேனும் செலவினம் மற்றும் ஆதனம் தோற்றுவிக்கக்கூடிய ஏதேனும் வருமானம் அல்லது திரும்பல் முதலியன.

குற்றச் செயல்களின் கைப் பற்றப்பட்ட அல்லது முடக் கப்பட்டவொரு வரும்படிகளைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல். மற்றும் முகாமை செய்தல் தொடர் பாக அதிகார சபையின், ஏதேனும் பகிரங்க அதிகார சபையின் அல்லது பெறுநரின் கடமைகளும், பணிகளும்

**90.**(1) குற்றச்செயல்களின் கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட வரும்படிகளைப் பாதுகாக்கின்ற, பேணிக்காக்கின்ற மற்றும் முகாமைசெய்கின்ற பணி பொறுப்பிக்கப்பட்ட ஏதேனும் கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனம் தொடர்பாக மேல் நீதிமன்றத்தினால் அதிகாரசபை அல்லது வேறேதேனும் பகிரங்க அதிகாரசபை அல்லது ஒரு பெறுநர் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய ஆள், மேல் நீதிமன்றத்தின் அங்கீகாரத்துக்கமைய, ஆதனத்தையும் அதன் பெறுமதியையும் பாதுகாப்பதற்கும், பேணிக்காப்பதற்கும், முகாமைசெய்வதற்கும் நியாயமான முறையில் அவசியமான ஏதேனும் நடபடியை எடுத்தல் அல்லது எடுக்கச்செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வழிமுறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கலாம்: -

(அ) அவசியமானவிடத்து ஆதனத்தைப் பதிவுசெய்தல்;

(ஆ) அத்தகைய ஆதனம் தொடர்பான உடைமை, பாவனை மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்துக்கு இணங்கியொழுகவிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடபடிகளை எடுத்தல்;

(இ) அவசியமாயின், ஆதனம் காப்புறுதி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துதல்;

(ஈ) ஆதனம் கைப்பற்றப்படுமுன்னர் அல்லது அதன் நீதிமுறை முடக்கலுக்குமுன்னர் குறிப்பிட்டவொரு சட்டமுறையான நிதிசார் செயற்பாட்டுக்காக அல்லது வியாபாரத்துக்காக அல்லது வர்த்தகத்துக்காக பயன்படுத்தப்பட்டிருப்பின், அத்தகைய நோக்கத்துக்காக அத்தகைய ஆதனத்தைத் தொடர்ந்தும் பயன்படுத்துதலும் முகாமை செய்தலும், அத்தகைய வியாபாரத்தை அல்லது தொழிற் செயற்பாட்டைக் கொண்டு நடாத்துவதற்கும், அவசியமான மூலதனத்தையும்

மீண்டுவரும் செலவினத்தையும் உறுவதற்கும், ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கும், முகவர்களைத் தொழிலுக்கமர்த்துவதற்கும், இயைபான செயற்பாட்டை நிறைவேற்று வதற்கும் அவசியமாகக்கூடியவாறான தேவைப் பட்ட நிபுணத்துவத்தையும் தேர்ச்சிகளையும் கொண்ட பொருத்தமான ஆட்களை ஒப்பந்த முறையில் தொழிலுக்கமர்த்துவதற்கும் அவசிய மாகக்கூடியவாறான அவசியமான நடபடிகளை அது தொடர்பாக எடுத்தலும், அது தொடர்பாக வேறெவையேனும் அவசியமான நடபடிகளை எடுத்தலும்;

(உ) ஆதனமானது-

(i) எவரேனும் திறத்தவரினால் உரிமை கோரப்படாவிடின்;

(ii) விரைவில் அழுகிப் போகத்தக்க தாகவிருப்பின்;

(iii) காப்பாற்றும் அல்லது இடையூறு ஏற்படுத்தக்கூடியதாக இருப்பின்;

(iv) விரைவான விரயம், அழுகுதல், விரைவாகத் தேய்மானம் அடைதல் அல்லது வேறு வடிவங்களிலான இழப்புக்கு உட்பட்டதாக இருப்பின்;

(v) நிருவகிப்பதற்குச் சிரமமாகவிருப்பின்;

(vi) ஆதனத்தின் தன்மையினது நோக்கில், அதன் பயனுள்ள முகாமை அல்லது பேணுகை அல்லது பெறுமதி அதிகரிப்புக்காகத் தேவைப்பட்ட நிபுணத்துவம் ஒன்றில் கிடைக்கக்கூடிய தல்லாததாகவிருப்பின் அல்லது அதனைப் பெறுவது சிரமமாகவிருப்பின்;

(vii) விடயத்துக்கேற்ப, பாதுகாப்பு பேணுகை, களஞ்சியப்படுத்துகை மற்றும் முகாமையின் ஆகுசெலவு, ஆதனத்தின் தற்போதைய பெறுமதியைவிட மிகவும் விஞ்சுதலாகவிருப்பின்,

அதனைக் கையுதிர்ப்பதற்கு அல்லது அதன் பெறுமதியை உடனடியாகத் தேறிப்பெறுவதற்கு அவசியமான நடபடிகளை எடுத்தல்;

(ஊ) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தின் தன்மை காரணமாக அதன் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை செயல்முறைக்குகந்ததல்லாததாகவிருப்பின், அத்தகைய ஆதனத்தைக் கையுதிர்ப்பதற்கான அவசியமான நடபடிகளை எடுத்தல்;

(எ) ஆதனத்தின் பெறுமதி விரைந்து மாற்றப்படத்தக்கதாகவிருப்பின் அல்லது உரு மாற்றப்படத்தக்கதாகவிருப்பின், அத்தகைய ஆதனத்தை ஏதேனும் பேணிக்காப்பு முறைக்கு அமைந்ததாக்குவதன் மூலம் அல்லது அத்தகைய ஆதனத்தை ஏதேனும் சட்டமுறையான கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்துவதன் மூலம், விடயத்துக்கேற்ப, அதன் பெறுமதியைப் பேணிக்காப்பதற்கு அல்லது அதனைக் கையுதிர்ப்பதற்கு அவசியமான நடபடிகளை எடுத்தல்;

(ஏ) ஆதனத்தின் பெறுமதியை அதிகரிக்கக்கூடிய அல்லது இலாபத்தைத் தோற்றுவிக்கக்கூடிய சாத்தியங்கொண்ட நிதிசார், வியாபார அல்லது வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு அது அமைந்ததாக இருக்க முடியுமாயின். அத்தகைய நோக்கத்துக்காக அவசியமான சட்டமுறையான கொடுக்கல் வாங்கல்களை நடாத்திச் செய்தல்;

(ஐ) ஆதனத்தின் பாதுகாப்பு, களஞ்சியப்படுத்துகை, பேணிக்காப்பு அல்லது பேணுகையின் ஆகுசெலவு அதன் பெறுமதியை விஞ்சக்கூடிய சாத்தியங் கொண்டதாகவிருப்பின், நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அதனைக் கையுதிர்த்தல்;

(ஒ) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனம், ஒன்றில் ஒரு தனி உரிமையாண்மையாக, ஒரு பங்காண்மையாக, ஒரு கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியாக, நம்பிக்கைப்பொறுப்பாக அல்லது வேறேதேனும் தொழில் உருவமாக இருக்கக்கூடிய நடைபெற்றுக் கொண்டிருக்கும் சட்டமுறையான தொழிலை முழுமையாக அல்லது பகுதியளவில் கொண்டுள்ளதாகவிருப்பின், -

(i) அத்தகைய தொழிலின் உரிமையாளர், பங்காளர்கள், பணிப்பாளர் சபை, நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர்கள். தொழிலின் வழமையான நெறியின்போது புரியக்கூடிய அத்தகைய பணிகளைப் புரிதல்;

(ii) தொழிலையும் அதனோடு சம்பந்தப்பட்ட கருமங்களையும் முகாமைசெய்யும் நோக்கத்துக்காகக் காசோலைகள் என்றவகையாக அல்லது வேறுவகையாக எவையேனும் கொடுப்பனவுகளைச் செய்தல்; அத்துடன்

(iii) தொழிலைத் திடமான வர்த்தக அடிப்படையில் கொண்டு நடாத்துவதற்காக அவசியமான அல்லது வசதியான வேறேதேனும் காரியத்தைச் செய்தல்.

(ஓ) ஆதனமானது ஒரு கம்பெனியின் பங்குகளை அல்லது வேறு பிணைப்பொறுப்புகளைக் கொண்டிருப்பின் அல்லது உள்ளடக்கியிருப்பின், அத்தகைய ஆதனம் எவ்வாளிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அவ்வாள் புரிவதற்கு வேறுவகையாக உரித்துள்ளவராகவிருந்திருக்கும் அத்தகைய பங்குகள் அல்லது பிணைப்பொறுப்புக்களுடன் இணைந்துள்ள உரிமைகளைப் பிரயோகித்தல்;

(ஔ) ஆதனமானது ஒரு வங்கிக்கணக்கை அல்லது ஒரு நிதிநிறுவனத்தில் பேணப்பட்ட வேறேதேனும் கணக்கைக் கொண்டிருப்பின், அத்தகைய ஆதனம் எவ்வாளிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அவ்வாள் வேறுவகையில் புரிவதற்கு உரித்துடையவராக இருந்திருக்கும் அத்தகைய கணக்கு மற்றும் ஏதேனும் தொடர்புபட்ட அல்லது இணைந்த கணக்குத் தொடர்பான அத்தகைய பணிகளைப் புரிதல்;

(க) அவசியமான நியதிச்சட்டமுறையான கொடுப்பனவுகளைச் செய்தல்;

(ங) ஆதனமானது ஒரு நிலையான வைப்பாக விருப்பின் அல்லது வட்டி திரளுகின்ற அல்லது பெறப்படுகின்ற வேறேதேனும் வடிவத்திலான முதலீடாகவிருப்பின், அத்தகைய முதலீட்டின் மீது மிகச்சிறந்த திரும்பலை எய்தும் நோக்கத்துக்காகச் சொல்லப்பட்ட ஆதனத்தை முகாமைசெய்தலும், அது தொடர்பாக அத்தகைய முதலீட்டை வைத்திருக்கும் எவரேனும் திறத்தவருக்கு அவசியமான பணிப்புகளை வழங்குதலும்; அத்துடன்

(ச) ஒரு சட்டமுறையான தொழிற் செயற்பாட்டுடன் தொடர்புபடாததாகத் தோன்றுகின்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்பாடொன்றை ஆதனமானது, முழுமையாக அல்லது பகுதியளவில் கொண்டிருப்பின், கைப்பற்றுகைக்கு முன்னர் அத்தகைய ஆதனம் எந்தச் சட்டமுறையான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்ததோ அந்த எவையேனும் சட்டமுறையான நோக்கங்களுக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக அத்தகைய ஆதனத்தை முகாமைசெய்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அதிகாரசபை வேறு பகிரங்க அதிகாரசபை, அல்லது ஒரு

பெறுநர் அல்லது விசேட முகாமையாளர், அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதில் உட்படுத்தப்பட்ட தாமதம் பின் வருவனவற்றை விளைவிக்கக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிருக்குமிடத்து, சூழ்நிலைகளில், மேல் நீதிமன்றத்தின் முன்னங்கீகாரமின்றி மேற்குறிப்பிடப்பட்ட பணிகளைப் புரிதல் வேண்டும்:

(அ) ஆதனத்தின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க குறைவு;

(ஆ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படிகளின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக் குறிக்கோள்களை முறியடித்தல்;

(இ) சட்டமுறையான நிதி, வியாபாரம் மற்றும் வர்த்தகத்தைப் பங்கமான முறையில் பாதித்தல்;

(ஈ) ஆதனத்தின் பெறுமதியை பங்கமாக முறையில் பாதித்தல்; அல்லது

(உ) பொதுமக்களின் சுகாதாரத்துக்கும் காப்புக்கும் அபாயம் ஏற்படுத்தல்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நிலைமைகளில், விடயத்துக்கேற்ப, அதிகாரசபை, வேறு பகிரங்க அதிகாரசபை அல்லது பெறுநர் அல்லது விசேட முகாமையாளர், அவசியமான நடவடிக்கையை எடுத்ததன் மேல், பின்வருவனவற்றை எடுத்துக்கூறி மேல் நீதிமன்றத்துக்குப் பின்வருவனவற்றை உடனடியாக அறிவித்தல் வேண்டும்:-

(அ) ஆதனத்தைக் கையுதிர்ப்பதற்கான அல்லது விற்பனை செய்வதற்கான காரணங்கள் ;

(ஆ) அத்தகைய சொத்தைப் பாதுகாப்பதற்கும், பேணிக்காப்பதற்கும், முகாமை செய்வதற்கும் எடுக்கப்பட்ட வழிமுறைகளும் அவை பயனற்றனவாக இருத்தலும் ; அத்துடன்

(இ) ஆதனத்தின் பெறுமதியைப் தேறிப்பெறுதல் தொடர்பான விபரங்கள்.

ஒரு விசேட முகாமை யாளரின் நியமனம், கடமைகள், பணிகள் மற்றும் தத்துவங்கள்

**91.** (1) மேல் நீதிமன்றம் ஒரு விசேட முகாமையாளரை நியமித்திருப்பின் அல்லது ஒரு பெறுநரை நியமித்ததையடுத்து, பெறுநர், கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தின் பயனுள்ள பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காக சொல்லப்பட்ட செயற்பாடுகளில் நிபுணத்துவத்தினையுடைய விசேட முகாமையாளரொருவர் நியமிக்கப்படவேண்டுமெனக் கருத்துக்கொண்டால், மற்றும் மேல் நீதிமன்றம் ஒரு விசேட முகாமையாளர் ஒருவரை நியமித்தால், அத்தகைய விசேட முகாமையாளர், மேல் நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு, ஒரு பெறுநரின் பணிகளையும், புரிவதற்கு மேல் நீதிமன்றம் அவருக்கு அதிகாரமளிக்கக்கூடிய வேறு பணிகளையும் புரியலாம். மேல் நீதிமன்றம் ஒரு விசேட முகாமையாளரை நியமிக்குமிடத்து, அவர் அத்தகைய நியமனத்தின் பயனைக்கொண்டு, இச்சட்டத்தில் விதிக்கப்பட்டவாறு ஒரு பெறுநரின் பணிகளும், கடமைகளும், தத்துவங்களும் அளிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட ஒரு பெறுநரும் ஒரு விசேட முகாமையாளரும், அவருக்குப் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளுக்கும் பணிகளுக்கும் பயன்கொடுப்பதற்கு அல்லது அவருக்கு உதவுவதற்கு அத்தகைய பெறுநரினால் அல்லது விசேட முகாமையாளரினால் நியமிக்கப்பட்ட வேறெவரேனுமாட்களும், அத்தகைய நியமனம் முடிவுறும்வரை ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு 'பகிரங்க சேவையாளராகவும்' தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கங்களுக்காக ஒரு 'பகிரங்க சேவையாளராகவும்' கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட ஒரு பெறுநரும் ஒரு விசேட முகாமையாளரும், அவருக்குப் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளுக்கும் பணிகளுக்கும் பயன்கொடுப்பதற்கு அல்லது அவருக்கு உதவுவதற்கு அத்தகைய பெறுநரினால் அல்லது விசேட முகாமையாளரினால் நியமிக்கப்பட்ட வேறெவரேனும்

ஆட்களும் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு சாட்சியாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒரு பெறுநரும் விசேட முகாமை யாளரும் பதவி விலகுதலும் அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதலும்

**92.** (1) இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு பெறுநர் அல்லது ஒரு விசேட முகாமையாளர், காட்டப்படவேண்டிய காரணத்துக்காக பதவியிலிருந்து விலகலாம்:

ஆயின், எவ்வாறாயினும், மேல் நீதிமன்றம், பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக, விடயத்துக்கேற்ப, பெறுநரின் அல்லது விசேட முகாமையாளரின் பதவிவிலகுதலை ஏற்றுக்கொள்ள மறுக்கலாம் என்பதுடன் ஆதனத்தின் உரிய பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணிகளைப் புரியும்படியும் அத்தகைய பெறுநரினால் அல்லது ஒரு விசேட முகாமையாளரினால் புரியப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய பணிகள் தொடர்பான கணக்குகளை இறுதியாக்கும்படியும் அத்தகைய பெறுநரை அல்லது விசேட முகாமையாளரைப் பணிக்கலாம்:

ஆயின், மேலும், மேல்நீதிமன்றம், அடுத்துறுகின்ற பெறுநர் ஒருவர் அல்லது விசேட முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்படும்வரை, மேற்கூறப்பட்ட பதவி விலகுதலின் ஏற்றுக்கொள்கையையும் பிடித்துவைக்கலாம்.

(2) பெறுநர் ஒருவர் அல்லது விசேட முகாமையாளர் ஒருவர், பின்வரும் ஏதுக்களுள் ஒன்றின்மீது அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின்மீது மேல் நீதிமன்றத்தினால் அகற்றப்படலாம்:-

(அ) பெறுநரின் அல்லது விசேட முகாமை யாளரின் பெயர், பெறுநர்களும் விசேட முகாமையாளர்களும்பற்றிய இடாப்புகளிலிருந்து அகற்றப்பட்டிருத்தல்; அத்துடன்

(ஆ) விசாரணையொன்றையடுத்து மேல் நீதிமன்றம், பெறுநர் அல்லது விசேட முகாமையாளர் பின்வருமாறு செய்துள்ளாரென்ற முடிவுக்கு வந்துள்ளமை –

(i) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக அல்லது மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு முரணான முறையில் செயலாற்றியுள்ளார்;

(ii) ஆதனத்தின் பெறுமதிக்குத் தீங்கு விளைவிக்கின்றவொரு முறையில் வேண்டுமென்று செயலாற்றியுள்ளார்;

(iii) ஆதனம் தொடர்பில் தவறொன்றைப் புரிந்துள்ளார்;

(iv) தீய எண்ணத்துடன் செயலாற்றியுள்ளார்;

(v) ஆதனமானது எவ்வாளிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அவ்வாளுடன் வஞ்சக்கூட்டாகச் செயலாற்றியுள்ளார்;

(vi) உரிய விழிப்புக்கவனமின்றிச் செயலாற்றியுள்ளார்; அல்லது

(vii) இச்சட்டத்தின் நோக்கங்களை முறியடிக்கின்றவொரு முறையில் செயலாற்றியுள்ளார்.

*எந்த ஆதனம் தொடர்பில் ஒரு பெறுநர் அல்லது ஒரு விசேட முகாமையாளர் நியமிக்கப் பட்டுள்ளாரோ அந்த ஆதனத்தைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமை செய்தல் தொடர்பிலான செலவினம்*

**93.** (1) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனமொன்றின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை அதிகாரசபைக்கு அல்லது வேறேதேனும் பகிரங்க அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய நிறுவனம் அத்தகைய ஆதனத்தின் பாதுகாப்பு பேணிக் காப்பு மற்றும் முகாமைக்கு இயைபான செலவினத்தைப் பொறுத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகக் கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை, ஒரு பெறுநருக்கு அல்லது ஒரு விசேட முகாமையாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவிடத்து, ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காகத் தேவைப்பட்ட நிதிகள், அதிகாரசபையின் குற்றச்செயல்களின் வரும்படிகளைப்

பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமைசெய்தலுக்கான நிதியத்திலிருந்து அத்தகைய பெறுநரை அல்லது விசேட முகாமையாளரை நியமித்த மேல் நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் முற்பணமாகக் கொடுக்கப்படுதல் அல்லது மீளளிக்கப்படுதல் வேண்டும்.

பெறுநரினதும் விசேட முகாமையாளரினதும் இறுதி அறிக்கை

**94.** (1) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனமொன்றின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை தொடர்பில், விடயத்துக்கேற்ப, பெறுநரின் அல்லது விசேட முகாமையாளரின் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதன்மேல் அவர், மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அளவுக்குறிப்பீடுகளுக்கு இசைந்தொழுகத் தயாரிக்கப்பட்டுச் சான்றுப்படுத்தப்பட்ட அறிக்கையொன்றை மேல் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்; இது, ஆதனம் தொடர்பிலான நிதிசார் செயல்நிறைவேற்றம் பற்றிய கூற்றொன்றையும் அவரது கடமைகளையும் பணிகளையும் உள்ளடக்குதல் வேண்டும். விடயத்துக்கேற்ப, பெறுநர் அல்லது விசேட முகாமையாளர், ஆதனம் தொடர்பில் மேல் நீதிமன்றம் சமர்ப்பிப்பதற்கு அவரைத் தேவைப்படுத்தக்கூடிய ஏதேனும் மேலதிகத் தகவலையும் அவர்தகுதியெனக் கருதும் அத்தகைய ஏதேனும் தகவலையும் அத்தகைய அறிக்கையில் உள்ளடக்குதல் வேண்டும்.

(2) இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன்மேல், மேல் நீதிமன்றம் அதனைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் மேல்நீதிமன்றம் கோரக்கூடிய தெளிவுபடுத்துகைக்கும் மேலதிகத் தகவலுக்கும் அமைய, அறிக்கையை ஏற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

பெறுநரினதும் விசேட முகாமையாளரினதும் விடுவிப்பு

**95.** (1) இச்சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட ஒரு பெறுநர் அல்லது ஒரு விசேட முகாமையாளர் பின்வரும் சூழ்நிலைகளில் தனது கடமைகளிலிருந்தும் பணிகளிலிருந்தும் விடுவிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை தொடர்பாக அவருக்குப் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளும் பணிகளும் பூர்த்திசெய்யப்பட்டதன் மேலும் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மேலும்.

(ஆ) பதவிவிலகுதல் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் மேலும் அவரது கடமைகள் நிறைவேற்றப் படுவதற்கமையவும்.

(இ) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் பெறுநர் அல்லது விசேட முகாமையாளர் அகற்றப்படுவதன்மேல்:

ஆயின், எவ்வாறாயினும், பதவியிலிருந்து அகற்றப் படுவதனையடுத்து ஒரு பெறுநர் அல்லது ஒரு விசேட முகாமையாளர் அவரது கடமைகளிலிருந்தும் பணிகளிலிருந்தும் விடுவிக்கப்படின், அத்தகைய பெறுநர் அல்லது விசேட முகாமையாளர், ஒரு பெறுநராக அல்லது ஒரு விசேட முகாமையாளராக அவரது நியமனத்துடன் தொடர்புபட்டவையும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டவையுமான பணிப்புகளுக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

(2) விசாரணை முடிவுற்றதன்மேல், கைப்பற்றப்பட்டுள்ள அல்லது முடக்கப்பட்டுள்ள ஆதனம் அதன் சொந்தக்காரருக்கு அல்லது உடைமையாளருக்கு அல்லது அத்தகைய ஆதனத்தை உரிமைகோரிய வேறெவரேனும் திறத்தவருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டுமென நீதிமன்றம் கட்டளையிடின், நீதிமன்றமானது பெறுநரின் அல்லது விசேட முகாமையாளரின் விடுவிப்புக்கெதிராக அதன் சொந்தக்காரரினால் அல்லது உடைமையாளரினால் முன்வைக்கப்படக்கூடிய அறிக்கையையும் எவையேனும் ஆட்சேபனைகளையும் கவனத்துட்கொண்டு, ஒரு பெறுநராக அல்லது விசேட முகாமையாளராக அவரது பணிகளுக்கு இணங்கியொழுகுவதிலிருந்து பெறுநரை அல்லது விசேட முகாமையாளரை விடுவித்தல் வேண்டும்.

(3) பெறுநரின் அல்லது விசேட முகாமையாளரின் விடுவிப்பு பிடித்து வைக்கப்படுமிடத்து, மேல் நீதிமன்றம், சொந்தக்காரரின் அல்லது அத்தகைய ஆதனத்தை உரிமைகோருகின்ற ஆளின் விண்ணப்பத்தின்மீது, கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமையில் அவரினால் செய்யப்பட்ட ஏதேனும் செயலின் அல்லது செய்யப்பட்ட தவறுகையின் விளைவுகளுடன் பெறுநரை அல்லது விசேட முகாமையாளரைக் குற்றஞ்சாட்டி, அது நீதியானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(4) பெறுநரை அல்லது விசேட முகாமையாளரை விடுவிக்கின்ற மேல் நீதிமன்றத்தின் கட்டளையொன்று, ஆதனத்தின் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமையில் அவரினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அல்லது செய்யப்பட்ட தவறுகை தொடர்பில் அல்லது பெறுநராக அல்லது விசேட முகாமையாளராக அவரது நடத்தை தொடர்பாக வேறுவகையில் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் அவரைப் பொறுப்புவிடுவித்தல் வேண்டும்.

## பாகம் V

## குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபை

குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகார சபையைத் தாபித்தல்

**96.** (1) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபை எனவழைக்கப்பட்டு அறியப்படவேண்டிய அதிகாரசபை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, இச்சட்டத்தினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(3) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின்கீழ் அதற்கு அளிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும், பணிகளைப் புரிவதற்காகவும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகவும் இச்சட்டத்தினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் அதிகாரசபை கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அதிகாரசபைக்கு, குற்றச் செயல்களின் வரும்படிகளினது பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை நோக்கங்களுக்காக அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் நோக்கெல்லையின்கீழ் வரக்கூடியதும் அத்துடன் அல்லது ஒரு நீதிமுறைக் கட்டளையினால்

குறித்துரைக்கப்பட்டதுமான முடிவுறாதுள்ள எதிர்காலக் குற்றவியல் வழக்கு நடவடிக்கை தொடர்பான வேறேதேனும் காரியத்தின் நோக்கங்களுக்காக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது ஒரு தகுதிவாய்ந்த சட்ட நீதிமன்றத்தின் கட்டளையொன்றினால் சட்ட அதிகாரம் உரிதாக்கவும்படலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அதிகாரசபையின் முதனிலைப் பொறுப்பானது இச்சட்டத்தின்கீழ் குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தலும், பேணிக்காத்தலும், முகாமை செய்தலுமாதல் வேண்டுமென நீதிமன்றமானது ஏற்றங்கீகரித்தல் வேண்டும்.

(5) எவ்வாதனம் தொடர்பில் தவறுகள் புரியப்பட்டுள்ளனவோ அவ்வாதனம் மற்றும் எந்த ஆதனத்தின் சொத்தாண்மை உரிமை கோரப்படவில்லையோ அந்த ஆதனம் என வகுப்பாக்கஞ்செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆதனத்தைப் பாதுகாப்பதற்கும், பேணிக்காப்பதற்கும், முகாமை செய்வதற்குமான தத்துவத்தை அதிகாரசபை உடையதாதல் வேண்டும். நீதிமன்றத்தினால் மேற்கொண்டு கட்டளை ஆக்கப்படும்வரை அத்தகைய ஆதனத்தைப் பாதுகாப்பதற்கும், பேணிக்காப்பதற்கும், முகாமைசெய்வதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(6) அதிகாரசபை அதன் கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் அதிகாரசபையைப் பணிப்பதற்கு அல்லது மேற்பார்வைசெய்வதற்குச் சட்டத்தின்கீழ் உரித்துடைய நீதிமன்றமொன்று தவிர வேறெவரேனுமாளிடமிருந்து வருகின்ற ஏதேனும் பணிப்புக்கு அல்லது வேறு தலையீட்டுக்கு அமைந்ததாகவிராமல் அத்தகைய கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் நிறைவேற்றுதலும், புரிதலும் பிரயோகித்தலும், வேண்டும்.

(7) அவ்வாறு செய்வதற்குச் சட்டமுறையான அதிகாரமின்றி இச்சட்டத்தினால் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் அல்லது நிறைவேற்றுவதிலுமான ஏதேனும் தலையீடு அல்லது முட்டுக்கட்டை, இச்சட்டத்தின் நியதிகளின்படி தவறொன்றாக அமைதல் வேண்டும்.

அதிகாரசபையின் கடமைகளும், பணிகளும், தத்துவங்களும்

**97.** (1) குற்றச்செயல்களின் வரும்படிகளினது பாதுகாப்பு பேணிக்காப்பு மற்றும் முகாமை தொடர்பாக இச்சட்டத்தினால் பெறுநர்களுக்கும் விசேட முகாமையாளர்களுக்கும் உரித்தாக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும், தத்துவங்களையும் அதிகாரசபை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி அல்லது அத்தகைய சட்டத்தின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஒரு நீதிமுறைக் கட்டளையின் நியதிகளின்படி அத்தகைய அதிகாரசபைக்கு, குற்றச்செயல்களின் வரும்படிகளினது பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமைக்காக அத்தகைய வேறு சட்டத்தின்கீழ் ஒரு பெறுநரின் அல்லது விசேட முகாமையாளரின் பணி உரித்தாக்கப்படின், அதிகாரசபையானது அத்தகைய வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஒரு பெறுநருக்கு அல்லது ஒரு விசேட முகாமையாளருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தலும் பணிகளை புரிதலும் தத்துவங்களைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, ஒரு சட்ட நீதிமன்றத்தினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்குப் பயன்கொடுப்பதற்கான கடமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, ஒரு பெறுநராக அல்லது ஒரு விசேட முகாமையாளராக மேல் நீதிமன்றத்தினால் நியமிக்கப்படும் போது, இச்சட்டத்தில் அடங்கியுள்ளவாறு ஒரு பெறுநரின் அல்லது ஒரு விசேட முகாமையாளரின் பணிகளையும், தத்துவங்களையும், கடமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் சட்ட நீதிமன்றத்தினால் ஒரு பெறுநராக அல்லது ஒரு விசேட முகாமையாளராக நியமிக்கப்படும்போது, அதிகாரசபை, அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ளவாறு அத்தகைய பெறுநரின் அல்லது விசேட முகாமையாளரின் பணிகளையும், தத்துவங்களையும், கடமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) அதிகாரசபையானது, அதன் பணிகளின் நிறைவேற்றுகை பற்றிய பதிவேடுகளையும் புள்ளி விபரங்களையும் பேணுதல் வேண்டும்.

(7) அதிகாரசபையானது, அடுத்தாண்டின் முதலாவது ஆறு மாதங்களினுள், முற்போந்த ஆண்டின்போது அதன் செயல்நிறைவேற்றம் தொடர்பான வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சரினூடாகப் பாராளுமன்றத்துக்கு முன்வைத்தல் வேண்டும். அதிகார சபையினது அதன் வலைத்தளத்தில் அத்தகைய ஆண்டறிக்கையை வெளியிடுதல் வேண்டும்.

(8) அதிகாரசபையானது, பொலிசு அலுவலர் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலர்களினதும் கலந்தாலோசனையுடன், காலத்துக்குக் காலம், ஒரு கைப்பற்றுகைக்கு அல்லது நீதிமுறை முடக்கலுக்கு அமைந்ததாகவிருக்கவேண்டிய எவையேனும் குற்றச்செயல்களின் வரும்படிகள் குறைந்தபட்ச பணப்பெறுமதியை விதித்தல் வேண்டும்.

(9) அதிகாரசபையானது, காலத்துக்குக்காலம், புலனாய்வு அலுவலர்களினால் குற்றச்செயல்களின் கைப்பற்றப்பட்ட வரும்படிகளினது பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமையை வசதிப்படுத்துவதற்கான நியமத் தொழிற்பாட்டு வரைவாவணங்களை அபிவிருத்திசெய்து பெயர்குறிக்கப்பட்ட அலுவலர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

(10) அதிகாரசபையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை கொடை என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதிகாரசபையானது அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்டதாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருப்பதற்கும் அதனை விற்பனை செய்வதற்கும், ஈடுவைப்பதற்கும், குத்தகைக்குவிடுவதற்கும், மானியக்கொடை யாக அளிப்பதற்கும், சாட்டுதல் செய்வதற்கும், கொடுத்து மாற்றுவதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும்;

(ஆ) பிணைப்பொறுப்புகளுடனோ அல்லது பிணைப் பொறுப்புகளின்றியோ நிதிகளைக் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும்:

ஆயின், அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தை அதிகாரசபையின் பணிப்பாளர்கள் சபையானது பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(இ) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாக வாயினுஞ்சரி அல்லது அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவரினூடாகவாயினுஞ்சரி, செய்து கொள்வதற்கும் நிறைவேற்றுவதற்கும்;

(ஈ) அதிகார சபையின் பணிப்பாளர்கள் சபை அங்கீகரிக்கக்கூடியவாறாக ஏதேனும் வங்கியில் ஏதேனும் கணக்கைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும், பேணுவதற்கும் மற்றும் மூடிவிடுவதற்கும்;

(உ) அதிகாரசபையின் அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமிப்பதற்கும், பதவி நீக்குவதற்கும் அல்லது முடிவுறுத்துவதற்கும், அவர்களின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும்;

(ஊ) அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிப்பதற்கான விதிகளை ஆக்குவதற்கும்; அத்துடன்

(எ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள், ஒப்பந்தக்காரர்கள், ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்களின் சேவை நியதிநிபந்தனைகளையும் அவர்களுக்குச் செலுத்தப்படற்பாலனவான ஊதியத்தையும் தீர்மானிப்பதற்கும்.

அதிகார சபையின் முகாமையும் நிருவாகமும்

**98.** (1) அதிகாரசபையின் அலுவல்களினது முகாமையும் நிருவாகமும் (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒரு பணிப்பாளர்கள் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் அலுவல்களினது முகாமை மற்றும் நிருவாக நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட கடமைகளையும், பணிகளையும், தத்துவங்களையும் புரிதலும், நிறைவேற்றுதலும், பிரயோகித்தலும் வேண்டும்.

(3) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்:-

(i) செயலாளரினால் பெயர் குறித்து நீக்கப்பட்ட அமைச்சரின் ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்கு குறையாத அமைச்சரின் அமைச்சின் அலுவலரொருவர்;

(ii) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும் அவ்வமைச்சின் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒரு சிரேட்ட உதவிச் செயலாளர்

என்னும் பதவிவரிசைக்கு குறையாத அலுவலரொருவர்;

(iii) பொது நிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும் அவ்வமைச்சின் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சிரேட்ட உதவிச் செயலாளர் ஒருவரும் பதவி வரிசைக்கு குறையாத வருமான அலுவலரொருவர்;

(iv) தேசியப் பொலிசு ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்டவரும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதி என்ற பதவிவரிசையை வகிப்பவருமான பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பிரதிநிதியொருவர்; அத்துடன்

(ஆ) பின்வரும் முறையில் அமைச்சரினால் நியமிக்கப்பட்டோரும் (இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படுவோருமான) வேறு ஏழு உறுப்பினர்கள்:-

(i) இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பட்டயம்பெற்ற கணக்காளரொருவர்;

(ii) இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பொறியியலாளரொருவர்;

(iii) இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் கலந்தாலோசனையுடன் சட்டத்தரணி யொருவர்;

(iv) இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளரொருவர்;

(v) இலங்கை வர்த்தகப் பணிமனையின் கலந்தாலோசனையுடன் முகாமைத் துவத்தில் தகைமைபெற்றவரும் அனுபமுள் ளவருமான ஆளொருவர்; அத்துடன்

(vi) சமூக சேவைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் வெளிப்படையான தன்மையை அபிவிருத்தி செய்தல், ஊழல் எதிர்ப்பு வழிமுறைகளைப் பலப்படுத்துதல் அல்லது குற்றவியல் நீதியின் குறிக்கோள்களை முன்னேற்றுதல் என்பவற்றை உள்ளடக்கியதான பணிப்புறுத்துகையின் குடியியல் சங்க ஒழுங்கமைப்புகளுடன் வேலை செய்யும் மதிப்புக் கொண்ட அரசியல் சாராத இரண்டு ஆட்கள்.

(4) இதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒழுங்கமைப் புகள், அவர்களின் அபிப்பிராயம் அமைச்சரினால் நாடப்படும்போது, அதன் அபிப்பிராயத்தில் மிகவும் தோதான உறுப்பினரைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

சபையின் தவிசாளர்

**99.** (1) அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து, அவரது அபிப்பிராயத்தில் சபையின் தவிசாளரினது பணிகளைப் புரிவதற்கு மிகவும் பொருத்தமான ஆளாகவுள்ள ஆளை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அதன்பின்னர் அத்தகைய நியமனத்துக்கான காரணங்களைப் பதிதலும் வேண்டும்.

(2) தவிசாளர், அதிகாரசபையின் தலைவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் சபையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதலும் வேண்டும்.

(3) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதம் மூலம் தனது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன் அத்தகைய பதவிவிலகுதல் அமைச்சரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(4) அமைச்சர், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, தவிசாளர்பதவியிலிருந்துதவிசாளரைஅகற்றலாமென்பதுடன் பாராளுமன்றத்துக்கு உரையாற்றுவதன் மூலம் அத்தகைய அகற்றுகை பற்றி, அதற்கான காரணங்களுடன், பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடலாம்.

(5) சுகவீனம், வேறு உடற்றகுதியீனம், நீண்ட காலத்துக்கு இலங்கையில் இல்லாமை என்பன காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தவிசாளர் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து, அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினராக அவரது வழமையான கடமைகளுடன் சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை நியமிக்கலாம்.

சபையின் உறுப்பினரொருவராக விருப்பதற்கான தகைமை யீனங்கள்

**100.** (1) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் -

(அ) சபைக்கு நியமிக்கப்பட்ட தேதியிலுள்ளவாறு எழுபது வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்;

(ஆ) சித்தசுவாதீனமுள்ளவராகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) நேர்மையும் நன்மதிப்பும் கொண்ட தகுதிவாய்ந்த ஆளொருவராகவிருத்தல் வேண்டும்;

(2) ஆளொருவர் பின்வருமாறிருப்பின், சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையீனமுள்ளவராக இருத்தல் வேண்டும் அத்தகைய ஆள்:-

(அ) பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராகவிராதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) இலங்கையில் ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கி முறிந்தவரென வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராகவிருந்தால்;

(ஈ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைகளைத் தீர்ப்புக்கு உட்படுகின்றவராகவிருந்தால் அல்லது உட்பட்டவராகவிருந்திருந்தால்;

(உ) அதிகாரசபையினால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருந்தால் அல்லது துய்த்தால்;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் ஒரு பெறுநராக அல்லது ஒரு விசேட முகாமையாளராகப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவராகவிருந்தால்; அல்லது

(எ) சபையின் உறுப்பினரொருவராக அவரது பணிகள் அவரினால் நிறைவேற்றப்படுவதனைப் பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய சாத்தியம் கொண்டவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

சபையுறுப்பினர்களின் பதவிக்காலம்

**101.** (1) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும், நியமிக்கப்பட்ட இறப்பின் மூலம், பதவிவிலகுதல் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் அத்தகைய உறுப்பினர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல்

வேண்டுமென்பதுடன் தொடர்ச்சியான அல்லது வேறுவகையிலான இருகாலப்பகுதிகளுக்கு மீளநியமிக்கப் படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட முதலாவது சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பின்வரும் முறையில் பதவிவகித்தல் வேண்டும்:-

(அ) தவிசாளர் மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு பதவிவகித்தல் வேண்டும்;

(ஆ) தவிசாளர் தவிர்ந்த வேறு மூன்று உறுப்பினர்கள் இரண்டாண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) எஞ்சியுள்ள மூன்று உறுப்பினர்கள் ஓராண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

முதலாவது சபைக்கு நியமிக்கப்பட்டதிலிருந்து முதலாவது, மற்றும் இரண்டாவது ஆண்டின்போது பதவியை வறிதாக்கவேண்டிய முதலாவது சபையின் மூன்று உறுப்பினர்கள் சபையின் முதலாவது கூட்டத்தில் திருவுளச்சீட்டிழுப்பின்மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையுறுப்பினரொருவரின் பதவிக்காலப்பகுதி முடிவுற்றமை காரணமாகச் சபையுறுப்பினரொருவரின் பதவியில் வெற்றிடமொன்று எழுமிடத்து, அத்தகைய உறுப்பினர், அவரினிடத்தில் புதிய உறுப்பினரொருவர் நியமிக்கப்படும்வரை அத்தகைய பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) அமைச்சர், சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக்காலப்பகுதி முடிவுற்றமை காரணமாக அவரின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் அவரினிடத்தில் புதிய உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

*சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை பதவியிலிருந்து அகற்றப்படுதலும் பதவி விலகுதலும்*

**102.** (1) நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், எந்நேரத்திலும் அமைச்சருக்கு அப்பயன்பட முகவரியிட்டனுப்பப்பட்டவொரு கடிதத்தின்மூலம் தனது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன் அத்தகைய பதவிவிலகுதல் அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தனது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அமைச்சர், பணிப்பாளர் சபையுறுப்பினர்களின் அமைப்புத் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு வேறெவரேனுமாளை நியமிக்கலாம்.

(3) அமைச்சர், விளக்கமளிப்பதற்கான வாய்ப்பொன்றை இயைபான உறுப்பினருக்கு அளித்தபின்னரும் அத்தகைய உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்படுதல் நியாயமானதென அதன்மேல் திருப்திப்பட்டபின்னரும், அத்தகைய உறுப்பினருக்கும் சபைக்கும் எழுத்தில் கொடுக்கப்படவேண்டிய காரணங்களுக்காகவும், நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரை பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறந்தால், பதவிவிலகினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால், அமைச்சர், பணிப்பாளர் சபையுறுப்பினர்களின் அமைப்புத் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரினிடத்தில் வேறோராளை நியமிக்கலாம் என்பதுடன் மற்றும் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

*சபையுறுப்பினர்கள் ஏதேனும் அக்கறையை வெளிவிடுதல்*

**103.** (1) சபையின் உறுப்பினரொருவர் சபையுறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்குக் கவனஞ்செலுத்தப்படும் நேரத்தில், அதிகாரசபையின் குறிக்கோள்களுக்கும்

பணிகளுக்கும் ஒன்றில் முரண்பாடான அல்லது போட்டியுள்ள அக்கறையொன்றை ஏற்படுத்தக்கூடியதாக அவர் கொண்டிருக்கும் ஏதேனும் அக்கறையை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) சபையின் கவனத்தின்கீழுள்ள அல்லது அதன்முன்னர் எடுக்கப்படவுள்ள ஒரு கருமம் தொடர்பாக முரண்பாடான அல்லது போட்டியுள்ள அக்கறையொன்றை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் கருமத்தில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறைகொண்டுள்ள சபையின் உறுப்பினரொருவர் அத்தகைய அக்கறைகொண்டுள்ள சபையின் உறுப்பினரொருவர் அத்தகைய அக்கறையின் தன்மையைச் சபைக்கு வெளிவிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கருமம் தொடர்பாகச் சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபாக்கலில் பங்குபற்றுதலுமாகாது.

சபையின் கூட்ட நடப் பெண்ணும் கூட்டங்களும்

**104.** (1) சபையின் கூட்டங்கள் குறைந்தபட்சம் மாதத்துக்கு ஒரு தடவை நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண், குறைந்தபட்சம் இரு பதவிவழியுறுப்பினர்களைக் கொண்ட ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) தவிசாளர் சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வராதிருக்கையில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும், அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் சந்தர்ப்பத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்தில் தவிசாளராகவிருக்கவேண்டிய அத்தகைய வேறு உறுப்பினர்,

அவரது சொந்த வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, சபையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையைச் சபையானது ஒழுங்குபடுத்தலாம்.

(6) சபையானது, காலத்துக்குக்காலம் ஒரு சட்டத்தரணியை அல்லது பட்டயம்பெற்ற செயலாளரை, ஒன்றில் முழுநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் சபைச் செயலாளராகப் பணியாற்றுவதற்கு நியமித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(7) தவிசாளரினால் பணிக்கப்பட்டவாறு அல்லது சபைத் தீர்மானமொன்றின் அடிப்படையின்மீது சபைக்கூட்டங்களைக் கூட்டுவது சபைச் செயலாளரின் கடமையாதல் வேண்டும்.

(8) சபையின் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்களைப் பேணுதலும் சபைக்கூட்டங்களை நடாத்துவதற்காக அவசியமான ஒழுங்கேற்பாடுகளை வசதிப்படுத்தலும் சபைச் செயலாளரின் பொறுப்பாதல் வேண்டும்.

சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடி யற்றன வல்லாதன வாகக் கருதப் படுதல்

**105.** சபையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றலாமென்பதுடன் சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக இருந்தாலோ அல்லது செல்லுபடியாக இருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

சபையின் உறுப்பி னர்களில் ஊதியம்

**106**. சபையின் உறுப்பினர்கள் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகார சபையின் இலச்சினை

**107.**(1) அதிகாரசபையின் இலச்சினை சபைச் செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினை, சபையின் வலுவளிப்புடன் தவிரவும் சபையின் தவிசாளரினதும் வேறோர் உறுப்பினரினதும் சமூகத்திலன்றியும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அதிகாரசபையின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படும் நேரத்தில் தவிசாளர் சமுகமளிக்க இயலாதவராகவிருக்குமிடத்து, அதற்கெனத் தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் வேறெவரேனும் உறுப்பினர், இவ்வுட்பிரிவின் ஏற்பாட்டுக்கிணங்க அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்குத் தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்:

ஆயின், மேலும், தவிசாளர், அவர் இல்லாதிருக்கையில் அவரது சார்பில் கையொப்பமிடுவதற்குச் சபையின் உறுப்பினரொருவரை நியமித்திராவிடின், சபையானது, அத்தகைய பணியைப் புரிவதற்கு வேறோர் உறுப்பினருக்குத் தத்துவமளித்து அத்தகைய உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றை அதிகாரசபையானது பேணுதல் வேண்டும்.

அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர்

**108**. (1) சபையானது அபிவிருத்திசெய்யப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்தைக் கருத்திற்கொண்டும் அதிகார சபையின் கடமைகளையும் பணிகளையும் உரியமுறையில் கருத்திற்கொண்டும் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுக் கடைப்பிடிக்கப்பட்ட பொருத்தமானவோராளைத் தெரிவு செய்வதற்கான வெளிப்படையான திட்டமொன்றைப் பின்பற்றிச் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலரை நியமித்தல் வேண்டும். நிறுவனத்தின் இயைபான தலைவரின் அங்கீகாரத்துடன் மாற்றுச்சேவையின்மீது பிரதான நிறைவேற்று அலுவலராகப் பொருத்தமான ஒரு பகிரங்க அலுவலரை நியமிப்பது அதிகாரசபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) அவ்வாறு நியமிக்கப்பட்ட பிரதான நிறைவேற்று அலுவலர், அதிகாரசபையின் எல்லா நிறைவேற்று மற்றும் நிருவாகப் பணிகளுக்குப் பொறுப்பாகவும் அதிகாரசபையின் பிரதான நிதி அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(3) சபையானது அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரின்மீது ஒழுக்காற்று அதிகாரத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

(4) பிரதான நிறைவேற்று அலுவலர், சபையின் அழைப்பின்மீது, சபையின் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(5) பிரதான நிறைவேற்று அலுவலர், இறப்பின்மூலம், பதவிவிலகுதல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, பத்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்தகைய பதவியில் சேவையாற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(6) பிரதான நிறைவேற்று அலுவலர், சபையின் பொதுவான பணிப்புக்களுக்கும் மேற்பார்வைக்கும் அமைய,-

(அ) பணியாட்டொகுதியினரின் நிருவாகமும் கட்டுப்பாடும் உட்பட, அதிகாரசபையின் அலுவல்கள் மற்றும் நிறைவேற்றுப் பணிகள் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்;

(ஆ) சபையின் எல்லா முடிபுகளினதும் நிறை வேற்றுகைக்காகப் பொறுப்புள்ளவராதல் வேண்டும்; அத்துடன்

(இ) சபையினால் பிரதான நிறைவேற்று அலுவலருக்குக் குறித்தளிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(7) பிரதான நிறைவேற்று அலுவலர் பின்வரும் சந்தர்ப்பங்களில் பதவியிலிருந்து அகற்றப்படலாம்:-

(அ) அவர், பிரதான நிறைவேற்று அலுவலரின் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வந்தால்;

(ஆ) அவர், சபையின் அபிப்பிராயத்தில், அத்தகைய அலுவலரின் கடமைகளுக்கும், பணிகளுக்கும், தத்துவங்களுக்கும் ஒத்ததாகவிராத ஏதேனும் செயலைப் புரிந்திருந்தால், ஒன்றில் இச்சட்டத்தின் நோக்கங்களை முறியடிக்கும் ஒரு முறையில்

அல்லது அதிகாரசபையின் அக்கறைகளுக்குப் பங்கமான ஒரு முறையில் செயலாற்றியிருந்தால், அல்லது வினைத்திறனற்றவராக இருந்திருந்தால்; அல்லது

(இ) சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களுக்கு இணங்கியொழுகத் தவறியிருந்தால்.

(8) பிரதான நிறைவேற்று அலுவலரின் பதவி, (7) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது இறப்பின்மேல், பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் அல்லது அப்பதவியைவகிப்பவரினால் சபைக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட அதன்சார்பிலான கடிதத்தின் மூலம் அவர் பதவிவிலகுவதன்மேல் அல்லது பத்து ஆண்டுச் சேவைக்காலப்பகுதி பூர்த்தி செய்யப்படுவதன்மேல் வறிதாக்கப்படுதல் வேண்டும்.

(9) பிரதான நிறைவேற்று அலுவலர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படின், சபையானது, நியமனமொன்று செய்யப்படும்வரை பிரதான நிறைவேற்று அலுவலரின் கடமைகளைப் புரிவதற்கு முகாமைரீதியிலான பொறுப்பை வகிக்கின்ற அதிகாரசபையின் அலுவலரொருவரைச் சபையானது நியமிக்கலாம்.

(10) ஒவ்வோராண்டினதும் நான்காவது காலாண்டின்போது பிரதான நிறைவேற்று அலுவலர், அதிகாரசபையின் குறிக்கோள் மற்றும் பணிகளை உரிய கருத்திற்கொண்டு, அடுத்தாண்டுக்கான கூட்டிணைப்புத் திட்டமொன்றை அங்கீகாரத்துக்காக சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(11) பிரதான நிறைவேற்று அலுவலருக்குச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்

அதிகார சபையின் பணியாட்டொகுதியினர்

**109**. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பிரதான நிறைவேற்று அலுவலர், அவரது தத்துவங்களையும் பணிகளையும் வினைத்திறனாகப் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும் நியமிப்பதற்கு அதிகாரமுடையவராதல் வேண்டும்.

(2) முகாமைரீதியிலான பொறுப்பு உரித்தாக்கப்பட வேண்டிய அலுவலர்களை ஆட்சேர்த்தல், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அடிப்படையின் மீது பிரதான நிறைவேற்று அலுவலரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு நியமனமும் சபையினால் ஏற்புறுதி செய்யப்படுதலும் வேண்டும்.

(3) பிரதான நிறைவேற்று அலுவலர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அதிகாரசபையின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், முகாமை ரீதியிலான பொறுப்பு உரித்தாக்கப்பட்ட அலுவலரொருவர் தொடர்பாக ஒழுக்காற்று வழிமுறையெதுவும், சபை அங்கீகாரமளித்திருந்தாலொழிய, பிரதான நிறைவேற்று அலுவலரினால் நிறைவேற்றப்படுதலாகாது.

(4) பிரதான நிறைவேற்று அலுவலர், குவமு அதிகாரசபையின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தொழில் நியதி நிபந்தனைகளைத் தீர்மானிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், முகாமை ரீதியிலான பொறுப்பு உரித்தாக்கப்பட்ட அலுவலரொருவர் தொடர்பிலான அத்தகைய நியதிநிபந்தனைகள் சபையினால் ஏற்புறுதிசெய்யப்படுதல் வேண்டும்.

(5) அதிகாரசபையின் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும், தொழிலுக்கமர்த்தப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் அதிகாரசபையின் கொடுக்கல்வாங்கல்களிலும்

அலுவல்கள் மற்றும் அவர்களின் அதேபோன்று நெருங்கிய உறவினர்களின் தனிப்பட்ட நேரடியான அல்லது நேரடியாகவிராத அக்கறையையும் அல்லது அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர் கணிசமானளவு அக்கறைகொண்டுள்ள கரிசனையையும் அதிகாரசபைக்கு எழுத்தில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

அதிகார சபைக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்

**110**. (1) பிரதான நிறைவேற்று அலுவலரின் விதப்புரையின்மீது அதிகாரசபையானது மாற்றுச்சேவையின் மீது, தற்காலிகமாக அல்லது ஒப்பந்த அடிப்படையில், எவரேனும் பகிரங்க அலுவலரின் அல்லது ஒரு நியதிச்சட்டமுறையான குழுவின் அலுவலரின் அல்லது ஊழியரினது சேவைகளை, அத்தகைய பகிரங்க அலுவலரின் அல்லது ஊழியரின் மற்றும் அவரது நியமிக்கின்ற அதிகாரியின் சம்மதத்துடன் பெற்றுக்கொள்ளலாம். அத்தகைய பகிரங்க அலுவலருக்கு, அலுவலருக்கு அல்லது ஊழியருக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியம் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) எவரேனும் பகிரங்க அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து –

(அ) அதிகாரசபைப் பணியாட்டொகுதிக்கான அவரது தற்காலிக நியமன நேரத்தில், பகிரங்க சேவையில் அவரது நிலையான பதவி, ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின்கீழ் ஓய்வூதியம் செலுத்தப்படற்பாலதென வெளிப் படுத்தப்பட்ட பதவியொன்றாக இருந்திருப்பின் -

(i) அவர், அதிகாரசபையில் தொழிலுக்கமர்த் தப்பட்டிருக்கும் வேளையில் பகிரங்கக் கொள்கை என்ற ஏதுக்களின்மீது சம்பளமின்றி வழங்கப்பட்ட லீவின்மீது பகிரங்க சேவையில் அவர் கடமைக்கு வராதிருந்தாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன்

அதற்கிணங்க அக்குறிப்புக்களின் 10(1) ஆம் பிரிவுக்கிணங்க அவருக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்; அத்துடன்

(ii) அவர்தொடர்பில், அதிகாரசபையின் தொழிலில் அவருள்ளபோது ஒவ்வொரு பூரணமான மாதத்திற்காகவும் திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுவதற்காகத் திறைசேரிக்கு அதிகாரசபையின் நிதிகளிலிருந்து, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கின்ற அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகப் பகிரங்க சேவையிலுள்ள அவரது நிலையான பதவியில் அவருக்குச் செலுத்தப்படற்காலதான சம்பளத்தின் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சாத அத்தகைய பணத்தொகையை செலுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு அவரது தற்காலிக நியமன நேரத்தில், பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்கு அவர் உதவுதொகை செலுத்துநரொருவராக இருந்திருப்பின், அதிகார சபைக்கான அவரது சேவை, அக்கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க அவர் அதிகாரசபையின் தொழிலில் இருக்கையில், அக்கட்டளைச்சட்டத்தின்கீழ் செலுத்துவதற்கு அவர் ஆளாகவிருக்கக்கூடிய அத்தகைய உதவுதொகைகளைப் பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்குத் தொடர்ந்து செலுத்துதலும் வேண்டும்; அத்துடன் அவர் தொடர்பில் அதிகாரசபையானது, ஒவ்வொரு நிதியாண்டின்

முடிவிலும் அதிகாரசபையின் நிதிகளிலிருந்து திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு, பகிரங்க சேவைச் சகாய நிதியத்திலுள்ள தோதான கணக்குக்கு வரவுவைக்கப்படுவதற்கு, அவர் தொடர்பில் அரசாங்கம் பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ளவாறான அத்தகைய உதவு தொகைக்குச் சமமானவொரு பணத்தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(3) எவரேனும் பகிரங்க அலுவலர் அதிகாரசபையின் பணியாட்தொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து –

(அ) அவர் பகிரங்க சேவையிலிருந்து நீங்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட நேரத்தில், பகிரங்க சேவையிலுள்ள அவரது நிலையான பதவி, ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின்கீழ் ஓய்வூதியம் செலுத்தப்படற்பாலதென வெளிப்படுத்தப்பட்டவொரு பதவியாக இருந்திருப்பின் -

(i) அவர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட தேதியன்று பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருப்பின் அக்குறிப்புக்களின்கீழ் அவருக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகையவோர் அளிப்புக்கு அவர் தகவுடையவராதல் வேண்டும்;

(ii) அக் குறிப்புக்களின்கீழ் வழங்கப்பட்ட அத்தகைய ஏதேனும் அளிப்பின் தொகை, அதிகாரசபையின் பணியாட்டொகுதியிலான அவரது தொழில், வயது காரணமான அல்லது சுகவீனம் காரணமான ஓய்வுபெறுகையின் மூலம்

அல்லது அத்தகைய பணியாட்டொகுதியில் அவரினால் வகிக்கப்பட்ட பதவி இல்லாதொழிக்கப்பட்டதன்மூலம் அல்லது பொது நிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் ஏதுவின்மீது முடிவுறுத்தப்பட்டாலொழிய, அவருக்குச் செலுத்தப்படுதலாகாது; அத்துடன்

(iii) அதிகாரசபையின் தொழிலில் இருக்கையில் அவர் இறக்கும் பட்சத்தில், அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு அவர் நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு நேர்முன்னர் இறந்திருப்பின் அக்குறிப்புக்களின்கீழ் அவர் தொடர்பில் வழங்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகையவோர் அளிப்பு அவர் தொடர்பில் வழங்கப்படலாம்; அத்துடன்

(இ) அவர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட நேரத்தில் பகிரங்க சேவைச் சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பகிரங்க சேவைச் சகாய நிதியத்துக்கு அவர் உதவுதொகை செலுத்துநர் ஒருவராக இருந்திருப்பின், அவர் அக்கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, பதவிநீக்கம் தவிர்ந்த வேறுவகையாக, அரசாங்கத்தின் சம்மதத்துடன் அவரது ஒப்பந்தம் தீர்மானிக்கப்பட்டதன்மேல் அரசாங்கத்தின் சேவையிலிருந்து நீங்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச்சேவையாற்ற உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனுமாளை அதிகாரசபையானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்கான ஏதேனும் சேவைக் காலப்பகுதி,

அத்தகைய ஒப்பந்தத்தின்கீழான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கருத்திலெடுக்கப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையானது வேறு ஆளணியினரின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல்

**111**. அதிகாரசபையானது, பிரதான நிறைவேற்று அலுவலரின் விதப்புரையின்மீது வழங்கப்படவேண்டிய நிர்ணயிக்கப்பட்ட தவணை ஒப்பந்தங்களின்மீது அல்லது குறித்த சில சேவைகளுக்கான ஒப்பந்தத்தின் மீது வேறெவரேனுமாட்களின் சேவைகளை அல்லது அத்தகைய ஆட்களின் சேவைகள் இச்சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அல்லது ஒரு நீதிமன்றக்கட்டளையின் நியதிகளின்படி புரியப்படுவதற்குப் பணிக்கப்பட்ட அதிகாரசபையின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு அவசியமென அதிகாரசபையானது திருப்திப்படின், பெற்றுக்கொள்ளலாம்.

அதிகார சபையின் நிதியங்கள்

**112**. (1) அதிகாரசபையானது பின்வரும் நிதியங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையின் முகாமை மற்றும் நிருவாக நிதியம் ;

(ஆ) குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமை செய்தலுக்கான நிதியம்.

(2) பின்வருவன முகாமை மற்றும் நிருவாக நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையின் பாவனைக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) சட்டநீதிமன்றங்களினால் நிதியத்துக்கு அனுப்பப்படக்கூடியவாறான எல்லாப் பணத் தொகைகளும் ; அத்துடன்

(இ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந் தான கடன்கள், மானியக்கொடைகள், கொடைகள், மரணசாதனக் கொடைகள் அல்லது நன்கொடை என்ற வகையாக அதிகாரசபையினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்:

(3) பின்வருவன குற்றச் செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல் பேணிக்காத்தல் மற்றும் முகாமை செய்வதற்கான நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் -

(அ) சட்ட நீதிமன்றங்களினால் நிதியத்துக்கு அனுப்பப்படக்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) அதிகார சபையின் பாவனைக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமை செய்தலுக்கான அதிகார சபையினால் பெறப்படக்கூடிய எல்லாப் பணத்தொகைகளும்.

(4) பின்வருவன அதிகார சபையின் முகாமை மற்றும் நிருவாக நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) அதன் நாளாந்தப் பணியாற்றுகை தொடர்பிலான செலவினமுட்பட அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கான ஏதேனும் செலவினத்தை எதிர்கொள்வதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(ஆ) சபையினதும் பிரதான நிறைவேற்று அலுவலரினதும், அலுவலர்களினதும் ஊழியர் களினதும் ஒப்பந்த அடிப்படையில் அவர்களின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள மற்றும் ஏனைய ஆட்களினதும் சம்பளங்கள், படிகள், நட்டஈடு, கட்டணங்கள் மற்றும் வேறு கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவை யேனும் கொடுப்பனவுகள்.

(5) பின்வருவன குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமை செய்தலுக்கான நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமை செய்தல் தொடர்பாகக் குறிப்பிட்ட சேவைகளை வழங்கியுள்ள ஆட்களுக்குச் செய்யப்படவேண்டிய கொடுப்பனவுகளுட்பட, அத்தகைய பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமை செய்தல் அத்துடன் அவற்றோடிணைந்த கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினால் மற்றும் ஒரு சட்ட நீதிமன்றத்தின் கட்டளைகளினாலும் அதற்குப் பொறுப்பிக்கப்பட்ட பணிகளை அதிகாரசபை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) சபையின் அங்கீகாரத்துடன் பிரதான நிறைவேற்று அலுவலரின் விதப்புரையின் மீது அதிகார சபையின் பணியாற்றுகைக்குத் தேவைப்பட்ட வருடாந்த செலவினத்தின் இருபத்தைந்து சதவீதத்தை விஞ்சாதிருக்க வேண்டிய பணத்தொகையொன்று; அத்துடன்

(இ) பின்வருவனவற்றுக்கு அவசியமான பணத் தொகைகள் உட்பட, சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவையேனும் கொடுப்பனவுகள்:-

(i) பெயர் குறிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் புலனாய்வு அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்குதல்;

(ii) இச்சட்டத்தின் குறிக்கோள்களையும் பணி களையும் எய்துவதற்கு உயர்தொழில் சார் சேவைகளை வழங்குகின்ற சட்ட அலுவலர்கள் மற்றும் வேறு சட்டத்தரணி களுக்குப் பயிற்சி வழங்குதல்;

(iii) குற்றச்செயல்களின் வரும்படிகளைக் கண்டறிவதற்கும், தேடுவதற்கும், அடையாளங் காண்பதற்கும், பரிசோதனை செய்வதற்கும் அவசியமாகக்கூடியவாறான சாதனங்களையும் நிகழ்ச்சித்திட்டங் களையும் பெறுதல்;

(iv) பணஓட்டக் கண்டறிதல், நிதிசார் பகுப்பாய்வு மற்றும் குற்றச்செயல்களின் வரும்படிகளை நடாத்தும் நோக்கத்துக்

காகப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் களினால் ஒப்பந்தமுறையில் தொழிலுக் கமர்த்தப்படக்கூடிய நிபுணர்களுக்குச் செலுத்தப்படற்பாலனவான உயர்தொழில் சார் கட்டணங்களின் கொடுப்பனவு;

(v) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்ச்சியை உருவாக்குவதற்கு அவசியமான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக;

(vi) குற்றச்செயல்களின் வரும்படிகளை வெற்றிகரமாக இழப்பித்த நிகழ்வின் மேல், பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதியினால் வகுத்தமைக்கப்பட்டவொரு திட்டத்தின் நியதிகளின்படி புலனாய்வு அலுவலர்களுக்கும், புலனாய்வின் நடாத்துகையில் உதவியுள்ள வேறு ஆளணியினருக்கும், தகவல் தருவோருக்கும் வெகுமதிகளைக் கொடுப்பனவு செய்வதற்காகப் பயன்படுத்துவதற்கு (53 ஆம் அத்தியாயமான பொலிசுக் கட்டளைச் சட்டத்தின் 73 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பொலிசு வெகுமதி நிதியத்துக்கு வரவு வைக்கப்படுவதற்கு; அத்துடன்.

(vii) குற்றச்செயல்களின் வரும்படிகளை வெற்றிகரமாக இழப்பித்த நிகழ்வின்மேல், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய் வதற்கான ஆணைக்குழுவினால் வகுத்தமைக்கப்பட்டவொரு திட்டத்தின் நியதிகளின்படி புலனாய்வு அலுவலர்களுக்கும், புலனாய்வின் நடாத்துகையில் உதவியுள்ள வேறு ஆளணியினருக்கும், தகவல் தருவோருக்கும் வெகுமதிகளைக் கொடுப்பனவு செய்வதற் காகப் பயன்படுத்துவதற்கு சொல்லப்பட்ட ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்ட வெகுமதி நிதியத்துக்கு வரவுவைப்பதற்கு;

(6) அதிகார சபையின் கடன்கள், மானியக்கொடைகள், கொடைகள், ஒப்பப்பணங்கள் அல்லது நன்கொடைகள் என்ற வகையாக எவையேனும் பணம் பெறப்படுமிடத்து, கிடைக்கச் செய்யப்பட்டனவான அத்தகைய கடன்கள், மானியக் கொடைகள், கொடைகள், ஒப்பப்பணங்கள் அல்லது நன்கொடைகள் என்பவற்றின் மூலம் மற்றும் நோக்கம் என்பன அத்தகைய பெறுவனவின் ஒரு மாதத்தினுள் அதிகார சபையின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் அத்தகைய பெறுவனவுகள் பற்றி வெளியிடுவதன் மூலம் அதிகார சபையினால் பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.

(7) பிரதான நிறைவேற்று அலுவலர், சபையின் ஏற்புறுதியுடன் குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமை செய்தல் நிதியத்திலிருந்து மற்றும் அதிகார சபையின் முகாமை மற்றும் நிருவாக நிதியத்திலிருந்து முதலீடு முகாமை மற்றும் பணங்களின் கொடுப்பனவு தொடர்பிலான திட்டங்களையும் தொடர்புபட்ட வழிகாட்டுநெறிகளையும் தயாரித்தல் வேண்டும்.

(8) அதிகார சபையின் வருடாந்த அறிக்கை, வருடாந்தக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றை உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன் இது, நிதிகளின் மூலங்கள் உட்பட அதிகார சபையினால் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

அதிகார சபையின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**113**. (1) அதிகார சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பிரதான நிறைவேற்று அலுவலர், அதிகார சபையின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும், மற்றும் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றி முறையாக கணக்குப் புத்தகங்களின் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையினதும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தினதும் ஏற்பாடுகள், அதிகார சபையின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பிரதான நிறைவேற்று அலுவலர், சபையினூடாக, ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவிலிருந்து மூன்று மாதங்களினுள், அந்நிதியாண்டின்போது அதிகார சபையினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வாண்டு தொடர்பாகப் பின்வரும் ஆவணங்களுள் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை அவ்வறிக்கையுடன் இணைக்கும்படி செய்வித்தலும் வேண்டும்:-

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து, ஆண்டுக்கான அதிகார சபையின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்;

(ஆ) அத்தகைய அறிக்கையும் கணக்குகளும் எந்த ஆண்டு தொடர்பானவையோ அந்த ஆண்டை உடனடுத்துப் பின்வரும் ஆண்டுக்காக உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளின் அறிக்கையொன்று.

(5) அமைச்சர், அத்தகைய அறிக்கையையும் ஆவணங்களையும், அவை பெறப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிக்கை மற்றும் ஆவணங்களை உத்தியோகபூர்வ மொழிகளில் அதிகாரசபையின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பகிரங்கமாக கிடைக்கப்பெறச் செய்தலும் வேண்டும்.

வழக்குகளுக்கும் சட்டத் துடர்ச்சி களுக்கும் எதிரான பாதுகாப்பு

**114**.(அ) சபையின் உறுப்பினரொருவர்;

(ஆ) அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர், அலுவலர் அல்லது எவரேனும் ஊழியர்,

என்போரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதற்காகவும், அவர், இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும்

ஒழுங்குவிதி, விதி, கட்டளை அல்லது பணிப்புரையின்கீழான அவரது கடப்பாட்டை நிறைவேற்றுவதன்போது அல்லது அது சம்பந்தமாக அல்லது அதன் கருதப்பட்ட நிறைவேற்றுகையின்போது அல்லது அது சம்பந்தமாக உரிய விழிப்புக்கவனத்தையும் நியாயமான கவனத்தையும் அவர் பிரயோகித்தாரென்றும் நல்லெண்ணத்துடன் செயலாற்றினாரென்றும் எண்பித்தால், அது ஏதேனும் குற்றவியல் அல்லது குடியியல் வழக்கு நடவடிக்கையில் எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

முகாமை மற்றும் நிருவாகத்தி லிருந்து செலுத்தப் படுதல்

**115**. சபையின் உறுப்பினரொருவரினால் அல்லது அதிகாரசபையின் வேறெவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது முகவரினால் அல்லது அத்தகைய வேறு முன்னைய உறுப்பினரினால், அலுவலரினால், ஊழியரினால் அல்லது முகவரினால், அதிகார சபையினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகார சபையின் பணிப்பின்மீது அத்தகைய அலுவலரினால் அவரது அலுவலக முறையான தன்மையில் புரியப்பட்டுள்ள ஏதேனும் செயல்தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அதிகாரசபைக்கெதிராக அல்லது அத்தகைய ஆளுக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டிருந்ததென நீதிமன்றம் தீர்த்தால், முகாமை மற்றும் நிருவாக நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அதிகார சபை முதலியனவற்றின் உறுப்பினர்கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்

**116**. (1) அதிகார சபையின் உறுப்பினர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் அதிகாரசபையின் அலுவலர்களும் ஊழியர்களும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவைகள் பெற்றுக்கொள்ளப்படும் வேறெவரேனுமாள், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்பட பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அதிகார சபையானது, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

## குற்றச்செயல்களின் முடக்கப்பட்ட வரும்படிகளை இழப்பித்தலும் தொடர்புபட்ட வழக்கு நடவடிக்கைகளும்

குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான இழப்பித்தல் பற்றிய பொது ஏற்பாடுகள்

**117.** (1) ஒரு சட்டமுறையற்ற செயற்பாடு புரியப்பட்டமை புலனாய்வு செய்யப்பட்டு இயைபான சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமைக்காகச் சந்தேகிக்கப்பட்ட தவறிழைத்தவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப் பட்டுள்ளவிடத்தும், அத்துடன் அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமைக்காக அவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்தும், பின்வருவனவற்றுக்காக அதன்பின்னர் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படலாம்:-

(அ) முடக்கப்பட்டுள்ள அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகளை இழப்பிக்கப்படு வதற்காகவும்; அல்லது

(ஆ) குற்றச்செயல்களின் வரும்படிகளினது நேரொத்த பெறுமதி அறவிடப்பட்டு இழப்பிக்கப்படு வதற்காகவும்.

(2) அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் பின்வருவோருக் கெதிராகத் தொடுக்கப்படுதல் வேண்டும்:-

(அ) இயைபான குற்றச் செயல்களின் வரும்படியை ஈட்டிய சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்துள்ளமைக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது அத்தகைய குற்றச்செயல்களின் நேரொத்த பெறுமதியைக்கொண்ட ஆதனத்தின் உடைமையை, கட்டுப்பாட்டை

அல்லது ஆதிக்கத்தைக் கொண்டிருந்த ஆளுக்கெதிராகவும்; அல்லது

(ஆ) இயைபான குற்றச்செயல்களின் வரும்படிகள் வேறெந்த ஆளிடமிருந்து அறவிடப்பட்டதோ அந்த வேறெவரேனும் ஆளுக்கெதிராகவும்.

(3) குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளின்கீழ் இழப்பித்தலுக்கான வழக்கு நடவடிக்கைகள், நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாட்டின் தவறாளருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதனையடுத்துத் தொடங்குதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்புக்கெதிரான மேன்முறையீடு ஏதேனுமிருப்பின், அதன் தீர்மானம்வரை காத்திருக்கவேண்டிய தேவையிருக்காது:

ஆயின், எவ்வாறாயினும், மேன்முறையீடொன்று கோப்பிடப்படின், மற்றும் குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளையடுத்து, ஆதனம் இழப்பிக்கப்படின், இழப்பித்தற் கட்டளை, மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை நடைமுறைப்படுத்தப்படு தலாகாதென்பதுடன் குற்றத்தீர்ப்பு மேன்முறையீட்டில் உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே நிறைவேற்றப்படுதலும் வேண்டும்:

ஆயின், மேலும், -

(அ) விளக்கமானது குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத் தீர்ப்பை விளைவிக்காதிருப்பின் ; அல்லது

(ஆ) குற்றத்தீர்ப்புக்கெதிரான மேன்முறையீடு வெற்றிகரமாகவிருப்பின், மற்றும் குற்றத்தீர்ப்பு புறத்தொதுக்கப்படின்,

சட்டத்துறைத் தலைமையதிபதி, குற்றச்செயல்களின் வரும்படிகளென நம்பப்படும் ஆதனம் தொடர்பில் அத்தகைய அல்லது அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படியின்

நேரொத்த பெறுமதியைக்கொண்ட ஆதனம் தொடர்பில் குற்றதீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்களை ஆரம்பிக்கலாம்.

குற்றச்செயல் களின் வரும் படிகளினது பெறுமதிக்கான தண்டமொன்று

**118**. (1) ஏதேனும் சட்ட முறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமைக்காக எவரேனுமாளின் குற்றத்தீர்ப்பையடுத்து, அத்தகைய ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளித்த நீதிமன்றம் இயைபான சட்டத்தில் அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டுக்காகக் குறித்துரைக்கப்பட்ட தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, சட்டமுறையற்ற செயற்பாடு புரியப்பட்ட நேரத்தில் வழிவந்த குற்றச்செயல்களின் வரும்படியான பெறுமதிக்கும் அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளினைப் பயன்படுத்தியதால் வழிவந்த ஏதேனும் பெறுமதிக்கான தண்டமொன்றை விதிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், மேலே ஏற்பாடு செய்யப்பட்டவாறு தண்டக்கொடுப்பனவற்றுக்கான ஒரு கட்டளை, அச்சட்டமுறையற்ற செயற்பாடு இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்றதேதிக்கு முன்னர் புரியப்பட்டிருப்பின், ஆக்கப்படுதலாகாது :

ஆயின்,மேலும்,அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் அல்லது அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளினது நேரொத்த பெறுமதிக்கான ஆதனம் இச் சட்டத்தின் நியதிகளின்படி கைப்பற்றப்பட்டிருப்பின் அல்லது முடக்கப்பட்டிருப்பின் அல்லது இச் சட்டத்தின் நியதிகளின்படி இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளுக்கு அமைந்தவையாகவிருப்பதற்கு வேறுவகையில் கிடைக்கக் கூடியவனவாகவிருப்பின், மேலே ஏற்பாடு செய்யப்பட்டவாறு தண்டக் கொடுப்பனவொன்றுக்கான ஒரு கட்டளை ஆக்கப்படுதலாகாது.

(2) (ஓ) என்னும் உட்பிரிவின் நியதிகளின்படி விதிக்கப்பட்ட தண்டம், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அடங்கியுள்ள குற்றப்பணங்களை அறவிடுதல்

தொடர்பிலான அறவீட்டு வழக்கு நடவடிக்கைகள் என்ற வடிவத்தில் அறவிடப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிவதிலிருந்து வழிவந்த குற்றச்செயல்களின் வரும்படிகள் எவரேனுமாளின் தனிப்பட்ட ஆதனமாகவிருந்திருப்பின், மற்றும் அப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தண்டம், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்பட்டிருப்பின், குற்றச்செயல்களின் வரும்படிகளுக்கு உரித்துடைய அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகையை விடுவிப்பதற்காக நீதிமன்றம் கட்டளையாக்குதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான தண்டம் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் முழுமையாகச் செலுத்தப்படின், சட்டத்துறைத் தலைமையதிபதி, குற்றச்செயல்களின் இயைபான வரும்படிகளின் குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான இழப்பித்தலுக்கான வழக்கு நடவடிக்கைகளை தொடுப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(5) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான தண்டம் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் முழுமையாகச் செலுத்தப்படாவிடின், சட்டத்துறைத் தலைமையதிபதி, எஞ்சியுள்ள பணத்தொகை தொடர்பில் இயைபான குற்றச்செயல்களின் வரும்படிகளினது குற்றத்தீர்ப்புக்கு பின்னரான வழக்கு நடவடிக்கைகளை தொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான இழப்பித்தலுக் காகச் சட்டத் துறைத் தலைமையதிபதி வழக்கு நடவடிக்கை களைத் தொடுத்தல்

**119**. (1) ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமைக்காக ஒரு விளக்க நீதிமன்றத்தினால் ஆளொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதனை யடுத்து அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிவதிலிருந்து வழிவந்த குற்றச்செயல்களின் வரும்படிகளென நம்பப்படும் அடையாளங் காணப்பட்ட ஆதனம் அல்லது அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளினது நேரொத்த பெறுமதிக்கான ஆதனம் உள்ளவிடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி,

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள், அத்தகைய குற்றத்தீர்ப்புக்கெதிராகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர் மேன்முறையீடொன்றைக் கோப்பிட்டுள்ளமை எவ்வாறிருப்பினும் பின்வருவனவற்றுக்காக இச்சட்டத்தின் கீழ் விசாரணையொன்றை நடாத்துவதற்கு அத்தகைய நீதிமன்றத்தைப் பிரேரித்து இயைபான விளக்க நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கலாம்:-

(அ) பின்வருவனவற்றுக்கான இழப்பித்தலுக்காக-

(i) அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகள்;

(ii) அத்தகைய குற்றச்செயலின் வரும்படி களினது நேரொத்த பெறுமதியாகவுள்ள ஆதனம்;

(iii) குற்றச்செயல்களின் வரும்படிகளின் நீதிமுறை முடக்கலையடுத்து அவற்றின் விடுவிப்புக்குப் பதிலாக நீதிமன்றத்துக்குச் சமர்பிக்கப்பட்ட பிணைப்பொறுப்பு; அல்லது

(vi) இழப்பித்தல், வழக்கு நடவடிக்கைகள் முடிவுறும்வரை குற்றச் செயல்களின் வரும்படிகளைக் கையாளு கின்றமையிலான பண வகையான வரும்படிகள்; அத்துடன்

(ஆ) அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகள், அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளின் நேரொத்த பெறுமதிக்கான ஆதனம், பிணைப்பொறுப்பு அல்லது குற்றச் செயல்களின் வரும்படிகளினது கையாளுகையிலான

வரும்படிகள் என்பன, சட்டமுறையற்ற செயற்பாட்டுக்கு இயைபான பலியாக்கப்பட்டவர் எவரேனுமிருப்பின், அவருக்கு விடுவிக்கப்படுவதற்கானவொரு பணிப்பு:

ஆயின், எவ்வாறாயினும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தீர்ப்பையடுத்து விளக்க நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பை விதிக்கும்போது, இயைபான குற்றச்செயல்களின் வரும்படிகளின் பெறுமதிக்குக் குறையாதவொரு தொகைக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஏற்புடையற்பாலதான சட்டத்தின் கீழ் தண்டமொன்றை விதித்திருப்பின், சட்டத்துறைத் தலைமையதிபதி, குற்றச்செயல்களின் வரும்படிகளினது குற்றத்தீர்ப்புக்குப்பின்னரான இழப்பித்தலுக்காக இச்சட்டத்தின் கீழ் வழக்கு நடவடிக்கைகள் தொடுப்பதற்கு உரித்துடையவராதலாகாது;

ஆயின், மேலும், இயைபான குற்றச்செயல்களின் வரும்படிகள், இரண்டாம்நிலை அல்லது தொடர்ச்சியான வரும்படிகளைத் தோற்றுவிக்கமுடியுமான தன்மையினவாகவுள்ளனவென நீதிமன்றம் தீர்மானித்தால், சட்டத்துறைத் தலைமையதிபதி, குற்றச்செயல்களின் வரும்படிகளினது குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான இழப்பித்தலுக்காக இச்சட்டத்தின் கீழ் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல் வேண்டும்.

(2) சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்துள்ளமைக்காக ஆளொருவருக்கு குற்றத்தீர்ப்பளித்த விளக்க நீதிமன்றம், பின்வருவனவற்றுக்காக (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பமொன்றையும் இதன்கண் ஏற்பாடு செய்யப்பட்டவாறான பின்வரும் விசாரணையையும் ஏற்றுக்கவனிப்பதற்கு நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) பின்வருவனவற்றை இழப்பித்ததற்கான கட்டளையை ஆக்குதல் -

(i) அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகள் ;

(ii) அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளினது நேரொத்த பெறுமதியாகவுள்ள ஆதனம் ;

(iii) குற்றச்செயல்களின் வரும்படிகளின் நீதிமுறை முடக்கியிருந்த அவற்றின் விடுவிப்புக்குப் பதிலாக நீதிமன்றத்துக்குச் சமர்பிக்கப்பட்ட பினைப்பொறுப்பு ; அல்லது

(vi) இழப்பித்தல் முடிவுறும்வரை குற்றச் செயல்களின் வரும்படிகளைக் கையாளுகின்றமையிலான வரும்படிகள் ; அல்லது

(ஆ) அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகள் அல்லது அத்தகைய குற்றச்செயல்களின் வரும்படிகளினது அத்தகைய நேரொத்த பெறுமதிக்கான ஆதனம், பிணைப்பொறுப்பு அல்லது கையாளுகையினாலான வரும்படிகள், சட்டமுறையற்ற செயற்பாட்டின் இயைபான பலியாக்கப்பட்டவருக்கு விடுவிக்கப்படுவதற்கானவொரு பணிப்பு.

வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற் கான முறை

**120**. (1) நூற்றி பத்தொன்பதாம் பிரிவின் நியதிகளின்படி வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தலானது, முறையாக மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட அவசியமான ஆதாரப்படுத்தும் சான்றுடன் சேர்த்து ஒரு மனுவையும் சத்தியக்கடதாசியையும் கோப்பிடுவதன் மூலம் நிறைவேற்றப்படுதல் வேண்டும். வேறேதேனும் சட்டத்தில் முரணாக எவ்வாறிருப்பினும், சத்தியக்கடதாசியானது மனுவில் அடங்கியுள்ள உறுதிக்கூற்றுக்களுடன்

பரிச்சயமாகவுள்ள ஆளொருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும் அல்லது சத்தியம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 192 அல்லது 241 ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றிக் குற்றஞ்சாட்டப் பட்டவருக்கெதிரான விளக்கம் தொடங்கப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டவர் இல்லாதிருக்கையில் நடாத்தப் பட்டிருந்தமை எவ்வாறிருப்பினும், சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதி உரித்துடையவராதல் வேண்டும்.

(3) விளக்கத்தின் போது தலைமறைவாகியிருந்த குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவரொருவர், விளக்க நீதிமன்றத்தின் முன்னர் தோன்றத் தவறியமையை ;

(i) அவர் விளக்க வழக்கு நடவடிக்கைகள் பற்றி அறியாதிருந்தமை காரணமாக; அல்லது

(ii) அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காக ஏற்பட்டதென,

நிலைநாட்டியிருந்தாலொழிய, சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் விசாரணையின் விடயப்பொருளாகவுள்ள ஆதனத்தின் விடுவிப்புக்காக உரிமைக்கோரிக்கையொன்றை முன்வைப் பதற்கு அல்லது வழக்கு நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்துள்ளமை எவ்வாறிருப்பினும், சட்டத்துறைத் தலைமையதிபதி இப்பாகத்தின்கீழ் வழக்கு நடவடிக்கைகளை தொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், சட்டத்துறைத் தலைமையதிபதி, இறந்த குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவரின், விடயத்துக்கேற்ப, மரபுரிமையாளர், நிருவாகி அல்லது நிறைவேற்றுநர் எவரேனுமிருப்பின் அவரைப் பிரதிநிதி யொருவராக எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(5) சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்துள்ளமைக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் பிரதிவாதியொருவராக எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும். அத்தகைய ஆதனம் எந்த ஆளின் உடைமையிலிருந்து அல்லது ஆதிக்கத்திலிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த எவரேனும் ஆள் ஆதனத்தின் நீதிமுறை முடக்கலுக்கான வழக்கு நடவடிக்கைகளின் போது அத்தகைய ஆதனம் தொடர்பில் உரிமைக் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ள வேறெவரேனும் ஆள் பிரதிவாதிகளாக எடுத்துக்காட்டப்படுதல் வேண்டுமென்பதுடன் அது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை உள்ளடக்குதலும் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகள் பற்றிய அறிவித்தல்

**121**. குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னரான இழப்பித்தலுக்காக வழக்குக் கோப்பிடப்பட்டதனையடுத்து, நீதி மன்றம், பின்வருவனவற்றை செய்யும்படி சட்டத்துறைத் தலைமையதிபதியைப் பணித்தல் வேண்டும்:-

(அ) நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் அறிவித்தலொன்றை வெளியிடுவதற்கும்;

(ஆ) சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்ததன் காரணமாகக் குற்றச்செயல்களின் வரும்படிகள் இழக்கச் செய்யப்பட்டுள்ள குற்றச்செயல்களின் எவரேனும் பலியாக்கப்பட்டவருக்கான அறிவித்தலுடன் சேர்த்து விண்ணப்பத்தின் பிரதியொன்றைச் சேர்ப்பிப்பதற்கும்;

(இ) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ் சாட்டப் பட்டவருக்கும் ஆதனம் தொடர்பில்

உரிமைக் கோரிக்கைகள் முன் வைத்திருக்கக் கூடிய அத்தகைய வேறு ஆட்களுக்கும், பிரச்சினையிலுள்ள ஆதனம் ஏன் இழப்பிக்கப் படுதலாகாதெனக் காரணம் ஏதேனுமிருப்பின், அதனைக்காட்டும்படி அத்தகைய ஆட்களைக் கோருகின்றதும் அத்தகைய காரணம் எத்தேதிக்கு முன்னர் நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட வேண்டுமோ அத்தேதியை அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்றதுமான அறிவித்தலொன்றுடன் சேர்த்து விண்ணப்பத்தைச் சேர்ப்பிப்பதற்கும்; அத்துடன்

(ஈ) அறிவித்தலொன்றின் பிரதியொன்றை இயைபான ஆதனத்தைப் பாதுகாப்பதற்கும், பேணிக்காப்பதற்கும், முகாமைசெய்வதற்கும் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட அதிகார சபைக்கும், பெறுநருக்கும் அல்லது விசேட முகாமையாளருக்கும் எவரேனுமிருப்பின் அறிவித்தலின் பிரதியொன்றைச் சேர்ப்பிப்பதற்கும்.

ஆட்சேபனைகள் பற்றிய கூற்று

**122**. (1) இழப்பிக்கப்படுவதற்கு நாடப்பட்ட, குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர், எவரேனுமிருப்பின், அவருட்பட வழக்குக்கான பிரதிவாதியொருவராகவுள்ள எவரேனும் திறத்தவர் அல்லது ஆதனத்தை உரிமைகோருவதற்குச் சட்ட உரித்துடைமைகொண்ட வேறெவரேனும் திறத்தவர், 121 ஆம் பிரிவின்கீழான அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள், பின்வருவன பற்றி நீதிமன்றத்தைத் திருத்திப்படுத்தும் நோக்கத்துக்காக ஒரு சத்தியக்கடதாசியுடனும் உரிய முறையில் செயலொன்று உறுதிப்படுத்தப்பட்ட ஆதாரப்படுத்துகின்ற சான்றுடனும் ஆட்சேபனைகள் பற்றிய கூற்றொன்றைக் கோப்பிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) ஆதனம் இழப்பிக்கப்படுதலாகாதென்றும்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆதனம் இயைபான உரிமை கோரிக்கையாளருக்கு விடுவிக்கப்படுதல் வேண்டுமென்றும்.

(2) பிரதிவாதிகளுள் அல்லது உரிமைக்கோரிக்கை யாளர்களுள் ஒருவர் அல்லது அதற்கதிகமானோர் ஆட்சேபனைகள் பற்றிய கூற்றைக் கோப்பிடுமிடத்து, மனுதாரர், வேறேதேனும் ஆதாரப்படுத்துகின்ற சான்றுடன் சேர்த்து எதிர் ஆட்சேபனைகளைக் கோப்பிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**123**. (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படியான விசாரணையொன்று சத்தியக்கடதாசி மற்றும் ஆவணமுறையான சான்றின் பரிசோதனையின் மூலம் நடாத்தப்படுதல் வேண்டும்: விசாரணை

ஆயின், எவ்வாறாயினும், பதியப்படவேண்டிய காரணங் களுக்காக, நீதிமன்றம், விதிவிலக்கான சூழ்நிலைகளில் வாய்மொழிமூலமான மற்றும் ஆவணமுறையான சான்றை முன்வைப்பதனை அனுமதிக்கலாம்; இப்பட்சத்தில், சான்றுக் கட்டளைச் சட்டத்தில் அடங்கியுள்ளவாறான சாட்சிகளை விசாரணை செய்தலும் ஆவணமுறையான சான்றை முன்வைத்தலும் தொடர்பிலான விதிகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட விடயங்கள் கோப்பிடப்படு வதனையடுத்து, நீதிமன்றம், கருமங்களை விசாரணைக் கெடுத்தல் வேண்டும். விண்ணப்பம் எவ்வாதனம் தொடர்பில் கோப்பிடப்பட்டுள்ளதோ அவ்வாதனம், தொடர்பில் ஆளொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள குற்றச்செயல்களின் வரும்படியொன்றாகவுள்ள நீதி மன்றத்தைத் திருப்திப்படுத்துவதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதி முதற்றோற்றளவிலான வழக்கொன்றைச் சமர்பித்துள்ளாராவென்பதை நீதிமன்றம் ஆரம்பத்தில் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய கண்டுபிடிப்பைச் செய்யும் நோக்கத்துக்காக, நீதிமன்றம் பின்வருவனவற்றைக் கவனத்துட் கொள்ளலாம்:-

(அ) விளக்கத்தின் போது நீதிமன்றத்தின் முன்னர் இடப்பட்ட சான்று,

(ஆ) சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 25 ஆம், மற்றும் 26 ஆம் பிரிவுகளிலும் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 110 ஆம் பிரிவிலும் முரணாக எது எவ்வாறிருப்பினும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் அளிக்கப்பட்ட கூற்றுக்களுட்பட, சட்டமுறையான செயற்பாட்டைப் புரிந்தமை பற்றிய புலனாய்வின் போது பதியப்பட்ட கூற்றுகளுக்குட்பட புலனாய்வுகள் பற்றிய குறிப்புக்கள் ;

(இ) சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமைக் காகக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட விளக்க நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட தீர்ப்பு ; அத்துடன்

(ஈ) நீதிநலனைக் கவனத்துட்கொண்டு அவசியமென நீதிமன்றம் கருதவேண்டிய வேறேதேனும் சான்று.

(3) விசாரணையின் பின்னர், சட்டத்துறைத் தலைமை யதிபதி முதற்றோற்றவளவிலான வழக்கொன்றைச் சமர்ப்பித்துள்ளாரென நீதிமன்றம் திருப்திப்படின், சட்டத்துறைத் தலைமையதிபதியின் விண்ணப்பம் ஏன் அனுமதிக்கப்படலாகாதென்றும் ஆகவே ஆதனமானது ஏன் இழப்பிக்கப்படுதலாகாதென்றும் காரணங்காட்டும்படி பிரதிவாதிகளைக் கோருதல் வேண்டும்.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதி முதற்றோற்றளவிலான வழக்கொன்றைச் சமர்பித்துள்ளாரென நீதிமன்றம் திருப்திப்படாதவிடத்து, நீதிமன்றம், காரணம் காட்டும்படி பிரதிவாதிகளைக் கோரல் விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் நியதிகளின்படி இயைபான ஆதனம் தொடர்பில்

முன்னர் ஆக்கப்பட்ட நீதிமுறை முடக்கக் கட்டளை ஏதேனுமிருப்பின், அதனை வறிதாக்கி கட்டளை ஆக்குதலும் வேண்டும். ஆதனத்துக்கு உரித்துள்ள திறத்தவருக்கு அத்தகைய ஆதனத்தை விடுவிப்பதற்கான பொருத்தமான கட்டளையொன்றை நீதிமன்றம் ஆக்குதலும் வேண்டும்.

(5) பிரதிவாதிகள் காரணங்காட்டுமிடத்து, நீதிமன்றம் அக்கருமம்பற்றி மேலதிக விசாரணையை நடாத்துதல் வேண்டும்.

(6) விசாரணையையடுத்து, இழப்பித்தலுக்கான விண்ணப்பம் எந்த ஆதனம் தொடர்பில் கோப்பிடப்பட்டதோ அந்த ஆதனம் பின்வருமாறல்லதென நிகழ்தகவுச் சமநிலைகளின் மீது நீதிமன்றம் திருப்திப்படின், ஆதனத்தின் வைப்பிலிடப்பட்ட பிணைப்பொறுப்பின், அல்லது விளக்கம் முடிவுறுத்திருக்கும் வரை ஆதனத்தின் கையாளுகையிலுள்ள வரும்படிகளின் இழப்பித்தலுக்காக அல்லது அத்தகைய விண்ணப்பம் எந்த இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் செய்யப்பட்டுள்ளதோ அந்த இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளுக்காகக் கட்டளை ஆக்குதல் வேண்டும்:-

(அ) குற்றச்செயலின் வரும்படிகள் ; அல்லது

(ஆ) குற்றச்செயல்களின் வரும்படிகளின் நேரொத்த பெறுமதியைக்கொண்ட ஆதனம் ; அல்லது

(இ) அத்தகைய ஆதனத்தின் உடைமையை எடுப்பதற்குச் சட்ட உரித்துடைமையையுடைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் பலிக்குட் பட்டவரெவரும் அல்லது உரிமைக் கோரிக்கையாளரெவரும் இல்லையென்று,

(7) விசாரணையையடுத்து, விண்ணப்பத்துக்கான பிரதிவாதி அல்லது உரிமைக்கோரிக்கையாளர், வழக்கு நடவடிக்கைகள் எந்த ஆதனம் தொடர்பில் தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆதனத்துக்குச்

சட்டமுறையான உரிமைக்கோரிக்கையொன்றைக் கொண்டு உள்ளாரென நீதிமன்றம் நிகழ்தகவுச் சமநிலையின் மீது திருப்திப்படின், ஆதனத்தை அல்லது அதன் பெறுமதியை அத்தகைய திறத்தவருக்கு விடுவிப்பதற்காக நீதிமன்றம் கட்டளையாக்குதல் வேண்டும்.

(8) (அ) விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்வதற்காக;

(ஆ) ஆதனத்தை இழப்பிப்பதற்காக; அல்லது

(இ) பிரதிவாதிக்கு அல்லது உரிமைக் கோரிக்கையாளருக்கு ஆதனத்தை விடுவிப்பதற்காக,

இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளையொன்று இறுதிக் கட்டளையொன்றாக்க கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கட்டளையினால் இன்னலுற்ற எவரேனும் திறத்தவர், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அடங்கியுள்ள நடவடிக்கைமுறையைப் பின்பற்றி அத்தகைய கட்டளைத்தேதியிலிருந்து பதினான்கு நாட் காலப்பகுதியொன்றினுள் அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(9) ஆதனத்தின் இழப்பித்தலுக்கான அல்லது விடுவிப்புக்கான கட்டளையை ஆக்குகின்ற நீதிமன்றம், அத்தகைய கட்டளைக்கான காரணங்களைப் பதிதல் வேண்டும்.

(10) குற்றச்செயல்களின் வரும்படிகளை இழப்பித்தல் பற்றிய தீர்மானமொன்றுக்குச் இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படியான வழக்கு நடவடிக்கைகள், இயைபான ஆதனம் விளக்கம் முடிவுறும்வரை கையுதிர்க்கப்பட்டு அதன் பெறுமதி அறவிடப்பட்டுள்ளமை எவ்வாறிருப்பினும், நடாத்தப்படலாம்.

(11) இச்சட்டத்தின் இப்பாகத்தினது நியதிகளின்படியான வழக்கு நடவடிக்கைகள், சட்டமுறையற்ற செயற்பாட்டைப்

புரிந்தமை மூலம் வழிவந்த நிதிசார் நன்மைகளின் பெறுமதியை அறவிடுவதற்காக நடாத்தப்படலாம்.

(12) பின்வருவன எவ்வாறிருப்பினும், குற்றச்செயல்களின் வரும்படிகளை அல்லது குற்றச்செயல்களின் அத்தகைய வரும்படிகளின் நேரொத்த பெறுமதியைக்கொண்ட ஆதனத்தைச் இழப்பித்ததற்காக சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி விளக்க நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்வது சட்டத்துறைத் தலைமை யதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) இச் சட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் சட்டமுறையற்ற செயற்பாடு புரியப்பட்டுள்ளமை ; அல்லது

(ஆ) பிரச்சினையிலுள்ள ஆதனம் இச் சட்டத்தின் நியதிகளின்படி தடைசெய்யப்பட்டிராமை, கைப் பற்றப்பட்டிராமை அல்லது முடக்கப்பட்டிராமை.

(13) ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழும் அதன் நியதிகளின் படியும் தவறொன்றாக அமைகின்ற சட்டமுறையற்ற செயற்பாடொன்றினைப் புரிந்துள்ளமைக்காக ஆளொரு வருக்குக்குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து,இச்சட்டத்தின் இப்பாகத்தில் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட உரித்துடமை, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஆணைக்குழுவின் பணிப்பின் மீது அல்லது இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கோரிக்கையின்பேரில் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனும் சட்டத்தரணியொருவரினால் அல்லது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 65 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய

ஆணைக்குழுவின் பணிப்புகளின் மீது பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(14) இச்சட்டத்தின் இப் பாகத்தின் கீழ் வழக்கு நடவடிக்கைகளின் போது, நீதிமன்றத்தின் முன்னர் இடப்பட்ட சான்றின் மீதும் நீதிமன்றத்தினால் கோரப்பட்டுப் பரிசோதனை செய்யப்பட்ட மேலதிகச் சான்று ஏதேனுமிருப்பின் அதன் மீதும் நீதிமன்றம், எந்த ஆதனம் தொடர்பில் இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆதனம் பகுதியளவில் குற்றச்செயல்களின் வரும்படிகளைக் கொண்டுள்ளதென்றும் பகுதியளவில் குற்றச்செயல்களின் வரும்படிகளாக அமையாத ஆதனத்தைக் கொண்டுள்ளதென்றும் திருப்திப்படின், நீதிமன்றம், அத்தகைய ஆதனத்தின் ஒரு பெறுமான மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் குற்றச்செயல்களின் வரும்படிகளாக அமைகின்ற அத்தகைய ஆதனத்தின் நூற்றுவீதம் பெறுமதியைத் தீர்மானித்தலும் வேண்டும்; அத்துடன் குற்றச்செயல்களின் வரும்படிகளாக அமைகின்ற அத்தகைய பெறுமதி தொடர்பில் மட்டுமே இழப்பித்தலுக்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(15) அத்தகைய ஆதனம் தொடர்பில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட திறத்தவர்கள் உரிமைக் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளவிடத்து, மற்றும் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக நிகழ்தகவு சமநிலையொன்றின்மீது அத்தகைய உரிமைக்கோரிக்கையை நிலைநாட்டினால், குற்றச்செயல்களின் வரும்படிகளுடன் தொடர்புபடாத அத்தகைய நிலைநாட்டப்பட்ட உரிமைக்கோரிக்கைக்கு நேரொத்த அத்தகைய ஆதனத்தின் நூற்றுவீதப் பெறுமதி அத்தகைய உரிமைக்கோரிக்கையாளரின் உரித்துடைமையாக வருதல் வேண்டுமென நீதிமன்றம் பணித்தல் வேண்டும்.

(16) இச் சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அத்தகைய ஆதனத்தின் கையுதிர்ப்பைப் பணித்தல் வேண்டுமென்பதுடன் அதன் பெறுமதியைத் தேறிப்பெற்றதன் மேல் உரிமைக்கோரிக்கையாளருக்கு நீதிமன்றத்தினால்

தீர்மானிக்கப்பட்ட பணத்தொகையில் கொடுப்பனவு செய்வதற்கு நீதிமன்றம் பதிவாளரைப் பணித்தலும் வேண்டும். அத்துடன் அரசுக்கு இழப்பிக்கப்படுவதற்கும் குற்றச்செயல்களின் வரும்படிகளினது நூற்றுவீதம் பெறுமதிக்கு நேரொத்த எஞ்சியுள்ள பணத்தொகை இழப்பிக்கப்படுவதனைப் பணித்தலும் வேண்டும்.

பெறுமதி அடிப்படையிலான இழப்பித்தல்

**124**. (1) ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமைக்காக ஆளொருவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்பட்டுக் குற்றந்தீர்ப்பளிக்கப்படுவதனையடுத்து, அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள்-

(அ) அத்தகைய ஆதனத்தை அடையாளங்கண்டு கண்டறிவதற்கான விழிப்புக்கவனமாக முயற்சிகள் எவ்வாறிருப்பினும், கண்டறியப்பட்டிருக்கவில்லை அல்லது குறிப்பாக அடையாளப்பட்டிருக்கவில்லை எனத் தோன்றினால்;

(ஆ) அழிக்கப்பட்டுள்ளன, அழிந்துபோயுள்ளன அல்லது பெறுமதியற்றனவாக வந்துள்ளன எனத் தோன்றினால்;

(இ) கணிசமானளவு மாற்றப்பட்டுள்ளன எனத் தோன்றினால்;

(ஈ) விற்பனை செய்யப்பட்டுள்ளன எனத் தோன்றினால்;

(உ) வேறு ஆதனத்துடன் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளவை ஆதலால் தனிவேறாக்கப்படுவதற்கு இயலாதுள்ளன அல்லது சிரமமாகவுள்ளன எனத் தோன்றினால்;

(ஊ) இலங்கைக்கு வெளியே கைமாற்றப்பட்டுள்ளன எனத் தோன்றினால்;

(எ) பணம் தூய்தாக்கலுக்கு வேறுவகையாக அமைந்தனவாக்கப்பட்டுள்ளன எனத் தோன்றினால்;

(ஏ) ஒரு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவரினால் அல்லது அத்தகைய வேறு ஆளினைப் பயன்படுத்தப்பட்டிருந்தால் இனிமேல் கிடைக்கக்கூடியனவல்ல எனத் தோன்றினால்;

(ஐ) எத்தகையதுமான எக்காரணத்துக்காக வேனும் மாற்றத்துக்குட்பட்டதனால் அவற்றின் பெறுமதி குறிப்பிடத் தக்கதல்லாதவொரு ஒவ்வொரு தொகைக்குக் குறைந்துள்ளன அல்லது அதன் தொடக்கப் பயன்பாட்டு அல்லது வர்த்தகப் பெறுமதியை இழந்துள்ளன எனத் தோன்றினால்;

(ஒ) பணவகையில் அளவிடத்தக்க ஒரு நன்மை, ஒரு ஈட்டுகை, ஒரு சேவை அல்லது ஓர் அனுகூலம் என்ற வடிவத்தை ஏற்றுள்ளன எனத் தோன்றினால்;

(ஓ) அத்தகைய நடவடிக்கை தேசியப் பொருளாதாரத்தின் மீது ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தை அல்லது நல்லெண்ணத்துடனான மூன்றாந் திறத்தவரின் அக்கறைகளின் மீது பாதகமான தாக்கத்தை விளைவிக்கின்ற இயல்திறனைக் கொண்டிருப்பதன் காரணமாகக் கைப்பற்றப்பட்டிருக்கவில்லை அல்லது முடக்கப்பட்டிருக்கவில்லை எனத் தோன்றினால்; அல்லது

(ஔ) இலங்கைச் சனநாயகக் சோசலிசக் குடியரசின் நியாயாதிக்கத்துக்கு வெளியே யுள்ளவோர் இடத்தில் கிடைக்கக் கூடியன வாகவுள்ளன எனத் தோன்றினால்,

சட்டத்துறைத் தலைமையதிபதி பின்வருவனவற்றுக்கு நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:-

(i) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ் சாட்டப்பட்டவர் ‘பதிலீடு செய்யப்பட்ட பண இழப்பித்தல்’ எனவழைக்கப்படும் கட்டளையொன்றுக்காகச் செலுத்தப்பட வேண்டிய குற்றச்செயல்களின் வரும்படி களின் பெறுமதியாகவுள்ளதெனத் தீர்மானிக்கப்பட்டவாறான பணத்தொகை யொன்றைச் செலுத்துவதற்காகவும் ; அல்லது

(ii) ‘பதிலீடு செய்யப்பட்ட ஆதன இழப்பித்தல்’ எனவழைக்கப்படும் ஒப்பிடத்தக்க பணப்பெறுமதியாகவுள்ள குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆதன மொன்றின் இழப்பித்தலுக்கான கட்டளை யொன்றுக்காகவும்.

(2) (அ) ‘பதிலீடுசெய்யப்பட்ட ஆதன இழப்பித்தல்’ கட்டளைக்கும் ‘பதிலீடு செய்யப்பட்ட பண இழப்பித்தலின்’ பணப்பெறுமதிக்கும் அமைந்ததாக்கப்பட வேண்டிய ஆதனத்தின் பெறுமதியைத் தீர்மானிக்கும்போது, நீதிமன்றம், காலங்களின் காரணமாகக் குற்றச்செயல்களின் தொடக்க வரும்படிகளின் பெறுமதியினது அதிகரிப்பை அல்லது ஏற்றத்தாழ்வை மற்றும் குற்றச்செயல்களின் அத்தகைய வரும்படிகளின் முதலீட்டு அல்லது தொழில் நோக்கங்களுக்கான இயல்திறனை நீதிமன்றம் கணக்குக்கு எடுக்கலாம்.

(ஆ) அத்தகைய நோக்கத்துக்காக, சட்டத்துறைத் தலைமையதிபதி, அத்தகைய இழப்பித் தலுக்கு அமைந்ததாக்கப்படக்கூடிய குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஆதனத்தை அடையாளங் காண்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளுடன் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, ஏற்ற மாற்றங்களுடன் குற்றத்தீர்ப்பின் பின்னரான இழப்பித்தல் நடவடிக்கைமுறை தொடர்பான நடவடிக்கைமுறையாதல் வேண்டும்.

(4) குற்றச்செயல்களின் வரும்படிகளுக்கு ஒப்பிடத்தக்க பெறுமதியைக்கொண்ட குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ் சாட்டப்பட்டவரின் ஆதனமொன்றை அடையாளங் காண்பதற்கு இயலாதிருப்பின், நீதிமன்றம் சட்டத்துறைத் தலைமையதிபதியினாலான விண்ணப்பத்தின் மீது, குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவரை அவரது ஆதனங்களை பற்றிய சத்தியஞ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றைச் செய்யும்படி பணிக்கலாம். அத்தகைய வெளிப்படுத்துகையைச் சமர்பித்து கவனத்துட்கொண்டதனையடுத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி, சொல்லப்பட்ட வெளிப்படுத்துகையில் அடங்கியுள்ள தகவலின் அடிப்படையில் ஒப்பிடத்தக்க பெறுமதியைச் கொண்ட குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஏதேனும் ஆதனத்தை இழப்பித்தற்காக மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கை முறையின் நியதிகளின்படி விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(5) மேற்கூறப்பட்ட வெளிப்படுத்துகை ஒப்பிடத்தக்க பெறுமதியைக்கொண்ட ஏதேனும் ஆதனம் தொடர்பிலான தகவலைக் கொண்டிராதிருப்பின், நீதிமன்றம் சட்டத்துறைத்த தலைமையதிபதியின் விண்ணப்பத்தின் மீது குற்றச்செயல்களின் வரும்படிகளினது பெறுமதிக்குச் சமமான பணத்தொகையொன்றைச் செலுத்துவதற்குக்

குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவருக்குக் கட்டளையொன்றை ஆக்கலாம்.

(6) நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட மேற்கூறப்பட்ட பணத்தொகை, நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று அதேமுறையில் அறவிடப்படுதல் வேண்டும்.

(7) குற்றச்செயல்களின் பெறுமதி அடிப்படையிலான வரும்படிகளை இழப்பித்தற்காகச் இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான வழக்கு நடவடிக்கைகளில், இழப்பிக்கப்படுகின்ற சட்டமுறையற்ற செயற்பாடொன்று புரியப்பட்டிலிருந்து வழிவந்த பெறுமதிக்கு அல்லது வேறு ஆதனத்துக்கு எவரேனும் திறத்தவர் ஆட்சேபனை தெரிவித்தால், வைப்பிலிடப்படவேண்டுமென நீதிமன்றம் தேவைப்படுத்தக்கூடிய முறையிலான பிணைப்பொறுப்பை ஆரம்பத்தில் நீதிமன்றத்துக்குச் சமர்பிக்கும்படி நீதிமன்றம் அத்தகைய உரிமைக்கோரிக்கையாளரைப் பணித்தல் வேண்டும்.

(8) விளக்க நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தீர்ப்பையடுத்து, தண்டனைத்தீர்ப்பை விதிக்கும் போது, இயைபான குற்றச்செயல்களின் வரும்படிகளினது பெறுமதிக்குக் குறையாத தொகையொன்றுக்கு ஏற்புடையாற்பாலதான சட்டத்தின் கீழான தண்டமொன்றைக் குற்றத்தின் தீர்ப்பளிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விதித்திருந்தால், சட்டத்துறைத் தலைமையதிபதி, குற்றச் செயல்களின் வரும்படிகளினதும் பெறுமதி அடிப்படையிலான இழப்பித்தலுக்காக இச்சட்டத்தின் கீழ் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு உரித்துடைய வராதலாகாது.

குற்றத்தீர்ப்புச் சாரா அடிப்படை யிலான இழப்பித்தலுக் கான பொது ஏற்பாடுகள்

**125**. (1) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படியொன்றாகவுள்ள ஆதனமொன்று புலனாய்வு செய்யப்பட்டு அத்தகைய ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படியொன்றாகவுள்ளதென முதற்றோற்றவளவில் நிலைநாட்டுவதற்கு விடயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளவிடத்தும்

அத்தகைய ஆதனம் ஒன்றில் இச்சட்டத்தின் நியதிகளின்படி தடைசெய்யப்பட்டு அல்லது கைப்பற்றப்பட்டு அதன் பின்னர் முடக்கப்பட்டுள்ளவிடத்தும் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளாகவுள்ள அத்தகைய ஆதனத்தின் இழப்பித்தலுக்காக அத்தகைய ஆதனத்துக்கெதிராக இச்சட்டத்தின் நியதிகளின்படி அதன்பின்னர் மேல் நீதிமன்றத்தில் குடியியல் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படலாம். அத்தகைய குடியியல் நீதிமுறை வழக்கு நடவடிக்கைகள், குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள் எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) குற்றத்தீர்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளின்நியதிகளின்படி குற்றச்செயல்களின் வரும்படியொன்றினது இழப்பித்தலுக்காக, இயைபான குற்றச்செயல்களின் வரும்படியை ஈட்டிய சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்துள்ள ஆளுக்கெதிராகக் குற்றத்தை தொடுத்து குற்றத்தீர்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வது அவசியமாதலாகாது.

(3) குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளின் கீழான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள் நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்திருக்கின்றவரான ஆளுக் கெதிரான குற்றவழக்குக்கான மாற்றீடாக அமையலாகாது. புலனாய்வுகள் போதுமான சான்று ஈட்டுகின்றவிடத்து, நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாடு புரிந்துள்ளவரான ஆள், ஏற்புடையற்பாலதான சட்டத்தின் நியதிகளின்படி குற்றவழக்கு தொடுக்கப்படுதலாகாது.

(4) ஆளொருவர் ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்துள்ளாரென அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்பட்டு குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்தும், அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் கிடைக்கக்கூடியனவாக உள்ளவிடத்தும், குற்றச்செயல்களின் வரும்படிகளின், குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான இழப்பித்தல் அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகளின்

இழப்பித்தலுக்காக வழமையாக வலுவுறுத்தப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், சட்டத்துறைத் தலைமையதிபதி, சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்துள்ளமைக்குப் பொறுப்பாகவுள்ள தவறிழைத்தவருக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்து அவருக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்குச் சமாந்தரமாக அல்லது அவர் சமூகமின்றி, அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் தொடர்பில் இச்சட்டத்தின் நியதிகளின்படி வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுதலும் நிறைவேற்றப் படுதலும் சட்டமுறையானதாதல் வேண்டும். ஆயின், குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான குற்றச்செயல்களின் வரும்படிகளை இழப்பித்தல் தொடர்பாக இச்சட்டத்தில் அடங்கியுள்ள தேவைப்பாடுகள் திருப்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) கொழும்பு நீதிமுறை வலயத்தில் நடைபெறும் இலங்கை குடியரசின் மேல் நீதிமன்றம், அத்தகைய ஆதனத்தின் அமைவிடம் அத்தகைய நீதிமன்றத்தின் ஆள்புல நியாயாத்திக்கத்துக்கு வெளியே இருப்பினும், குற்றச்செயல்களின் வரும்படிகளினது குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலானஇழப்பித்தலுக்கானவிண்ணப்பமொன்றை ஏற்றுக்கவனிப்பதற்கும் அதன்மீது தீர்மானிப்பதற்கும், நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், குற்றச்செயல்களின் குற்றத் தீர்ப்புச்சாரா அடிப்படையிலான வரும்படிகளுக்கான விண்ணப்பமொன்று வேறேதேனும் நீதிமுறை வலயத்தின் மேல் நீதிமன்றத்தினால் ஏற்றுக் கவனிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட வேண்டுமெனப் பிரதமநீதியரசர் சட்டத்துறைத் தலைமையதிபதி மூலதன விண்ணப்பமொன்றின் மீது பணிக்குமிடத்து, அத்தகைய மேல் நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும் :

ஆயின், மேலும், பணிப்புக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதியினாலான விண்ணப்பமொன்று தீர்மானிக்கும்போது, பிரதம நீதியரசர் குற்றத்தீர்ப்புச் சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கை களுக்கான நடாத்துவதிலும், பூர்த்தி செய்வதிலுமான தாமதங்கள் காரணமாக இச்சட்டத்தின் குறிக்கோள்கள் முறியடிக்கப்படுமாயின், கொழும்பு நீதிமுறை வலயத்தில் நடைபெறாத ஒரு மேல் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் உரித்தாக்கப்படுதல் விரும்பத்தக்கதாகவிருக்கும் என்பதை கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(6) வழமையாக, குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்காக ஒரு நீதிமுறை முடக்கக் கட்டளையை முற்தேவைப் பாடாகவிருக்கையில், இயைபான பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் அல்லது புலனாய்வு அலுவலரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட, காரணங்களுக்காக ஒரு நீதிமுறை முடக்க கட்டளையை பெற்றுக்கொள்வது சாத்தியமில்லாதிருந்ததென்பதை சட்டத்துறைத் தலைமையதிபதி நிலைநாட்ட முடியுமானவராக இருப்பின், ஒரு நீதிமுறை முடக்கக் கட்டளை இல்லாதிருப்பினுங்கூட, குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல், வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

(7) குற்றச்செயல்களின் வரும்படிகளை வெற்றிகரமாக இழப்பிப்பதற்காக மேல் நீதிமன்றம், நிகழ்தகவுச் சமநிலையின் மீது, எவ்வாதனம் தொடர்பில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதோ அவ்வாதனம் குற்றச்செயல்களின் வரும்படியொன்றெனத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

(8) குற்றத்தீர்ப்புச் சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள் நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமைக்காக குற்றம் சாட்டப்பட்ட ஆளுக்கு எதிராக குற்றவியல் வழங்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளவிடத்தும் கூட மற்றும் விளக்கத்தில் அல்லது மேன்முறையீட்டு நிலையில் குற்றம் சாட்டப்பட்ட அல்லது விடுவிக்கப்பட்டிருந்தாரென தொடுக்கப்படலாம்.

(9) சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் இலங்கைக்கு வெளியே இச்சட்டத்தில் நியாயாதிக்கத்தினுள் காணப்படின், அத்தகைய ஆதனம் தொடர்பிலான குற்றத் தீர்ப்புச் சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள் இச்சட்டத்தின் நியதிகளின்படி தடை செய்வதற்கு, கைப்பற்றுவதற்கு அல்லது நீதிமுறை முடக்கலுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுக்கையில், மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்படலாம்.

(10) ஒன்றில் இலங்கையினுள்ளோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ சட்டமுறையற்ற் செயற்பாடொன்றைப் புரிந்துள்ள ஆளொருவர் வேறோரு நாட்டின் தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் இலங்கையில் காணப்படுமிடத்து, அத்தகைய ஆதனம் தொடர்பில் குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள், இச்சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய ஆதனத்தின் தடை, கைப்பற்றுகை அல்லது நீதிமுறை முடக்கல் பற்றிய ஆரம்ப நடவடிக்கைகள் இடம்பெறாமல் தொடுக்கப்படலாம் மற்றும் நிறைவேற்றப்படலாம்.

(11) இச்சட்டத்தின் நியதிகளின்படியான நடவடிக்கைகள் தேசிய பொருளாதாரம் அல்லது பொதுமக்கள் நலனின் மீது பாரதூரமான தாக்கத்தை விளைவிக்காதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான தேவையின் நோக்கில், எந்த ஆதனம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுகின்றனவோ அந்த ஆதனம், ஏதேனும் முன்னரான தடை, பேணிக்காப்பு, கைப்பற்றுகை அல்லது நீதிமுறை முடக்கலுக்கு அமைந்ததாக்கப்பட்டிராமை எவ்வாறிருப்பினும், குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பது சட்டத்துறை தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளினது குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தலுக்கான வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான விண்ணப்பத்தைக் கோட்பிட்டதனையடுத்து, சட்டத்துறைத் தலைமை யதிபதி, முதற்தோற்றவளவில் எந்த ஆதனம் தொடர்பில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதோ அந்த ஆதனம் குற்றச் செயல்களின் வரும்படிகளொன்றென மேல் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்.

குற்றத்தீர்ப்புச் சாரா அடிப்படை யிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கமுடியு மிடத்தான நிலைமைகள்

**126**. (1) குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகளைப் பின்வரும் சூழ்நிலைகளில் தொடுக்க முடியுமென்பதுடன், அவை இச்சூழல்களுக்கு வரையறுக்கப்பட்டவையுமல்ல: -

(அ) நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்த ஆள் இறந்துள்ளவிடத்து, விளக்கத்தின் போது இருக்கின்றவிடத்து, நீதியிலிருந்து தப்பியோடியவராகவுள்ளவிடத்து, குற்றவியல் குற்றவழக்கத்திலிருந்து விடுபாட்டுரிமை உடையவராகவுள்ளவிடத்து, அல்லது அவரது குற்றவழக்கு வேறுவகையில் இயலாததாக உள்ளவிடத்து, அல்லது அத்தகைய தவறிழைத்தவர் அடையாளங்காண முடியாதவிடத்து அல்லது அவர் அறியப்படாதவராக உள்ளவிடத்து ;

(ஆ) குற்றச்செயல்களின் வரும்படிகள் மரபுரிமைவழியாக வந்துள்ளது, வேறு வகையாகப் பெறப்பட்டது அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது அல்லது ஒரு திறத்தவரினால் வைத்திருக்கப்படுகின்றது;

(இ) தவறுபுரிந்தமை (68ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளை சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்டுள்ளதனால், சட்ட முறையற்ற செயற்பாடு தொடர்பில் தவறிழைத்த வருக்கெதிராக குற்ற வழக்கொன்றை நடாத்த முடியாமை;

(ஈ) சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்த ஆளுக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கும், அவருக் கெதிராக வெற்றிகரமாகக் குற்றவழக்கு தொடுப்பதற்கும் சான்று எதுவுமில்லை அல்லது போதியற்ற சான்றுள்ளாமை;

(உ) இயைபான குற்றச்செயல்களின் வரும் படிகளை ஈட்டிய சட்டமுறையற்ற செயற்பாடு புரியப்பட்டமைப் பற்றிப் புலனாய்வெதுவும், நடாத்தப்பட்டவராகவிடத்து அல்லது புலனாய்வொன்றின் நடாத்துகை இயலாத தாகவுள்ளவிடத்து;

(ஊ) இச்சட்டத்தின் நியாயாதிக்கத்துக்கு அமைத்த ஆளொருவர் வேறோரு நாட்டின் சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்த வருக்கெதிரான அந்நாட்டில் குற்றவழக்கு தொடுக்கப்பட்டுள்ளவராகவிடத்து, அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவராகவிடத்து மற்றும் அச்சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் இலங்கையில் அல்லது வேறெங்கேனும் காணப்படுமிடத்து;

(எ) இலங்கையின் நியாயதிக்கத்துக்கமைந்த ஆளொருவர் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்து அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் இலங்கைக்கு வெளியே காணப்படுமிடத்து;

(ஏ) இச்சட்டத்தின் நியாயாதிக்கத்தினுள் வருகின்ற சட்டமுறையற்ற செயற்பாட்டில் வரும்படிகள் இலங்கைக்கு வெளியே காணப்படுமிடத்து ;

(ஐ) ஒன்றில் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்துள்ள ஆள் வேறோரு நாட்டின் தகுதிவாய்ந்த நியாயதிக்கத்தைக் கொண்ட நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, மற்றும் அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் இலங்கையினுள் காணப்படுமிடத்து;

(ஒ) தடைசெய்யப்பட்ட, கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஆதனம்:-

(i) ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டின் பகுதியளவிலான வரும்படிகளாக மட்டுமே உள்ளவிடத்து ; அல்லது

(ii) பல சட்டமுறையற்ற செயற்பாடுகளைப் புரிந்ததிலிருந்து பெறப்பட்ட ஆக்கக் கூறுகளைக் கொண்டுள்ளவிடத்து ; அல்லது

(iii) இப்பந்தியின் (i) ஆம் மற்றும் (ii) ஆம் உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஆதனத்தின் சேர்க்கையாகவுள்ளவிடத்து ; அல்லது

(ஓ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும் படியொன்றாகவுள்ள ஆதனமொன்று புலனாய்வு செய்யப்பட்டு ஆளெவரும் அத்தகைய ஆதனத்தின் சொத்தாண்மையை உரிமை கோராதவிடத்து, அத்தகைய ஆதனம் தொடர்பில்

ஆளொருவர் உரிமைக் கோரிக்கையொன்றை முன்வைத்து அதன்பின்னர் அதனை மீளப்பெறுமிடத்து, அல்லது ஆளொருவரும் அத்தகைய ஆதனம் தொடர்பில் ஏதேனும் உரிமைக்கோரிக்கையை செய்யாதவிடத்து, இவ்வகுதியில், குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படை யிலான இழப்பித்தலுக்கான வழக்கு நடவடிக்கைகள் அத்தகைய ஆதனத்தின் முன்னரான தடை, கைப்பற்றுகை அல்லது நீதிமுறை முடக்கங்களாக இல்லாமல் தொடுக்கப் படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, ஆதனமெதுவும் குற்றச்செயல்களின் வரும்படிகளினது குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தலுக்காக இச்சட்டத்தின் நியதிகளின்படியான வழக்கு நடவடிக்கைகளிலிருந்து விடுபட்டதாதல் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகளின் குற்றத் தீர்ப்புச்சாரா அடிப்படை யிலான இழப்பித்தல்

**127**. (1) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படியொன்றாகவுள்ள ஆதனம் பற்றிய புலனாய் வொன்று பூர்த்தி செய்யப்படுவதனையடுத்தும் வழமையாக அத்தகைய ஆதனம் தொடர்பில் மேல் நீதிமன்றத்தினால் ஒரு நீதிமுறை முடக்கக்கட்டளை மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டுள்ளவிடத்தும், விடயத்துக்கேற்ப, சட்டத்துறை தலைமையதிபதி அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான, ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி, விண்ணப்பமொன்றை கோப்பிடுவதன் மூலம் அத்தகைய ஆதனத்தை அரசுக்கு இழப்பித்தலுக்கான கட்டளையொன்றை ஆக்கும்படி அல்லது அதன் சட்டமுறையான சொந்தக்களுக்கு அல்லது அதன் உடைமைக்கு உரித்துடைமையைக் கொண்ட திறத்தவருக்கு அத்தகைய ஆதனத்தை இழப்பித்தலுக்கான கட்டளையொன்றை ஆக்குவதற்கு இறைஞ்சிக் கேட்டு கோப்பிடுவதன் மூலம் அத்தகைய ஆதனத்திற்கெதிராகச் சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் மேல் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

(2) அத்தகைய விண்ணப்பத்தின் உள்ளீடுகள், இயைபான புலனாய்வு அலுவலரினாலான சத்தியக்கடதாசியொன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், எந்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படியொன்று என முதற்தோற்றவளவில் நிலைநாட்டுவதற்கு அவசியமாக்கக்கூடியவறான அத்தகைய ஏதேனும் ஆவணம் அல்லது வேறு சான்று அவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 68ஆம் பிரிவின் நியதிகளின்படி அறிவித்தலொன்று, சேர்ப்பிக்கப்பட்டு அவ்வறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டுள்ள ஆள் இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் விளக்கமொன்றைச் சமர்ப்பிப்பதில் தவறுகளை புரிந்திருந்தாலொழிய, அல்லது அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட ஆளினால் வழங்கப்பட்ட விளக்கம், பதியப்பட்ட காரணங்களுக்காகப் புலனாய்வு அலுவலரினால் நிராகரிக்கப்பட்டு அத்தகைய நிராகரிப்பு வேறெந்த பெயர் குறிக்கப்பட்ட அலுவலரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, சட்டத்துறை தலைமையதிபதி, குற்றச்செயல்களின் வரும்படியொன்றை நாடி இவ்வேற்பாட்டின்கீழ் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு உரித்துடையவராதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், அறிவித்தல் பெறுபவரினால் வழங்கப்டப்ட விளக்கம் புலனாய்வு அலுவலரினால் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படின், சட்டத்துறை தலைமையதிபதி அது தொடர்பில் செல்லுபடியான விளக்கமொன்று வழங்கப்பட்டிராத ஆதனமொன்றின் பாகத்தினது பெறுமதி தொடர்பாக வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) விண்ணப்பமொன்று கோப்பிடப்படுவதன் மேல், மேல் நீதிமன்றம், நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்ட முறையில் அறிவித்தலொன்றை வெளியிடுவதற்கு இயைபான பெயர் குறிக்கப்பட்ட அலுவலரை பணித்தல் வேண்டும்.

(5) விண்ணப்பத்தை கோப்பிடுதல் தொடர்பிலான அறிவித்தல் பின்வரும் திறத்தவர்களுக்கும் அவசியமென மேல் நீதிமன்றம் கருதுகின்ற வேறேவரேனும் திறத்தவருக்கும் வழங்கப்படுதல் வேண்டும் :

(அ) எந்த ஆளின் கட்டுக்காப்பிலிருந்து இயைபான ஆதனம் புலனாய்வு அலுவலரொருவரினால் கைப்பற்றப்பட்டதோ அந்த ஆள்;

(ஆ) ஆதனமானது எந்தக் குற்றச்செயல்களுக்காகப் பலியாக்கப்பட்டவரிடமிருந்து எடுக்கப்பட்ட தென நம்பப்படுகின்றதோ அந்தக் குற்றச் செயல் களுக்குப் பலியாக்கப்பட்டவர்;

(இ) ஆதனத்தின் நீதிமுறை முடக்கலினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய எவரேனுமானாள்; அத்துடன்

(ஈ) ஆதனம் தொடர்பில் உரிமைக்கோரிக்கை யொன்றைக் கொண்டிருக்கக்கூடிய எவரேனும் திறத்தவர்;

(6) மேல் நீதிமன்றம், விண்ணப்பம் கோப்பிடப்பட்டமை தொடர்பிலான அறிவித்தல், முடக்கப்பட்ட ஆதனத்தைத் திருப்பிக்கொடுத்தல், உடைமையை அல்லது அதன் பயன்பாட்டுக்கான அல்லது கட்டுப்பாட்டுக்கான உரித்துடைமையை நாடுகின்ற எவரேனும் திறத்தவர் எத்தேதிக்கு முன்னர் அதன் உரிமைக்கோரிக்கைகளை நீதிமன்றத்துக்கு முன்வைக்கவேண்டுமோ அந்த தேதியை அறிவித்தல் வேண்டும். உரிமைக்கோரிக்கைகளை முன்வைப்பதற்காக நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட காலப்பகுதி, அத்தகைய அறிவித்தல் வெளியிடப் பட்டதிலிருந்து அல்லது வழங்கப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குக் குறையாமல், இவற்றுள் எது பின்னர் இடம்பெறுகின்றதோ அதற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(7) ஒரு முடக்கப்பட்ட ஆதனத்தை உடைமையில் வைத்திருப்பதற்காக அல்லது பயன்படுத்துவதற்காக ஏதேனும் உரிமை அல்லது அக்கறை அல்லது உரித்துடைமைக்கான வெளிப்படுத்துகையொன்றை நாடுகின்ற, விண்ணப்பம் கோப்பிடப்பட்டமை தொடர்பிலான அறிவித்தல் அத்திறத்தவருக்குச் சேர்ப்பிக்கப்படவில்லையோ அத் திறத்தவர் உட்பட்ட எவரேனும் திறத்தவர், அதுதொடர்பான அதன் உரிமைக்கோரிக்கையை மேல் நீதிமன்றத்துக்கு முன்வைப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(8) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் மேல் நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட உரிமைக்கோரிக்கையொன்று, ஒரு சத்தியக்கடுதாசியுடனும், அதனோடிணைக்கப்பட்ட அவசிய மான சான்று ரீதியிலான, ஆவணங்களுடனும் சேர்த்து உரிமைக்கோரிக்கைபற்றிய கூற்றொன்றின் படிவத்தி லிருத்தல் வேண்டும்.

(9) ஏதேனும் இறைமையுள்ள அரசின் தகுதிவாய்ந்த அதிகாரசபையானது, முடக்கப்பட்டவோர் ஆதனம் அத்தகைய நாட்டின் பகிரங்க நிதிகள் அல்லது வேறு ஆதனம் தொடர்பாகச் சட்டமுறையற்ற செயற்பாடொன்று புரியப்பட்டமையிலிருந்து வழிவந்துள்ளதென்ற கருத்தின்மீது அத்தகைய ஆதனம் தொடர்பாக உரிமைக்கோரிக்கையொன்றை முன்வைப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும்:

ஆயின், குற்றச்செயல்களின் வரும்படிகளைத் திருப்பிக் கொடுத்தல் தொடர்பில் இருபுடை ரீதியில் உடன்படிக்கையொன்றுள்ளதென்றும், பல்புடை பொருத் தனையினூடாக அல்லது சர்வதேச ஒத்துழைப்புக்கான வேறேதேனும் வகையிலானான ஒழுங்கேற்பாட்டினூடாக உடன்படிக்கையொன்று ஏலவே உள்ளதெனவும் அத்தகைய உடன்படிக்கை வலுவில் சான்றுறுதிப்படுத்துகின்ற வெளிநாட்டலுவல்கள் உள்ளதெனவும் எனினும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை அத்தகைய உரிமைக்கோரிக்கையுடன் உரிமைக்கோரிக்கையாளர் இணைத்தாலொழிய, அத்தகைய இறைமையுள்ள அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியினாலான அத்தகைய

ஏதேனும் உரிமைக்கோரிக்கையை மேல் நீதிமன்றம் ஏற்றுக்கவனித்தலாகாது.

(10) ஏதேனும், இறைமையுள்ள அரசின் தகுதிவாய்நத அதிகாரியின் சார்பில் இப்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றை சட்டத்துறை தலைமையதிபதிக்கு செய்தல் சட்டமுறை யானதாதல் வேண்டும்.

(11) உரிமைக்கோரிக்கைகளைக் கோப்பிடுவதன்மேல் நீதிமன்றம், ஒவ்வொருவரினதும் உரிமைக்கோரிக்கைகளை ஆய்வதற்கும், அவர்கள் விரும்பின், சத்தியக்கடுதாசியும், ஆதரப்படுத்துகின்ற ஆவணங்களும் எவையேனுமிருப்பின் அவற்றுடன் சேர்த்து ஆட்சேபனைகள் பற்றிய கூற்றுக்களையும் அத்துடன் அல்லது உரிமைக்கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் எதிர் உரிமைக்கோரிக்கைகளை கோப்பிடுவதற்கும் எல்லா திறத்தவர்களுக்கும் வாய்ப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

(12) உரிமைக்கோரிக்கைகளையும், எதிர் உரிமைக் கோரிக்கைகளையும், ஆட்சேபனைகள் பற்றிய கூற்றுக் களையும் கோப்பிடுவதையடுத்து மேல் நீதிமன்றம், கருமத்தை விசாரணைக்காக நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விசாரணை நடாத்தப்படுவதன் மேல், விண்ணப்பமானது எந்த ஆதனம் தொடர்பில் கோப்பிடப்பட்டதோ அந்த ஆதனம் இழப்பிக்கப்படுதல் வேண்டுமா அல்லது மாற்றாக ஆதனமானது அதன் உடைமைக்கு அல்லது பாவனைக்குச் சட்டத்தில் உரித்துடைய ஒரு திறத்தவருக்கு விடுவிக்கப்படுதல் வேண்டுமாவென்பதைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(13) இப்பிரிவின் கீழ் நடாத்தப்பட்டவொரு விசாரணையில், கருமத்தைத் தீர்மானிப்பதற்கு வாய்மொழி மூலமான சான்று அவசியமாகவுள்ளதென்ற அடிப்படையின்மீது விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் அது தொடர்பாக நீதிமன்றம் அனுமதியளித்தால் மட்டுமே அத்தகைய வாய்மொழி மூலமான சான்று நெறிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(14) இப்பிரிவின்கீழான வழக்கு நடவடிக்கைளில், மேல் நீதிமன்றம், எந்த ஆதனம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படியொன்றைத் தீர்மானிக்கும் மற்றும் எந்த ஆதனம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆதனத்தை விடுவிப்பதற்காக எவரேனுமொருவரிலான உரிமைக்கோரிக்கையின் சட்டமுறையானத்தன்மையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக 34ஆம் பிரிவில் அடங்கியுள்ள ஊகத்தை ஏற்புடையதாக்கலாம்.

(15) எந்த ஆதனம் தொடர்பில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதோ அந்த ஆதனத்தின் கட்டுப்பாட்டை அல்லது உடைமையை ஈட்டுவதற்கு நாடுகின்ற திறத்தவரொருவர் நிகழ்தகவுச் சமநிலையின்மீதும், வேறெவரேனும் உரிமைக்கோரிக்கையாளரினால் நிலை நாட்டிருக்கக்கூடிய தொடக்கநிலையை விஞ்சுகின்ற ஒரு தொடக்கநிலை வரைக்கும் ஒரு சட்டமுறையான உரிமைக்கோரிக்கையை நிலைநாட்டுதல் வேண்டும்.

(16) விசாரணையையடுத்து, எந்த ஆதனம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆதனம், குற்றச்செயல்களின் குறிப்பிட்ட எவரேனும் பலியாக்கப்பட்டவரின் ஆதனமென மேல் நீதிமன்றம் கருத்துக்கொண்டால், அத்தகைய குற்றச்செயல்களுக்கும் பலியாக்கப்பட்டவருக்கு ஆதனம் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்ற கட்டளையை நீதிமன்றம் ஆக்குதல் வேண்டும்.

(17) மேல் நீதிமன்றம் விசாரணையையடுத்து-

(அ) உரிமைக்கோரிக்கையாளரான திறத்தவர் எவரும் நிகழ்தகவுச் சமநிலையின் மீது ஆதனத்தை விடுவிப்பதற்கான சட்ட முறையான உரிமைக்கோரிக்கையொன்றை நிலைநாட்டவில்லை; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் நியதிகளின்படி நேரொத்த சட்டமுறையற்ற செயற்பாட்டின் பலியாக்கப் பட்டவரொருவரினால் அல்லது ஒரு வெளிநாட்டு அரசின் தகுதிவாய்ந்த அதிகாரியினால் செல்லுபடியான உரிமைக்கோரிக்கையெதுவும் நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்படவில்லை; அத்துடன்

(இ) நிகழ்தகவு சமநிலையின் மீது விண்ணப்பம் எந்த ஆதனம் தொடர்பில் கோப்பிடப்பட்டதோ அந்த ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படியொன்று,

எனத் தீர்மானிப்பின், மேல் நீதிமன்றம் ஆதனத்தை இழப்பிக்கின்ற கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(18) மேல் நீதிமன்றம் விசாரணையையடுத்து, குற்றச் செயல்களின் வரும்படிகளின் குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல்களுக்காக இப்பிரிவின் கீழ் எந்தப்பாகம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த பாகத்தை மட்டுமே தீர்மானிப்பின், நீதிமன்றம், இயைபான குற்றச்செயல்களின் வரும்படிகளின் பெறுமதியைத் தீர்மானிப்பதனையடுத்து, ஆதனமானது அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென்றும், பெறுமதியின் எஞ்சியுள்ள பாகத்துக்கு உரித்துடைய திறத்தவருக்கு அரசு கொடுப்பனவொன்றை செய்தல் வேண்டுமென்றும் கட்டளையாக்குதல் வேண்டும்.

(19) உரிமைக்கோரிக்கையாளரொருவர் நிகழ்தகவுச் சமநிலையின்; மீது அத்தகைய ஆதனத்துக்கான சட்டமுறையான உரிமைக்கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளாரென மேல் நீதிமன்றம் பணித்தால், மேல் நீதிமன்றமானது எந்த ஆதனம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டனவோ அந்த ஆதனம் அத்தகைய உரிமைக்கோரிக்கையாளருக்கு விடுவிக்கப்படுதல் வேண்டுமென்று பணிக்கின்ற கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(20) எந்த ஆதனம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆதனம் வேறெந்த குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவராகவுள்ள உரிமைக்கோரிக்கையாளரொருவருக்குச் சொந்தமானதென மேல் நீதிமன்றம் தீர்மானிப்பின், ஆதனத்தை அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு விடுவித்து அது கட்டளையாக்குதல் வேண்டும்.

(21) எந்த ஆதனம் தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆதனம், அதன் தகுதிவாய்ந்த அதிகாரியினூடாக உரிமைக்கோரிக்கையொன்றை முன்வைத்துள்ள ஒரு கோரிக்கை விடுக்கின்ற வெளிநாட்டு அரசின் பொது ஆதனம் என மேல் நீதிமன்றம் தீர்மானிப்பின், ஆதனத்தை அல்லது அதன் பாகத்தை அல்லது பெறுமதியைக் கோரிக்கைவிடுக்கின்ற வெளிநாட்டு அரசுக்கு விடுவித்து, இச்சட்டத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய அது கட்டளையாக்குதல் வேண்டும்.

(22) ஆதனத்தை இழப்பிப்பதற்கானதொரு கட்டளையை நீதிமன்றம் ஆக்கினால், அது அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், திறைசேரிச் செயலாளர் அதன் உடைமையை எடுத்தலும் இச்சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய ஆதனத்தைக் கையாளுதல் வேண்டும்.

(23) உரிமைக்கோரிக்கையாளரொருவர் நிகழ்தகவுச் சமநிலையொன்றின் மீது அவரே அத்தகைய ஆதனத்தின் சொந்தக்காரரென்பதை நிலைநாட்டியுள்ளாரென நீதிமன்றம் கருத்திற்கொண்டால், நீதிமன்றமானது நீதிமுறை முடக்கற் கட்டளையை வறிதாக்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனத்தை அத்தகைய உரிமைக்கோரிக்கையாளருக்கு விடுவித்தலும் வேண்டும்.

(24) இச்சட்டத்தில் அடங்கியுள்ள குற்றச்செயல் நடவடிக்கை முறைகளின் வரும்படிகளின் இழப்பித்தல்கள் குற்றத்தீர்ப்புச்சாரா அடிப்படையிலான நியதிகளின்படி ஏதேனும் ஆதனத்தை இழப்பித்தல் எவரேனுமாளுக்கு

விதிக்கப்பட்ட தண்டனையொன்றாக அல்லது ஏதேனும் தண்டமாகக் கருதப்படுதலாகதென்பதுடன், அத்தகைய இழப்பித்தலின் பயனைக் கொண்டு, ஆளெவரும் ஏதேனும் தகைமையீனத்துக்கு அல்லது வேறு தடை விதிப்புக்கு அமைந்தவராக்கப்படுதலுமாகாது.

(25) இப்பிரிவின்கீழ் வழக்கு நடவடிக்கையின் போது நீதிமன்றத்தின் முன்னர் இடப்பட்ட சான்றின் மீது நீதிமன்றத்தினால் கோரப்பட்டு பரிசோதனை செய்யப்பட்ட மேலதிகச் சான்று ஏதேனுமிருப்பின் அதன்மீதும், எந்த ஆதனம் தொடர்பில் இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆதனம் பகுதியளவில் குற்றச்செயல்களின் வரும்படிகளையும், பகுதியளவில் குற்றச்செயல்களின் வரும்படிகளாக அமையாத ஆதனத்தையும் கொண்டுள்ளதென நீதிமன்றம் திருப்தியடைந்தால், நீதிமன்றம் அத்தகைய ஆதனத்தின் பெறுமதி மதிப்பீடொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், குற்றச்செயல்களின் வரும்படிகளாக அமைகின்ற அத்தகைய ஆதனத்தின் நூற்றுவீதப் பெறுமதியைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(26) அத்தகைய ஆதனம் தொடர்பில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட திறத்தவர்கள் உரிமைக் கோரிக்கையொன்றை முன்வைத்து இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக நிகழ்தகவுச் சமநிலையின்மீது அத்தகைய உரிமைக்கோரிக்கையை நிலைநாட்டுமிடத்து, குற்றச்செயல்களின் வரும்படிகளுடன் தொடர்புபடாத அத்தகைய நிலைநாட்டப்பட்ட உரிமைக்கோரிக்கைக்கு நேரொத்த அத்தகைய ஆதனத்தின் நூற்றுவீதம் பெறுமதி அத்தகைய உரிமைக்கோரிக்கையாளரின் உரித்துடைமையாக வரவேண்டுமென நீதிமன்றம் பணித்தல் வேண்டும்.

(27) இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அத்தகைய ஆதனத்தின் கையாளுகையை நீதிமன்றம் பணித்தல் வேண்டுமென்பதுடன், அதன் பெறுமதி தேறிப்பெறப்பட்டதன் மேல் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட பணத்தொகையில் கொடுப்பனவு

செய்யும்படி நீதிமன்றப் பதிவாளரை பணித்தலும் வேண்டும்; அத்துடன் அரசிற்கு இழப்பிக்கப்படுவதற்காக குற்றச்செயல்களின் வரும்படிகளினது நூற்றுவீதப் பெறுமதிக்கு நேரொத்த எஞ்சியுள்ள பணத்தொகையை இழப்பிக்கும் படி பணித்தலும் வேண்டும்.

குற்றச்செயல்களின் வரும்படிகளினது குற்றத் தீர்ப்புக்குப் பின்னரான இழப்பித்தலுக்கும், குற்றச் செயல்களின் வரும்படிகளினது குற்றத்தீர்ப்புச் சாரா அடிப்படையிலான இழப்பித்தலுக்கும் பொதுவான ஏற்பாடுகள் - இழப்பித்தல் கட்டளையடுத்து வரும் நடவடிக்கை முறை

**128**. (1) குற்றச்செயல்களின் வரும்படிகள் பற்றிய விசாரணையை முடிவுறுத்தியதன் மேல், நீதிமன்றம், ஆதனத்தை இழப்பிப்பதற்கான கட்டளையொன்றை ஆக்கினால், நீதிமன்றமானது, விடயத்துக்கேற்ப, அதிகாரசபையை, பெறுநரை அல்லது விசேட முகாமையாளரை நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட திறத்தவருக்கு ஆதனத்தை விடுவிக்கும்படி பணித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஆதனம் அரசுக்கு இழப்பிக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக, நீதிமன்றம் தகுதியெனக் கருத வேண்டியவறான மேலதிகக் காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய ஆதனம் பாதுகாக்கப்படுதல், பேணிக்காக்கப்படுதல் மற்றும் முகாமை செய்யப்படுதல் வேண்டுமென நீதிமன்றம் கருத்திற் கொண்டால், நீதிமன்றமானது, நீதிமன்றம் தகுதியெனக் கருத வேண்டிய அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மேல் ஆதனத்துக்கு தொடர்ந்தும் பாதுகாப்பு, பேணிக்காப்பு மற்றும் முகாமை வழங்கும்படி நீதிமன்றமானது, விடயத்துக்கேற்ப, அதிகார சபையை, பெறுநரை அல்லது விசேட முகாமையாளரைப் பணித்தல் வேண்டும்.

(2) ஆதனமானது அரசுக்கு இழப்பிக்கப்படுவதையடுத்து, இச்சட்டத்தின் நியதிகளுக்கும், நீதிமன்றம் விதிக்கக்கூடிய வேறெவையெனும், நிபந்தனைகளுக்கும் அமைய, பகிரங்க ஏல விற்பனையினூடாக அல்லது அதிகாரசபையினால் விதந்துரைக்கப்பட்டு நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறெவையேனும் கையுதிர்ப்பு என்ற வழிவகைகளினூடாக ஆதனத்தை கையுதிர்க்கும்படி, விடயத்துக்கேற்ப, அதிகாரசபையை, பெறுநரை அல்லது விசேட முகாமையாளரை மேல் நீதிமன்றம் பணித்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இழப்பித்தல் வழக்கு நடவடிக்கைகள் முடிவுறாதுள்ள போது ஆதனமானது ஏலவே கையுதிர்க்கப்பட்டிருப்பின், இழப்பித்தலுக்குப் பின்னரான கையுதிர்ப்புக் கட்டளையொன்றை நீதிமன்றம் ஆக்குதல் அவசியமாதலாகாது.

(3) ஆதனம் தொடர்பான தற்போதைய நிலைமையின் அல்லது சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளின் நோக்கில் அத்தகைய ஆதனத்தைக் கையுதிர்த்தலானது இயன்றதாக விராதிருக்கலாம் அல்லது அத்தகைய ஆதனத்தின் உண்மையான பெறுமதியைத் தேறிப்பெறுவதனை ஏற்படுத்தாதிருக்கலாம் என அதிகாரசபை, பெறுநர் அல்லது விசேட முகாமையாளர் நீதிமன்றத்துக்கு அறிக்கையிட்டால் மற்றும் நீதிமன்றம் அத்தகைய காரணத்துடன் திருப்திப்பட்டால், பகிரங்க ஏல விற்பனையினூடாக ஆதனத்தைக் கையுதிர்ப்பதனையும் அதன் உண்மையான பெறுமதியைத் தேறிப்பெறுவதனையும் இயலச் செய்யும் வகையில், ஆதனம் தொடர்பாக அரசாங்கத்தின் இயைபான தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு அவசியமான கட்டளைகளை நீதிமன்றம் ஆக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளின் நோக்கில் ஆதனத்தின் கையுதிர்ப்பு எப்பட்சத்திலும் இயலாதிருக்குமென நீதிமன்றம் கருத்துக் கொண்டால், நீதிமன்றமானது, இலங்கை அரசாங்கத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியொருவருக்கு ஆதனத்தை கைமாற்றுகின்ற தோதான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(4) விடயத்துக்கேற்ப, அதிகாரசபை, பெறுநர் அல்லது விசேட முகாமையாளர் நீதிமன்றத்தின் பணிப்பின் மீது ஆதனத்தைக் கையுதிர்த்தல் வேண்டுமென்பதுடன், அதன் பெறுமதி தேறிப் பெறப்படுவதன்மேல், அதிகாரசபையின் "குற்றச்செயல்களின் வரும்படிகளினது கையுதிர்ப்பினாலான குற்றச் செயல்களின் வரும்படிகளை கையுதிர்த்தல்" எனத் தலையங்கமிடப்பட்ட கணக்குச் சொல்லப்பட்ட பணத்தொகையை வரவு வைத்தலும் வேண்டும்.

(5) இழப்பிக்கப்பட்ட ஆதனத்தைக் கையுதிர்ப்பதிலிருந்து தேறிப் பெறப்பட்ட பணத்தைப் பெற்றதனையடுத்து, அதிகாரசபையானது, இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் சொல்லப்பட்ட நிதிகளைச் செலுத்தீடு செய்தல் வேண்டும்.

(6) குற்றச்செயல்களின் இழப்பிக்கப்பட்ட வரும்படிகளின் கையுதிர்ப்பிலிருந்து எழுகின்ற பணங்களைச் செலுத்தீடு செய்வதற்கான கட்டளையொன்றை ஆக்குவதற்கு நீதிமன்றம் தேவைப்படுத்தப்படும் நேரத்தில் அதிகாரசபையானது தாபிக்கப்படாவிடின் அல்லது இச்சட்டத்தின் நியதிகளின்படி அதன் பணிகளைப் புரிவதற்கு இயலாதிருப்பின், நீதிமன்றத்தினால் பேணப்பட்ட தனி வேறானவொரு கணக்குக்கு கையுதிர்ப்பின் வரும்படிகளை அனும்பும்படி நீதிமன்றம் பணித்தல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் அத்தகைய நிதிகளை அதிகாரசபையானது எம்முறையில் செலுத்தீடு செய்யவேண்டுமென இச்சட்டம் விதித்துள்ளதோ அம்முறையில் அத்தகைய நிதிகளைச் செலுத்தீடு செய்தலும் வேண்டும்.

## பாகம் VII

## குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கான குடியியற் பரிகாரம்

**129**. (1) எவரேனுமாள் சட்டமுறையற்ற செயற்பாடொன்றைப் புரிந்துள்ளவிடத்தும், அத்தகைய செயற்பாடு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பணவகையான, உணர்வுசார், அல்லது வேறு இழப்பை ஏதேனும் நன்மையின், சேவையின் அல்லது வேறு உரித்துடைமையின் இழப்பை அல்லது இழக்கச்செய்தலை விளைவித்துள்ளவிடத்தும், அரசு உட்பட்ட அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டினால் பாதகமான முறையில் பாதிக்கப்பட்ட திறத்தவர் அவ்வாறு பாதிக்கப்பட்ட வேறெவரேனுமாள், அத்தகைய திறத்தவரினால் அடையப்பட்ட பணவகையான, உணர்வுசார் அல்லது வேறு இழப்பை அல்லது சேதத்தை அறவிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

ஒரு சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து திறந்தவரொருவரினால் அடையப்பட்ட பணவகையான, உணர்வுசார் அல்லது வேறு இழப்பை அல்லது சேதத்தை அறவிடுவதற்கான வழக்குக் காரணம்

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட வழக்குக் காரணத்தின் அடிப்படையில் சேதவீடுகளையும், நட்டஈட்டையும் உரிமைகோருகின்ற வழக்காளியொருவர் இயைபான மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் வழக்கைத் தொடுத்தல் வேண்டுமென்பதுடன், நிகழ்தகவுச் சமநிலையின் மீது இயைபான சட்ட முறையற்ற செயற்பாடாக அமைகின்ற தவறின் ஆக்கக்கூறுகளை எண்பிப்பதன் மூலம், அவரது வழக்கை நிலைநாட்டுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(3) மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட வழக்குக் காரணத்தின் அடிப்படையின் மேலான குடியியல் வழக்கொன்றை வெற்றிகரமாகத் தொடுக்கின்ற நோக்கத்துக்காக, எதிராளி சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமைக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் அல்லது சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகள் கண்டறியப்பட்டுள்ளன, அடையாளங்காணப்பட்டுள்ளன அல்லது அறவிடப் பட்டுள்ளன என்பதை வழக்காளி நிலைநாட்டுவது அவசிய மாதலாகாது.

(4) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட வழக்குக் காரணத்தின் அடிப்படையின் மேலான குடியியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கான உரித்துடைமை, ஏதேனும் குற்றவியல் புலனாய்வு, குற்றவியல் குற்றவழக்கு அல்லது அவற்றின் விளைவிற்குச் சுயாதீனமாகவிருத்தல் வேண்டும்.

*விளக்கக்குறிப்பு*

(அ) ஒரு கம்பனியின் கணக்காளராகவுள்ள X என்பவர் குற்றவியல் நம்பிக்கைத் துரோகம் புரிந்து அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும்படிகளிலிருந்து ஒரு மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்கின்றார். கம்பனியானது பொலிசாருக்கு முறைப்பாடு செய்கின்றது. பொலிசார், இச்சட்டத்தின் மற்றும் வேறு சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி X என்பவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கத் தொடங்கலாம் அல்லது தொடங்காதுவிடலாம்.

பொலிசாரினால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்காதுவிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு அத்துடன் அல்லது X என்பவருக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படுவதற்குச் சுயாதீனமாக, கம்பனி யானது மேற்கூறப்பட்ட சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமையின் விளைவாக அதனால் அடையப்பட்ட பணவகையான இழப்பை அறவிடும் நோக்கத்துக்காக மேற் கூறப்பட்ட வழக்குக்காரணத்தை வேண்டி X என்பவருக்கெதிராகக் குடியியல் வழக்கைத் தொடுப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(ஆ) குறிப்பிட்டவொரு பொது நோக்கத்துக்காகக் குறித்தொதுக்கப்பட்ட நிதிகள் தொடர்பான ஊழல் என்ற தவறை X என்பவர் புரிகின்றார். இதன் விளைவு என்னவெனில், மேற்கூறப்பட்ட பொது நோக்கத்துக்காக கிடைக்கக்கூடிய நிதிகள் குறித்தவொரு தொகையினால் அல்லது நூற்றுவீதத்தினால் குறைகின்றன என்பதாகும். இதன்விளைவாக, எந்தச் சமுதாயத்தினரது நன்மைக்காகப் பெறு நோக்கம் பயனுறுத்த வேண்டியிருந்ததோ அந்த சமுதாயத்தினருக்கான தன்மையிலான குறைப்பு, ஒன்றில் பணவகையான நியதிகளில் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட பொது நோக்கத்தின் அளவுசார் குறைப்பில் கணக்கிடப்படுகின்றது. ஆகவே, X என்பவரினால் நிறைவேற்றப்பட்ட சட்டமுறையற்ற செயற்பாட்டின் விளைவாக பணவகையான அல்லது உணர்வு வகையான இழப்பை, எதிர்நோக்கப்பட்ட சேவையின் வசதியின் அல்லது நன்மையின் சேவையின் இழக்கச்செய்தலை அடைந்துள்ளோர், அடையப்பட்ட இழப்புக்கு அல்லது சேதத்துக்கு ஒரே அளவிலான சேதவீடுகள் அல்லது நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துக்காக ஒன்றில் கூட்டாக அல்லது தனித்தனியாக X என்பவருக்கெதிராக வழக்குதொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(இ) X என்பவர், தனக்குத் தனிப்பட்ட நிதிசார் ஈட்டுகையை விளைவிக்காத ஊழல் செயலொன்றை புரிகின்றார். அத்தகைய, சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்ததிலிருந்து X என்பவர் தனிப்பட்ட முறையில் ஈட்டுகையைப் பெறாதிருப்பினும், அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாட்டினால் பாதகமான முறையில் பாதிக்கப்பட்ட எவரேனும் திறந்தவர், மேற்கூறப்பட்ட சட்டமுறையற்ற செயற்பாட்டின் விளைவாக அவர்களினால் அடையப்பட்ட பணவகையான அல்லது உணர்வுசார் இழப்பை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அறவிடுவதற்கு X என்பவருக்கெதிராக வழக்குத்தொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(5) இழப்புக்காக அல்லது சேதவீடுகளுக்காக இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழான வழக்கொன்று குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழக்கு அச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளினால் நடவடிக்கைமுறை ரீதியில் ஆளப்படுதலும் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக வேறொருவரினால் புரியப்பட்டவரொரு சட்டமுறையற்ற செயற்பாடு காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட ஆள் இழப்பை அல்லது சேதங்கள் அடைந்துள்ளவிடத்து, அத்தகைய சட்டமுறையற்ற செயற்பாடு காரணமாக இழப்பை அல்லது சேதங்கள் அடைந்துள்ள-

(i) ஒன்றில் அத்தகைய ஆட்களுள் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர், அல்லது

(ii) அத்தகைய ஆட்களைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்ற ஒரு கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழு,

இழப்பை அல்லது சேதங்களை அடைந்துள்ளவர்களெனப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற ஆட்களுள் அத்தகையோரின் சம்மதத்துடன், அச்சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமையின் விளைவாக அத்தகைய திறத்தவர்களினால் அடையப்பட்ட இழப்பு தொடர்பில் சேதவீடுகளை அல்லது நட்டஈட்டை அறவிடும் நோக்கத்துக்காக இப்பாகத்தின் நியதிகளின்படி வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

(7) சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமையின் விளைவாக வழக்காளியினால் அடையப்பட்ட பணவகையான மற்றும் உணர்வுசார் இழப்புத் தொடர்பாக அறிவுடையவரும் விசேடமாகத் தேர்ச்சிபெற்றவருமான ஆளொருவரின் சான்று வழக்காளியினால் நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டாலொழிய, நீதிமன்றம் அதன் தற்றுணிவின்படி, வழக்காளியினால் அல்லது அத்தகைய வழக்காளியினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற திறத்தவர்களினால் அடையப்பட்ட இழப்பை அல்லது சேதங்களைத் தீர்மானித்தல் தொடர்பாக நீதிமன்றத்துக்கு உதவுகின்ற நோக்கத்துக்காக அறிவுடையவருக்கும் விசேடமான தேர்ச்சிபெற்றவருமான அத்தகைய ஆட்களுள் ஒருவரை அல்லது ஒருவருக்கு மேற்பட்டோரை அழைக்கலாம்.

(8) (68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தில், முரணாகவுள்ளவை எவ்வாறிருப்பினும், இப்பாகத்தின் நியதிகளின் படியான கீழான வழக்கொன்று வழக்காளியினால் அடையப்பட்ட இழப்பை அல்லது சேதத்தை விளைவித்த சட்டமுறையற்ற செயற்பாடொன்று புரியப்பட்டமை பற்றி அத்தகைய வழக்காளி அறியவந்த தேதியிலிருந்து மூன்றாண்டுகளினுள் தொடுக்கப்படல் வேண்டும்.

(9) இப்பாகத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் வேறேதேனும் பாகத்தினாலும், வேறேதேனும் எழுத்திலான அல்லது எழுத்திலல்லாத சட்டத்தினாலும் ஏதேனும் உரிமைக்கு அல்லது பரிகாரத்துக்கு மேலதிகமான வையாகவிருத்தல் வேண்டும்; அவற்றை மதிப்புக் குறைப்பனவாகவல்ல.

(10) இப்பாகத்தின் கீழ் கோப்பிடப்பட்ட வழக்கொன்றில், நீதிமன்றம், நட்டஈட்டின் அல்லது சேதவீடுகளின் அளிப்பைக் கணிப்பீடு செய்வதில், வழக்காளியினால் அல்லது வழக்காளியினால் வேறு விதத்தில் பாதிக்கப்பட்ட திறத்தவர்களின் சார்பில், வழக்கானது கோப்பிடப்பட்டுள்ளதோ அந்த வேறு திறத்தவர்களினால் ஏலவே பெறப்பட்ட வேறெவையேனும் இடைக்கால அல்லது இறுதிக் கொடுப்பனவுகளை அல்லது பெற்றுக்கொண்ட வேறேதேனும் நிவாரணத்தைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

பலியாக்கப் பட்டவர்களின் நன்மைக்காகக் குடியியற் சங்க ஒழுங்கமைப் பினால் குடியியற் பரிகாரத்துக் காக வழக்குத் தொடுக்கப் படுதல்

**130.** (1) பிரிவு 129 இன் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுள் எவ்வாறிருப்பினும், அதனின் அரசியல் ரீதியில் இணைந்ததாக பதிவுசெய்யப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட குடியியற் சங்க ஒழுங்கமைப்பு, நல்லெண்ணத்துடனும், அரசு உள்ளடங்கலாக ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டின் பலியாக்கப்பட்டவர்களின் நன்மைக்காகவும் மட்டுமே இப்பாகத்தின் நியதிகளின்படி வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய வழக்கு தொடுக்கப்பட்டதையடுத்தும், பதினான்கு நாட்களுக்கு பிற்படாமலும், அரசியல் ரீதியில் இணைந்ததாகவிராத குடியியற் சங்க ஒழுங்கமைப்பான வழக்காளி, ஒரு தேசிய செய்தித்தாளுட்பட்ட ஊடகத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியமொழிகளில் ஒவ்வொன்றிலும், அத்தகைய வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளமையை அறிவிக்கின்ற அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(3) சட்டமுறையற்ற செயற்பாடொன்றாகவுள்ள முறைப்பாடு செய்யப்பட்ட விடயப்பொருளின் எவரேனும் பலியாக்கப்பட்டவர், அத்தகைய வழக்கில் அத்தகைய பலியாக்கப்பட்டவர் அக்கறையொன்றைக் கொண்டுள்ளாரென்ற முதற்தோற்றளவிலான அடிப்படையின் மீது நீதிமன்றம் திருப்திப்படுத்தியதன் மேல் அத்தகைய வழக்கினுள் இடையீடு செய்தற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றம் அல்லது

திருப்திப்படுபவரின் மீது அத்தகைய வழக்குக்கான ஒரு திறத்தவராக அத்தகைய பலியாக்கப்பட்டவரைச் சேர்த்தலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழ் கோப்பிடப்பட்ட ஒரு வழக்கில் தீர்ப்பையும், தீர்வையும் பதியும்போது நீதிமன்றம், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 184ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்ட சேதவீடுகள் அல்லது நட்டஈட்டைப் பெறுவதற்கு உரித்துடையவரான ஆளைக்குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன், வழக்காளி சட்டமுறையற்ற செயற்பாட்டின் பலியாக்கப்பட்டவ ரொருவராக இராதிருப்பின், வழக்காளி, வழக்காடல் செலவுத்தொகையை மட்டுமே அறவிடுவதற்கு உரித்துரையவராதலும் வேண்டும்.

## பாகம் VIII

## இழப்பிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளைக் கையுதிர்த்தலும், அதிலிருந்து வழிவந்த பெறுமதியைப் பயன்படுத்தலும்

இழப்பிக்கப் பட்ட குற்றச் செயல் களின் வரும் படிகளைக் கையுதிர்த்தல்

**131.** (1) குற்றச்செயல்களினால் முடக்கப்பட்ட வரும்படிகள் அரசுக்கு இழப்பிக்கப்படுவதற்கானவொரு கட்டளையையடுத்து, மேல் நீதிமன்றம், ஆதனத்தின் மதிப்பீட்டொன்றைப் பெற்றுக்கொள்ளும்படியும், பகிரங்க ஏல விற்பனையினூடாக அல்லது ஆதனத்தின் பெறுமதியை அதன் மூலம் பெறக்கூடிய அதிகார சபையினால் விதந்துரைக்கப்பட்டு நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடிய வேறெவையேனும் கையுதிர்ப்பு வழிவகைகளினூடாக அத்தகைய ஆதனத்தைக் கையுதிர்க்கும் படியும் அதிகாரசபையைப் பணித்தல் வேண்டும். அத்தகைய கையுதிர்த்தல் நீதிமன்றத்தினால் மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். (அத்தகைய தீர்ப்பு நீதிமன்றத்தினால் மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும் ;

(2) நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்ட முறையில் ஆதனம் கையுதிர்க்கப்படுவதனையடுத்து, அதிகாரசபை அத்தகைய கையுதிர்ப்பிலிருந்து அறவிடப்பட்ட அத்தகைய

தொகையினால் "குற்றச்செயல்களின் வரும்படிகளின் கையுதிர்ப்பினாலான வரும்படிகள்" என தலையங்கமிடப்பட்ட கணக்கொன்றுக்கு வரவுவைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணத்தொகை செலுத்தீடு செய்யப்படவேண்டிய முறையைப் பணிக்கின்ற கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்துக்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்தலும் வேண்டும்.

(3) அதிகாரசபையினால் (2) ஆம் உட்பிரிவின் நியதியின்படி செய்யப்பட்ட விண்ணப்பமொன்றையடுத்து, நீதிமன்றமானது, அவசியமென நீதிமன்றம் கருதுகின்ற வேறு காரணத்திற்கிடையே பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், இழப்பிக்கப்பட்ட ஆதனத்தின் கையுதிர்ப்பினால் பெறப்பட்ட பெறுமதியின் செலுத்தீடுகளுக்காக கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும் :-

(அ) புரியப்பட்டுள்ள இயைபான குற்றச் செயல்களின் வரும்படிகளை ஈட்டிய சட்ட முறையற்ற செயற்பாட்டை அடையாளங் காணமுடியுமாயினாலும், அவ்வாறாயின், சட்டமுறையற்ற செயற்பாட்டை புரிந்தமை காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய ஆட்களின் வகுதியும் ;

(ஆ) பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, இழப்பிக்கப் பட்ட ஆதனத்தைக் கையுதிர்ப்பதன் மூலம் வழிவந்த பெறுமதி முழுமையாகத் திரட்டு நிதியத்துக்குக் கைமாற்றப்படவேண்டுமென்பது.-

(i) குற்றச்செயல்களின் வரும்படிகளிலிருந்து தனியொருவருக்கேற்றதாகவிராத சட்ட முறையாக பெறப்பட்ட ஆதனமொன்றை இழப்பிட ஆதனம் பகுதியளவில் கொண்டுள்ளதென்பது;

(ii) இழப்பிக்கப்பட்ட ஆதனத்தைக் கையுதிர்த்ததன் மூலம் வழிவந்த பெறுமதி, இயைபான சட்டமுறையற்ற செயற்பாடு புரியப்பட்டமை காரணமாக ஒன்றில் தாமாகவோ அல்லது அதன் மக்கள் மூலமாகவோ அல்லது நிறுவனங்கள் மூலமாகவோ இழப்பொன்றை அடைந்திருந்த கோரிக்கைவிடுக்கும் அரசொன்றுக்கு அனுப்பப்பட வேண்டுமென்பதுடன்;

(இ) இயைபாதென மேல் நீதிமன்றம் கருதுகின்ற வேறேதேனும் கருமம்.

(4) புரியப்பட்டுள்ள இயைபான குற்றச்செயல்களின் வரும்படிகளை ஈட்டிய சட்டமுறையற்ற செயற்பாட்டை அடையாளம் காணமுடியுமென நீதிமன்றம் தீர்மானிக்குமிடத்தும், அவ்வாறாயின், சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமை காரணமாக இழப்பை அடைந்திருக்கக்கூடிய ஆட்களின் வகுதி அடையாளங் காணப்படுமிடத்தும், பின்வருமாறு செய்யும்படி நீதிமன்றம் அதிகாரசபையைப் பணித்தல் வேண்டும் :-

(அ) குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரின் இழப்பீட்டு நம்பிக்கைபொறுப்பு நிதியத்துக்கு ஆதனத்தைக் கையுதிர்த்ததன் மூலம் வழிவந்த பெறுமதியின் எண்பது சதவீதத்தைக் கைமாற்றும்படியும்;

(ஆ) ஆதனத்தைக் கையுதிர்ப்பதன் மூலம் வழிவந்த பெறுமதியின் பத்து சதவீதத்தைக் தக்கவைக்கும்படியும் குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமை செய்தல் நிதியத்துக்கு அத்தகைய பணத்தொகையைக் கைமாற்றும்படியும்;

(இ) ஆதனத்தைக் கையுதிர்த்ததன் மூலம் வழிவந்த பெறுமதியின் பத்து சதவீதத்தை தக்கவைக்கும் படியும் அத்தகைய பணத்தொகையை காலத்துக்கு காலம் பின்வரும் நோக்கங்களுக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு, இலங்கை பொலிசாருக்கு மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்குக் கையளிக்கும் படியும் :-

(i) சட்டவலுவுறுத்தல் சட்ட அலுவலர் களுக்கும் ஆளணியினருக்கும் பயிற்சியளித் தலும் அவர்களின் ஆற்றல்களைக் கட்டி யெழுப்புதலும்;

(ii) குற்றச்செயல்களின் வரும்படிகளைப் புலனாய்வு செய்தல், கண்டறிதல் மற்றும் அடையாளங்காணுதலுக்கு அவசியமான சாதனங்களைப் பெறுதலும்;

(iii) குற்றச்செயல்களின் வரும்படிகள் தொடர் பிலான தடைசெய்தற் கட்டளைகளைக் கைப்பற்றுதல், அவற்றின் தற்காலிக கட்டுக்காப்பு மற்றும் வலுவுறுத்தலுக்கு அவசியமான வளங்கள்;

(iv) சட்ட முறையற்ற செயற்பாட்டைப் புரிவதிலிருந்து நன்மைபெறும் ஆட்களைத் தடுப்பதற்கு அவசியமான செயற்பாடுகள்;

(v) குற்றச்செயல்களின் வரும்படி களாகவுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்ட அவற்றைக் கொண்டுள்ள ஆதனத்தின் பணஓட்டப் புலனாய்வுகள், நிதிசார் பகுப்பாய்வு, சட்டமருத்துவக் கணக்கீடு, சட்டமருத்துவக் கணக்காய்வு, வர்த்தகத்

தரவுத் தளங்களை அணுகுதல், கண்டறிதல், அடையாளங்காணுதல், தேடுதல் மற்றும் பரிசோதனை செய்தல் தொடர்பில் உள்நாட்டு அல்லது வெளி நாட்டு தகுதிவாய்ந்த ஆட்களின் அல்லது நிறுவனங்களின் மற்றும் ஒழுங் கமைப்புக்களின் உயர்தொழில்சார் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது பெறுதல் தொடர்பாக அவசிய மான கொடுப்பனவுகளைச் செய்தல் அத்துடன்;

(எ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்து செல்லும் வேறு ஏதேனும் நோக்கத்துக்காக.

(5) சட்டமுறையற்ற செயற்பாட்டை புரிந்தமை காரணமாக இழப்பை அடைந்திருக்கக்கூடிய ஆட்களின் வகுதியை அடையாளங்காண முடியாதென அல்லது சட்டமுறையற்ற செயற்பாட்டை புரிந்தமை காரணமாக எவரேனும் ஆளை நேரடியாக ஏதேனும் இழப்பை அடைந்துள்ளாரெனச் சான்றெதுவுமில்லையென நீதிமன்றம் முடிவு செய்யுமிடத்து, நீதிமன்றமானது பாராளுமன்றத்தினால் பணிக்கப்பட்டவாறு சட்டத்தின் நியதிகளின்படி பயன்படுத்துவதற்கு இழப்பிக்கப்பட்ட ஆதனத்தின் கையுதிர்ப்பினால் வழிவந்த பெறுமதியின் எண்பது சதவீதத்தை திரட்டு நிதியத்துக்கு கைமாற்றுவதற்கு அதிகாரசபையைப் பணித்தல் வேண்டும். எஞ்சியுள்ள இருபது சதவீதம் இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் தரப்பட்டுள்ள முறையில் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

(6) சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிவதிலிருந்து வழிவந்த வரும்படிகளிலிருந்து தனிவேறாக்கப் படத்தக்கதல்லாத ஒரு சட்டமுறையான ஆதனத்தை இழப்பிக்கப்பட்ட ஆதனம் பகுதியளில் கொண்டுள்ளதென நீதிமன்றம் முடிவு செய்யுமிடத்து, நீதிமன்றமானது, குற்றச்செயல்களின் இழப்பிக்கப்பட்ட வரும்படிகளின் சட்டமுறையான ஆக்கக்கூறின் பெறுமதியைக் கணப்பீடு செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனத்துக்குச் சட்டமுறையான உரிமைக்கோரிக்கையொன்றைக் கொண்டு

உள்ளாரென நீதிமன்றம் அடையாளங்காணும் திறத்தவருக்கு அத்தகைய தொகையை கைமாற்றும்படி அதிகாரசபையைப் பணித்தலும் வேண்டும்.

(7) இழப்பிக்கப்பட்ட ஆதனத்தின் கையுதிர்ப்பினால் வழிவந்த பெறுமதி இயைபான சட்டமுறையற்ற செயற்பாடு புரியப்பட்டமை காரணமாக ஒன்றில் தானாகவோ அல்லது அதன் மக்கள் மூலமாகவோ அல்லது நிறுவனங்கள் மூலமாகவோ இழப்பொன்றை அடைந்திருந்த கோரிக்கைவிடுக்கின்ற அரசொன்றுக்கு அனுப்பப்படல் வேண்டுமென நீதிமன்றம் முடிவு செய்யுமிடத்து, நீதிமன்றமானது இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளுக்கிணங்கியொழுகுவதற்கமைய அத்தகைய கோரிக்கை விடுக்கின்ற அரசின் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இயைபான பணத்தொகையை கைமாற்றும் படி வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கலந்தாலோசனையுடன் அதிகாரசபையைப் பணித்தல் வேண்டும்.

## பாகம் IX

## குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரின் இழப்பீட்டு நம்பிக்கை பொறுப்பு நிதியம்

குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப் பட்டோரின் இழப்பீட்டு நம்பிக்கை பொறுப்பு நிதியம்

**132.** (1) (இச்சட்டத்தில் “நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்டோரின் இழப்பீட்டு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்” எனவழைக்கப்படுவதும் இச்சட்டத்தின் நடைமுறையினால் உருவாக்கப்பட்டதுமான நம்பிக்கைப் பொறுப்பொன்று இருத்தல் வேண்டும்.

(2) நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது, திரட்டு நிதியத்தின் ஒரு பாகமாகவிருத்தல் வேண்டும்.

(3) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் :-

(அ) பின்வருவனவற்றைக் கவனத்திற்கொள்வதன் மேல், அதாவது –

(i) இழப்பீடு அதிகரிக்கப்படவேண்டிய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோரின் வகுதி தொடர்பான மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளை; அத்துடன்

(ii) இழப்பிக்கப்பட்டுள்ள இயைபான குற்றச்செயல்களின் வரும்படிகளை ஏற்படுத்திய சட்டமுறையற்ற செயற் பாட்டின் புரிகை, மேற்கூறப்பட்ட வகுதியினரான குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களைப் பாதித்த முறை,

என்பன அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரின் நன்மைக்காக நடை முறைப்படுத்தப்படவேண்டிய பொருத்தமான இழப்பீட்டு, அபிவிருத்திகள் அல்லது சேமநலச் செயற்பாட்டை வகுத்தமைத்தல்.

*விளக்கம்:*

இது மேற்கூறப்பட்ட சட்டமுறையற்ற செயற்பாட்டின் விளைவாக ஏற்பட்ட தொடக்க எதிர்மாறான தாக்கத்தை தணிக்கின்ற நோக்கத்துக்காகும்-

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரின் பாதிக்கப்பட்ட வகுதிகளைப் பற்றி நீதிமன்றத்தினால் அளவுக்குறிப்பீடொன்றின்றி ஏதேனும் பணத்தொகைகளை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு அனுப்பப்படின், அரசின் கொள்கைகளைக் கருத்திற்கொண்டு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் நிதியத்துக்கு அனுப்பப்பட்ட அத்தகைய நிதிகளைப்

பயன்படுத்தி நிறைவேற்றப்படக்கூடியவையும் அவற்றின் நடைமுறைப்படுத்துகை பொது மக்கள் நலனுக்கானதாகவுள்ளவையுமான பொருத்தமான அபிவிருத்திசார் செயற்பாடுகள் அடையாளங்காணுதல்.

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிகள்

**133.** (1) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) 131 ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் பந்தி (அ) வின் நியதிகளின் படி மேல் நீதிமன்றத்தின் பணிப்பொன்றின் மீது அதிகாரசபையினால் அனுப்பப்பட்ட பணத்தொகைகள்;

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு அனுப்பப் படுவதற்கான பாராளுமன்றம் வாக்களிக்ககூடிய பணத்தொகைகள்; அத்துடன்

(இ) இலங்கை உரித்துடைமையொன்றைக் கொண்டுள்ள குற்றச்செயல்களின் வரும் படிகளினது கையுதிர்ப்பிலிருந்து திரளுகின்ற பணங்களாக வெளிநாட்டு நிருவாக, சட்ட வலுவுறுத்தல் மற்றும் நீதிமுறை அதிகாரிகளினால் இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பப்படக்கூடிய பணத்தொகைகள்.

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப் பாளர்கள் சபை

**134.** நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தவிசாளராகவிருக்கவேண்டிய திறைசேரிச் செயலாளர்; அத்துடன்

(ஆ) பின்வரும் ஆறு உறுப்பினர்கள்:-

(i) அமைச்சரின்அமைச்சுச்செயலாளர்அல்லது அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளரொருவர் (சட்டம்);

(ii) சமூக சேவைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளரொருவர்;

(iii) மத்திய வங்கியின் நிதிசார் முறைமை நிலையுறுதிக்கும் பொறுப்பாகவுள்ள பிரதி ஆளுநர்;

(iv) இலங்கை வர்த்தக பணிமனையின் தவிசாளர் மற்றும் அவர்களுடைய தெரிவுக்கான காரணங்களுக்கான;

(v) அமைச்சினாலும் சமூக சேவைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினாலும் கலந்தலோசனையுடன் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மதிப்புக் கொண்ட அரசியல் ரீதியில் இணைந்திராத சமூக சேவைகள் ஒழுங்கமைப்பினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நேர்மை மற்றும் பெயர் ஒழுக்க அந்தஸ்துடைய இரண்டு ஆட்கள்.

நம்பிக்கை பொறுப் பாளர்களின் கடமைகள்

**135.** நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர்களினது கடமைகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) பின்வருவனவற்றை கருத்திற்கொண்டு வகுத்தமைக்கப்பட்ட செயற்பாட்டை நடை

முறைப்படுத்துவதற்குப் பொருத்தமான ஆட்களை அடையாளங்காணுதலும், நியமித்தலும்:-

(i) அத்தகைய செயற்பாட்டை பயனுற நடைமுறைப்படுத்துவதற்கு இயன்றவராக விருக்கக்கூடிய அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின்;

(ii) மிகவும் அனுகூலமான நியதிகளின் மீது அத்தகைய நடைமுறைப்படுத்துகின்ற முகவராண்மையின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல்; அத்துடன்

(iii) குறித்தளிக்கப்பட்ட நிதிகள் எவையேனும் மேலதிக சட்டமுறையற்ற செயற்பாடுகளுக்கமையாதிருப்பதனையும் வாக்கப்படாதிருப்பதையும் குறித்தளிக்கப்பட்ட செயற்பாடுகள் ஒரு வெளிப்படையான முறையில் நடைமுறைப் படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்துதல்;

(ஆ) மிகவும் அனுகூலமான நியதிகளின் மீது ஒரு தகுதிவாய்ந்த நடைமுறைப்படுத்துகின்ற முகவராண்மையின் சேவைகளைப் பெற்றுக்கொள்கின்ற நோக்கத்துக்காக அக்கறைகளின் வெளிப்படுத்துகைகளையும் கேள்விப்பத்திரங்களையும் கோருதல்;

(இ) வகுத்தமைக்கப்பட்ட செயற்பாடுகளின் நடைமுறைப்படுத்துகை தொடர்பில் அரச முகவராண்மைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்துகொள்ளுதலும், அவை தொடர்பில் அரச சார்பற்ற முகவராண்மைகளுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதலும்;

(ஈ) செயற்பாடுகள் நடைமுறைப்படுத்துதல், வேலை முன்னேற்றத்தை கண்காணித்தல்,

மற்றும் மேற்பார்வைக்காக நிதிகளைக் குறித்தொதுக்குதல்;

(உ) நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் குறிக்கோள்களுக்கு பயன்கொடுக்கும் நோக்கங் களுக்காக அவசியமாக்ககூடிய வேறேதேனும் செயற்பாட்டை நிறைவேற்றுதல்;

(ஊ) நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் குறிக் கோள்களுக்கும், நம்பிக்கை பொறுப்பாளர்களின் கடமைகளுக்கும் பயன் கொடுப்பதற்கு நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கு உதவுவதற்கு பொதுத் திறைசேரியின் அலுவலர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல்;

(எ) திரட்டு நிதியத்தினுள் கணக்கொன்றை தாபித்தலும் பேணுதலும் வருடாந்த நிதிக்கூற்றைப் பேணுதலும்;

(ஏ) இழப்பீடுகள், அபிவிருத்திகள் மற்றும் சேமநலச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மீதான எல்லாத் தகவல்களையும் வெளியிடுதலும், அவற்றின் முன்னேற்றம் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அலுவலக முறையான வலைத்தளத்தின் மீது காலாண்டுக்கொரு தடவை வெளியிடுதலும்;

(ஐ) கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் வருடாந்தக் கணக்காய்வுகள் உள்ளடங்கலாக கணக்குகளின் கணக்காய்வைச் செய்வித்தல்; அத்துடன்

(ஒ) ஒரு வருடாந்த அறிக்கையைப் பாராளு மன்றத்துக்குச் சமர்ப்பித்தலும் அத்தகைய வருடாந்த அறிக்கையை அதன் வலைத்தளத்தில் வெளியிடுதலும்.

**136.** நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பயனுகரிகள் பின்வருவோராகவிருத்தல் வேண்டும்:- நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பயனுகரிகள்

(அ) மேல்நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு சட்டமுறையற்ற செயற்பாடுகளைப் புரிந்தமை காரணமாக இழப்பை அடைந்துள்ள ஆட்கள்;

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரின் பாதிக்கப்பட்ட வகுதியினராக நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினால் அடையாளங் காணப்பட்ட ஆட்கள்.

**137.** (1) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் கூட்டங்கள் ஆகக் குறைந்தது மாதத்துக்கொரு தடவை நடாத்தப்படுதல் வேண்டும். நம்பிக்கைப் பொறுப் பாளர்கள் சபையின் கூட்டங்களும் கூட்ட நடப் பெண்ணும்

(2) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) தவிசாளர் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்காதபோது, சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்கு தலைமைதாங்குதல் வேண்டும்.

(4) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லா கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையோரான வாக்குமூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகளில் சமமின்மை ஏற்படும் சந்தர்ப்பத்தில்

அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குகின்ற தவிசாளர் அல்லது அத்தகைய வேறு உறுப்பினர், அவருடைய வாக்கு மேலதிகமாக அறுதி வாக்கொன்றை கொண்டிருத்தல் வேண்டும்

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை, நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் வியாபார கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

நம்பிக்கைப் பொறுப் பாளர்கள் சபையின் சபைச் செயலாளர்

**138.** (1) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது, காலத்துக்குக்காலம், ஒன்றில் முழுநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் சபைச் செயலாளராகப் பணியாற்றுவதற்கு ஒரு சட்டத்தரணியை அல்லது பட்டயம்பெற்ற செயலாள ரொருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(2) தவிசாளரினால் பணிக்கப்பட்டவாறாக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் தீர்மானமொன்றின் அடிப்படையின்மீது நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் சபைக் கூட்டங்களைக் கூட்டுவது சபைச் செயலாளரின் கடமையாதல் வேண்டும்.

(3) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபைக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்புக்களைப் பேணுவதும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபைக் கூட்டங்களை நடாத்துவதற்கு அவசியமான ஒழுங்ககேற்பாடுகளை வசதிப்படுத்துவதும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபைச் செயலாளரின் பொறுப்பாதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் கள் சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள், ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடி யற்றனவாகக் கருதப்படு தலாகாது

**139.** நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றலாமென்பதுடன் சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் முறைப்பாடு இருப்பதன்காரணமாகமட்டும்செல்லுபடியற்றதாகவிருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாக இருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

நம்பிக்கைப் பொறுப் பாளர்கள் சபையுறுப் பினர்களின் ஊதியம்

**140.** நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் உறுப்பினர்கள் நிதி என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய ஊதியங்களிலும் செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் X

## சர்வதேச ஒத்துழைப்பு

பரஸ்பரச் சட்ட உதவி

**141.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தில் அடங்கியுள்ள திட்டம், குற்றவியற் கருமங்களில் பரஸ்பர உதவிச் சட்டத்தின் நியதிகளின்படி நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) குற்றச் செயல்களின் வரும்படிகள் தொடர்பாகக் குற்றவியற் கருமங்களில் பரஸ்பர உதவிச் சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட மத்திய அதிகாரசபையினாற் பெறப்பட்ட பரஸ்பரச்சட்ட உதவிக்கான ஏதேனும் கோரிக்கை, பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்கு அல்லது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு, இச்சட்டத்தின் நியதிகளின்படி அவர்களின் பணிகளைக் குறித்தளித்தலுக்கு உரிய கவனஞ்செலுத்தி, அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

ஏனைய நாடுகளின் தகுதிவாய்ந்த அதிகாரி களுக்கு இலங்கை யினாலான கோரிக்கைகள்

**142.** நிருவாகத் தேவைப்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்காக நோக்கங்களுக்காக எய்தும் பின்வருவன தொடர்பில் ஏனைய நாடுகளின் நிருவாக, சட்ட வலுவுறுத்துகை மற்றும் நீதிமுறைத் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து உதவி நாடுதலும் பெற்றுக்கொள்ளுதலும் ஒரு பெயர் குறிக்கப்பட்ட அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) குற்றச்செயல்களின் வரும்படிகளெனச் சந்தேகிக்கப்பட்ட ஆதனத்தைக் கண்டறிதல், அடையாளங்காணுதல். தேடுதல், கண்டுபிடித்தல்

மற்றும் பரிசோதனை செய்தலுக்கும் வேறு புலனாய்வுசார் நோக்கங்களுக்குமான உதவி;

(ஆ) மாதிரிகளும் வகைக்காட்டுகளும் உட்படவும் ஆவணங்கள், சாட்சிக் கூற்றுக்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்கள் உட்படவும் சான்றைச் சேகரிப்பதற்கான உதவி;

(இ) சாட்சிகள், ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் சந்தேதிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளை கண்டுபிடிப்பதற்கும் அடையாளங் காண்பதற்குமான உதவி;

(ஈ) ஒன்றில் நேரடியாக அல்லது ஓரேகாலத்துக்குரிய கட்புல – செவிப்புல இணைப்பொன்றினூடாகச் சாட்சிகளை நேர்காண்பதனையும் சாட்சி களின் கூற்றுக்களைப் பதிவதனையும் வசதிப் படுத்துவதற்கான உதவி குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய நேர்காணலின் தொலைவு அமைவிடம், இயைபான நிருவாக, சட்ட வலுவுறுத்துகை அல்லது நீதிமுறைத் தகுதிவாய்ந்த அதிகாரியின் அலுவலகத்தில் இடம் பெறலாம்;

(உ) குற்றச்செயல்களின் வரும்படிகளின் அல்லது அவற்றின் பெறுமதியின் கைப்பற்றுகை, நீதிமுறை முடக்கல் மற்றும் இழப்பித்தலும் இலங்கைக்குத் திருப்பியனுப்புதலுக்குமான கோரிக்கைகள்;

(ஊ) வெளிநாடுகளில் இலங்கை நீதிமன்றங்களினால் ஆக்கப்பட்ட நீதிமுறைக் கட்டளைகளை அனுப்புதல், சேர்ப்பித்தல் மற்றும் வலுவுறுத்தல்;

(எ) குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான மற்றும் குற்றத் தீர்ப்புச்சாரா அடிப்படையிலான இழப்பித்தல்

வழக்கு நடவடிக்கைகளுக்கும் தொடர்புபட்ட கருமங்களுக்குமான ஒத்துழைப்பு;

(ஏ) அழைப்புக் கட்டளைகளைச் சேர்ப்பித்தல், நீதிமன்றத்தின் ஏனைய மன்றாணைகள் மற்றும் இலங்கையில் நடைபெறும் நீதிமுறை வழக்கு நடவடிக்கைகளில் சாட்சிகளின் வருகையைப் பெறுவதற்கான உதவி;

(ஐ) கூட்டாக வெளிநாட்டு நிருவாக மற்றும் சட்ட வலுவுறுத்துகை அதிகாரிகளுடனும் தொடர்பு பட்ட எதிர்த்திறத்தவர்களுடனும் புலனாய்வுகளை நடாத்துதல் தொடர்பான உதவி;

(ஒ) ஓர் ஆரம்பக் கோரிக்கையின்மீது அடுத்துவரும் மற்றும் மேற்கொண்ட தொடர்புபட்ட உதவியுட்பட இச்சட்டத்தின் குறிக்கோள்களை எந்த வேறேதேனும் கருமம் தொடர்பில் உதவி எய்தும்நோக்கங்களுக்காக தேவைப்படுகின்றதோ அந்த வேறேதேனும் கருமம்.

ஏனைய நாடுகளின் வெளிநாட்டு நிருவாக, சட்ட வலுவுறுத்துகை மற்றும் நீதிமுறைத் தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் இலங்கை எதிர்த் திறத்தவர்களுக்கான கோரிக்கைகள்

**143.** ஒரு வெளிநாட்டு நிருவாக, சட்ட வலுவுறுத்துகை மற்றும் நீதிமுறைத் தகுதிவாய்ந்த அதிகாரி, பெயர் குறிக்கப் பட்ட அலுவலரொருவர் இச்சட்டத்தின் நியதிகளின்படி எந்தக் கருமம் தொடர்பில் வேறேதேனும் நாட்டின் ஒரு நிருவாக, சட்ட வலுவுறுத்துகை மற்றும் நீதிமுறைத் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து உதவி பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த ஏதேனும் கருமம் தொடர்பில் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரொருவருக்குக் கோரிக்கை விடுவிப்பதற்கும் அவரிடமிருந்து உதவி பெற்றுக் கொள்வதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

பரஸ்பர ஒத்துழைப்பு

**144.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள், பின்வருவனவற்றைப் பின்பற்றி வலுவுறுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) நேரொத்த அரசுடன் இலங்கை திறத்தவரொருவராகவுள்ள சர்வதேச, பிராந்திய, பல்புடை மற்றும் இருபுடை உடன்படிக்கைகள்;

(ஆ) இலங்கையினாலும் நேரொத்த அரசினாலும் ஏற்புறுதி செய்யப்பட்ட சர்வதேசச் சமவாயங்கள்; அத்துடன்

(இ) இலங்கையினாலும் நேரொத்த அரசினாலும் எய்தப்பட்ட நிமித்த அல்லது விடயம் விடயமாக என்ற அடிப்படையிலான புரிந்துணர்வு.

(2) இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சுக்கள் அமைச்சின் செயலாளர், (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள கருமங்கள் உள்ளமையைச் சான்றுப்படுத்துவதற்கு இலங்கையின் தகுதிவாய்ந்த அதிகாரியாக விருத்தல் வேண்டும்.

(3) வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினாலான கோரிக்கையொன்றின் மீது இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் பரஸ்பர ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக வேறேதேனும் நாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி பிராந்திய, பல்புடை மற்றும் இருபுடை உடன்படிக்கையை அல்லது நிமித்த அல்லது விடயம் விடயமாக என்ற அடிப்படையிலான புரிந்துணர்வுகளைச் செய்துகொள்வதற்குத் தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக பெயர்குறிக்கப்பட்ட அலுவலரொருவர் 142 ஆம் பிரிவிற் கூறப்பட்ட கருமங்கள் தொடர்பிலான கோரிக்கையொன்றை ஆரம்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்;

வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினூடாகப் பெறுநரா கவுள்ள அரசின் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இது அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பேணிக்காப்பதற்கு, தடைசெய்யப்படுவதற்கு கைப்பற்றுவதற்கு முடக்குவதற்கு அல்லது இழப்பிட்டதற்கு ஒரு வெளிநாட்டு நிருவாக, சட்ட வலுவுறுத்துகை அல்லது நீதிமுறை அதிகாரிக்கான கோரிக்கையொன்று, அத்தகைய கோரிக்கை மேல் நீதிமன்றத்தினால் வலுவளிக்கப் பட்டாலொழிய, ஒரு வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விடுக்கப்படுதலாகாது.

(6) குற்றச் செயல்களின் வரும்படிகளைக் கண்டறிதல், அடையாளங்காணல் மற்றும் கண்டுபிடித்தல் தொடர்பாக புலனாய்வுசார் உதவிக்காக அல்லது இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான வேறு ஏதேனும் கருமத்துக்காக ஒரு வெளிநாட்டு நிருவாக, சட்ட வலுவுறுத்துகை அல்லது நீதிமுறைத் தகுதிவாய்ந்த அதிகாரியினாலான கோரிக்கையொன்று, குற்றச்செயல்களின் வரும்படியைத் தோற்றுவிப்பதனை விளைவித்ததென நம்பப்படும் சட்டமுறையற்ற செயற்பாடு ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்ற செயல்களைப் புரிவதிலிருந்து தொடங்கியிருப்பின் இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்தல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு முகவரியிட்டனுப்படுதல் வேண்டும்.

மீளவொப் படைத்தல்

**145.** ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தல் சட்டத்தின் நோக்கங் களுக்காக இச்சட்டத்தில் அடங்கியுள்ள தவறுகள் மீளவொப்படைக்கத்தக்க தவறுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் XI

## நானாவித ஏற்பாடுகள்

ஒழுங்குவிதிகள்

**146.** (1) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகள் ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் அமைச்சர், கூட்டாக விதப்புரைகளைச் செய்யவேண்டிய பெயர்குறிக்கப்பட்ட அலுவலர்களின் அத்தகைய விதப்புரைகளின் மீதும் குற்றச் செயல்களின் வரும்படிகள் அதிகாரசபையின் விதப்புரைகளின் மீதும், சட்டத்துறைத் தலைமையதிபதியின் மதியுரையின் மீதும் பின்வருவன தொடர்பிலான நியமத் தொழிற்பாட்டு வரைவாவணங்கள் என்ற படிவத்தை எடுக்கவேண்டிய ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்குக் தத்துவமளிக்கப்படுதல் வேண்டும்.-

(அ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் பற்றிய புலனாய்வுகளை நடத்தக்கூடிய முறை;

(ஆ) தடைசெய்தற் கட்டளைகளை வழங்குதலில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும் ஒரு தடைசெய்தற் கட்டளையின் படிவமும்;

(இ) கைப்பற்றுகையொன்று நிறைவேற்றப்பட வேண்டிய முறையும் கைப்பற்றல் அறிவித்தலின் படிவமும்;

(ஈ) தடைசெய்தலுக்கு முன்னரான மற்றும் கைப்பற்றுதலுக்கு முன்னரான திட்டமிடுதலை நடாத்துதல்;

(உ) குற்றச்செயல்களின் வரும்படிகளைப் பாதுகாத்தல், பேணிக்காத்தல் மற்றும் முகாமை செய்தல்;

(ஊ) குற்றவியல் கருமங்களிலான பரஸ்பர உதவிச் சட்டத்தின் ஏற்பாடுகள் எம்முறையில் வேண்டப்படலாமோ அம்முறையும் வெளிநாட்டு நிருவாகத் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து எம்முறையில் புலனாய்வுகளுக்கு உதவியாக்கப்படலாமோ அம்முறையும்;

(எ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் பற்றிய புலனாய்வுகளை நடத்துவதில் ஒரு வெளிநாட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்தான கோரிக்கையொன்று எம்முறையில் நிறைவேற்றப்படவேண்டுமோ அம்முறை;

(ஏ) ஒரு வெளிநாட்டில் புரியப்பட்ட சட்ட முறையற்ற செயற்பாடொன்று தொடர்பில் இலங்கையில் அமைந்துள்ள குற்றச்செயல்களின் வரும்படியொன்று இழப்பிக்கப்படுவதற்கான கோரிக்கையொன்று எம்முறையில் செய்முறைப்பட்டும் அதற்குப் பயன்கொடுக்கப்பட வேண்டுமோ அம்முறை;

(ஐ) ஒரு வெளிநாட்டில் நடத்தப்படவேண்டிய புலனாய்வுகளுக்கான உதவிக்கான கோரிக்கையொன்று எம்முறையில் விடுவிக்கப்பட வேண்டுமோ அம்முறை;

(ஒ) அழுகிப்போகத்தக்க மற்றும் ஆபத்து விளைவிக்கத்தக்க குற்றச்செயல்களின் வரும்படிகளை கையுதிர்த்தல்;

(ஓ) எந்த நடவடிக்கை முறை மூலம் நீதிமன்றம் ஆதனத்தின் கீழ் பெறுமான மதிப்பீட்டைப் பெற வேண்டுமோ மற்றும் அத்தகைய ஆதனத்தின் பெறுமதியினைத் தீர்மானிக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைமுறை; அத்துடன்

(ஔ) குற்றச்செயல்களின் வரும்படிகளின் ஏலவே எந்த நடவடிக்கை முறை மூலம் நிறைவேற்றப் படவேண்டுமோ அந்த நடவடிக்கைமுறை.

(3) ஒரு நியமத் தொழிற்பாட்டு வரைவாவணம் பிரகடனப்படுவதன் மேல், அத்தகைய வரைவாவணம் சட்ட வலுவுறுத்துகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) அமைச்சினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(5) (அ) அமைச்சினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்கு விதியும், அது வர்த்தமானியில் வெளியிடப் பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப் பட்ட தேதியிருந்துள்ளவாறு ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(6) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**147.** இச்சட்டத்தின் ஏற்பாடொன்றுக்கும் வேறே தேனும் சட்டத்தின் ஏற்பாட்டுக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை உள்ளவிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடு அத்தகைய வேறு சட்டத்தின் ஏற்பாட்டின்மீது மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இச்சட்டம் வேறு சட்டங்களின் ஏற்பாட்டின் மீது மேலோங்கி நிற்றல்

**148.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நல்லெண்ணத் துடனும் விழிப்புணர்வுடனும் செயலாற்றியுள்ள பெயர் குறிக்கப்பட்ட அலுவலர் அல்லது ஒரு புலனாய்வு அலுவலர் அல்லது வேறெவரேனும் பொலிசு அலுவலர் அல்லது பெயர் குறிக்கப்பட்ட அலுவலரின் அல்லது புலனாய்வு அலுவலரின் அறிவுறுத்தல்களின் மீது செயலாற்றியுள்ள இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய ஆணைக்குழுவிற்கு அலுவலரொருவர், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அத்தகைய உறுப்பினரினால் அல்லது அலுவலரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் சட்டமுறையிலான செயலுக்காக ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வேறு சட்ட வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்படுதலாகாது.

நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட செயல்களுக்கான பாதுகாப்பு

**149.** (1) இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இதன்கண் உள்ள ஏற்பாடுகள் மீது மேலோங்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தகவலுக்கு உரித்துடையவரான ஆளொருவர் பீசீஐடி, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிச் சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, அதிகாரசபை மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றிலிருந்து அத்தகைய தகவலைப் பெறுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்புடைமை

(2) பீசீஐடி, அதிகாரசபை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பன அத்தகைய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டதிலிருந்து

மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இச்சட்டத்தின் கீழ் அத்தகைய நிறுவனங்களின் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காகத் தகவல் அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும்; அவரது பணிகள், மற்றவற்றுக்கிடையே, தகவலுக்கான உரிமைச் சட்டத்தில் அடங்கியுள்ளவாறாகத் தகவல் அலுவலரொருவரின் பணிகளைப் புரிவதனை உள்ளடக்குதல் வேண்டும்.

வரைவிலக் கணங்கள்

**150.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"கணக்கு" என்பது ஒரு நிதிநிறுவனம் பின்வருவனவற்றுள் எதனையும் ஒத்த வசதி அல்லது ஒழுங்கேற்பாடு மூலம் செய்கின்ற அந்த ஏதேனும் வசதி அல்லது ஒழுங்கேற்பாடு என்பது பொருளாகும்:-

(அ) நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்;

(ஆ) நாணயம் மீளப்பெறுமைகளை அனுமதித்தல்; அல்லது;

(இ) நிறுவனத்தின் மீது மாற்றப்பட்ட காசோலைகளை அல்லது கொடுப்பனவுக் கட்டளைகளைச் செலுத்தல் அல்லது நிதிநிறுவனம் தவிர்ந்த ஆளொருவரின் சார்பில் காசோலைகள் அல்லது கொடுப்பனவுக் கட்டளைகளைச் சேகரித்தல்,

அத்துடன் ஒரு காப்பு வைப்புப் பெட்டிக்கான அல்லது வேறேதேனும் வடிவத்திலான காப்பு வைப்புக்கான ஏதேனும் வசதியை அல்லது ஒழுங்கேற்பாட்டை உள்ளடக்கும் ;

"ஊழல் எதிர்ப்புச் சட்டம்" என்பது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டம் என்று பொருளாகும் ;

"குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம்" என்பது, 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்பு கூட்டம் என்று பொருளாகும்.

“அதிகாரசபை” என்பது இச்சட்டத்தின் 96 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமைத்துவ அதிகாரசபை என்று பொருளாகும்;

“நன்மை” என்பது எவ்வகையினதுமானவோர் அனுகூலம், ஈட்டுகை, சேவை இலாபம் அல்லது கொடுப்பனவு மற்றும் இன்னோராள் முதலாவது ஆளின் -

(அ) கட்டுப்பாட்டின் கீழ் இருப்பின்;

(ஆ) முதலாவது ஆளினால் பணிக்கப்படின் அல்லது வேண்டப்படின்; அல்லது

(இ) முதலாவது ஆளுடன் ஒரு திருமண அல்லது குடும்ப உறவுமுறையை அல்லது ஒரு குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பின்,

இன்னோராளுக்கு வழிவந்தவர்கள் பெற்றுக்கொண்டவை, அல்லது அத்தகைய வேறு ஆளுக்கு வேறுவகையில் திரள்கின்றவையுட்பட, ஆளொருவருக்கு வழிவந்த அல்லது அவர் பெற்றுக்கொண்ட அல்லது அவருக்குத் தருகின்ற நன்மைகள் என்று பொருள்படும் ;

“காசு” என்பது வழங்குகை நாட்டில் சட்டமாகப் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் குற்றியொன்று அல்லது தாள் நாணயம் என்று பொருளாகும் என்பதுடன்

(அ) கொண்டுவருபவர் முறிகள் ;

(ஆ) பயணிக் காசோலைகள்;

(இ)அஞ்சல் ;

(ஈ) பணக் கட்டளைகள் என்பனவற்றை உள்ளடக்கும்.

“குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை” என்பது (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை என்று பொருளாகும்;

“குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டம்” என்பது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் ஒன்று பொருளாகும்.

“ஆணைக்குழு” என்பது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு என்று பொருளாகும்;

“கணினி முறைமை” என்பது, இணையத்தினூடாக அல்லது வேறேதேனும் வடிவத்திலான தொடுப்பு முறையினூடாக உட்பட, ஒரு கணினி அல்லது இடைத்தொடுக்கப்பட்ட கணனிகளின் தொகுதி என்று பொருளாகும்.

“கட்டுப்படுத்தப்பட்ட ஒப்படைப்பு” என்பது பின்வருவன உட்பட ஆனால், அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக, ஒரு புலனாய்வு அலுவலரின் நேரடியான அல்லது நேரடியானதல்லாத கண்காணிப்பின் கீழ், இலங்கையிலிருந்து கடத்திச்செல்வதற்கு இலங்கையினூடாக அல்லது இலங்கையினுள் கடத்திச் செல்வதற்கு அல்லது இலங்கையின் ஆள்புலத்தில் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குச் செல்வதற்குக் குற்றச்செயல்களின் வரும்படிகளெனச் சந்தேகிக்கப்பட்ட ஆதனமொன்றை அனுமதிக்கின்ற புலனாய்வுசார் தொழில்நுட்பம் என்று பொருளாகும்:-

(அ) இச்சட்டத்தின் கீழ் சொல்லப்பட்ட குற்றச் செயல்களின் வரும்படிகளை ஈட்டியதெனச் சந்தேகிக்கப்பட்ட தவறையும் தவறுகளின் புரிகை களையும் மேற்கொண்டு புலனாய்வை இயலச் செய்தல்;

(ஆ) மேற்கூறப்பட்ட தவறுகளைப் புரிவதில் சம்பந்தப்பட்ட எல்லா ஆட்களையும் அடையாளங் காணுதல்;

(இ) சொல்லப்பட்ட ஆதனத்தைப் பெறுவதனை இயலச்செய்கின்ற பணமூலம் தொடர்பான சான்று மற்றும் அத்தகைய ஆதனம் தொடர்பான அல்லது அதிலிருந்து எழுகின்ற நிதிக்கொடுக்கல்

வாங்கல்கள் சொல்லப்பட்ட ஆதனம் குற்றச் செயல்களின் வரும்படியொன்றாகவென்பதைத் தீர்மானிக்கின்ற சான்றுப்பட சொல்லப்பட்ட ஆதனம் தொடர்பான சான்றைச் சேகரித்தல்; அல்லது

(ஈ) அத்தகைய ஆதனத்தின்மீது ஆதிக்கம் கொண்டவர்களும் அத்தகைய ஆதனம் தொடர்பின் பயனுகர் அக்கறையைக் கொண்டு உள்ளவர்களுமான ஆட்களைக் கண்டறிதலும் அடையாளங்காணுதலும்;

“பயங்கரவாதி நிதியளிப்பலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம்” என்பது, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் என்று பொருளாகும்;

“நீதிமன்றம்” என்பது, குடியரசின் மேல் நீதிமன்றம் என்று பொருளாகும்;

“நாணயம்” என்பது, சட்ட நாணயமாகப் பெயர் குறிக்கப்பட்டதும் வழங்கும் நாட்டில் பரிமாற்ற ஊடகமொன்றாக வழக்கமான முறையில் பயன்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான இலங்கையின் அல்லது ஒரு வெளிநாட்டின் நாணயம் என்று பொருளாகும்;

“ஆதனத்தைக் கையாளுதல்” என்பது, -

(அ) ஓர் ஆதனக் கைமாற்றம் அல்லது கையுதிர்ப்பு;

(ஆ) ஆதனத்தைக் கொடையொன்றாக அளித்தல் அல்லது பெறுதல்;

(இ) ஆதனத்தை இலங்கையிலிருந்து அகற்றுதல்;

(ஈ) ஆதனமானது அவ்வாளுக்குச் சேர்மதியான தனிசொன்றாக இருக்குமிடத்து, தனிசின்

தொகையைக் குறைத்து அல்லது முழுமையாகத் தீர்த்துவைத்து எவரேனுமாளுக்குக் கொடுப்பன வொன்றைச் செய்தல்;

(உ) கடனைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது நீடிப்பதற்கு ஆதனத்தைப் பயன் படுத்துதல், அல்லது ஆதனத்தினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடனைப் பயன்படுத்துதல்; அல்லது

(ஊ) ஆதனமானது ஒரு பங்காண்மையிலான அக்கறை யொன்றாக இருக்குமிடத்து, பங்காண்மையில் பெறுமதியைக் குறைப்பதற்கு எதனையும் செய்தல்,

*“எண்ணிம நாணயம்” என்பது –*

(அ) (i) ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு பெறுமதி வாய்ந்த பிரதிபயனாக அல்லது பெறுமதியின் கணக்குக் கூறொன்றாக அல்லது தேக்கமாக பரிமாற்றல் ஊடகமொன்றாகப் பயன்படுத்தப்படுகின்றது; அத்துடன்

(ii) சட்ட நாணயமாக ஏற்றங்கீகரிக்கப்படக் கூடியதாகவிராத, பணவகையான பெறுமதியின் ஏதேனும் எண்ணிமப் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கும்; அத்துடன்

(ஆ) பின்வருவனவற்றை உள்ளடக்காது:-

(i) உரு தொடர்பு அல்லது வெகுமதிகள் நிகழ்ச்சித்திட்டமொன்றின் பாகமாக, வணிகரொருவர், சட்ட நாணயம், வங்கிக்கடன் அல்லது எண்ணிம

நாணயத்துக்காக அவ்வணிகரிடமிருந்து எடுக்கப்படமுடியாத அல்லது அவருடன் பரிமாற்றப்பட முடியாத பெறுமதியை வழங்குகின்ற ஒரு கொடுக்கல்வாங்கல்; அல்லது

(ii) ஒரு வெளியீட்டாளரினால் அல்லது அவர் சார்பில் வழங்கப்பட்டதும் அதே வெளியீட்டாளரினால் விற்பனை செய்யப்பட்ட அல்லது அதே விளையாட்டுத்தளத்தில் முறையிடப்பட்ட ஒரு இயல்பு நிலை விளையாட்டினுள், விளையாட்டுத்தளத்தினுள், அல்லது விளையாட்டுக்கள் தொகுதியினுள் மட்டுமே பயன்படுத்தப்பட்டதுமான பெறுமதியின் ஒரு எண்ணிமப் பிரதிநிதித்துவம்.

"ஆவணம்" என்பது ஏதேனும் தகவற் பதிவேடு என்று பொருளாகுமென்பதுடன், பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(அ) எழுத்தின் மீது எழுந்துள்ள எதுவும்;

(ஆ) அவற்றின் அர்த்தத்தைத் தகைமைபெறும் ஆட்கள் பொருள்கோடலுக்கு அதன்மீது குறியீடுகள், எண்கள், சின்னங்கள் அல்லது துளைகள் உள்ள எதுவும்;

(இ) வேறொருவரினால் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ அவற்றிலிருந்து ஒலிகளை, உருவங்களை அல்லது எழுத்துக்களைத் தோற்றுவிக்க முடியுமான எதுவும்;

(ஈ) ஒரு நிலப்படம், வரைபடம், வரைதல், நிகற்படம் அல்லது ஒத்த பொருள் ; அத்துடன்

(உ) இலத்திரனியல் வடிவத்தில் வைத்திருக்கப்பட்ட அல்லது பேணப்பட்ட மேலேயுள்ளவற்றுள்

எதுவும் மற்றும் ஓர் எண்ணிம ஆவணத்தையும் உள்ளடக்கும்;

"பெயர்குறிக்கப்பட்ட நிதிசாராத் தொழில் மற்றும் உயர் தொழில்கள்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) இணையத்தளத்தினூடாக கசினோத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆளொருவருக்குட்பட்ட கசினோக்கள் மற்றும் அடிப்படையிலான அல்லது கலன் அடிப்படையிலான கசினோக்கள்;

(ஆ) ஆதன அபிவிருத்தியாளர்களுக்குட்பட நிலையான சொத்து முகவர்கள்;

(இ) 1993 ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தினால் மேவப்பட்ட உலோகங்களும், கற்களும் உட்பட ஆனால், அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் அரிய உலோகங்களில் வியாபாரஞ் செய்வோரும் அரிய மற்றும் பகுதியளவில் அரிய கற்களில் வியாபாரஞ் செய்வோரும்;

(ஈ) பின்வரும் செயற்பாடுகள் எவை தொடர்பாகவும் சட்டத்தரணிகள் நொத்தாரிசுமார், வேறு சுயாதீனமான சட்ட உயர் தொழிலாண்மையாளர்கள் மற்றும் கணக்காளர்கள் அவர்களின் கட்சிக்காரர்களுக்காக கொடுக்கல்வாங்கல்களைத் தயாரிக்கும் போது அல்லது நிறைவேற்றும் போது, அவர்கள்:-

(i) நிலையான சொத்தை வாங்குதலும், விற்பனை செய்தலும்;

(ii) வாடிக்கையாளரின் பணம், பிணைப் பொறுப்புக்கள் அல்லது வேறு ஆதனத்தை முகாமை செய்தல்;

(iii) வங்கி, சேமிப்பு அல்லது பிணைப் பொறுப்புக் கணக்குகளை முகாமை செய்தல் ;

(vi) கம்பனிகளை உருவாக்குதல், தொழிற்படுத்துதல்; அல்லது முகாமை செய்தலுக்காக உதவுத் தொகைகளை ஒழுங்கமைத்தல்; அத்துடன்

(v) சட்ட ஆட்களை அல்லது சட்ட ஒழுங்கேற்பாடுகளை உருவாக்குதல், தொழிற்படுத்துதல் அல்லது முகாமை செய்தல் மற்றும் தொழில் உருவகங்களை வாங்குதலும், விற்பனை செய்தலும்;

(உ) தொழில் ஒன்றாக மூன்றாந்திறத்தவர்களுக்குப் பின்வரும் சேவைகளுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ வழங்குகின்றவரும், இவ் வரைவிலக்கணத்தினால் வேறுவகையில் மேற்படாதவருமான நம்பிக்கைபொறுப்பு அல்லது கம்பனி சேவை வழங்குநர்:-

(i) சட்ட ஆட்களை அல்லது சட்ட ஒழுங்கேற்பாடுகளை அமைத்தல் அல்லது முகாமை செய்தல்;

(ii) ஒரு கம்பெனியின் பணிப்பாளரொருவராக அல்லது செயலாளரொருவராக ஒரு பங்காண்மையின் பங்காளரொருவராகச் செயலாற்றுதல் அல்லது அத்தகையவராகச் செயலாற்றுவதற்கு வேறொருவரினால் ஒழுங்கேற்பாடு செய்தல் அல்லது வேறு சட்ட ஆட்கள் தொடர்பாக ஓர் ஒத்த பதவி;

(iii) ஒரு கம்பெனிக்காக, பங்காண்மைக்காக அல்லது வேறெவரேனும் சட்ட ஆளுக்காக

அல்லது சட்ட ஒழுங்கேற்பாட்டுக்காக, ஒரு பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை, தொழில் முகவரியை அல்லது இடவசதியை, தொடர்பாடல் அல்லது நிருவாக முகவரியை வழங்குதல்;

(iv) வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளரொருவராகச் செயலாற்றுதல் அல்லது செயலாற்றுவதற்கு வேறொரு ஆளினால் ஒழுங்கேற்பாடு செய்தல்; அல்லது

(v) வேறொரு ஆளுக்காக நியமத்த பங்குதார ரொருவராகச் செயலாற்றுதல் அல்லது வேறொரு ஆளினால் செயலாற்றுவதற்கு ஒழுங்கேற்பாடு செய்தல்;

(ஊ) வேறு எழுத்திலான சட்டங்களினால் அதற்காக ஏற்பாடுசெய்யப்பட்ட வரைவிலக்கணங் களுக்கிணங்கக் கரைகடந்த கூறுகள்;

(எ) கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவேண்டிய அல்லது உரிமம் பெறப்படவேண்டிய இவ்வரைவிலக்கணத்தின் (அ) முதல் (ஊ) வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் தொழில்களில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள்; அத்துடன்

(ஏ) நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கை யிடுதல் சட்டத்தின் 29ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் காலத்துக்குக்காலம் விதித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தொழில்;

"இலத்திரனியல்" என்பது 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்களை

சட்டத்தினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்; “சான்றுக்கட்டளைச் சட்டம்” என்பது 14 ஆம் அத்தியாயமான சான்றுக்கு சட்டம் எனப் பொருள்படும்;

“நிதித்தொழில்” என்பது, பின்வரும் தொழில்களுள் அல்லது செயற்பாடுகளுள் ஏதேனுமொன்றை உள்ளடக்கும்:-

(அ) 1998 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தில் அல்லது அதற்குப் பதிலாக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான வங்கித் தொழில்;

(ஆ) 2011 ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தில் அல்லது அதற்குப் பதிலாக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான நிதித் தொழில்;

(இ) 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் அல்லது அதற்குப் பதிலாக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கத்தினால் கொண்டு நடாத்தப்பட்ட ஏதேனும் நிதித்தொழில்;

(ஈ) 2013ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்திச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அல்லது அதற்கு பதிலாக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் கொண்டு நடாத்தப்பட்ட ஏதேனும் நிதித்தொழில்;

(உ) (90ஆம் அத்தியாயமான) அடகுபிடிப்போர் கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது அதற்குப் பதிலாக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் அடகுபிடித்தல்;

(ஊ) பாவனையாளர் கடன், ஈட்டுக்கடன், காரணியாக்கம் (மறுவழியுடனோ அல்லது இன்றியோ) உட்பட, கடன்கொடுத்தல் மற்றும் வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களுக்கு நிதியளித்தல்;

(எ) பாவனையாளர் தயாரிப்புகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் தவிர நிதிக்குத்தகை;

(ஏ) பண அல்லது பெறுமதிக் கைமாற்றல் சேவைகள்;

(ஐ) பண மற்றும் நாணயம் மாற்றுச் சேவைகள்;

(ஒ) (கடன் அட்டைகள், பற்று அட்டைகள், பயணிக் காசோலைகள், பணக் கட்டளைகள் மற்றும் வங்கியாளர் வரைவுடன் அத்துடன் இலத்திரனியல் பணம் போன்ற) கொடுப்பனவு வழிவகைகளை வழங்குதலும், முகாமைசெய்தலும்);

(ஓ) பாவனையாளர் கடன், காரணியாக்கம் (மறுவழியுடனோ அல்லது இன்றியோ) என்பனவுட்பட ஆனால், அவற்றுக்கு வரையறுக் கப்படாமல் நிதிசார் உத்தரவாதங்களையும் பொறுப்புக்களையும் வழங்குதலும், இழப்பித்தலுட்பட வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதியளித்தலும்;

(ஔ) (காசோலைகள், நாணயமாற்று உண்டியல்கள், வைப்பு மற்றும் உயர்தரப்பட்ட சான்றிதழ்கள் போன்ற பணச்சந்தைச் சாதனங்கள் அதன் சொந்த கணக்குக்காக அல்லது வாடிக்கையாளர்களின் கணக்குகளுக்காக வியாபாரஞ் செய்தல், வெளிநாட்டு செலாவணி, பரிவர்த்தனை, வட்டி வீதம் மற்றும் சுட்டிக்காட்டும் சாதனங்கள், வியாபாரப் பொருளின் எதிர்கால

வியாபாரம் அத்துடன் கைமாற்றத்தகு பிணைப்பொறுப்புக்கள்;

(க) பிணைப்பொறுப்புக்களின் வழங்குகைகளிலும், அத்தகைய வழங்குகைகளுடன் தொடர்புபட்ட நிதிசார் சேவைகளை வழங்குதலும், பங்குபற்றுதலும்;

(ங) தனிப்பட்ட மற்றும் கூட்டுத் துறை முகாமைத்துவம்;

(ஞ) வேறாட்களின் சார்பில் நிதிகளை அல்லது பணத்தை முதலீடு செய்தல், நிருவகித்தல் அல்லது முகாமை செய்தல்;

(ச) வேறாட்களின் சார்பில் காசு அல்லது திரவ பிணைப்பொறுப்புக்களைக் காப்பாக வைத்திருத்தலும், நிருவகித்தலும்;

(ட) காப்பான கட்டுக்காப்பு சேவைகள்;

(ண) முகவர்களினாலும், தரகர்களினாலும் காப்புறுதி இடையீடு உட்பட, ஒப்புறுதியீடும் ஆயுட்காப்புறுதியின் மற்றும் வேறு முதலீடு தொடர்பான காப்புறுதியின் இடுகையும்;

(த) மூப்போய்வூதியத் திட்டமொன்றின் நம்பிக்கைபொறுப்பு நிருவாகம் அல்லது முதலீட்டு முகாமைத்துவம்;

(ந) 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் அல்லது அதற்குப் பதிலாக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் நிதித்தொழில்;

(ப) (417 ஆம் அத்தியாயமான) உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்

கீழ் அல்லது அதற்கு பதிலாக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் நிதித்தொழில்;

(ம) வேறு எழுத்திலான சட்டங்களில் அவற்றுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட வரைவிலக்கணங் களுக்கிணங்க நிதி நிறுவனங்களிலான கரைகடந்த கூறுகள்;

(ய) கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய அல்லது உரிமம் பெற வேண்டிய இவ்வரைவிலக்கணத்தின் (அ) முதல் (ப) வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் தொழில்களில் ஈடுபட்டுள்ள எவரேனுமாள்;

(ர) எண்ணிமச் சேவைகளை வழங்குதல்; அத்துடன்

(ல) நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கை யிடுதல் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகை வேறு தொழில்;

“நிதி நிறுவனம்” என்பது நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் நிதித்தொழில் அல்லது பெயர்குறிக்கப்பட்ட நிதிசாராத் தொழில்களையும், உயர் தொழில்களையும் அல்லது எண்ணிமச் சொத்துக்கள் சேவைகளை வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது நிறைவேற்றும் எவரேனுமாள் என்று பொருளாகும்;

“நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டம்” என்பது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிசார்

கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டம் என்று பொருளாகும்;

"நிதிசார் உளவறிதற் கூறு" என்பது 2006 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை நிதிசார் உளவறிதற் கூறு என்று பொருளாகும்;

"இழப்பித்தல்" என்பது, குற்றச்செயல்களின் வரும்படியொன்றுக்கான முடிவான உரிமை, உரித்து மற்றும் ஏதேனும் அக்கறை அல்லது பயனுகரி அக்கறை இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் ஒரு நீதிமுறைக் கட்டளையினூடாக அரசுக்கு உரித்தாக்கப்படுதல் என்று பொருளாகும்;

இயைபான சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தமைக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்படும் ஆளொருவரின் மேல் இழப்பித்தலானது எதிர்பாராத் தேவையாகவிராது.

தெளிவுபடுத்துகை

இயைபான சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்துள்ளமைக்கு ஆளொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் இழப்பித்தலானது எதிர்பாராததாகவிருக்கத் தேவையில்லை.

"கொடை" என்பது ஓராளினால் இன்னுமோராளுக்கு கொடுக்கப்பட்ட ஆதனம் என்று பொருளாகும் என்பதுடன், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் ஆதனக் கைமாற்றுகையைப் பின்வருமாறு உள்ளடக்கும்:-

(அ) முதலாவது ஆளினால் சட்டமுறையற்ற செயற்பாடு புரியப்பட்ட பின்னர்;

(ஆ) ஆதனம் கைமாற்றப்பட்ட நேரத்தில் அதன் சந்தைப் பெறுமதிக்கும் :-

(i) கைமாற்றம் பெறுநரினால் வழங்கப்பட்ட பிரதிபயனுக்கும்; அல்லது

(ii) கைமாற்றுதலினால் செலுத்தப்பட்ட பிரதிபயனுக்கும், எது கூடுதலாகவுள்ளதோ அதற்கும்,

இடையேயான வித்தியாசத்தின் அளவுக்கும்;

"தகவல்" என்பது, எவையேனும் எழுத்துக்கள், வசனம், அல்லது அதன் பாகம், சின்னம், உருவம், படம் வரைதல், காணொளி, ஒலி, குறியீடு அல்லது வேறேதேனும் தொடர்பாடல் முறை என்றவகையாகக் குறித்துக்காட்டப்பட்டதும், ஏதேனும் பௌதீக அல்லது இலத்திரனியல் ஊடகத்தில் அடங்கியுள்ளதுமான ஏதேனும் நிகழ்வுகளை அல்லது செய்திகளை உள்ளடக்கும் என்பதுடன், தொடர்பாடல் செயற்பாட்டின் மேல் பெறுநர் ஆவணப்படுத்துகின்ற வாய்மொழி மூலமாக அறிவிக்கப்பட்ட எதனையும் உள்ளடக்கும்;

"கருவி வழிக்கொள்கை" என்பது, ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிவதற்கு பிரத்தியேகமாக அல்லது பகுதியளவில் எவரேனுமாளினால் பயன்படுத்தப்பட்டுள்ளதும், அத்தகைய ஆதனத்தின் பாவனை சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிதல் தொடர்பிலான சூழ்நிலைகளில் அவசியமாகவிருந்ததுமான ஏதேனும் ஆதனம் என்று பொருளாகுமென்பதுடன் அதன் பெறுமதி சட்டமுறையற்ற செயற்பாட்டின் வருமதியினது பெறுமதியை விஞ்சுகின்றமை, மற்றும் அத்தகைய கருவி வழிக்கொள்கையின் சொந்தக்காரர் சட்டமுறையற்ற செயற்பாட்டின் புரிகையில் பங்குபற்றாதிருந்துள்ளமை அல்லது வேண்டுமென்று உதவாதிருந்துள்ளமை எவ்வாறிருப்பினும், பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:-

(i) ஆட்களை அல்லது பண்டங்களைக் கொண்டுசெல்வதற்கான ஏதேனும் வாகனம் அல்லது வேறு போக்குவரத்து வழிவகைகள்;

(ii) கணினி;

(iii) மென்பொருள் பிரயோகம் அல்லது நிகழ்ச்சித்திட்டம்;

(iv) பௌதிக அல்லது எண்ணிமத் தேக்க வசதி;

(v) பொறி;

(vi) சாதனம்; அத்துடன்

(vii) பத்திரம்;

"அக்கறை" என்பது, ஆதனம் தொடர்பாகப் பின்வருவன என்று பொருளாகும்;

(அ) ஆதனத்தில் ஒரு சட்ட அல்லது ஒப்புரவான இணைச்சொத்து அல்லது அக்கறை; அல்லது

(ஆ) ஆதனம் சம்பந்தமான ஓர் உரிமை, தத்துவம் அல்லது சிறப்புரிமை;

"நீதித்துறைச் சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம் என்று பொருளாகும்;

"நீதிமுறை முடக்கற் கட்டளை" என்பது, ஒரு நீதிமுறைக் கட்டளையை ஆக்குவதற்கு நியாயாதிக்கம் உரித்தாக்கப்பட்ட ஒரு நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட அத்தகைய கட்டளை என்று பொருளாகும். குற்றச்செயலின் வரும்படியொன்றாகவுள்ளதென முதற்றோற்றளவில் காணப்படுகின்ற ஓர் ஆதனத்தின் பாதுகாப்பதற்காக, பேணிக்காப்புக்காக மற்றும் முகாமைக்காக அத்தகைய நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஓராளுக்கு அத்தகைய ஆதனத்தின் உடைமை, கட்டுக்காப்பு, கட்டுப்பாடு மற்றும் ஆதிக்கம் உரித்தாக்கப்படுவதனை இது செய்விப்பதாகும்; அத்தகைய ஆதனம் அரசுக்கு இழப்பிக்கப்படுதல்

வேண்டுமாவென்பதைத் தீர்மானிப்பதற்கு நீதிமுறை வழக்கு நடவடிக்கைகள் நடாத்தப்பட்டுப் பூர்த்திசெய்யப்படும்வரை அதன் தற்காலிகப் பாவனையையும் பயன்பாட்டையும் இது உள்ளடக்கலாம்;

“சட்ட ஒழுங்கேற்பாடு” என்பது, ஒரு வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்பை. ஒரு பணவகையான கணக்கை அல்லது ஒரு நியமித்தரை உள்ளடக்கும்;

“பொது ஆதனங்களுக்கெதிரான தவறுகள் சட்டம்” என்பது, 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பொது ஆதனங்களுக்கெதிரான தவறுகள் என்று பொருளாகும்;

“சட்ட வலுவுறுத்துகை அதிகாரசபை” என்பது, சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம், காடு பேணல் திணைக்களம், வனசீவராசிகள் திணைக்களம், இலங்கைக் கரையோரக் காவல், மற்றும் ஏதேனும் தவறு புரியப்பட்டமையைப் புலனாய்வு செய்வதற்குத் தத்துவமளிக்கப்பட்ட வேறேதேனும் நியதிச்சட்டமுறையாக உருவாக்கப்பட்ட குழு என்பவற்றை உள்ளடக்கும்;

“அமைச்சர்” என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின்கீழ் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர் என்று பொருளாகும்;

“குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவிச் சட்டம்” என்பது, 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவிச் சட்டம் என்று பொருளாகும்;

“சமாதான அலுவலர்” என்பது, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தண்டனைச் சட்டக்கோவை" என்பது, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

"ஆள்" என்பது, ஆட்கள் குழுவொன்றுக்குச் சட்ட ஆளுமை இருப்பினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி அதுவுட்பட, எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள் அல்லது ஏதேனும் சட்ட ஒழுங்கேற்பாடொன்று பொருளாகும்; அத்துடன் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி பதிவுசெய்யப்பட்டதாயினுஞ்சரி அல்லது வேறுவகையில் தாபிக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி அத்தகைய எவரேனுமாளின் அல்லது ஆட்கள் குழுவின் ஒரு கிளையை, அலுவலகத்தை அல்லது தொழிலிடத்தையும் உள்ளடக்கும்;

"கொழும்பு துறைமுக நகர பெரும் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்" என்பது 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர பெரும் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் என்று பொருளாகும்;

"பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் என்று பொருளாகும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவை என்று பொருளாகும்;

"வரும்படிகள்" அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகள்" என்பது, எவரேனுமாளினால் சட்டமுறையற்ற செயற்பாடொன்று புரியப்பட்டதன்விளைவாக அல்லது அது சம்பந்தமாக நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் முழுமையாக அல்லது பகுதியளவில் பெற்றுக்கொள்ளப்பட்ட, வழிவந்த அல்லது தேறிப்பெறப்பட்ட ஏதேனும் ஆதனத்தை, நன்மையை, சேவையை அல்லத சேமிப்புகளை

உள்ளடக்குமென்பதுடன் பொருளாதார அல்லது நிதிசார் ஈட்டுகைகள், சேமிப்புகள் மற்றும் வேறு நிதிகளாக அல்லது ஆதனமாக முழுமையாக அல்லது பகுதியளவில் மாற்றப்பட்ட அல்லது உருமாற்றப்பட்ட நிதிகளையும் அல்லது ஆதனத்தையும் உள்ளடக்கும்; அத்துடன் பின்வருவனவற்றைப் பொருட்படுத்தாது அத்தகைய குற்றச்செயல்களின் கருவிக்கொள்கைகளையும் பெறுமதியையும் உள்ளடக்கும்;-

(அ) எவர் சட்டமுறையற்ற செயற்பாட்டை நிறைவேற்றினாரென்று;

(ஆ) எவர் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து நன்மை பெற்றாரென்று;

(இ) சட்டமுறையற்ற செயற்பாடு இச்சட்டம் நடைமுறைக்கு வருமுன்னரா அல்லது வந்தபின்னரா நிறைவேற்றப்பட்டது என்பது;

(ஈ) சட்டமுறையற்ற செயற்பாடு இலங்கையிலோ அல்லது வேறெங்கேனுமோ நிறைவேற்றப்பட்டது என்பது:

ஆயின், எவ்வாறாயினும், பெறுமதிவாய்ந்த பிரதிபயனுக்காக நல்லெண்ணத்துடனும் அத்தகைய ஆதனம் குற்றச்செயல்களின் வரும்படியொன்றாகவுள்ளதென அறியாமலும் அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இன்றியும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள, வேறுவகையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது எம்முறையிலும் கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்டுள்ள குற்றச்செயல்களின் வரும்படியொன்று, குற்றச்செயல்களின் வரும்படியொன்றாக இல்லாதொழிதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சந்தர்ப்பங்களில், பெறுமதிவாய்ந்த பிரதிபயன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, குற்றச்செயல்களின் வரும்படியொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டு கொள்ளப்படுதலும் வேண்டும்.

தெளிவுபடுத்துகை:

ஒரு சட்டமுறையற்ற செயற்பாடொன்றின் புரிகையின் விளைவாக அல்லது அதுசம்பந்தமாக நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் முழுமையாக அல்லது பகுதியளவில் பெற்றுக்கொள்ளப்பட்ட, வழிவந்த அல்லது தேறிப்பெறப்பட்ட ஓர் ஆதனம், நன்மை, சேவை அல்லது சேமிப்புகள்,

(அ) குற்றச் செயல்களின் வரும்படி சட்டமுறையற்ற செயற்பாட்டைப் புரிந்தவரினால் பெறப்பட்டிருக்காமை; அத்துடன்

(ஆ) வரும்படியானது ஒரு மூன்றாந்திறத்தவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளமை, அவரினால் பெறப்பட்டுள்ளமை அல்லது வேறுவகையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டமை.

எவ்வாறிருப்பினும். குற்றச் செயல்களை வரும்படி யொன்றாகவிருத்தல் வேண்டும்.

“ஆதனம்” என்பது, பின்வருவனவுட்பட, நிதிசார் அல்லது பொருளாதாரப் பெறுமதியைக்கொண்டதும் இலங்கையில் அல்லது வேறெங்கேனும் அமைந்துள்ளதுமான பருப்பொருள்சார்ந்த அல்லது பருப்பொருள்சாராத, அசைவுள்ள அல்லது அசைவற்ற, உருவ அல்லது அருவ ஒவ்வொரு வகையினதுமான சொத்தொன்று என்று பொருளாகும்:-

(அ) நாணயம், எண்ணிம நாணயம், எண்ணிமச் சொத்து, கணக்கு; முதலீடு,

(ஆ) ஏதேனும் புலமைச்சொத்து,

(இ) அத்தகைய சொத்துக்களுக்கான உரித்து அல்லது அவற்றிலான அக்கறையைச் சான்றுப்படுத்துகின்ற இலத்திரனியல் அல்லது எண்ணிம ஆவணங்களுட்பட, சட்ட ஆவணங்கள் அல்லது அத்தகைய எவ்வகையினவுமான சாதனங்கள்; அத்துடன் வங்கி வரவுகள், பயணிக் காசோலைகள், வைப்புக்கள், வங்கிக் காசோலைகள், பணக் கட்டளைகள், பங்குகள், பிணையங்கள், முறிகள், வரைவுகள், கடன்பத்திரங்கள் மற்றும் ஏதேனும்

அக்கறை, பங்கிலாபங்கள் அல்லது அத்தகைய நிதிகள் அல்லது வேறு சொத்துக்கள்மீதான வருமானம் அல்லது அவற்றிலிருந்து திரளுகின்ற அல்லது அவற்றினால் தோற்றுவிக்கப்பட்ட பெறுமதி அத்துடன் நிதிகளை, பண்டங்களை அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயல்திறனாகப் பயன்படுத்தப்படக்கூடிய வேறெவையேனும் சொத்துக்களை உள்ளடக்கு வதுடன் அவற்றுக்கு வரையறுக்கப்படவும் மாட்டாது;

(ஈ) அத்தகைய ஏதேனும் ஆதனத்திலான ஏதேனும் சட்ட அல்லது ஒப்புரவான அக்கறை, அத்துடன்

(உ) நிதிசார் பிரதிபயனைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்டதும் ஒரு நிதிசார் அல்லது வர்த்தகப் பெறுமதியைக் கொண்டுள்ளதுமான வேறேதேனும் உருவ அல்லது அருவப் பொருள்;

"குற்றவழக்கு" என்பது, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழானவொரு முறைப்பாட்டைப் பின்பற்றி ஒரு சட்ட நீதிமன்றத்திலான வழக்கு, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின்கீழ் முன்வைக்கப்பட்ட குற்றப்பகர்வு மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்கு என்று பொருளாகும்;

"பொது ஆதனம்" என்பது, 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பொது ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டத்தினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தகவலறியும் உரிமைச் சட்டம்" என்பது 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலறியும் உரிமைச் சட்டம் என்று பொருளாகும்;

"பதிவேடு" என்பது, அதன்மீது தரவுகள் பதியப்படுகின்றதும் அல்லது குறிப்பிடப்படுகின்றதும், ஆளொருவரினால், கணினி முறைமையொன்றினால் அல்லது வேறு உபகரணத்தினால் வாசிக்கப்படுவதற்கு அல்லது புரிந்துகொள்ளப்படுவதற்கு இயன்றதாகவுள்ளதுமான ஏதேனும் பொருள் என்று பொருளாகும்;

"வதிவுள்ளவர்" என்பது, இலங்கையின் எவரேனும் பிரசை அல்லது ஒரு வெளிநாட்டின் எவரேனும் பிரசை தொடர்ச்சியாக அல்லது முற்போந்த பன்னிரெண்டு மாத காலத்தின்போது கூட்டுமொத்தத்தில் நூற்றியெண்பத்திமூன்று நாட்களைக் கொண்ட அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு வேறுவகையில் இலங்கையிலிருந்திருப்பின் அத்தகைய ஆள் என்று அல்லது தொழிலுக்கு அல்லது வியாபாரத்தை நடாத்துவதற்கு அதிகாரமளித்து குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஒரு விசாவின் அதிகாரவளிப்பின்கீழ் இலங்கையில் வதிகின்ற அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்ட ஒரு வெளிநாட்டுப் பிரசை என்று பொருளாகும்;

*"சேவை வழங்குநர்" என்பது,-*

(அ) அதன் ஒப்பப்பணஞ்செலுத்துவோர் ஒரு கணினி முறைமையின்மூலம் அல்லது இலத்திரனியல் முறைமையின்மூலம் அல்லது வேறெவையேனும் வழிவகைகள்மூலம் தொடர்பாடுவதற்காக ஆற்றலை வழங்குகின்ற ஒரு பகிரங்க அல்லது தனியார் உருவகம்; அத்துடன்

(ஆ) அவ்வுருவகத்தின் அல்லது அதன் வாடிக்கை யாளர்களின் சார்பில் கணினித் தரவுகளை அல்லது தகவல்களைச் செய்முறைப்படுத்துகின்ற அல்லது தேக்கிவைக்கின்ற வேறேதேனும் உருவகம்;

என்று பொருளாகும்;

“இலங்கை” என்பது, இலங்கையின் ஆள்புல நீர்பரப்புகளையும் வான்வெளிகளையும் உள்ளடக்கும்;

“ஒப்பணஞ்செலுத்துநர் தகவல்” என்பது, ஒரு சேவை வழங்குநரின் சேவைகளினது ஒப்பணஞ்செலுத்துவோர் தொடர்பாக, கணினித் தரவுகள் என்ற வடிவத்தில் அல்லது ஒரு சேவை வழங்குநரினால் வைத்திருக்கப்பட்ட வேறேதேனும் வடிவத்தில் அடங்கியுள்ள ஏதேனும் தகவல் என்று பொருளாகும்;

“மின்தொடர்பாளர் தரவுகள்” என்பது, பின்வரும் தரவுகள் என்று பொருளாகும்:-

(அ) ஒரு கணினி முறைமை என்னும் வழிவகைகள் மூலம் தொடர் பாடலொன்றின் இயல்புப் பண்புகள் தொடர்பானவை;

(ஆ) ஒரு சேவை வழங்குநரின் பாகமாகவுள்ள கணினி முறைமையொன்றினால் தோற்று விக்கப்பட்டவை;

(இ) தொடர்பாடல்களின் தோற்றுவாயைக் காட்டு கின்றவை;

(ஈ) இலத்திரனியல் தொடர்பாடல் வலையமைப் பொன்றைப் பயன்படுத்தி ஒரு தொடர்பாடலை அனுப்பும் நோக்கத்துக்காக அல்லது அத்தகைய தொடர்பாடல் தொடர்பில் சிட்டையிடுவதற்காகச் செய்முறைப்படுத்தப்பட்ட தரவுகள்; அத்துடன் வழித்தடம், திசவியின் அடையாளம், ஒரு தொடர்பாடலின் கால எல்லை அல்லது நேரம் என்பன தொடர்பான தரவுகளையும் உள்ளடக்கும்;

*"பொறி" என்பது,*

(அ) ஒரு தவறின் புரிகையைக் கண்டுபிடித்தல்;

(ஆ) அத்தகைய தவறைப் புரிந்ததனை உடனடுத்துத் தவறொன்றைப் புரிகின்ற ஆளொருவரை அடையாளங்காணுதலும் கைதுசெய்தலும் ; மற்றும்

(இ) ஒரு தவறின் புரிகை தொடர்பான சான்றைச் சேகரித்தல்; அத்துடன்

(ஈ) அத்தகைய தவறின் வரும்படிகளையும் அதன் கருவிக் கொள்கைகளையும் சேகரித்தல்,

என்பவற்றை இயலச்செய்கின்ற ஒழுங்குபடுத்தப்பட்ட புலனாய்வுசார் தொழில்னுட்பமொன்று என்று பொருளாகும்;

"மறைவான நடவடிக்கை" என்பது, ஒரு புலனாய்வு அலுவலர், அல்லது ஒரு புலனாய்வு அலுவலரின் பணிப்புக்கமைந்த புலனாய்வு அலுவலரொருவரின் கீழ்நிலை அலுலரொருவர், இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கங்களுக்காகச் சிலவேளைகளில் தவறொன்றாக அமைகின்ற நடவடிக்கைகளாக இருக்கக்கூடிய நடத்தையில் ஈடுபடுகின்ற அவ்வலுவலர்களைச் சம்பந்தப்படுத்துகின்ற ஒரு புலனாய்வினுள்ளான ஒரு செய்முறை என்று பொருளாதல் வேண்டும்; இது,

(அ) சந்தேகிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகளைக் கண்டறிதல், கண்டுபிடித்தல், அடையாளங்காணுதல் மற்றும் தேடுதல்;

(ஆ) தவறுகளைப் புரிகின்ற ஆட்களை அடையாளங்காணுதல்; அத்துடன்

(இ) அத்தகைய ஆட்களும் தவறுகளைப் புரிதலும் தொடர்பாகப் புலனாய்வுசெய்தலும் சான்று சேகரித்தலும்.

என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும். ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படுதலாகாது;

"சட்டமுறையற்ற செயற்பாடு" என்பது, இலங்கைச் சட்டங்களின்கீழ் தவறொன்றாகவமைகின்ற ஏதேனும் நடத்தை என்று பொருளாகுமென்பதுடன் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) இலங்கையில் அது முழுமையாகப் புரியப்பட்டிருப்பின் இலங்கைச் சட்டங்களின்கீழ் தவறொன்றாக அமைகின்றதும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே முழுமையாக அல்லது பகுதியளவில் புரியப்பட்டதுமான ஏதேனும் செயற்பாடு; அத்துடன்

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வரமுன்னர் புரியப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாடு; ஆயின், அத்தகைய செயற்பாடு புரியப்பட்ட நேரத்தில் அது இலங்கைச் சட்டத்தின்கீழ் தவறொன்றா கமைந்திருத்தல் வேண்டும்;

"எண்ணிமச் சொத்து" என்பது, எண்ணிமமுறையில் வியாபாரஞ்செய்யப்படமுடியுமான அல்லது கைமாற்ற முடியுமான மற்றும் கொடுப்பனவு அல்லது முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தமுடியுமான பெறுமதியின் ஓர் எண்ணிமப் பிரதிநிதித்துவம் என்று பொருளாகும், ஆனால் கட்டளை நாணயங்கள், பிணையங்கள் மற்றும் வேறு நிதிசார் சொத்துக்களை உள்ளடக்காது;

"எண்ணிமச் சொத்துச் சேவை வழங்குநர்" என்பது, வேறோர் இயற்கை ஆள் அல்லது சட்ட ஆளுக்காக அல்லது அவர்சார்பில் பின்வரும் செயற்பாடுகளுள் அல்லது தொழிற்பாடுகளுள் ஒன்றை அல்லது அதற்கதிகமானவற்றை நடாத்துகின்ற எவரேனும் இயற்கை ஆள் அல்லது சட்ட ஆள் என்று பொருளாகும்:-

(அ) எண்ணிமச் சொத்துக்களும் கட்டளை நாணங் களுக்கும் இடையேயான பரிமாற்றம்;

(ஆ) ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட எண்ணிமச் சொத்துக்களின் வகைகளுக்கிடையேயான பரிமாற்றம்;

(இ) எண்ணிமச் சொத்துக்களை கைமாற்றுதல்;

(ஈ) எண்ணிமச் சொத்துக்களை அல்லது எண்ணிமச் சொத்துக்களின்மீதான கட்டுப்பாட்டை இயலச்செய்கின்ற சாதனங்களைக் காப்பாக வைத்திருத்தல் அல்லது நிருவகித்தல்; அத்துடன்

(உ) ஒரு வழங்குநரின் முனைவில் அல்லது ஓர் எண்ணிமச் சொத்தின் விற்பனையில் பங்குபற்றுதல் மற்றும் அவை தொடர்பான நிதிசார் சேவைகளை வழங்குதல்;

"இடித்துரைப்பாளர்" என்பது, பெயர் குறிக்கப்பட்ட அலுவலர், ஒரு புலனாய்வு அலுவலர், நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட ஓர் இணங்கியொழுகுகை அலுவலர், நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் சட்டத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மேற்பார்வை அதிகாரி அல்லது அவரது தொழில்தருநரின் பிரதான நிறைவேற்று அலுவலர் அறிந்திராத

(அ) குற்றச்செயல்களின் எவையேனும் வரும்படிகள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிதல், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிந்துள்ள ஆளொருவரின் ஆளடையாளம் என்பன

தொடர்பாக தகவல்களை அல்லது விடயங்களை வழங்கியுள்ள அல்லது ஒரு முறைப்பாட்டைச் செய்துள்ளதான அல்லது ஒரு கூற்றை அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட அலுவலர், புலனாய்வு அலுவலர், இணங்கியொழுகுகை அலுவலர், மேற்பார்வை அதிகாரி என்பது அவரது தொழில்தருநரின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அறித்துள்ள; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் நியதிகளின்படி புலனாய்வு செய்யப்படக்கூடிய இயல்திறனைக் கொண்டுள்ள தகவல்களை அல்லது விடயங்களை அத்தகைய பெயர் குறிக்கப்பட்ட அலுவலர், புலனாய்வு அலுவலர், இணங்கியொழுகுகை அலுவலர், மேற்பார்வை அதிகாரி என்பது அவரது தொழில்தருநரின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு வெளிப்படுத்தியுள்ள,

எவரேனுமாள் என்று பொருளாகும்; அத்துடன் தகவல்களை அல்லது விடயங்களைச் சேகரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பாக அத்தகைய இடித்துரைப்பாளர் உதவியளித்திருக்கக்கூடிய அல்லது ஆதரித்திருக்கக்கூடிய எவரேனுமாளையும் உள்ளடக்குகின்றது; அத்தகைய இடித்துரைப்பாளரின் குடும்பவுறுப்பினர்களையும், அவரது தங்கிவாழுநர்களையும், அத்தகைய இடித்துரைப்பாளருக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த வேறெவரேனு மாளையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

**151.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

## அட்டவணை I

[பிரிவு 68]

### தகவல்களைக் கோருகின்ற அறிவித்தல்

1. தகவலானது எந்த ஆதனம் தொடர்பில் தேவைப் படுகின்றதோ அந்த ஆதனத்தின் விவரணம் (புலனாய்வு அலுவலரினால் நிரப்பப்பட வேண்டும்)

2. எந்த ஆளுக்கு அறிவித்தல் முகவரியிடப்பட்டுள்ளது (புலனாய்வு அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்)

3. எவருக்குத் தகவல் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் (புலனாய்வு அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்)

4. எத்தேதிக்கு முன்னர் தகவல் அனுப்பிவைக்கப்பட வேண்டும் (புலனாய்வு அலுவலரினால் நிரப்பப்படுதல் வேண்டும்)

5. புலனாய்வு அலுவலரின் பெயர்:

6. புலனாய்வு அலுவலரின் நிறுவனம் :

7. கையொப்பம் :

8. இலச்சினை :

9. வழங்குகைத் தேதி :

### தேவைப்பட்ட தகவலின் தன்மை

(அ) மேற்கூறப்பட்ட ஆதனம் கொள்ளப்பட்ட, நிலைக்கு வந்த, சொந்தமாகவைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்படுகின்ற அதன்மீது ஆதிக்கம் செலுத்தப்படுகின்ற மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற முறை.

(ஆ) மேற்கூறப்பட்ட ஆதனத்தைக் கொள்வதற்கு, உடைமையில் வைத்திருப்பதற்கு, சொந்தமாக வைத்திருப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு, அதன்மீது ஆதிக்கம் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட நிதிசார் மூலவளங்களின் அல்லது வேறு மூலவளங்களின் தன்மை.

(இ) மேற்கூறப்பட்ட நிதிசார் அல்லது வேறு மூலவளங்களின் உழைக்கப்பட்ட, பெறப்பட்ட அல்லது வேறுவகையாகக் கொள்ளப்பட்ட முறை.

(ஈ) மேற்கூறப்பட்ட ஆதனம் எவ்வாளிடமிருந்து பெறப்பட்டதோ அவ்வாளின் ஆளடையாளமும் அத்தகைய பெறுகை தொடர்பிலான இணைந்த சூழ்நிலைகளும்;

(உ) மேற்கூறப்பட்ட ஆதனம் வேறெவரேனுமாளின் சார்பில் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப் படின் அத்தகைய ஆளின் பெயரும் அவரை அடையாளங்காண்பதற்கும் அணுகுவதற்கும் அவசியமான விபரங்களும்.

(ஊ) வேறெவரேனுமாள் மேற்கூறப்பட்ட ஆதனத்திலிருந்து ஏதேனும் நன்மையைப் பெற்றலாம் அல்லது பெறவிருந்தால், அத்தகைய ஆளின் பெயரும் அவரை அடையாளங் காண்பதற்கும் அணுகுவதற்கும் அவசியமான விபரங்களும்.

(எ) மேலேயுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றுக்கான அல்லது அதற்கு மேற்பட்ட விடைகள் வேறெவரேனுமாளிடம் இருக்கின்றதென நம்பப் படுமாயின்,

முழுப்பெயர்:

தே. அ. அ. இலக்கம்:

கடவுச்சீட்டு இலக்கம்:

தொழில் அல்லது வியாபாரம்:

சராசரி மாதாந்த வருமானம்:

நடப்புத் தான்புரிதொழில்:

நிரந்தர வதிவிடம்:

சமாதான நீதிவானினால் / சட்டத்தரணி யினால் / சத்திய ஆணையாளரினால் கையொப்பம் பரீட்சிக்கப்பட்டது

………………. ஐச் சேர்ந்தவரும் (முகவரி) ……… ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை / …………. ஆம் இலக்கக் கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான …………… ஆகிய நான், மேற்கூறப்பட்ட அறிவித்தலின் மூலப்பிரதி ……… என்பவரினால் ……………. ஆந்நாளாகிய இன்று (தேதி) ………….. இல் / (இடம்) ………………. மணிக்கு (நேரம்) எனக்குக் கையளிக்கப்பட்டதென இத்தால் ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

கையொப்பம்

## அட்டவணை II

[பிரிவு 71]

**தடைசெய்தற் கட்டளை**

……………… என்பவருக்கு (தடைசெய்தற் கட்டளை எவ்வாளுக்கு முகவரியிடப்படுகின்றதோ அவ்வாளின் பெயர்)

2025 ஆம் ஆண்டின் ………….. ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகளினது நோக்கங்களுக்காகப் புலனாய்வு அலுவலரொருவராகவுள்ள ……………. ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 71 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் நியதிகளின்படி செயலாற்றி, பின்வரும் செயற்பாடுகளுள் ஏதேனுமொன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் ஈடுபடுவதனை இத்தால் தடைசெய்கின்றேன் என்பதுடன் கீழே குறித்துரைக்கப்பட்ட ஆதனத்தைக் கையுதிர்க்காதிருப்பதற்கு ஆதனத்தின் பெறுமதியை அழித்தல் அல்லது குறைத்தல் தொடர்பான ஏதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடாதிருப்பதற்கு அல்லது எதனையும் செய்யாதிருப்பதற்கு, தற்போதைய அந்தஸ்தை மறைப்பதற்கு அல்லது மாற்றாதிருப்பதற்கு அல்லது இலங்கையிலிருந்து கைமாற்றாதிருப்பதற்கு அவசியமான நடபடிகளை எடுக்கும்படி இத்தால் பணிக்கின்றேன்.

மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட ஆதனம் ……………………

…………………………………………………………..

…………………………………………………………..

இத்தடைசெய்தற் கட்டளை முன்னர் வறிதாக்கப்பட்டாலொழிய, ………. ஆந்தேதியான இன்றிலிருந்து முப்பது நாட்காலப்பகுதிக்காகச் செல்லுபடியாதல் வேண்டும்.

இக்கட்டளைக்கு முரணாகச் செயலாற்றுதல், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் 71 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றுக்கு இட்டுச் செல்லும்

மற்றும் தவறொன்றாகவமையும் என்பதைக் கவனிப்பதற்கு நீர் இத்தால் கோரப்படுகின்றீர்.

மேற்கூறப்பட்ட பணிப்புக்களுள் ஏதேனும் ஒன்றுடன் அல்லது அதற்கு மேற்பட்டவற்றுடன் இணங்கியொழுகச் செயலாற்றுதல் உமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகவிருப்பின், அதற்கான காரணங்களைக் கொடுத்து இக்கட்டளைக்கு இணங்கியொழுகுவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ள ஆளின் ஆளடையாளத்தை கீழே கையொப்பமிட்டவருக்கு அறிவிப்பதற்கு நீர் பணிக்கப்படுகின்றீர்.

(1) புலனாய்வு அலுவலரின் நிறுவனம் :

(2) கையொப்பம் :

(3) இலச்சினை :

(4) வழங்குகைத் தேதி :

.................. ஐச் சேர்ந்தவரும் (முகவரி) ......... ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை / ............ ஆம் இலக்கக் கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான .............. ஆகிய நான், மேற்கூறப்பட்ட அறிவித்தலின் மூலப்பிரதி .......... என்பவரினால் ................ ஆந்நாளாகிய இன்று (தேதி) ............. இல் / (இடம்) .................. மணிக்கு ( நேரம்) எனக்குக் கையளிக்கப்பட்டதென இத்தால் ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

கையொப்பம்

## அட்டவணை III

[பிரிவு 71]

**பேணிக்காத்தற் கட்டளை**

…………………… என்பவருக்கு:- (பேணிக்காத்தற் கட்டளை அவ்வாளின் பெயர்)

2025 ஆம் ஆண்டின் ……. ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் புலனாய்வு அலுவலரொருவராகவுள்ள ……………. ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 71 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் நியதிகளின்படி செயலாற்றி, கீழே குறித்துரைக்கப்பட்ட ஆதனத்தின் தற்போதைய நிலைமையை, பெறுமதியை, அமைவிடத்தைப் பேணிக்காப்பதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான வழிமுறைகளை எடுக்கும்படி இத்தால் உம்மைப் பணிக்கின்றேன்.

மேலேகுறிப்பீடுசெய்யப்பட்டஆதனம்………………………………

1. புலனாய்வு அலுவலரின் பெயர் :
2. புலனாய்வு அலுவலரின் நிறுவனம் :
3. கையொப்பம் :
4. இலச்சினை :
5. வழங்குகைத் தேதி :

……………………… ஐச் சேர்ந்தவரும் (முகவரி) ……… ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை / ………… ஆம் இலக்கக் கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான …………… ஆகிய நான், மேற்கூறப்பட்ட அறிவித்தலின் மூலப்பிரதி ………. என்பவரினால் ……………… ஆந்நாளாகிய இன்று (தேதி) …………….. இல் / (இடம்) ……………… மணிக்கு (நேரம்) எனக்குக் கையளிக்கப்பட்டதென இத்தால் ஏற்றுக் கொள்ளுகின்றேன்.

கையொப்பம்

## அட்டவணை IV

[பிரிவு 72]

**கைப்பற்றுகை பற்றிய அறிவித்தல்**

……………………………… என்பவருக்கு (கைப்பற்றுகை பற்றிய அறிவித்தல் எவ்வாளுக்கு முகவரியிடப்பட்டதோ அவ்வாளின் பெயர்)

…………………. ஐச்சேர்ந்த ஒரு புலனாய்வு அலுவலரொருவராகவுள்ள ……………………. ஆகிய நான், 2024 ஆம் ஆண்டின் ……………… ஆம் இலக்க. குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் 72 ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி கீழே குறித்துரைக்கப்பட்ட ஆதனம் கைப்பற்றப்பட்டுள்ள ஒன்றும் அரசின்சார்பில் நான் இப்போது அத்தகைய ஆதனத்தின் உடைமையைக்கொண்டுள்ளேனென்றும் இத்தால் உமக்கு அறிவித்தல் கொடுக்கின்றேன். அதற்கிணங்க, உடைமையுடன் சேர்த்து மேலதிகமாக அத்தகைய ஆதனத்தின் சட்டமுறையான கட்டுப்பாடு மற்றும் ஆதிக்கம் என்பவற்றையும் நான் இப்போது கொண்டுள்ளேன்.

கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் விவரணம் …………………………
………………………………………………………………………………
……………………………………………………

1. புலனாய்வு அலுவலரின் பெயர் :
2. புலனாய்வு அலுவலரின் நிறுவனம் :
3. கையொப்பம் :
4. இலச்சினை :
5. வழங்குகை

……………… ஐச் சேர்ந்தவரும் (முகவரி) ……… ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை / ………… ஆம் இலக்கக் கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான …………… ஆகிய நான், மேற்கூறப்பட்ட அறிவித்தலின் மூலப்பிரதி ………. என்பவரினால் ……………. ஆந்நாளாகிய இன்று (தேதி) …………. இல் / (இடம்) ……………… மணிக்கு (நேரம்) எனக்குக் கையளிக்கப்பட்டதென இத்தால் ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

கையொப்பம்

## அட்டவணை V

[பிரிவு 75]

**முடக்கல்பற்றிய அறிவித்தல்**

.............................. என்பவருக்கு :- (முடக்கல் பற்றிய அறிவித்தல் எவ்வாளுக்கு முகவரியிடப்படுகின்றதோ அவ்வாளின் பெயர்)

............................ ஐச் சேர்ந்த ஒரு புலனாய்வு அலுவலரொகவுள்ள ........................ ஆகிய நான், 2024 ஆம் ஆண்டின் ................ ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் 75 ஆம் பிரிவின் நிதிகளின்படி நான் ................ அந்நாளன்று அல்லது அந்நாளளவில் (தேதி) 75 ஆம் பிரிவின் நியதிகளின்படி கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு, கீழே விபரிக்கப்பட்ட ஆதனத்தை இயைபான மேல் நீதிமன்ற நீதிபதியினால் ஆக்கப்பட்ட ஒரு நீதிமுறைக் கட்டளையினால் முடக்குவதற்கு, விண்ணப்பஞ்செய்வேன் என இத்தால் உமக்கு அறிவித்தல் கொடுக்கின்றேன்.

ஆதனத்தின் விவரணம்:- .......................................
.....................................................................
.....................................................................

1. புலனாய்வு அலுவலரின் பெயர் :
2. புலனாய்வு அலுவலரின் நிறுவனம் :
3. கையொப்பம் :
4. இலச்சினை :
5. வழங்குகைத் தேதி :

..................... ஐச் சேர்ந்தவரும் (முகவரி) ......... ஆம் இலக்கத் தேசிய அடையாள அட்டையை / ............ ஆம் இலக்கக் கடவுச்சீட்டை வைத்திருப்பவருமான .............. ஆகிய நான், மேற்கூறப்பட்ட அறிவித்தலின் மூலப்பிரதி .......... என்பவரினால் ......................... ஆந்நாளாகிய இன்று (தேதி) ................. இல் / (இடம்) .................. மணிக்கு ( நேரம்) எனக்குக் கையளிக்கப்பட்டதென இத்தால் ஏற்றுக்கொள்ளகின்றேன்.

கையொப்பம்

## அட்டவணை VI

[பிரிவு 75]

**முடக்கற் கட்டளை**

................................. வலயத்தில் நடைபெறும் இலங்கை மேல் நீதிமன்ற நீதிபதி ..................... ஆகிய நான், 2024 ஆம் ஆண்டின் ............... ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் 75 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செயலாற்றி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் எனக்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைக் கவனத்துட் கொண்டமையைப் பின்பற்றிக் கீழே குறிப்பிடப்பட்ட ஆதனத்தை நீதிமுறையாக முடக்கி இத்தால் கட்டளை ஆக்குகின்றேன்.

மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட ஆதனம் ....................

.................................................................

..................................................................

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.